கடவுள் துணை.

# பூலோக விநோதமென்னும்

# மகா மாயா ஜாலம்.

இ ஃ அ

செழுமணவை சித்திரகவி

தேவேந்திரநாத பண்டிதரவர்களின்

ஏட்டுப்பிரதியைக்கொண்டு

களத்தூர்

ஷண்முக முதலியாரால்

எழுதப்பட்டு,

இரண்டாம் பதிப்பு.

சென்னை - சூளை,

வே. ஜெயவேலு முதலியார்

அவர்களாற்றமது

ஸ்ரீ பானுமதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1929.

ரிஜிஸ்டர் காபிரைட்] [விலை ரூபா 1 0 0

30
133ம
N29
67817

சிவமயம்.

பூலோக விநோத மென்னும்

# மகா மாயா ஜாலம்.

## காப்பு.

சத்தாகி நிறைந்தபழம் பொருளைப்போற்றி சந்ததமும் சான்றோர்கள் பதம்விளக்கி, முத்தாகி முதல்வனுமாய் நிலைத்துநின்ற மோனவருட் சுந்தரனை உளமிருத்தி, சித்தாகி யெழுந்தகுருபரனை வாழ்த்தி சென்னிமிசை பதமலரைத்தினமுமேற்றி, வத்தாகி மூலமதா யமைந்தநாதன் மலர்ப்பதத்தைத்தினம் வணங்கக்காப்பதாமே.

ஆமேதான் மகாமாயாஜாலத்தை அவனியோர் முன்பாக தெளிவாய்ச் சொன்னேன், பூமேவும் ஜாலவித்தை செய்வோரெல்லாம் புகழ்ந்திடவே ஒவ்வொன்றும் விபரமாக, நாமேதான் சொல்லுகின்றேம் செய்பாகத்தை நானிலத்தில் மாயவித்தை யிதுவேயாகும், ஏமாறுமற் கேளும் உலகத்தோரே எத்தாக ஒவ்வொன்றும்செய்து பாரே.

பாரப்பா அந்தந்த கிரியைகட்குப் பக்குவமாய் மூலிகையின் செடிவேர்மூலம், சோப்பா ஜீவனுடன் சொல்லும்வித்தை சூக்ஷமதாய் கவனித்து செய்யும்போது, கோரப்பா குருவருளால் சத்தி பூஜை கொடுத்திடுவாய் உருவேற்றி ஜபங்கள்செய்வாய், ஆரப்பா யெந்தனைப்போ லுனக்குச்சொல்வார் அன்புடைய சீடர்கட்கா யருளினேனே.

## அவையடக்கம்.

நானென்னு மகங்காரங்கொள்ளவில்லை நாதாக்கள் திருவடியை மனதிருத்தி, கோனென்னுங் கவிஞர்களின் பாதம்போற்றி கோதில்லா பூதலத்தில்தெரிந்தமட்டும், மானிலத்தி லுள்ளவர்க்கு மாயாஜால மர்மமெல்லாந் தெளிந்தளவில் சொன்னேனன்பாய், வானோரும்ரிஷி முனிகள் பாதந்தன்னை வந்தித்து மனதிருத்தி பூசித்தேனே.

## ஆக்கியோன் பெயர்,

பாரேநற் கங்கைகுல திலகன்முன்னோன் மகிழ்சிவ ராயன் கோத்திரத்துதித்தோன், காரேநேர்மேழிகொடித் துவஜன்வேளான் கமழ்குவளைத் தாளான்பூ வைசியன்மிக்கான், பேரேவீராசாமி நாவலன்தன் பெருந்தவத் துதித்தபுத்ரன் தொண்டைநாட்டிற், சீரேறுஞ் செழுமணவை சித்திரகவி தேவேந்திர நாதபண்டிதனென்போனே.

## விநாயகர் அந்தரமாக நிற்கும் விநோதம்.

மரத்தினால் ஒரு பிள்ளையார் செய்து அதன் தலையில் ஊசிக் காந்தத்தை வைத்து அது தெரியாமல்படி பலவித வர்ணங்கள் தீட்டி, மேலே யிரும்பாணியிருக்கும் விடமாகப்பார்த்து அதற்கு நேர் கீழே இப்பிள்ளையாரைவைக்க அதுரிவ்வென்று கிளம்பி அந்தரமாகநிற்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

## விநாயகர் பாதாளம்போகும் விநோதம்.

ஒருபெரிய படிகாரத்துண்டையெடுத்து நெருப்பிலிட்டுப்பொரித்தால் அது உப்பிப் பெரிதாகக் காணப்படும். அதையெடுத்து சிறிய பேனாகத்தியைக்கொண்டு அவயவப்பழுதில்லாமல் விநாயகரைப்போல் உருவம் தயார்செய்து வைத்துக்கொண்டு சபையிலிருப்பவர்களைப்பார்த்து இதோபாருங்கள் இவ்விநாயகர் மாயமாகப்போகும் வேடிக்கையை என்றுசொல்லி அனைவர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே விநாயகரைக் கீழேவைத்து சோடசஉபசாரத்துடன் பூசைசெய்து தூபதீபங்காட்டி விநாயகரே இனிநீர் பாதாளலோகம் போய்வரலா மென்றுசொல்லி மணலை மேலே தள்ளி மந்திரஞ்செபிக்கின்ற பாவனையாய் தந்திரமாக கொஞ்சம் ஜலத்தைத்தெளிக்க விநாயகர் கரைந்து விடுவார், பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

## விநாயகர் பாதாளம்போனவர் மீண்டும் தோன்றும் விநோதம்.

வெள்ளை மெழுகினால் முன்மாதிரி ஒரு விநாயகரை உருவம் பேதப்படாதுசெய்து ஓரிடத்தில் முன்னதாகவே மணலுக்குள் வைத்துவிட்டு பாதாளம்போன விநாயகரை அழைத்துக் காட்டுகிறேன் பாருங்களென்றுச்சொல்லி கொஞ்சநேரம் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்து பிறகு மணலைக்கிளறி விநாயகரை எடுத்துக்காட்ட பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவர்கள். ஆனால் பூசைசெய்யும்போது மாத்திரம் திரையிட்டு மணி முதலிய ஓசைகளுடன் வெகு டம்பமாகச்செய்யவும்.

## இந்திர ஜாலமை வித்தை.

வெள்ளை மயிரில்லாத கருப்பூனை 1, கீறிப்பிள்ளை 1, இரட்டைவால் அரணை 1, திகைப்பூண்டுபூச்சி 10, பேய்ப்பீர்க்கன்விரை இரண்டுபலம், புல்லாமணக்கன்விரை இரண்டு பலம் இவைகளை யெல்லாம் நறுக்கிப்பேய்க் கரும்புச்சாற்றில் 1-சாமம் ஊறப்போட்டு எடுத்து உலர்வைத்து, பிறகு தும்மட்டிக்காய் சாற்றில் ஒருசாமம் ஊறப்போட்டு மறுபடி எல்லாவற்றையும் ஒரு பெரிய பானையில் போட்டுக் குழித்தைலம் வாங்கி அதற்குச்சரியெடை ஐங்கோலத்தைலஞ்சேர்த்து ஒன்றாகக்கலந்து பின்பு ரசம், சங்குபாஷாணம், முப்பூ இவைகள் வகையொன்றுக்குக்கழஞ்சு ஒன்றுசேர்த்து



அரைத்து மைபோலாகியபின் வழித்து ஒரு செப்புப்பரணியில் வைத்துக்கொண்டு ஜாலக்காளை மது, மாமிச பக்ஷணத்துடன் துதித்துப்பிறகு, ஸ்ரீரீம், சிரீம், கிலியும், சவ்வும் ஐயும், அவ்வும், உவ்வும், அவ், கூ, கூ நீலகண்டியம்மாவென்று ஒருலக்ஷ முருசெபித்தால் மைக்கு உயிருண்டாகும் அதன்பிறகு அம்மையை எடுத்துக்கொண்டு குருவின் முகாந்தரத்தால் சகலமான வேலைகளையுஞ் செய்து உலகத்தாரை சந்தோஷப்படுத்தலாம்.

## அந்தரத்தில் சண்டைகள் நடக்கும் வித்தை.

முன்மையை திலர்த மிட்டுக்கொண்டு ஒரு நூலேணியைக் கையிலெடுத்து விசிறியெறிந்தால் அது படிப்படியாக மெத்தைப் படியைப்போன்று நிற்கும். அதுசமயம் மையை இரண்டு கைகளிலும் பூசிக்கொண்டு மண்ணையள்ளி நாலு திசைகளிலும் போட்டு இதோ பாருங்கள் சேனைகள் வருகின்ற வேடிக்கையை என்று சொன்னால் அவர்கள் கண்ணுக்குச் சேனைகள் வருகின்றதைப்போலவும், சண்டைகள் நடக்கின்றதைப்போலவும், நூலேணியின்பேரில் திரள் திரளாக ஜனங்கள் ஏறுகின்றதைப்போலவும் இறங்குகின்றதைப் போலவும் தெரியும். இவ்வேலைகளையெல்லாம் செய்துகாட்டுகிறதற்கு இராக்காலமே தகுதியானது அதிலும் இன்னொன்று என்னவென்றால் மையை எடுத்துப்பிரயோகித்து என்ன நடக்கவேண்டுமென்று நாம் மனதில் நினைக்கிறோமோ அது அப்படியேதான் எல்லார் கண்களுக்கும் தெரியும். இது மைக்குக் காவலிருக்கும் தேவதையின் சக்தியென்றறியவும்.

## வேறு சண்டை வித்தை.

மையைகையில் பூசிக்கொண்டு கொஞ்சம் வாழைத்தண்டை மடியில் கட்டிக்கொண்டு நூலேணி மேலேறி சண்டைகள் நடக்கின்றதைப்பாருங்களென்று சொல்லி வாழைத்தண்டை வெட்ட மனிதர்களின் தலையைப்போல கும்பல் கும்பலாக வந்துவிழும். அந்த சமயம் நீலகண்டியைத் தியானித்து அம்மணி தாயே சண்டைகள் வெகு மும்மரமாக நடக்கவேண்டுமென்று பணிவாயானால், எல்லார் கண்களுக்கும் வெகு சேனைகள் சண்டை போடுவதைப்போன்று தோன்றுவதோடு, குதிரைகள் கனைப்பும், யானைகள் வீறிடலும் வெகு சத்தமாகக்கேட்கும். இதைப்பார்த்த யாவரும் வெகு புதுமை யென்றே சொல்லி சந்தோஷப்படுவார்கள். ஆனால் ஒவ்வொரு வேலைகளுக்கும் நீலகண்டியைத்தியானிப்பதோடு, ஜாலக்காளையும், குருவையும் பணிந்துதான் மையைப்பிரயோகிக்க வேண்டும்.

## ஆனைத்தலை விழும் வித்தை.

நூலேணிமேலிருந்துகொண்டு மையைத்தடவி கலியாணப் பூசனிக்காயைவெட்ட ஆனைத்தலைகள் வந்துவிழும்.

## குதிரைத்தலை விழும் வித்தை.

பூசனிக்காயிக்கு மையைத்தடவி நீலகண்டியைத் தியானித்து வெட்ட குதிரைத்தலைகள் வந்துவிழும்.

## மனிதர்தலை விழும் வித்தை.

கொஞ்சம் கெச்சக்காயை மடியில் கட்டிக்கொண்டு நூலேணி மேலேறி மையைத்தடவி நீலகண்டியைத் தியானித்துக்காயை சின்னபின்னமாக வெட்ட மனிதரின் தலைகளும், கால்களும், கைகளும், முண்டங்களுமாக வந்துவிழும். அதைப்பார்த்த மனிதர்களெல்லாம் பயந்து உன்னை மகா மந்திரவாதியென்று சொல்லுவார்கள்.

## மலைகளாகும் வித்தை.

மையைகையில் பூசிக்கொண்டு மண்ணையள்ளி இதோ மலைகள் உற்பத்தியாகும் வேடிக்கையைப் பாருங்களென்று நாலுதிசைகளிலும் வீசியெறிந்திட எங்கு பார்த்தாலும் குன்றுகளும், பர்வதங்களும், மகம்மேரு, கயிலை, பொதிகை முதலிய அஷ்டபர்வதங்களுமாகக்காணப்படும். இதுதவிர மலைகளிலிருக்கும் பலவித விருக்ஷங்களும், ஜீவஜெந்துக்களும், தவஞ்செய்யும் ரிஷிகளும் காணப்படுவார்கள். அதைப்பார்த்த சனங்களெல்லாம் பலே வேடிக்கையென்று உன்னை மெச்சுவார்கள்.

## சமுத்திரமாகும் வித்தை.

மையையெடுத்து கைகளிற் பூசிக்கொண்டு சப்த சாகரங்களும் இங்கிருக்கப்பட்டவர்களின் கண்களுக்குத் தெரியவேண்டு மென்று ஜாலக்காளை மனதில் தியானித்து மண்ணையள்ளி அஷ்டதிக்குகளிலும்போட எல்லார் கண்களுக்கும் சப்த சமுத்திரங்களும் அதிலுள்ள தீவுகளும், தீவாந்திரங்களும், மஹா விஷ்ணுவும், ஸ்ரீலட்சுமியுங் காணப்படுவதோடு கப்பல், படகு, தோணி, மச்சங்கள் இன்னும் நீரில் வாழப்பட்ட ஜீவஜெந்துக்கள் முதலியவைகளெல்லாம் தோன்றும். அதைப்பார்த்த ஜனங்களெல்லாம் இவன் மகாதேவனேயென்று ஆச்சரியப்படுவார்கள்.

## காடாகும் வித்தை.

மையைகைகளிற் பூசிக்கொண்டு இதோ நம்மெதிரில் காடுண்டாகும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி மண்ணையள்ளி வீச பார்ப்பவர் கண்களுக்கும் மனிதர் நுழையக்கூடாத இருண்டகாடும், அதில் புலி, கரடி, சிம்மம், ஆனை முதலியவைகளின் கோஷ்டமும், கனைப்பும் உண்டாவதைப்பார்த்தால் ஜனங்கள் மிரண்டு பயப்படுவார்கள். இவ்வேலைகளையெல்லாம் செய்கிறதற்கு இருளே மிகவும் சிரேஷ்டமானது.



## பட்டணங்கள் உண்டாகும் வித்தை.

மையைகைகளிற் பூசிக்கொண்டு நீலகண்டியை மனதிற் தியானித்து ஜாலக்காளைப்பணிந்து மண்ணையள்ளி நான்குதிசைகளிலும் வீசி இதோ பட்டணம் பாருங்களென்றுசொல்ல, பார்ப்பவர் கண்களுக்குப் பட்டணங்களும், வீதிகளும், ஆலயங்களும், ஜனங்கள் நடமாடுகிறதும், வண்டிகள் ஓடுகிறதும், பிள்ளைகள் விளையாடுகிறதுமாகத்தெரியும்.

## வயல்களாகும் வித்தை.

ஒரு பெரிய மைதானத்திற்கு ஜனங்களை அழைத்துக்கொண்டு போய் இதோ இம்மைதானத்தைப்பயிர்களுள்ள வயல்களாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி ஜாலக்காளைத்துதித்து மையை கையில் பூசிக்கொண்டு மண்ணையள்ளி நாற்புறங்களிலும்வீச பார்ப்பவர் கண்களுக்கு எங்கு பார்த்தாலும் பயிரும், தோட்டமும், துறவும், ஏத்த மிறைக்கிறதும், கவலையோட்டுகிறதும், ஏர் உழுகிறதுமாகத்தெரியும். பார்த்தவர்களெல்லாம் பிரமித்து நின்று விடுவார்கள்.

## தேவர்களைக்காட்டும் வித்தை.

அமாவாசையதினம் இருட்டினவுடனே எல்லோரையும் அழைத்துக்கொண்டு ஒரு மைதானத்திற்குச்சென்று இதோ பாருங்கள் தேவர்கள் வரும்வேடிக்கையை யென்றுசொல்லி மையைகையில் பூசிக்கொண்டு மண்ணையள்ளி நாற்புறங்களிலும்வீச, முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், அஷ்டவசுக்களும், அஷ்டதிக்குப்பாலர்களும் இன்னும் இருக்கப்பட்ட சங்கநிதி, பதுமநிதி முதலிய தெய்வலோக வளப்பமெல்லாம் பார்ப்பவர்கண்களுக்குத்தெரியும். எல்லோரும் ஆச்சரியப்பட்டு உன்னை ஒரு சித்து புருஷனென்றே கொண்டாடுவார்கள்.

## சங்கிலி மாயமாகும் வித்தை.

ஒரு பெரிய இரும்பு சங்கிலியையெடுத்து அனைவருக்குங்காட்டி இச்சங்கிலியை விழுங்கிவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி, யாருக்குந்தெரியாது மையைத்தடவி சங்கிலியை வாய்மேல் வைத்துப்பின்னு லிழுத்துவிட்டுவிட யாவரும் அதை விழுங்கிவிட்டாரென்றே நினைத்துக்கொள்வார்கள்.

## கேட்டப்பாரை விழுங்கும் வித்தை.

கெட்டப்பாரையைக் கொண்டுவந்து அனைவருக்குங் காட்டி இதை விழுங்கி விடுகிறேன் பாருங்களென்று சொல்லி வாய்மேல் வைத்து மையைத்தடவிப் பின்புறம் போட்டுவிட, யாவரும் அதை விழுங்கி விட்டாரென்றே நினைத்துக்கொள்வார்கள்.

## பட்டாக்கத்தியை விழுங்கும் வித்தை.

ஒரு பட்டாக்கத்தியைக் கொண்டுவந்து அனைவருக்குங்காட்டி இதை விழுங்குகின்றேன் பாருங்களென்றுசொல்லி வாய்மேல்வைத்து ஒருவருக்குந்தெரியாமல் மையைத்தடவி பின்புறமிழுத்துப் போட்டுவிட யாவரும் நீ கத்தியைவிழுங்கி விட்டாயென்றே நினைத்துக் கொள்வார்கள்.

## ஜலஸ்தம்பன வித்தை.

ஜலத்திரட்டி என்னும் மூலிகையைக்கண்டு பிடித்துக் காப்பு கட்டி பொங்கலிட்டு, தூபதீபங்கொடுத்து சாப நிவர்த்திசெய்து உச்சிவேரறாமல் கொண்டுவந்து நிழலிலுலர்த்திப் பொடிசெய்து, ஐங்கோலத் தைலம்விட்டு மைபோலரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது ஜாலாக்களைப்பணிந்து பாதக்குரட்டின் அடியில் பூசிக்கொண்டு ஜலத்தின்பேரில் தாராளமாக நடக்கலாம். குளம், கிணறு, குட்டை, ஏரி முதலியவைகளில் செய்யலாமே யொழிய ஆறுமாத்திரங்கூடாது. தவிர பீடத்தின் கீழ்ப்புரம் பூசிக்கொண்டு ஜலத்தின்பேரிலிருக்கலாம். பார்ப்பவர்கள் உன்னை ஒரு யோகியென்றே நினைப்பார்கள்.

## எக்ஷணி வித்தை.

பச்சோந்தி யென்னும் பச்சை ஓணானுடைய பிச்சில் திசை மயக்குப்பொடியும், மதிமயக்குத்தூளும், ஊமத்தன்வேர்த்தூளும், சேர்த்து ஐங்கோலத்தைலம் விட்டரைத்து மையாக்கிப்பரணியில் வைத்துக்கொண்டு, மோகினியைப் பதினாயிரந்தரந் தியானித்துப் பிறகு ஜாலக்காளை பூசை செய்து மையையெடுத்து வேறொரு பரணியில் வைத்து மறுபடியும் மோகினியை வெள்ளைப்புஷ்பத்தினால் பதினாயிரம் விசைபூசித்துப் பிறகு மாயமோகினி நமஹாவென்று பொட்டிட்டுக் கொண்டு வீதிவழியே போக பார்ப்பவர்கண்களுக்கு நீ ஒருபெண்ணைப்போலவே காணப்படுவாய். ஜனங்களெல்லாம் உன்னழகைக்கண்டு நீ யாரோ தெரியவில்லையென்று உன்பேரில் மோகிப்பார்கள். சிலர் உன்னழகிற்கு புத்திமயங்கிச்சித்தப்பிரமைகொண்டு உன்காலிலும் விழுவார்கள். சிலர் உன்னுடன் வலியவந்து வார்த்தையாடுவார்கள். சிலர் உனக்கு என்னவேண்டுமென்றுக்கேட்பார்கள். சிலர் நீ இட்ட வேலைகளை யெல்லாஞ்செய்வார்கள். அதுசமயம் நீ பொட்டைக்கலைத்துவிட ஒன்றுந் தோன்றாது. மெய்மறந்துதிடுக்கிட்டு கனவுகண்டமாதிரி ஐயோ இங்கிருந்த பெண்ணைக்காணோமேயென்று யேங்கித்தவிப்பார்கள். இம் மையினுடைய அற்புதங்கள் மெத்தவுண்டு அதுகளையெல்லாம் குரு முகாந்தரமாய் தெரிந்து கொண்டு செய்தால் மெத்தவும் நலம்.

## இதுவுமது.

தெப்பக்கால் என்னும் மூலிகையைக் கண்டுபிடித்து அவ்விடத்தைச்சுத்திசெய்து வெள்ளிக்கிழமையில் காப்புகட்டி ஸ்ரீம், இரீம், கிலீம், அவ்வும், உவ்வும், மவ்வும், நமசிவய, ஓம் தினமொன்றுக்கு லக்ஷமுருசெபித்துவந்து மறுவெள்ளிக்கிழமைதினம் காப்பு கட்டிப் பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்து, பலிகொடுத்து வேரை அறாமல் பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவை வேரின்மேல்பூசி, அதற்குமேல் கருச்சீலைசுற்றி, அதற்குமேல் அதைத்தங்க கடயத்தில் அடைத்து வைத்துக்கொண்டு மறுபடியும் யக்ஷிணியைத்தியானித்து ஒரு துணியை எடுத்து முக்காடிட்டு மூடிக்கொண்டு, ஜாதிக்காய், ஏலக்காய், வால்மிளகு, கற்கண்டு, புஷ்பம், வெற்றிலைப்பாக்கு, பந்நீர், பலகாரம் பலவகைப் பழதினுசுகள் முதலியவற்றில் எதைக்கோரி நினைக்கிறாயோ அதுகளெல்லாம் தடையின்றி கொண்டுவந்து தருவாள். அதை எடுத்து எல்லோருக்குங்கொடுக்க அவர்கள் அதைச்சாப்பிட்டு ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் நீ மாத்திரம் அதைச் சாப்பிடக்கூடாது. அப்படி சாப்பிடும்பக்ஷத்தில் அது உனக்குப் பலிக்காமல்போகும்.



## இதுவுமது.

பாம்பு தலையைப்பிடித்துக் கொண்டிருக்கும்போது அதை ஒரே வெட்டாகவெட்டி இரண்டுதலைகளையும் எடுத்து ஐங்கோலத் தைலத்தில்தோய்த்து அதைச்சிகப்புசகலாத்தில் தைத்தலைக்குள் போட்டு வாயைத்தைத்து உரலில் வைத்துக்குத்தினால் அதனுடைய வாயுபோகும். அப்போது அதை யெடுத்துப் பத்திரமாக வைத்துக்கொண்டு சகல வித்தைகளையும் நினைத்தது நினைத்தபடி ஆடலாம். பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு உன்னை ஒரு சித்து புருடனென்றே நினைப்பார்கள்.

## சீலை அவிழ்க்கும் வித்தை.

கழுதைகள் ஆணும் பெண்ணுமாகச்சேரும்போது ஆண் கழுதையினுடைய வால்மயிரைத் தந்திரமாகப்பிடுங்கி வைத்துக்கொண்டு, பிறகு கண்ணில்லாதப் புற்றின்பேரில் படர்ந்திருக்கும் கட்டுக்கொடிக்குக் கிராணம் பிடித்திருக்கும்போது காப்புகட்டி, பலி கொடுத்துப் பொங்கல் தூபதீப முதலியவைகளுடன் வேரறாது பிடுங்கிவந்து வளையஞ்செய்து, அதின்மேல் மேற்படி கழுதையின் மயிரைச்சுற்றி, அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி அதற்குமேல் தங்கக்கம்பியும், வெள்ளிக்கம்பியுஞ்சுற்றி ஜாலக்காளைப்பூசித்துக் கையில் போட்டுக்கொண்டு மேலேற்ற சீலை அவிழ்ந்து நிர்வாணமாகும். கீழ்தள்ள எப்போதும்போல் சரியாக விருக்கும்.

## தீவட்டி வித்தை.

வெட்டுண்டு இறந்து போனவனுடைய மாமிசத்தை எடுத்து அதில் திகைப்பூண்டு பொடியைச்சேர்த்து ஐங்கோலத் தைலம் விட்டு தீவட்டியில் வைத்துச்சுருட்டி, இராக்காலங்களில் பலபேர்

கள் சூழ்ந்திருக்கும்போது எண்ணெயூற்றி திவட்டியைக்கொளுத்த அவ்வெளிச்சத்திலுள்ள யாவரும் தலையில்லா முண்டங்களாகவே தோற்றப்படுவார்கள். ஒருவர்க்கொருவர் தங்கள் தங்களுடைய தலைகள் இருக்கின்றதாவென்று தடவிப்பார்த்துக்கொள்வார்கள்.

### மாம்பழ வித்தை.

ஏரழிஞ்சி விதையைக்கொண்டுவந்து பூந்தைலமிறக்கி ஒருபாத்திரத்தில்விட்டு அதனுடன் ஐங்கோலக் கருவையுங்கூட்டி தயார் செய்து வைத்துக்கொண்டு, மரத்திலேயே கனிந்த ஒரு மாம்பழத்தைக்கொண்டுவந்து பிழிந்துவிட்டுத் தோலைநீக்கி வெறுங்கொட்டையை மாத்திரமெடுத்துக்கொண்டு அதைமுன் தயாரித்த தைலத்தில் ஒருநாள் முழுமையும் ஊறப்போட்டு எடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு பலபேர்கள் கூடியிருக்குஞ்சபையில் அக்கொட்டையை எல்லாருக்குங்காட்டிக் குழிதோண்டிக் கொட்டையைநட்டு சலம்வார்த்து ஒரு கூடையால்மூடி, நான்கு தடவை சலம்வார்த்து நான்குதடவை திறந்து திறந்து மூடினால், அந்தமாங்கொட்டையானது இலை, கொழுந்து முதலியவைகளுடன் பூ, பிஞ்சி, காய் இவைகளோடு கூடியசெடியாகும். அதை மூன்றே முக்கால் நாழிகைக்குள் யாவர்களுக்குங்காட்டி மறைத்துவிடவேண்டும். இல்லாவிடில் உதிர்ந்துவிடும்.

### மணலை அல்வாசெய்யும் வித்தை.

பாதம்பிசின்பலம் 1, சீனகற்கண்டுபலம் 1, குங்குமப்பூ விராகனெடை அரிக்கால் இம்மூன்றையும் மணலைப்போல தூளாய்செய்து வைத்துக்கொண்டு, ஒரு பீங்கான் தட்டில் மணலைப்போட்டு சபையோருக்குக்காட்டி இம்மணலை அல்வாயாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி ஒரு பெரிய துணியை மேலே மூடிவிட்டு தந்திரமாக அம்மணலைக்கீழே கொட்டிவிட்டு ஒருவருக்குந்தெரியாது கலைத்துவிட்டு மேலே மூடிபோடும் துணியில் ஒரு கள்ள அறையில்மேற்படி தூள்களை ஒளித்துவைத்திருந்து சாக்கிரதையாக அதைப்பீங்கானில் கொட்டிக்கொண்டு ஏதாவது வாயில்வந்தபடி மந்திரங்களைச்சொல்லி துணியைத்திறந்து மறுபடியும் சபையோர்களுக்குக் காட்டினால் அது மணல் போலவேயிருக்கும். அதுசமயம் என் மந்திரத்தை இங்குயாரோ கட்டிவிட்டார்களென்றுசொல்லி நாற்றிசையும் சுற்றிப்பார்த்து வெகு கோபமாக ஆகிலும் பரவாயில்லை இதோ யக்ஷிணி மந்திரத்தினால் ஒரு நொடிக்குள் அல்வாசெய்துக்கொடுக்கின்றேன் பாருங்களென்றுசொல்லி மீசையை முறுக்கி, தோளைத்தட்டிக்கொஞ்சம் ஜலத்தையெடுத்து மந்தரித்து விடுகிறுப்போல் கொஞ்சம் ஜலத்தை முன் தூளில்விட்டு மூடிக்கொஞ்சநேரங்கழித்துத்திறந்துபார்க்க அது அசல் பாதம் அல்வாவைப்போல் கட்டியிருக்கும் அதை அறுத்து சபையோர்களுக்குக் கொடுத்துச் சாப்



பிடச்சொல்லவும். நீமாத்திரம் சாப்பிடக்கூடாது. ஆனால் ஜலத்தைமாத்திரம் அதிகம்விடாமல் நிதானமாக விடவும்.

### நினைத்தவர் ஆடும் வித்தை.

பன்றி மலம், மனிதர் மலம், துலுக்கன் மலம் இம்மூன்றையும் குழித்தைலமிறக்கி அதனில் தீட்டுச்சீலையைச்சேர்த்து அதை நெருப்பில்விட்டெரிக்க அப்புகைபட்ட மனிதர்களெல்லாம் தலைசுற்றி ஆடுவார்கள்.

### பிசாசு பூத மாரணம்.

மனிதர்மலம், நாய் மலம், பன்றி மலம், பூனை மலம், கழுதை மலம் இவ்வைந்தையுங் குழித்தைலமிறக்கி அத்தைலத்தைப்புகைத்தாலுஞ்சரி அல்லது அதைத்தைலமிரக்காமல் நெருப்பிலிட்டுப் புகைத்தாலுஞ்சரி அவ்வாடை பட்டமாத்திரத்தில் எப்பேர்ப்பட்ட ஜடாமுனியா யிருந்தாலும் விலகி ஓடிவிடும்.

### அவலை மெல்லாதிருக்கும் வித்தை.

கொஞ்சம் அவலையெடுத்து நெய்யில் ஊறவைத்து அதையாருக்கேனுந்தின்னக்கொடுக்க, அவர்கள் அதை எவ்வளவுநேரந்தின்றாலும் கொஞ்சமேனும் பல்லிற்கு அசையாது. அவல் அவலைப்போலவே யிருக்கும் பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

### உலக்கையை விழுங்கும் வித்தை.

உலக்கையையெடுத்து அனைவருக்குங்காட்டி இதை விழுங்கி விடுகிறேன் என்னுடைய சாமர்த்தியத்தைப் பாருங்களென்று சொல்லி, உதட்டின்பேரில் வைத்து விழுங்குகிறமாதிரி நடித்து மையைத்தடவிப் பின்புறம் உருவிப்போட்டுவிட பார்ப்பவர்கள் நீ உண்மையாகவே உலக்கையை விழுங்கி விட்டாயென்று பிரமிப்பார்கள்.

### பட்டண வித்தை.

ஒருவர் கண்களுக்குத்தெரியாமல் இராக்காலம் ஊருக்குவெளியிற்சென்று மறைவான ஓரிடத்திலிருந்துக்கொண்டு மையையெடுத்துகையிற்பூசி மண்ணையள்ளி திக்குகளில்போட அது பார்ப்பவர் கண்களுக்குப் பட்டணமாய்க் காணப்படுவதோடு, அதில் தெருக்களும், மனிதர்க் கூட்டங்களும், பெரிய மெத்தைவீடுகளுந் தெருவதோடு கோயில், குளம், பிராமணர் வீதி, சூத்திரர்வீதி, கடைவீதி, ராஜவீதி, ராஜசமுகம், சதுரங்கசேனைகள் முதலியன விநோதமாய்த் தென்படும். இதைப் பார்த்தவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு உன்னை மிகவும் மெச்சிக்கொள்வார்கள்.

வேறு.

ஐங்கோல தைலத்துடன் சாம்பிராணியைச் சேர்த்து அரைத்து ஒரு கொடிக்குத்தடவி ந-ம-சி-வ-ய ஓம், கிலீம், சவ்வும், ஐயும், சர்வபசாசு ஆக்ருஷ்ணி என்று லட்சமுருகொடுத்துப்பிறகு அக்கொடிக்குத் தூபதீபங்கொடுக்க அப்புகைப்பட்ட ஜனங்களெல்லாம் ஆடுவார்கள்.

குறளி தியானம்.

ஓம், அவ்வும், உவ்வும், மவ்வும், ஸ்ரீம், இரீம், கிலியும், வய நமசி, ஓம் குறளிவருவாய் வந்து நான் சொல்கின்றதை யெல்லாம் என்னிஷ்டப்படி செய்வாயென்றுசொல்லி லக்ஷமுருஞ்செபித்து பலி பூசை முதலியவைகளைக் கொடுத்து மையை விரலில் தொட்டுக் குறளியைத்தியானித்து திரேகத்தின்பேரில் எவ்விடங்களில் தொடுகின்றாயே அவ்விடமெல்லாம் பத்தல் பத்தலாகக்கிழியும். இதைத்தான் கோகர்ன வித்தையென்று சொல்வது.

வேறு.

முன்சொல்லிய மையையெடுத்து விரலில் தொட்டுக்கொண்டு குறளியைத்தியானித்து உன்னுடைய இரண்டு காதுகளையுந்தொட்டால் அதுகள் ஆடும். பார்ப்பவர்கள் சந்தோஷிப்பார்கள். இதைத்தான் கெஜகர்னவித்தை யென்று சொல்வது.

காளி தியான வித்தை.

அரிகாளி, ஓம்காளி, சூலகபாலகாளி, மோடிதேவி, பூமிகாளி, ஓம்காளி, ஓம்பிடாரி, மாகாளி, போடிகாளி, மந்திரமாகாளி, ஓம், ஆம், கோதண்டரூபி, ஆங்காரசத்திக்கொண்டு வருவாயென்று லக்ஷமுரு செபித்து பொங்கல், வடை, பாயாசம், அவல்கடலை, கரும்பு, நீர்மோர் பானகம் முதலியவைகளை வைத்துப் பூசித்தால் காளியானவள் வசியமாவாள்.

செப்பிடு வித்தை.

செம்பருத்தியைக்கொண்டுவந்து ஐந்து பந்து செய்து, பருத்திக்கொம்பினாலேயே கோல் ஒன்றையுஞ் செய்துக்கொண்டு, சபையில்வந்து உன்னுடன் விளையாடுங்காளியைத் தியானித்து மேற்படி ஜாலமையைக்கொஞ்சம் கோலிற்குத்தடவி பிறகு கோலைக்கையிலெடுத்துக்கொண்டு பந்துகளைக் கோலினால்தட்டி ஆட்டினால் அநேக பந்துகள் இருக்கின்றதைப்போல் சபையோர்களுக்குத்தோன்றும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

வேறு காளி வித்தை.

மாக்கொடியும், சீலையும், சவத்தின் தைலமும் ஐங்கோலத் தைலமும் ஒன்றாகச்சேர்த்துக் கருக்கிக் கல்வத்திலவைத்து அரைத்துவழித்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு யநம, யங், வங், சிங் சுவஹா வென்று லக்ஷமுருசெபித்து பூசித்து அதை எட்டி முளைக்குத்தடவி, மறுபடியும் ஆயிரம் உருகொடுத்துப் பூசித்துப் பலிகொடுத்து ஓர் வியாபாரமாகின்ற கடையின்முன் அடித்துவிட்டால் அக்கடையில் ஒரு காசேனும் வியாபாரமாகாது.



எண்ணெய் வராத வித்தை.

எட்டிமுளைக்கு மையைத்தடவிப்பூசித்து செக்காடு மிடத்தில் புதைத்துவிட்டால் எத்தனை நாளானபோதிலும் அச்செக்கில் எண்ணெய் வராது.

சாறுவராத வித்தை.

முளைக்கு மையைத்தடவிக் காளியைத்தியானித்துப் பூசித்து கரும்பாலையிருக்குமிடத்தில் புதைத்துவிட்டால் ஆலையில் கொஞ்சமேனும் சாறு வராது.

கோல்லன் உலைவேகா வித்தை.

கொல்லன் உலையில் மேற்படி முளையை மையைத்தடவிப்பூசித்துப்புதைத்துவிட்டால் இரும்பானது எவ்வளவு கரியைப்போட்டு ஊதினாலும் வேகாது.

சுண்ணாம்புக்காளவாய் வேகாத வித்தை.

முளைக்கு மையைத்தடவி மந்திரஞ்செபித்து சுண்ணாம்புக்காளவாயில் புதைத்து விட்டால் சுண்ணாம்புவேகாது.

சூளைவேகாத வித்தை.

செங்கற்சூளை அடுக்கி சூளைபோடுஞ்சமயம் இம்முளைக்கு மையைத்தடவி ஆயிரம் உருகொடுத்துக் காளியைத்தியானித்துப்புதைத்துவிட்டால் அச்சூளையில் ஒருகல்லேனும் வேகாது.

பிணம் வேகாத வித்தை.

புதிதாக ஓர் எட்டி முளையைச்சீவி அதற்கு மையைத்தடவி, காளியின் மந்திரத்தை லக்ஷஞ்செபித்துப் பிணத்தின் கால்மாட்டண்டைப் புதைத்துவைக்க அப்பிணத்தை எவ்வளவு கட்டை போட்டுக் கொளுத்தினாலும் வேகாது.

நேல் உப்பரிகையாகாத வித்தை.

நெல் அம்பாரமளக்கும்போது மேற்படி முளையை அடித்துவிட்டால் ராசிகுறைந்து குய்யோமுறையோவென்று அழுவார்கள்.

நேல்மசியாத வித்தை.

நெல்லைக் கொட்டணங்குத்தும்போது இம்முளையை அவர்களுக்குத்தெரியாமல் உரலுக்கடியில் புதைத்துவிட்டு மையைச்கொ

ஞ்சமெடுத்து உலக்கையில் தூவிவிட்டால் அந்நெல்லானது கொஞ்சமும் மசியாது.

## மீன் அகப்படாத வித்தை.

செம்படவனுடைய வலையில் மையைத்தடவி மூளையைக்கட்டிவிட அவ்வலையில் கொஞ்சமேனும் மீன் அகப்படாது.

## வெள்ளாய் வேகாத வித்தை.

வண்ணான் வெள்ளாய் வைக்கும்போது அவனுக்குத்தெரியாமல் மேற்படிமூளையை வெள்ளாயில் சொருகிவைக்க அவ்வெள்ளாயானது கொஞ்சமும் வேகாது. வண்ணான் குய்யோமுறையோவென்று அழுவான்.

## திராவகங்கள் இரங்கா வித்தை.

திராவகங்கள், தைலங்கள் முதலியவை இறக்குமிடத்தில் மேற்படி மூளைக்கு மையைத்தடவி காளி மந்திரத்தை 108-விசைமனதில் தியானித்துப் புதைத்துவிட அவர்கள் எவ்வளவு பாடு பட்டாலும் கொஞ்சமேனும் திராவகம் இறங்காது.

## கம்மாளன் அழும் வித்தை.

கம்மாளன் குமட்டியில் நெருப்பைப்போட்டுக்காய்ச்சி பொன் வெள்ளி முதலியதுகளை உருக்கும்போது அவனுக்குத் தெரியாமல் மேற்படி மையைக் குமட்டியில் தடவிவிட அவன் என்னபாடு பட்டாலும் அக்குமட்டியில் ஒன்றும்வேகாது. அழுவான் புத்திசாலியானால் இன்னம் எவ்வளவோ தம்பனவேலைகளெல்லாம் இதைக்கொண்டு செய்யலாம். இல்லையேல் குரு முகாந்தரமாய் கற்றுக்கொண்டு செய்வதே மேல்.

## சண்டை நடக்கும் வித்தை.

ஈச்சஞ்செடியினடியிலிருக்கும் காக்கைப்பூண்டிற்கும், குரங்கு மூலிகைக்கும் காப்புகட்டிப் பொங்கலிட்டுக்கொண்டு வந்து கருவைத்தடவி ஒன்றை ஒரு கடையிலும். மற்றொன்றை இன்னொரு கடையிலும்வைக்க இருகடைக்காரர்களும் விடாத சண்டையிட்டுக்கொள்வார்கள். அண்ணன் தம்பிகளாயிருந்தாலும் சண்டையிட்டுக்கொள்வார்கள். அந்த யெடுத்துவிட்டால்தான் சண்டை நிற்கும்.

## வேறு தம்பன வித்தை.

நாபியைச்சுட்ட கோலில் மூளைசெதுக்கி, அதில் உகாரம்போட்டு, ஐங்கோலக்கருவைப்பூசி, எதிரியின் மலத்திற்போட அவனுக்கு மலசலங்களடைத்துவிடும் வெகு பாதைப்படுவான். உடனே மூளையையெடுத்து சலத்திற்போட நிவர்த்தியாகும்.



## பாவக்காயின் கசப்பகலும் வித்தை.

பாவக்காய்களையறிந்து அவைகளின்மீது எலுமிச்சம்பழ ரசத்தைவிட்டுக் கொஞ்சநேரம் வெய்யலில்வைக்க கசப்பு மாறிவிடும். அல்லது கொஞ்சம் புளியும் உப்பும் போட்டுக் கொதிக்கவைத்து எடுத்து அலம்பிக்கொள்ள கசப்பு மாறிவிடும்.

## கருணைக்கிழங்கு காரலகலும் வித்தை.

கருணைக்கிழங்கைப் பத்தை பத்தையாக அறுத்து ஜலம்விட்டு வேகவைத்து எடுத்துக்கொள்ள காரலானது அகலும்.

## வேறு.

கருணைக்கிழங்கை யறுத்து கொஞ்சம் புளிசேர்த்து வேகவைத்து எடுத்துக்கொள்ள காரலானது மாறும்.

## சகலஜனவசிய வித்தை.

இருபத்தைந்து அறையில் நமசிவய என்னும் அக்ஷரத்தை நருவணையைப்பிடித்துமாறி, ஓம் நமசிவய என்னும் மந்திரத்தை வெள்ளைபுஷ்பத்தினால் நூறாயிரந்தரம் அர்ச்சித்துவணங்கும் பக்ஷத்தில் கடலாடையுடுத்த இப்பூவுலகின் கண்ணுள்ள சகல ஜனங்களும் பின்னே தொடர்ந்து வருவார்களென்பதற்குச் சந்தேகமுமுண்டோ ?

## பேயோடும் வித்தை.

வெட்பாலைப் பலகையைக் கொண்டுவந்து சுத்தப்படுத்தி அதின்பேரில் இருபத்தைந்து அறையுள்ள சக்கரத்தைக்கீறி, அதில் வயநமசி, என்கிற அக்ஷரத்தைப்போட்டு காலைமாலை பயபக்தியுடனே திரிகரணசுத்தியாய் மேற்படி மந்திரத்தை எழுபத்தோராயிரமுரு செபித்தால் கொடிய பில்லி, சூனியங்களெல்லாம் பறந்து போகும். இதல்லாமலும் தீராத வியாதியாயிருக்கின்றவர்களுக்குமேற்படி மந்திரத்தையே செபித்து அவ்விபூதியை குளிர்ந்தநீரில் கலக்கி காலைமாலை மூன்றுநாள் உள்ளுக்குக்கொடுக்க சௌக்கியமாகும்.

## வேறொரு வித்தை.

அப்பைக்கிழங்கு, பேயத்திவேர், பேயாலம்வேர், ஊமத்தன் விரை, திகைப்பூண்டு இவைகளைவகையொன்றுக்கு விராகனெடை ஒன்றாக நிறுத்தெடுத்து யிடித்துத்தூளாக்கி வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு, காட்டெருவைக்கொளுத்திய விபூதியில் மண் கல் முதலிய மாசுகள் இல்லாதபடி போக்கி அதையும் சமன்சேர்த்துக் கலந்துவைத்துக்கொண்டு, பேய்பிடித்திருக்கின்றவர்கள் எப்படியிருந்தாலும் அப்படியேகொண்டுவந்து, ஸ்நான முதலியதில்லாவிடினுங் குந்தவைத்து அவர்கள் தலையின்பேரில் மேற்படி தூளை மந்திரங்கள் செபித்துப்போட அவர்கள் உடனே தலைசுற்றி ஆடுவது

மன்றி, வாயில்வந்ததையெல்லாம் பினத்திக்கொண்டு வெகு அட்டகாசமாக ஆடி, ஊரும் பேருஞ்சொல்லி, நான் போகிறேன் போகிறேனென்று முடியைக்கொடுத்துவிட்டு ஓடும். இது ஒரு வேடிக்கையான தந்திரம் செய்து பார்த்தால் தெரியும்.

## வேறொரு வித்தை

சொரியாந்தவளையைக் கொண்டுவந்து அதின்வாயில் வேண்டுமான பளிங்கு சாம்பிராணியைப்போட்டுத்துருத்து அத்துண்டுகள் வெளியில் விழாதபடி வாயைக்கன்னி நூலால் தைத்துவிட்டு, வீட்டடுப்பிற்கு நேர்தலை கீழாகவும், கால்மேலாகவுங் கட்டித்தொங்கவிட்டுவிட்டு, நாற்பதுநாள் அடுப்பின்புகை அதற்கு ஊறியபின் அதை அவிழ்த்தெடுத்து அதற்குள்ளிருக்கும் சாம்பிராணியைச் சேதமில்லாமலெடுத்து, அதனுடன் தலைமஞ்சங்கொடியைச்சேர்த்துத்தூளாக்கி வைத்துக்கொண்டு பேய்பிடித்திருப்பவர்களைக்குந்த வைத்து, அவர்களெதிரில் மேற்படி தூளைப்புகைத்து அப்புகையை அவர்கள் நாசியிலேறும்படியாய்ச் செய்யவும். அது ஏறின மாத்திரத்தில் பேய் என்று சொல்லும்படியான வம்சத்தில் எத்தனைபிரிவுகளிக்கின்றதோ அத்தனையும், கடலில்வாசம் செய்யும்படியான கன்னிகளும், சங்கிலிமுனி, ஜடாமுனி முதலிய இயற்கையறிவைக் கெடுக்கும்படியான முனிகளுங்கதறி, அபயம் அபயம் என்று ஊரும் பேரும் சொல்லி ஓடிப்போய்விடும்.

## கைகால் முடங்கும் வித்தை.

முருக்கமரத்தினால் ஒருபதுமைசெய்து அப்பதுமையின் வயற்றின்பேரில் மூஞ்சூரின் மலத்தையும், குடலையும்போட்டு, அதின் பேரில் அரிசிமாவைப்போட்டுமூடி, எதிரில்வைத்து பைரவமந்திரத்தைப்பதினாயிரம் உருசெபித்து, முன்பிடித்த மூஞ்சூரின் பக்கவிலாவெலும்பால், நாம் எதிரில் வைத்திருக்கும் பகையாளியாகிய பதுமையின் அவயவத்தில் எப்பக்கம் அடிக்கின்றோமோ அப்பக்கம் வாதரோகத்தினால் பிடிப்பு வந்ததைப்போன்று முடக்கிப்பிடித்துக் கொள்ளும். அதினால் எதிராளியானவன் படாத பாடுகளெல்லாம் படுவான். அவன் நீ செய்தாயென்று தெரிந்துக்கொண்டு உன்னை வந்து வணங்கும்பக்ஷத்தில், அப்பதுமையை எடுத்து அடித்திருக்கும் முளையைப்படுங்கி ஆற்றில்போட்டுவிட்டுபதுமையை அவ்வாற்றிலேயே கழுவிவிட்டால் எப்போதும்போல் சொஸ்தமாய் விடும். ஆனால் இது மஹாபாதகமான தொழில்.

## மலஜலமடைக்கும் வித்தை.

ஒரு மூஞ்சூரைப்பிடித்து அதன்வயிற்றைக்கீறி குடல் முதலியவைகளைப்போக்கிச் சுத்தஞ்செய்து அதன்வயிற்றில் எதிராளியினுடைய மலமும் நீரும்போட்டு வாயைத்தைத்து அதன்பேரில் கருங்



கோழிப்பிச்சைத்தடவி, தூமாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி, எதிரியின்வீட்டு வாசற்படியில் புதைத்துவைக்க, எதிரியானவன் மலசலமடைபட்டு படாத பாடுபடுவான். அவஸ்தை சொல்ல முடியாது. எதிரியானவன் நீசெய்தாயென்று கண்டு கொண்டு உன்னைவந்து வணங்கும்பக்ஷத்தில், நீ புதைத்திருப்பதையெடுத்து ஓடுகின்ற நீரிற்போட்டு கழுவிவிட எதிரியானவன் எப்போதும் போல் சுகமடைவான்.

## மற்றொரு வித்தை.

ஆதிவாரதினமாகப்பார்த்து ஒரு மூஞ்சூரை இடதுகால் செருப்பாலடித்து உயிரைப்போக்கி யெடுத்துக்கொண்டுவந்து, மூன்றுவதுதினமாகிய செவ்வாய்க்கிழமையதினம் அதன் வயிற்றிலிருக்கும் குடல் முதலியவைகளைப்போக்கி அதற்குப்பதில் எதிராளியின் மலமும், நீரும், சுடுகாட்டுச்சாம்பலும் சமபாகமாக அதன் வயற்றிலடைத்து அதை நாம் சமயல்செய்யும் அடுப்பிற்கு நேரே தூக்கிக்கட்டி, ஒரு மாத்து விரகினால் அடுப்பில் தீயெரிக்கும்போது, அத்தீயின்புகையும், சுடரும் அதில் பட்டதோ இல்லையோ அதற்குள் எதிரியின் தேகமாத்தியந்தமும் தீயைப்போட்டுக்கொளுத்தியமாதிரி எரியும். அதனால் அவன் படாதபாடுபடுவான். மறுபடியும் உன்னை வந்து வணங்குவானாகில், நீ கட்டியிருக்கின்றதை யவிழ்த்துத் தண்ணீரில் போட்டுக்கழுவிவிட சுகமடைவான்.

## மற்றொரு வித்தை.

ஒரு மூஞ்சூரைப்பிடித்து அதன் வயிற்றிலிருக்கும் குடலைப்போக்கிச் சுத்தஞ்செய்துவிட்டு அதற்குப்பதில் எதிராளியின் மலத்தையும், நீரையும் அதில்போட்டு, வெள்ளெருக்கன் நாரினால் வாயைத்தைத்துவிட்டு, அதற்கு கருங்கோழி இரத்தத்தைப்பூசிக்காயவைத்து, பூசையில்வைத்து தூமாதேவி மந்திரத்தை 1008-விசை செபித்து, அதன்வாலில் ஒரு கயற்றைக்கட்டி பாழடைந்தக் கிணற்றில் தலைகீழாக தொங்கக் கட்டிவிட்டு வந்துவிட எதிரிக்கு மலசலமடைத்து, வயறுப்பி ரொம்பவும் கஷ்டப்படுவான். அது சமயம் நீ ஏதோ மந்திரம் செய்கின்றவனைப்போல் சென்று அய்யோ பாவம் யாரோ என்னமோ செய்து விட்டார்கள் என்று பரிதாபப்பட்டு, சில மந்திரங்களை அங்கிருப்பவர்கள் மெச்சும்படியாகச்செய்து முன் கிணற்றில் கட்டிவைத்திருக்கும் வஸ்துவை யெடுத்துத் தையலைக்கிழித்து ஜலத்தில் கழுவிவிட, எதிரியும் அவஸ்தை நீங்கி எப்போதும்போலாவான். ஜனங்களும் உன்னைப் புகழ்வார்கள். இல்லையேல் உனக்கு தீராதபழியும் பாவமும் சம்பவிக்குமென்பதற் கையமில்லை.

## மற்றொரு வித்தை.

ஞாயிற்றுக்கிழமைதினம் பகல் பனிரெண்டுமணிக்குச்சரியாய் ஒரு தூரிஞ்சலைப்பிடித்து அதன் வயிற்றைக்கீறி உள்ளிருக்கும் வஸ்

துக்களையெல்லாம் எடுத்துவிட்டு அதற்குப்பதில் எதிரியின் காலடி மண்ணும், சுடலைமண்ணும், நண்டுக்குழிமண்ணும், மலமும் சேர்த்துப்புதைத்து வாயைத்தைத்து அடுப்பின்பேரில் தூக்கிக்கட்டி வைத்து விடவும். நாம் எப்போது அடுப்பில் நெருப்பைப்போட்டு தீமூட்டுகின்றோமோ அப்போதெல்லாம் எதிரியின் தேகமானது தாளக் கூடாத எரிச்சலாயிருக்கும். அடுப்பணைந்தால்தான் எரிச்சலடங்கும்.

### பாம்பின்வேடிக்கை வித்தை.

ஒரு முத்தின தேங்காயின் கண்ணைத்திறந்து அதற்குள் ஒரு பச்சைப்பாம்பைப்போட்டு வாயைத் தமர் கொண்டடைத்துப் பூமியில் புதைத்து விடவும். மறுபடி நாற்பதாம்நாள் அதை யெடுத்துப்பார்க்க அதிலிருக்குந்தேங்காயும், பாம்பும் அழுகி எண்ணெயும், எலும்புமாயிருக்கும். எண்ணெயை மாத்திரம் ஓர் பீங்கானிலிருத்துக்கொண்டு மற்ற திப்பிகளையெல்லாம் யெரிந்து விடவும். பிறகு ஏதாவதொரு விசேஷமான தினத்தில் சகலமானபேர்களும் நிறைந்து வார்த்தையாடிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் இவ்வெண்ணெயை யூற்றி விளக்கேற்றிவைக்க, அங்குள்ளவர்கள் பேரிலெல்லாம் பச்சைப்பாம்புகளே யோடும். அனைவர்களும் மிரண்டு ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்துக் கொள்வார்கள்.

### இதுவுமது.

ஆமணக்கன் கொட்டையேனும், இலுப்பைக் கொட்டையேனும் அல்லது எண்ணெயுள்ளவே றெவ்வித வஸ்துவையேனும் பச்சைப்பாம்பின் வாய்க்குள்செலுத்திப்பத்திரமாய் பூமியில் புதைத்து வைத்துச் செடியாக்கி, அச்செடியில் காய்க்கும் காயையெடுத்து எண்ணெயாடி விளக்கேற்ற அப்போதும் வீடெல்லாம் பச்சைப் பாம்பாகவேதோணும்.

### முட்டை மாயமாகும் வித்தை

ஒரு பெரிய படிகாரத்துண்டை அடுப்பில்போட்டுப் பொரித்துக்கொண்டு, அதைக்கோழி முட்டைமாதிரி மெல்லிய கத்தியைக் கொண்டு தந்திரமாகச்சீவி தயாரர்கவைத்துக்கொண்டு ஜாலமாடும்போது சபையிலிருக்கப்பட்டவர்களுக்கு இம்முட்டையைக் காண்பித்து, இதோ இம்முட்டையை மாயமாகப்போகச் சொல்லுகிறேன் பாருங்களென்றுசொல்லி, பூமியில் புதைத்து மொணமொணவென்று சிலமந்திரங்களைச் சொல்லி கொஞ்சம் ஜலத்தை அம்மண்ணின்மேல் தெளிக்க, அவ்வீரம் முட்டைக்குப்பட்ட மாத்திரத்தில் அது கரைந்துவிடும். சிலநேரம் பொருத்து மண்ணைக்கிளறிக்காண்பிக்க முட்டையில்லாததைப்பார்த்து ஜனங்கள் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் இம்மாதிரி தந்திரமான வேலைகளைச் செய்யும்போது, ஜனங்கள் மிரளும்படியான மந்திரங்களையும் கூச்



சல்களையும், குட்டிச்சாத்தானையும், காளியையும், மலையாளபகவதியையும் சமயத்திற்கேற்றவாறு தோத்திரஞ் செய்துக்கொண்டு நடித்தால்தான் பார்ப்பவர்கள் நம்புவார்கள்.

### வசியத்திலர்த வித்தை.

கஸ்தூரிமஞ்சள், ஊசிக்காந்தம், கோரோசனை, இலவங்கம், பச்சைக்கற்பூரம், சாதிக்காய் இவைகளை வகையொன்றுக்குக் கால் விராகனெடையாக யெடுத்துப் பொடித்துத்தூளாக்கி, வெள்ளைச்சலவை மல்லில்பரப்பி அதனுடன் தலைமஞ்சங்கொடியை வைத்து திரியாகத்திரித்து, அதற்குமேல் கறுப்புக்கம்பிளியைச்சுற்றி, அதற்குமேல் தாமரைநூலைச்சுற்றி, அதற்குமேல் கள்ளிநூலைச்சுற்றி அத்திரியைத் தடையுள்ள கலசத்திற்போடடுக் காராம்பசுவின் நெய்விட்டுக்கொளுத்தி மைவாங்கி வைத்துக்கொண்டு, மோகினியையும், வாலையையும் பூசித்துத்திலர்தமிட சகலமும் வசியமாம்.

### மற்றொரு வித்தை.

முன்சொன்ன ஆறுவகைச்சரக்குடன் நல்ல மஞ்சளுஞ்சேர்த்து முன்போலத்திரிதிரித்து, தலைச்சன்பிள்ளையின் மண்டையோட்டில் காராவின் நெய்யூற்றி, அதில் மேற்படி திரியைப்போட்டு விளக்கேற்றி மேலே மண்டையோட்டை மூடி மைவாங்கி, அதனுடன் புனுகு, ஜவ்வாது இவைகளைச்சமனெடையாகச் சேர்த்து, மோகினியையும், வாலையையும், ஹ்ரீம், இரீம், கிலீம், மோகினிதேவினி ஆக்ருஷ்ணீ அங் றங் என்று லட்சத்தி யெட்டுருகொடுத்து அம்மையை வெள்ளி அல்லது தங்கத்தால் செய்த கம்பியைக்கொண்டெடுத்துத் திலர்தமிட மானிடர்கள் முதல் தேவர்கள் ஈறாக வசியமாவார்களென்று மூவாசையுமொழித்த முனிவர்களெல்லாம் சொல்லியிருக்கின்றனர்.

### மறைப்பு மை வித்தை.

ஐங்கோலப்பிண்டத்தை உலர்த்திச்சூரணித்து பெண்ணின் சீலையில் வைத்துத்திரித்து தலைமண்டையோட்டில் அத்திரியைப் போட்டு, காராவின் நெய்யூற்றி எரித்து மை வாங்கி அம்மையைச் செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு திலர்தமிட்டால் உலகத்திலுள்ள சர்வமும் மறையும்.

### அஞ்சன வித்தை.

முத்தித்தேறியிருக்கும் ஆடாதோடைச்செடிக்கு செவ்வாய்க்கிழமையதினம் சாப நிவர்த்திசெய்து காப்புகட்டி, மறுசெவ்வாய்க்கிழமையதினம் செடியை நோண்டிக்கிழங்கை யெடுத்துக்கொண்டு வந்து அதில் ஒரு விராகனெடையும், ஆடாதோடைப்பழம் விராகனெடை ஒன்றும், கோரோசனை விராகனெடை ஒன்றும் சேர்த்து அரைத்து, வெள்ளைத்துணியில் பரப்பித்திரியாக்கி, சாரைப்பாம்பின்

நெய்யை மண்டையோட்டிலிட்டு, அதில் இத்திரியைப்போட்டு எரித்து மைவாங்கி, அம்மையைக் கலவத்திற்போட்டு, புத்துத்தேன்விட்டு அரைத்து, செப்புச்சிமிளில் மையை யெடுத்துக்கொண்டு, கணபதிக்குப் பலமான பூசைபோட்டு, இரண்டாவது அஞ்சனாதேவியையும், ஆஞ்சநேயரையும் பூசித்துப்பணிந்து. தானதர்மங்கள்செய்து ஏழைகளுக்கு அன்னமிட்டு, குருவைத்தொழுது மையை யெடுத்துக் கண்களுக்குப் போட்டுக்கொண்டால் உலகத்திலுள்ள நிதிகளெல்லாம் கண்களுக்குத்தோன்றும். இம்மையை அரைக்கும்போது கலவம் வெடிப்பதைப்போலும், பூமிவெடிப்பதைப்போலும் காணப்படும். பயப்படாதுகுருவை மனதினிடமாகத் தியானித்துக்கொண்டு அரைக்கவும்.

வேறு.

ஒருபுதிய சட்டியில் வேண்டுமான ஆலாக்குருவியின் முட்டையை உடைத்துத்தடவி கற்பூரப்புகைபிடித்து அதைவழித்துக் கலவத்திற்போட்டு, அதனுடன் கோரோசனை, காந்தம், பச்சைக்கற்பூரம் இவைகளைச் சமனெடையாகப்போட்டு புத்துத்தேன் விட்டரைத்து மை பதமானபின் வழித்து மறுபடியும் சட்டியில் தடவி, காராவின் நெய்விட்டுக் கொளுத்தி புகையைப்பிடித்து வழித்து வைத்துக்கொண்டு தானதர்மங்களுடன் அஞ்சனா தேவியையும், ஆஞ்சநேயரையுந் துதித்து வெற்றிலையில் தடவிப்பார்க்க களவு, ஏவல், பில்லி, சூனியம், திருடு முதலியவைகளெல்லாந் தெரியும்.

மாரண வித்தை.

மாரணச்சக்கரத்தையெழுதி அதின்பேரில் எதிரியின் மலமும், நீரும், அவன் காலடிமண்ணும், கருவும் ஒன்றாகக்கலந்துப்பூசி, ஒரு நறுக்கில் அவன் பெயரை யெழுதிவைத்து, அதையெல்லாம் ஒரு பாம்பின் வாயில் தலைகீழாகத்துருத்து மேலே தூக்கிக்கட்டி, கீழே வேப்பெண்ணெய்யைக் கொண்டு, காக்கையின் கூண்டைக்கொளுத்தி ஓமஞ்செய்யும்போது வசி நசி என்னும் அக்ஷரத்தை ஆயிரத்தெட்டுரு செபிக்க எதிரி மாரணமாவான். ஆனால் எட்டு நாள்வரை விடாது மந்திரத்தைச் செபித்துக்கொண்டே செய்யவேண்டும்.

பேதன வித்தை.

இரட்டை ஊமத்தங்காயைப் பிளந்து அதின்பேரில் எதிராளியின் காலடி மண்ணைப்பரப்பி, அதில் அவனுடைய பேரை யெழுதி மற்ற பிளப்பை அதின்பேரில் வைத்துமூடி, மெல்லிய நூலால் இருபிளப்பையுஞ் சேர்த்துக்கட்டி, பேதனமந்திரத்தை 1008-விசை செபித்து அவனிருக்கும் ஊரைச்சுற்றி மயானத்தில் புதைத்துவிட அவன் பயித்தியங் கொண்டவனைப்போல் ஊரைச் சுற்றிச்சுற்றி



யழுவான். மறுபடியும் அதையெடுத்து ஆற்றில்போட எப்பொழுதும் போல் சுகமடைவான்.

வேறு.

ஊமத்தங்காயைப்பிளந்து அதில் எதிராளியின் இடது காலடி மண்ணைப்பரப்பி அவனுடைய பெயரை அதில் தலைமாறியெழுதி, ஐங்காயம்பூசி மற்றபிளப்பை அதின்மேல்வைத்து இருபிளப்பையுங் கன்னிநூலால் சேர்த்துக்கட்டி பேதன மந்திரத்தைச் செபித்துக் கொண்டே ஊரைச்சுற்றிவந்து சுடுகாட்டில் வடக்கு முகமாகப் புதைக்க அவனுக்கு மயக்கமுண்டாகி, பினத்தலெடுத்து ஊரைச் சுற்றிச்சுற்றி யழுவான், உலகத்தோர்களை யெல்லாம் பழிப்பான். இதையும் முன்போல் ஆற்றிலெடுத்துக் கழுவினால்தான் சுகப்படும். இல்லையேல் அவனும் சுகப்படப்போகிறதில்லை நீயும் சுகப்படபோகிறதில்லை.

வித்வேஷண வித்தை.

வேப்பமரத்தில் கட்டியிருக்கும் காக்கையின்கூண்டு, கழுதைச் சடை, அறுந்த தாலிக்கயிறு, பஞ்சகொட்டி யறுந்துபோன கயிறு, பஞ்சுகொட்டும் நரம்பு, பன்றிமயிர், பயித்தியக்காரன் நகம், பயித்தியக்காரன் துணி, சலாவரைவிறகு இவைகளையெல்லாஞ் சேகரஞ் செய்துக்கொண்டு முச்சந்திகூடுமிடத்தில் ஓர் அடுப்பைவைத்து தான் தெற்கு முகமாக நிர்வாணத்துடன் நின்றுக்கொண்டு அவ்வடுப்பில் முன் சரக்கையெல்லாம் போட்டுத்தீக்கொளுத்திச் சாம்பலாக்கி அச்சாம்பல் அடுப்பிற்குள்ளிருக்கும்போதே அதின்பேரில் அறுகோணச் சக்கரம்போட்டு, அதில் நசி மசி யென்று எழுதி, பிறகு 'தூம் தூம் சி சி ஓம் நசி நசி' என்று ஆயிரத்தெட்டு உருகொடுத்து எதிரியின் பேரை ஒரு நறுக்கில் எழுதி அதில் வைத்து, எல்லாவற்றையும் ஒன்றாகச்சுருட்டி எடுத்துவந்து மறைவாக எதிரியின் வீட்டிறப்பில் சொருகிவைக்கவும். அவ்வாசற்படியை அவர்கள்தாண்டின அந்நிமிஷமே அவ்வீட்டைவிட்டு அவர்களைப்பிரித்துவிடும், ரொம்பவும் கைகண்டது.

வேறு.

பஞ்சுகொட்டு நரம்பு, பன்றியெலும்பு, பன்றிமயிர், சுடலைச் சாம்பல், உடும்புதலை, நாய்ப்பல் இவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்துவைத்துக்கொண்டு, எட்டிமரத்தினால் மாடனைப்போல் ஒரு பதுமைசெய்து அதை ஒரு புதியக் குடுவையில்போட்டு, அதன்மேல் முன் தயாரித்த சரக்கெல்லாம்போட்டு மாடனைத்தியானித்து மந்திரஞ்செபிக்க, மாடனானவன் எதிரிக்குச்செய்யும் தீமைகளின் பெயர்களை விவரித்துச்சொல்ல நம்மால் முடியாது. எதிரியும் எமன்கையில் சிக்கிய உயிரைப்போன்று தத்தளிப்பான். பிறகு அவைகளையெல்லாமெடுத்து ஆற்றிற்போட்டுக் கரைத்துவிட தன் பங்களெல்லாமொழிந்து எதிரியும் சுகப்படுவான்.

### வே று.

முன் தயாரித்தக்கலசத்தை எடுத்துவந்து எதிரியின் முன் உடைத்தால் அவன் குடும்பமெல்லாம் நாசமடையும். பலவித வியாதிகள் அவர்களைப்பிடிக்கும், அவர்கள் வீட்டிலுள்ள கால் நடைகளெல்லாம் நாசமடையும். பொதுவாகச்சொல்லு மிடத்து அவர்கள் குடும்பம் குபேர சம்பத்தைப்போன்றிருந்தாலும் குட்டிச்சுவராகிவிடும். ஆகையால் இவ்வேலைகளையெல்லாம் செய்கிறது பாதகத்திலும் மஹா பாதகமென்று தெளிந்த ஞானிகள் சொல்லுகின்றனர்.

### வித்வேஷண நிவர்த்தி வித்தை.

எதிரிகளானவர்கள் நாம்தான் இம்மாதிரி யெல்லாஞ்செய்து அலக்கழித்தோமென்று கண்டுகொண்டு நம்மைவந்து வணங்கினால் முன் செய்திருக்கும் வஸ்துக்களெல்லாவற்றையு மெடுத்து ஓடுகிற ஜலத்தில் போட்டு விட்டால் சகலமும் நிவர்த்தியாய்விடும். பேர் எழுதி ஓலையை மாத்திரம் பாலிற்கழுவி பின்பு ஜலத்தில்போடவும்.

### வேறு வித்வேஷண வித்தை.

ஓர் ஓலை நறுக்கில் எதிரியின் பேரை மாறியெழுதி அதற்கு ஐங்காயம்பூசி, அதனுடன்முள்ளம்பன்றியின் இறகு, முச்சந்தியின்மண், காலடிமண், எதிரியின் தலைமயிர், கழுதைச்சடை, தச்சன் உளிச்செதில், கொல்லைப்பல்லி இதுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து ஓலை நறுக்கையுங்கூடவைத்து தூம் என்னும் மந்திரத்தையோதி வீட்டிரப்பில் வைக்க ஒருவரைவிட்டொருவரைப்பிரித்து விடும்.

### வேறு அஞ்சன வித்தை.

10-பலம் நிலவாகைவிரை, தலைமைந்தன்கொடி, மாவு, முப்பூ இவைகள் வகையொன்றிக்கு விராகனெடை 1 சேர்த்து அரைத்துக்குழித்தைலம் வாங்கவேண்டும். பிறகு ஆலாக்குருவின் முட்டையைக்கொண்டு அதையும் குழித்தைல மிறக்கிக்கொண்டு முன் தைலத்தையும் இதையும் ஓர் அளவாகயெடுத்துக் குழைத்துச் சிமிழில் அடைத்துக்கொண்டு, வேண்டுமானபோது ஓர் வெற்றிலையில் கொஞ்சந் தடவிப்பார்க்க, களவு பில்லி, சூனியம், திருடு முதலிய உலகிலுள்ள விசேஷங்களும் நன்றாகத் தெரியும்.

### குறிசோல்லும் வித்தை.

சந்தனம், புனுகு, கோஷ்டம், பச்சைக்கற்பூரம் இம்மூன்றையும் சலம்விட்டு நன்றாக மையைப்போலரைத்து பூமியைமெழுகி, அதன்மேல் முக்கோணச்சக்கரம்போட்டு, முக்கோணத்தின் மத்தியில் ஹ்ரீம் என்னும் பீஜத்தை எழுதி, புஷ்பந்தரித்து "ஓம் நமோ பகவதே, ஓம் வக்ரமாகாளி, சாமுண்டியாயி, வயிரவி, சாம்பவி,



ஓங்காரி, கிமலி மஹாசத்தி, நமஹா நமஹாவென்று, காலைமாலை, உச்சியாகிய முக்குணவேளையிலும் லக்ஷத்தி ஆயிரத்தெட்டுருசெபிக்கச் சித்தியாகும். இது கைகூடுந்தனையும், முக்கால ஸ்நானஞ்செய்து, ஒருகாலம் புசித்து, மாதர்களின் முகத்தை நோக்காது வஸ்திரத்தின்பேரில் படுத்து நித்திரைசெய்யவேண்டும். பூசை செய்யும்போது முதற்பூசைக்கு மாத்திரம் கள்ளு, சாராயம் வைக்க வேண்டும். ஒவ்வொருநாளும் சாப்பிடப்போகும்போது முன் கவளமும், பின்கவளமும் கவனமாகயெடுத்து காகத்திற்கு வைக்க வேண்டும். சித்தியானபிறகு யார் யார் எதை நாடிக்கேட்கின்றார்களோ அதையெல்லாம் அவர்கள் மனது திருப்தியாகும் வண்ணம் சொல்லலாம். வெற்றிலைப்பாக்கு எவ்வளவு வேண்டுமானாலும் தாராளமாகப்போடலாம். தவிர குறிசொல்லும்போது கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு சொல்லவேண்டும். இதுவன்றி ,வேங்கைமரப்பலகையை நன்றாகச்சதுரஞ்செய்து ஒணான், தோலை யுரித்துக்கட்டி அதில் பேதன சக்கரத்தைப்போட்டு சலாகையினால் சக்கரத்தைச்சுற்றி உள்ளேபதியச்செய்து, பூசையிலடைத்துவைக்க எதிரிகளெல்லாம் மயங்குவார்கள்.

### வேறு பேதன வித்தை.

குடிக்குச்சகுனியை, முள்ளம் பன்றியிரகில் கட்டி ஐங்காயந்தடவி, பேதனமந்திரத்தைச்செபித்து எதிரியின் வீட்டிரப்பில் சொருகிவைக்க உடனே பிரித்துவிடும். இதுவும் கைகண்டது. பிரமசாரியின் வலக்கா லெலும்பை எடுத்து எருக்கம்பூசூட்டி, ஓம் றீங் கால் பரவா கூறுகட்டு சுவாகாவென்று 1008-உரு செபித்து கோழி பலிகொடுத்து அவ்வெலும்பைக் கூறுகச்செதுக்கி பகைவரின் மலசலத்தில் அடித்துவைக்க எதிரி உபத்திரவப்படுவான். மறுபடியும் அதைப்பிடுங்கி ஆற்றிற்கழுவிவிட சுகமாகும்.

### இந்திரகோபப்பூச்சியின் வசிய மை வித்தை.

நாலுதுலாம் இந்திர கோபப்பூச்சியைச் சட்டியிலிட்டு ஒரு மரத்து விரகாலெறித்துக் கருக்கிக்கொண்டு அதில் சவ்வாது, புனுகு, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம் இவைகளைச்சேர்த்து, ஐங்கோலத்தைலத்தால் மைபோலரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு, ஓம் ரீங் ரீங் என்று லட்சமுரு செபித்துத் திலர்தமிட்டுக்கொண்டு போக உலகத்திலுள்ள நிதிகளெல்லாம் கண்ணிற்கு நன்றாகத்தெரியும்.

### பஞ்சபூத மை வித்தை.

வல்லூறுகண், செம்போத்துகண், தேவாங்குகண், கருங்குருவிக்கண்ணும், பிச்சும், ஆந்தைக்கண் இவைகளையெல்லாம் வெய்யலில் உலர்த்தி, ஒரு சட்டியிலிட்டுக் கருக்கிக்கொண்டு, அதைக்கலவித்திற்போட்டு அதனுடன் கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், புனுகு,

கோரோசனை, குங்குமப்பூ இவைகளைச் சமயெடையாகப்போட்டு ஐங்கோலத்தைலத்தாலரைத்து சிமிளில் வழித்தெடுத்துப்பதனஞ் செய்துக்கொண்டு 'சிம் நம் வம்' டுடுடு டாடாடா என்று லட்சமுரு செபித்து மையைத்திலர்த மிட்டுக்கொண்டுசென்றால் எக்காரியங்களும் சித்தியாகும்.

### சத்துருவை ஜெயிக்கும் வித்தை.

பொன்னுவாரை, பொற்றலைக்கையான், வெள்ளறுகு, விஷ்ணுகிரந்தி இவைகளெல்லாங் கறுக்கிக்காராவின் நெய்யினாலரைத்துத் திலர்தமிட்டுச்செல்ல சத்துருக்களெல்லாம் வணங்கி நடப்பார்கள்.

### புருஷ வசிய வித்தை.

செம்முள்ளி, சிவப்புகஞ்சா, செங்குவளை, பொன்னுங்கண்ணி இவைகளையெல்லாங் கரிக்கிக்கொண்டு, தாரம், கெந்தி, சவ்வாது, புனுகு, குங்குமப்பூ இதுகளையுஞ்சேர்த்து பன்னீர்விட்டரைத்து மையாக்கிச்சிமிளில் பதனஞ்செய்துக்கொண்டு, தேவையானபோது நெற்றியில் திலர்தந் தீட்டிச்செல்ல புருஷவசியமாகுமென்று மேலோர்கள் கூறினர்.

### ஆடாதமுனிகள் ஆடும் வித்தை.

ஒரு வெற்றிலையில் மிளகுப்பிரமாணம் அபினியை வைத்து மடித்து பேய்பிடித்தவர்களுக்கேனும் முனிபிடித்தவர்களுக்கேனும் கொடுத்துவிட அவைகள் உடனே தலைசுற்றி ஆடி வாய்பிறப்புச் சொல்லி, முடிகொடுத்துவிட்டு ஓடும். நாம் ஜாக்கிரதையாகயிருந்து அச்சமயமே முடியை அறுக்காவிட்டால் மறுசமயம் நம்மை அது ஏய்த்துவிடும்.

### தலைநோய்தீரும் வித்தை.

தலைநோய் வந்தவர்களுக்கு வலதுக்கு இடதும், இடதுக்கு வலதுமாக நாடியோட்டத்தின்மீது ஒரு தம்படியையேனும், அவ்வகல ஓட்டுப்பானையேனுங் கட்டிவைக்க அந்நோயானது உடனே விலகிவிடும். இது ஒரு தந்திரமானவேலை. இவ்வேலை அநேகருக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கலாம்.

### நீரிற்றீபமெரியும் வித்தை.

ஒரு வெண்மையாகிய சல்லாத்துணியைக் கீழ்பரப்பி, அதின்பேரில் வெள்ளை மெழுகை யுருக்கி யூற்றி திரியாகத்திரித்து முன்னடியே வைத்துக்கொண்டு, சபையில் ஓர் அகலைக் கொண்டுவரச்செய்து அதில் இவ்வத்தியைப்போட்டு, நிறைய தண்ணீரைவிட்டு விளக்கேற்றிவைக்க எரியும். பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள். அவ்வத்தியும் நெடுநேரமெரியும்.



### சீட்டு சுழலும் வித்தை.

சபையில் ஒருவன் பேரைக்கேட்டுச் சீட்டிலெழுதி, அதனடியில் தெரியாது காது குரும்பியைக் கொஞ்சந்தடவி, அச்சீட்டை ஜலத்தில்போடக் கிறுகிறு என்று சுழலும். பார்ப்பவர்கள் உனக்கு ஜாலக்காள் வசியமென்றும், இல்லாவிட்டால் இவ்வேலை நடக்காதென்றும் சொல்லிக்கொள்வார்கள்.

### சீட்டு ஓடும் வித்தை.

முன்மாதிரியே ஓர் பேரைச்சீட்டிலெழுதித் தந்திரமாகவைத்திருந்து ஒருவருக்குந் தெரியாமல் நாயுண்ணியொன்றுபிடித்து, அதன் முதுகில் கொஞ்சம் மெழுகைத்தடவி, அதின்பேரில் மேற்படி சீட்டை ஒட்டவைத்துக் கீழேவிட, சற்றுநேரம் பொருத்து அவ்வுண்ணியானது நகரும். சீட்டும் அதன்கூடவே தானும்போகிறதைப் பார்த்தால் சந்தோஷமாயிருக்கும்.

### ஒருபசு இரண்டுவித பால்கறக்கும் வித்தை.

சித்திரமூலவேரை அரைத்து பசுவின் கொம்பிற்கு எப்பக்கந் தடவுகின்றோமோ அப்பக்கம் இரத்தமாகவே பால்கறக்கும். பார்ப்பவர்கள் யாரோ என்னமோ செய்து விட்டார்களென்று ஆச்சரியப்படுவார்கள். அதன்பிறகு அவ்வேர் பூசியிருக்கும் கொம்பைக்கழுவிவிட்டு கறக்க எப்போதும்போல் பால் கறக்கும். ஆனால் கொஞ்சம் சுக்குத்தூள்போட்ட கருஜலம் காட்டவேண்டும்.

### ஈயின் வித்தை.

ஓர் ஈயைப்பிடித்துத் தண்ணீரிற்போட அது இறந்துபோம். அதை அனைவர்க்குங்காட்டி அவர்கள் எதிரிலேயே அவ்வீயை முட்டைக் சாம்பிலின்மேல் போட்டுப்பிரட்ட, அது உயிர்பெற்றெழுந்து ஓடிப்போய்விடும். அல்லது நாம் கையில் வைத்துக்கொண்டு வாயினால் ஊதினாலும் பறந்துப்போய்விடும்.

### பிள்ளைப்பூச்சியின் வித்தை.

மஞ்சள்நீரில் பிள்ளைப்பூச்சியைவிட்டுவைத்தால் இறந்துவிடும். உடனே அதையெடுத்து அனைவர்க்குங்காட்டி அதன் தலையின்மேல் கீழாநெல்லி ரசத்தைப்பிழிய எழுந்து ஓடிவிடும். இவ்வித்தையைப் பார்க்கின்றவர்கள் சந்தோஷப்படுவார்கள். ஆனால் உயிர் வருகிறதேயென்று கொன்றுவிட்டு ரசத்தைப்பிழிந்தால் உயிர் போனது போனதே. அதைப்பற்றி ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும்.

### கருங்கற்களை ஒட்டவைக்கும் வித்தை.

பழையசிட்டக்கல்லை சேராங்கொட்டைப்பால் விட்டரைத்து பிளவுபட்ட கருங்கல்லின் வாய்க்குத்தடவிக் காயவைத்தபின் ஆனை

யைக்கட்டி வலித்தாலும் அப்பிளவு மறுபடியும் பிளக்காது. ஆனால் அதை ஏதாவதொரு ஆயுதங்களைக்கொண்டு தட்டக்கூடாது. அப்படி தட்டும்பக்ஷத்தில் அது எப்போதும்போல் பிளவுபடும்.

### மாஞ்சேடி முளைக்கும் வித்தை.

ஏழுஞ்சி விரையைக்கொண்டுவந்து பூந்தையில மிரக்கிவைத்துக்கொண்டு அதில் மரத்திலேயே பழுத்துக்கனிந்த மாங்கொட்டையைப்போட்டு ஊறவைத்து எடுத்து வெய்யலில் காயவைக்கவும். இம்மாதிரி மூன்றுவிசை செய்துத்தயாராக வைத்துக்கொண்ட வித்தை மண்ணில் நட்டு, ஜலந்தெளித்து சற்றுநேரம் பொருத்துத்திரந்துபார்க்க செடியாகியிருக்கும்.

### இதுவுமது.

மேற்படி விரையைக்காயவைத்துத் தூளாக்கி உரலிற்போட்டு மாவைப்போல் நன்றாக அரைத்து ஒருசட்டியிற் வழித்துப்போட்டு அச்சட்டியை வெய்யலில் காய்த்துவைக்கச் சலமானது கசிந்துநிற்கும். அந்தச்சலத்தில் மேற்படி கொட்டையைப்போட்டு ஊறவைத்து உலர்த்தி அதையும் முன்மாதிரி செய்யச்செடியாகி யிலையாகி பூவாகிக்காயாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### வழக்குவெல்லும் வித்தை.

சுடலையிலிருக்கும் கையாந்தகரைச் சமூலத்தை எருக்கம்பாலிலரைத்து உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது அதை முலைப்பாலி விழைத்து நெற்றியிற்றிலர்தமிட்டுச்செல்ல சூது முதலியதுடன் சகலவழக்குகளும் வெல்லும்.

### திரேகமெரியும் வித்தை.

நண்டுக்குழிமண், சுடலைமண், எதிரிகாலடிமண், பெருங்காயம், மிளகு 21-இவைகளைச்சேர்த்து ஒரு சட்டியிற்போட்டு ஒரு மரத்துவிறகினால் எரிக்க எதிரியின் திரேகத்திலுள்ள ஊனெல்லாமெரியும். எரிப்பதை அவிக்க எரிவுநிற்கும்.

### நாய்கள் கடியாதிருக்கும் வித்தை.

முதலையின்பல்லும் அரிதாரமும் ஒன்றாய் முடிந்து மேற்போட்டுக்கொண்டு எந்தநேரத்தில் எங்குச்சென்றாலும் நாய்கள் கடிக்காமலும் குலைக்காமலு மிருக்கும்.

### எதிரிகள் வணங்கும் வித்தை.

ஞாயிற்றுக்கிழமையதினம் வட்டக்கிலுகிலுப்பைச் செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து வேரறுமற்பிடுங்கிவந்து குளிசமாடிச் சதாதன் கையிலேயே வைத்திருக்க எதிரிகள் நம்முடன் பேசிவெல்ல மாட்டார்கள். நம்முடைய பேச்சே சிலாக்கியமாயிருக்கும்.



### புரைகுத்தும் வித்தை.

பாலுக்குப்புரைகுத்த மோர் அகப்படாத சமயத்தில் கொஞ்சம் புளியைப்போட்டாலும் சரி, அல்லது கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டாலுஞ் சரி தோய்ந்துவிடும்.

### வசியக் கடய வித்தை.

தலைச்சன்பிள்ளை உந்திக்கொடியை யெடுத்துத்தேனில் ஊறப்போட்டு நாற்பதுநாள் சென்றெடுத்துக்கொண்டு பொன், வெள்ளி, செம்பு இம்மூன்றையுங்கொண்டு ஓர்கடயஞ்செய்து அதில் மேற்படி கொடியைப்போட்டுமூடி, காளியைத்தியானித்து ஞாயிற்றுக்கிழமையதினம் பொங்கல் முதலிய தூபதீபங்கொடுத்துக் கையிலணிந்துக்கொள்ள மிருகமுதல் சகலமும் வசியமாம்.

### புட்டி வெடிக்கும் வித்தை.

புட்டியிற் கடுகிருந்தாலுஞ்சரி அல்லது கடுகைப்போட்டாலுஞ் சரி அதில் சாராயத்தைவார்த்து கொஞ்சநேரம் வைக்க அப்புட்டி வெடித்துவிடும்.

### எண்ணெய் கரை நீங்கும் வித்தை.

களிமண்ணைக்கரைத்து எண்ணைக்கரையுள்ள விடத்தில் தடவி சற்றுநேரம் ஊறவைத்துக் கசக்கக் கரையானது போய்விடும்.

### இரத்தக்கரை நீங்கும் வித்தை.

இரத்தக்கரையின்பேரில் கொஞ்சம் கிரோசன் ஆயிலைத்தடவி சற்றுநேரம் ஊரவைத்துத்துவைக்க அக்கரை எடுபட்டுப்போம்.

### இங்கிக்கரை போகும் வித்தை.

இங்கிக்கரைக்குக் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசத்தையேனும், சுண்ணாம்பையேனும் ஊறவைத்துக்கசக்க நிவர்த்தியாம். அல்லது புளிப்புள்ள வேரெதையாகிலும் தேய்க்கலாம்.

### சாதாரண கரைகளறும் வித்தை.

சாக்பவுடர், நாமக்கட்டி இவையிரண்டையும் சமனாய்ச்சேர்த்துத் தண்ணீர்விட்டரைத்து கரையுள்ள விடத்தில்பூசி யுலரவைத்துத்துவைக்கக் கரைகள் எடுபட்டு சுத்தமாயிருக்கும்.

### பாம்போடும் வித்தை.

எந்தவீட்டிலாகிலும் பாம்பானது திசைதப்பிவந்து விடுமாகில் உடனே கொஞ்சம் சோத்துப்பை எடுத்து 'நமசிவய' என்று மன

தில் நினைத்துக்கொண்டே நான்குபக்கங்களிலும் வீசிட பாம்பு ஓடிவிடும்.

## பிரசவிக்கும் வித்தை.

பிள்ளைபெறமாட்டாமல் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கர்ப்பவதிகட்கு, பூமியைநோக்கி வளர்ந்திருக்கும் கீழ்காய்நெல்லிச் செடிக்கு 'நசி மசி' என்று 108 உருசெபித்து சமூலமும் பிடுங்கிக்குளிசமாடிக்கட்ட, யாதொரு வருத்தமுமில்லாமல் பிரசவமாகும்.

## தேங்காய் வெடிக்கும் வித்தை.

ஒரு தேங்காயைச் சுண்ணாம்புக்காளவாய் கொளுத்தாததற்குமுன் அதினடியில் புதைத்து வைத்துவிட்டுக்காளவாய் கொளுத்தியவுடன் அதையெடுத்துவந்து வைத்துக்கொண்டு சபையோர்களைப் பார்த்து இந்ததேங்காயை மந்திரத்தினால் உடைக்கின்றேன்பாருங்களென்றுசொல்லி, வாயில்வந்ததை மொணமொணவென்று சொல்லிக்கொண்டே இடதுகையில் தேங்காயை வைத்துக்கொண்டு வலதுகையில் கொஞ்சம் ஜலமெடுத்துத்தெளிக்கக் காயானது பளீரென்றுடைந்துவிடும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

## அக்கினிச்சட்டியை தூக்கும் வித்தை.

ஒரு புதுச்சட்டிக்கு மஞ்சள், குங்குமமிட்டு அதில் பேர்பாதி அளவுக்கு சாம்பலைக்கொட்டி தண்ணீர்விட்டுப்பிசைந்து அதற்குமேல் விறகு, விறட்டி முதலியவைகளைப்போட்டு நெருப்பிட்டுத் தூக்கிக்கொண்டு பாட்டுகளைப் பாடிக்கொண்டுவரக் கண்டவர்கள் பயந்து உண்மையான அங்காளபரமேஸ்வரியென்றே நினைத்துக் கொள்வார்கள். இம்மாதிரி ஜாலவித்தையினாலே பெண்களையேமாற்றி நாளதுவரையிலும் சிலர் பிழைத்து வருகிறார்கள்.

## சோளப்பொரி வித்தை.

கொஞ்சம் சோளத்தைச் சுண்ணாம்புக்காளவாய் கொளுத்ாதமுன் அதினடியில் புதைத்துவைத்துவிட்டு காளவாய்க்கொளுத்தியபின் அதையெடுத்துக் கொண்டுவந்து சபையில்காட்டி இதோ பாருங்கள் இச்சோளத்தை நெருப்பில்லாமல் பொரிக்கிறேனென்று சொல்லி, ஓர்முறத்தில் சோளத்தைப்போட்டு மறுபடியும் எல்லோருக்குங்காட்டி, மந்திரஞ்சொல்லிக்கொண்டே தந்திரமாக அதின்பேரில் கொஞ்சம் ஜலந்தெளிக்க அது பளபளவென்று பொரிந்துவிடும். இதைப்போலவே மற்ற எவ்வித வஸ்துக்களையும் பொரித்துக்கொள்ளலாம்.

## பேய்கட்டேப்படா வித்தை.

நூற்றெட்டு மிளகையெடுத்துக்கையில் வைத்துக்கொண்டு ஓம் என்னும் பிரணவத்தை 108-விசை செபித்து பேயாடிக்கொண்டிருக்கும் வீட்டின்பேரில் மேற்படி மிளகைத்தூவிவிட, ஆடிக்கொண்டிருக்கும்பேயானது முடியை அவிழ்த்துக்கொண்டு ஓடிவிடும்,



## கற்போர்பத்தி சொல்லும் வித்தை.

சித்திரைமாதம் பத்தாந்தேதி வீட்டிற்கு விலக்கமாகில் அதுமுதல் 10-மாதம் எண்ணிப்பார்க்க தைமாதம் 10-ந்தேதி ஆகின்றது. அதனோடு 7-நாளைச்சேர்க்க தைமாதம் 17-ந்தேதி ஆகின்றது. ஆகையால் மாதம் 15-ந்தேதிக்குள் தூரம்வந்தால் 9-மாதக்கணக்கிலும், 15-ந்தேதிக்குமேற்பட்டால் 11-மாதக்கணக்கிலும் ஸ்திரீகள் பிரசவிப்பார்களென்று சொல்லவும்.

## வீட்டைவிட்டு வெளிவரும் வித்தை.

இரண்டுகால் பெருவிரல்களையும், இரண்டுகை பெருவிரல்களையும் கட்டி மல்லாந்து படுத்துத்தன் மனதைப் பூரணத்தில் நிறுத்தி, நாட்டத்திலிருக்க மனஞ்சொக்கி, மவுனத்திலூன்றிச் சுழுத்தியிலடங்கிவிடும். பின்பு தெளிந்தவுடன் இவ்விரண்டுகட்டுகளையும் அவிழ்த்துவிட்டு மறுவேலை பார்க்கவும். இப்படி சதா நடத்துவதில் 12 வருடத்திற்குள் சித்தியாகும். அதுசமயம் இவனை எந்த வீட்டிலாகிலும் அல்லது கருங்கல் கட்டடத்திற்குள்விட்டு பந்தோபஸ்து செய்தாலும் இவன்வெளிவர சுவர்கள் இடங்கொடுக்கும். அவை ஒருவருக்குந்தெரியாது. இதைப்பரகாயப் பிரவேசமென்று அறிந்தோர் சொல்லுவார்கள். இன்னும் சித்துபுருஷனென்றும் சொல்லுவார்கள்.

## ஓட்டமாக ஓடும் வித்தை.

விழுதியிலையைக் கொஞ்சம் வாயிற்போட்டுக்கொண்டுமென்று தின்று கொஞ்சம் வாயிலடக்கிக்கொண்டு எவ்வளவுதூரம் ஓடினாலும் ஓடலாம். இளைப்பு களைப்பு ஆயாசம் ஒன்றுமிருக்காது. நிற்கவேண்டுமாகில் ஏதாகிலும் ஓர் ஆதாரத்தைப் பிடித்துக்கொண்டுதான் நிற்கவேண்டும்.

## நெருப்பு வித்தை.

மணத்தக்காளிச்சார், உத்தாமணிச்சார், வசளைச்சார் இம்மூன்றையும் ஒன்றாகக்கலந்து கைகளிற்பூசிக்கொண்டு நெருப்பையெடுக்கக் கைகள் சுடாது. அல்லது கால்களிற்றடவிக்கொண்டு நெருப்பைமெரித்தாலும் கால்கள் சுடாது. கொப்பளிக்காது. என்னேரம் விளையாடினாலும் விளையாடலாம்.

## மீன்மிதக்கும் வித்தை.

திருகுகள்ளியைத் துண்டுகளாக நறுக்கிக்குளங்களிலாகிலும், குட்டைகளிலாகிலும், ஏரிகளிலாகிலும் போட்டுவைக்க சிறுது நேரத்திற்கெல்லாம் அதிலிருக்கும் மீன்கள் மிதந்து போய்விடும். ஒன்றேனும் தப்பிபிழைக்காது.

### வாத்திய வித்தை.

கையில் இரும்பு வளையம்போட்டுக்கொண்டு ஒருவகைச்சாதியர்கள் சில கிராமங்களில் வசிப்பார்கள். அவர்களைப்பெரும்பாலும் பள்ளியர்கள் என்று சொல்லுவது வழக்கம். அவர்கள் இறந்துபோனல் அவர்களை அவ்வளையங்களுடன் தகனஞ்செய்வார்கள். அதைப்பார்த்திருந்துக் காடாற்றுவதற்குமுன் அவ்வளையங்களை எடுத்துக்கொண்டுவந்து, அதினல் பாக்குவெட்டி யென்னும் ஆயுதத்தைச்செய்து வைத்துக்கொண்டு பிறகு, கிராணம் பிடித்திருக்கும்போது சங்கம் வேருக்குக்காப்புகட்டி பொங்கலிட்டு, பலி முதலியதுடன் தூபதீபங்கொடுத்து பூசைசெய்து கிராணம் விடுகிறதற்குள்ளாக அந்தச்செடியின் வடக்கே போகிறவேரை அறுமலெடுத்து அதற்கு ஐங்கோலக் கருவைப்பூசி அந்த வேரை மேற்படி பாக்குவெட்டியைக்கொண்டு வெட்ட பேரிகை, நகார், மத்தளம், தம்பட்டம் முதலிய வாத்தியங்களின் ஓசைகளெல்லாங்கேழ்க்கும். தவிர இவ்வாத்தியங்களின் பிரமாணம், காலம், ஜாலம் முதலியவைகளையெல்லாம் குரு முகாந்திரமாகத் தெரிந்துக்கொள்ளவும்.

### எக்காளம் வாசிக்கும் வித்தை.

நத்தைச்சூரிவேறுக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டுத்தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து, ஆம், ஓம், சுவாஹா யென்று லக்ஷமுருகொடுத்து, ஜாலக்காளைப்பூசித்து, ஐங்கோலக்கருவைப்பூசி அதை இரண்டுகைகளாலும் பிடித்துக்கொண்டு, மேற்படி மந்திரத்தை சொல்லிக்கொண்டே மண்ணையள்ளி எதிரேபோடடுவிட்டுகைகளை நீட்டிமுறுக்குவாயாகில் எக்காளம், தாரை, சின்னம், கர்னாடகவாத்திய முதலிய வாத்தியவோசைகள் நன்றாக்கேட்கும்.

### எலுமிச்சம்பழம் குதிக்கும் வித்தை.

ஒரு எலுமிச்சம்பழத்தைக் கொண்டுவந்து அதைச்சிறிய பேனுகத்தியினல் துளைசெய்து அத்துளையில் நாற்பது குன்றியிடை பாதரசத்தைவிட்டு வெள்ளை மெழுகினல் வாயைமூடி, மூடினவாய் தெரியாமல் அரிதாரப்பொடியைப்பூசி, அப்பழத்தை வெய்யலில் வைத்தால் சூடேறினவுடன் தரையில் நிற்காமல் மேலெழும்பிக்குதிக்கும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். அதை வெய்யலில் வைக்கும்போதுமாத்திரம் சல் எக்ஷணி ஓடிவந்து இப்பழத்தைக்கிளப்பென்று சொல்லி வைக்கவும்.

### அக்கினிஜால வித்தை.

பச்சைத்தவளையின் நெய்யை அகலில் வார்த்து அதில் ஓர் துணியை நனைத்துப்பிழிந்து வைத்துக்கொண்டு மண்வெட்டியைப்பழுக்கக்காய்ச்சி உரலின்மேல்வைத்து எண்ணெயில் கையைத்தோய்த்து அதின்மேலடிக்கக் கைசுடாது. பிறகு யாவரும் பார்க்கும்படி அந்தத் துணியில் கையைத்துடைத்துக்கொண்டு மறுபடியும் அவ்விதமே



செய்து அடிக்கலாம். பிறகு அந்நெய்யைவாயில் ஊற்றிக்கொண்டு கொப்பளித்து உமிழ்ந்துவிட்டுக் காய்ந்த இரும்புக்குண்டைபல்லினல் கடித்துத்தூக்கலாம். வைக்கோலில் எண்ணெயைத்தடவி அந்தக்குண்டைப்போட்டால் வைக்கோல் வேகாது. அதை அவிழ்த்தெடுத்து வேறு வைக்கோலில் போட்டால் தீப்பிடித்து வேகும். இரும்புச்சங்கிலியை நன்றாய் பழுக்கக்காய்ச்சி இந்த எண்ணெயைக் கையில் தடவிக்கொண்டு யாவரும் பார்க்க உருவிக்காட்டலாம் கைகள் சுடாது. மேற்படி நெய்யை காலில் தடவிக்கொண்டு நெருப்பின்பேரில் நடக்கலாம் நெருப்புசுடாது. அதே நெய்யைக்கையில் தடவிக்கொண்டு நெருப்பைவாரலாம். அக்கினி சட்டியும் ஏந்தலாம் இன்னம் வேண்டுமான வேலைகளையெல்லாம் குருமுகாந்தரமாய்த் தெரிந்துகொண்டு செய்யலாம்.

### இரும்புகுண்டு அந்தரமாக நிற்கும் வித்தை.

ஆதிவாரமும், சுவாதிநக்ஷத்திரமும், கும்பலக்கினமுங்கூடிய சுபவேளையில் நத்தைச்சூரி செடிக்குக்காப்புகட்டி மறு ஆதிவாரம் சிங்கலக்கினத்திற்சென்று பொங்கலிட்டுப் பலிகொடுத்து பூசைபோட்டு இரும்பாற்செய்த ஆயுதங்கள்படாமல் வேரைக்கெல்லி, அறுத்துபிடுங்கிவந்து பொன் தகட்டினற் கடயம்போலாக வளையஞ்செய்து அதற்குள் இவ்வேரைவைத்து, விநாயகரைப்பூசித்து வலது கையில் காப்பை போட்டுக்கொண்டு சபையில்வந்து நின்றுக்கொண்டு ஒரு இரும்புக்குண்டை ஆகாயத்தில் விட்டெறிந்து வலதுகையிலுள்ள காப்பைக்கழட்டி, இடதுகையிற்பிடித்து பூமிபக்கமாகத் தாழ்த்திப்பிடிக்க ஆகாயத்திலெறிந்தகுண்டு ஆகாயத்திலேயே அந்தரமாக நிற்கும். எல்லோரும் பிர்மித்து ஆச்சரியப்படுவார்கள். அப்போது சல் எக்ஷணிகுண்டைக் கீழேபோடு என்றுசொல்லி மேற்படி காப்பை வலது கையில் வாங்கி மேலேயிருக்குங்குண்டுக்கு நேராகத் தூக்கிக்காட்ட குண்டு கீழே விழுந்துவிடும். மேற்படி வேரை பூமி மட்டம்வரைக்கும் தரித்துவிட்டுக் கடயத்திலடைக்கவும்.

### காக்கைகள் மயங்கும் வித்தை.

தாளகத்தை வெண்ணெய் அல்லது நெய்யில் அரைத்து சோற்றில் கலந்து காக்கைகள் முன்வைக்க, அதைத்தின்ற காக்கையானது மயக்கமெய்தி அசையாது அங்கேயே குந்திவிடும்.

### வேறு.

அரிதாரத்தை முன்போலரைத்து வைத்தாலும் தின்றவுடன் சொக்கிவிடும். அந்த சமயம் கொஞ்சம் ஜலத்தை அதின்மேல் தெளிக்க எழுந்து ஓடிவிடும்.

### வேறு.

ஒரு ஓட்டில் கள்ளிப்பாலைக்கறந்து அதில் சாதத்தையேனும்,

அரிசியை யேனுங்கலந்து காகத்திற்குவைக்க அதைத்தின்ற காகங்கள் மயக்கமெய்தி அசையாது நின்றுவிடும். இதுமாதிரிதான் ஜோகிகள்செய்து காகத்தைப்பிடித்துக் கொள்ளுகிறது. இவ்வழக்கம் நாளதுவரையும் நடக்கின்றது.

### பேயோடும் வித்தை.

ஊமத்தன் விரையைப்பொடித்துத் தின்பண்டங்களில் வைத்து உள்ளுக்குக்கொடுத்துவிட அவர்கள் தலைசுற்றியாடி முடிகொடுப்பார்கள். அப்போது சுலபமாய் முடியறுத்துக்கொண்டு பேயை ஓட்டிவிடலாம். அபினியைக் கொடுத்தாலும் நல்லதே.

### இரு மேயும் வித்தை.

காய்ந்த இருவை கிருவை யிலைச்சாற்றில் ஊறவைத்து உலர்த்திக்கிணற்றில் அல்லது துறவில் விட அதுகள் சுழன்று சுழன்று மேய்வதுபோல் காணும்.

### சென்னாக்குனி வித்தை.

செத்துலர்ந்த சென்னாக்குன்னி வாயில் கற்பூரத்தை யடைத்து கிணற்றில் அல்லது துறவில்விட சுழன்றோடும்.

### சாராயத்தை அதிகமாகக்குடித்தல்.

நெல்லிக்காய் அடையைமென்று வாயிலடக்கிக்கொண்டு எவ்வளவு சாராயத்தையேனும் குடிக்கலாம் போதையிராது.

### சாராயபோதை தெளியும் வித்தை.

சாராயங்குடித்து போதை அதிகமாகித் தலை, கால் தெரியாது தத்தளிக்கும் மனிதர்களுக்கு வாழைப்பட்டைரசத்தை அவர்கள் வாயில்வார்க்க போதை தெளிந்துவிடும்.

### எலுமிச்சம்பழம் குதிக்கும் வித்தை.

எலுமிச்சம் பழத்தைத்துளைத்து அதில் ஊசிகாந்தத்தைப் பொடிசெய்துபோட்டு வாயை மெழுகால்மூடி வெய்யிலில் வைக்க அது எழும்பியெழும்பிக்குதிக்கும்.

### ஆலம் மஞ்சளாகும் வித்தை.

ஆலங்கரைத்த சிகப்புத்தண்ணீரில் கொஞ்சம் எலுமிச்சம்பழரசத்தைவிட அச்சிகப்புமாறி மஞ்சளாகத்தெரியும்.

### பல்லில் இருக்கும் புழுக்கள் வெளிப்படும் வித்தை.

கண்டங்கத்திரியின் வேரைப்பொடித்து விரட்டி. நெருப்பின் பேரில்தூவி அப்புகையைப் பல்வலியுள்ளவர்கள் பிடிக்க பல்லிலுள்ள புழுக்களெல்லாம் தானாய்வந்து விழுந்துவிடும்.



### தலைப்புழு வெடுக்கும் வித்தை.

எந்த விதத்திலும் விடாத தலைநோயுள்ளவர்களுக்கு வரட்டி நெருப்பில் வெண்ணையைப்போட்டு அப்புகையை அவர்கள் காதுக்குள்ளேறும்படி பிடிக்க அங்குள்ள புழுக்கள் வெளிவந்துவிடும். அவ்வண்ணமே இரண்டு மூன்று விசைசெய்யவும்.

### கற்பூரம் தானாகயெரியும் வித்தை.

ஒரு தட்டில் விபூதியைப்போட்டு அதில் கடுகளவு திமிர்கல் பாஷாணத்தைவைத்து சபையில் கொண்டுவந்து அனைவர்க்குங்காட்டி அதின்மத்தியில் ஒருகட்டி கற்பூரத்தை வைத்து காற்றுவாட்டமாகத்தரையில் வைக்க அதுகுபீலென்று பற்றியெறியும் அனைவரும் பிரமித்து உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்வார்கள்.

### நெருப்பில் கற்பூரமெரியும் வித்தை.

ஒருகட்டி ஆலாத்திக் கற்பூரத்தை யெடுத்து அதில் கெந்தகபயர்பாக்ஸ் மருந்தைக்கொஞ்சம் துருத்துத்தெரியாமல்படி மறைத்து அதை நெருப்பின் பேரில்வைக்க சில நாழிகைக்குள் குபீலென்று பற்றியெரியும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

### பச்சிலை புகையும் வித்தை.

கெந்தகக்குச்சியின் மருந்தைக் கொஞ்சமெடுத்து எவ்விதப்பச்சிலையிலாகிலும் வைத்துக்கையில் சூடெழ அறக்கித்தேய்க்கப்புகையெழும்பும். பார்ப்பவர்கள் நீ என்னமோ மந்திரம் செய்தாயென்றுச் சொல்வார்கள்.

### வேப்பிலையடி வித்தை.

வேப்பிலையின் நிழலில் இருந்தாலும்சரி, அதனுடைய காற்று வீசினாலும்சரி எவ்விதமான தோஷங்களும் சாதாரணமாகவேபறக்கும். அதைப்பூசாரிகள் குழந்தைக்கு உண்டாகிற மந்தம், தோஷம், காற்று முதலியவைகளுக்கு தங்களுக்கு எழுத்தின் மூலாதாரமே தெரியாமலிருந்தாலும் தங்கள் மந்தரத்தினால்தான் எல்லாதோஷமும் நீங்கிவிட்டதென்று பெருமை பாராட்டிக் கொள்வார்கள். என்னே ! இவர்களுடைய மதியீனம். பாருங்கள் சாதாரணமாக வேப்பிலையின் நிழலில் வாசஞ்செய்யப்பட்ட வீடுகளில் இருக்கும் குழந்தைகளுக்கு மாத்திரம் அடிக்கடி தோஷம், காற்று, கருப்பு முதலியவைகள் வருவதில்லை. அது அப்பத்திரிக்கிருக்கும் சக்தியேயன்றி இவ்வாஷாடபூதிகளின் மந்திரத்தாலல்ல.

### குடமுடைய ஜலம்நிற்கும் வித்தை.

கட்டுக்கொடி என்னும் மூலிகையை அரைத்து ஓர் தோண்டியிற் பூசிக்காயவைத்துப்பிறகு அத்தோண்டியிற் ஜலத்தை நிரப்பி

உயரத்தூக்கிக் கட்டிவிட்டு தோண்டியின் ஒட்டை உடைத்துவிட ஜலம் அந்தரமாய்நிற்கும். இவ்வாறு நறுவிலிப்பழத்திலும் செய்வதுண்டு.

தீரேகம் புகைக்கும் வித்தை.

கெந்தகக்குச்சியின் மருந்தை நினைத்தவிடத்தில் கொஞ்சம் ஜலம் விட்டுத்தேய்க்கபுகைகிளம்பும். இதுவும் பார்ப்பதற்கு ஒரு வேடிக்கையே.

மூட்டைப்பூச்சி மாரண வித்தை.

மூட்டைப்பூச்சிகள் உள்ள விடங்களில் கொஞ்சம் வெல்லத் தண்ணியைத் தெளித்துவைக்க, அவ்விடத்தை எறும்பரசர்கள் கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு அவர்களை நாசஞ்செய்து விடுவார்கள். இது ஒரு தந்திரமான வேலை.

ஒருகிணற்றில் ஊற்றியபாலை மறுகிணற்றில் எடுக்கும் வித்தை.

வெண்மையாகிய கௌபீனத்தில் ஆழாக்குப்பசும்பாலை யூற்றிக்காயவைத்துக் கட்டிக்கொண்டு, யாவர்களும் பார்க்க ஒரு கிணற்றில் ஆழாக்குப்பாலையூற்றி அதைமறுகிணத்தில் எடுத்துவருகிறேனென்றுசொல்லி சபதங்கூறி, கிணற்றிலிறங்கி ஓர் பாத்திரத்தைக் கொடுக்கச்சொல்லி அதின் நிறைய ஜலத்தைமொண்டு மேற்படி கௌபீனத்தைக் கசக்கிப்பாலைப் பிழிந்துக்காட்ட அனைவரும் ஆச்சரியப்பட்டு உனக்கு கங்காபவானி வசியமென்று சொல்வார்கள்.

எலுமிச்சம்பழத்தையறுத்து இரத்தங்காட்டும் வித்தை.

செம்பருத்திப் பூச்சாற்றைக் கத்தியிற்றடவிக் காயவைத்திருந்து சபையில் எலுமிச்சம்பழத்தைக் கொண்டுவந்து அறுக்க உதிரமாகச்சொரியும்.

பேன் மாரண வித்தை.

இரசத்தையும் கெந்தகத்தையும் சரிபாகமா யரைத்து நூல்கயற்றிற்குத்தடவிக் காயவைத்து அதைப்பேன் பிடித்துள்ளவர்கள் தலையில் வைத்துக்கட்ட அந்த நாத்தத்திற்குப் பேன்களெல்லாம் கூண்டோடுமடியும்.

எலியும் பூனையும் விளையாடும் வித்தை.

குப்பைமேனி யிலையை அரைத்து எலியின் திரேகத்திற்குப் பூசிக்காய்ந்தபிறகு அதைப்பூனையின்முன்விட பூனையானது அதைக் கடிக்காமல் முகர்ந்துக்கொண்டே யிருக்கும்.

மூட்டைப்பூச்சிகள் சிதையும் வித்தை.

மூட்டைப்பூச்சிகளுள்ள விடங்களில் தாமரையிலையை நறுக்கிப் போட்டுவைக்க அவைகள் நாசமடையும்.



பாம்பு மாரண வித்தை.

பாம்பைப்பிடித்து அதன் கண்களில் ஓர் சிட்டிகை மூக்குத் தூளைப்போட அவைகள் உடனே இறந்துபோம். மறுபடியும் பிழைக்காது.

பூநாகம் உற்பத்தியாகும் வித்தை.

மண்ணைக் கிளரிப்பாத்திகட்டி ஜலந்தெளித்து அதிற்கொஞ்சம் பச்சரிசி நொய்யைத்தூவி வைக்கோலால் மூடி இரண்டொருநாள் கழித்துத்திறந்து பார்க்க அதில் நிறைய பூநாகங்கள் உற்பத்தியாகி யிருக்கும்.

கௌதும்பை சாபநிவர்த்தி வித்தை.

ஆதிவாரம் சூரிய உதயமாகாததற்குமுன் கௌதும்பைச்செடியருகிற்சென்று சுத்திசெய்து பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்துக் காப்புகட்டி ரீங்ரீங்கென்று நானூறு உருகொடுத்து ஆணிவேரறுமற்பிடிங்கிவந்து எக்காரியங்களுக்கும் உபயோகிக்க சித்தியாகும்.

தும்பை சாபநிவர்த்தி வித்தை.

செவ்வாய்க்கிழமையதினம் தும்பைச்செடிக்குச் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி, பொங்கலிட்டு, அன்றையயிரவு நடுசாமத்திற் டங்டங் என்ற மந்திரத்தை எண்ணூறு செபித்து வேரைக்கொண்டுவந்து சகலகாரியங்களுக்குப் பிரயோகிக்கச்சித்தியாம்.

நின்றுசிணுங்கி சாபநிவர்த்தி வித்தை.

நின்றுசிணுங்கி செடிக்குச்சாபநிவர்த்தி செய்வதெப்படியெனில், மஞ்சள்நூல் காப்புகட்டி அரி அரி அரி அரி என்னும் அக்ஷரத்தை எண்ணூறுவிசை செபித்துப்பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்துப்பிடுங்கி வந்து காலமறிந்து உபயோகிக்க இராஜவசிய முதல் சகலமுங்கைகூடும்.

அண்ணேரிஞ்சான்பூண்டு சாபநிவர்த்தி வித்தை.

சுத்தியுடன் பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து ஓம் என்ற பிரணவத்தை 1008-விசை செபித்து வேரைப்பிடுங்கிவந்து எக்காரிங்களையுஞ்செய்ய சித்தியாகும்.

சிறுபுள்ளடி சாபநிவர்த்தி வித்தை.

புதவாரதினம் பொங்கலிட்டு, கன்னிநூல் காப்புகட்டி, அ என்று லக்ஷமுருகொடுத்து தூபதீபத்துடன் ஆணிவேரறுமல் பிடுங்கி வைத்துக்கொண்டு மாரணவேலைகளைச்செய்ய எதிராளிகளெல்லாம் பணிந்து கேட்டதைக் கொடுப்பார்கள்.

### பொன் முசுட்டை சாபநிவர்த்தி வித்தை.

ஆதிவாரங்காலையில் பொன்முசுட்டைச் செடிக்குக்காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து ஓம் என்ற மந்திரத்தை லக்ஷமுருசெபித்து உச்சிவேரறாமல் பிடுங்கிவந்து எக்காரியங்களைச்செய்தாலும் வசியமாம்.

### நத்தைச்சூரி சாபநிவர்த்தி வித்தை.

எத்தைச்சொன்னாலுஞ் செய்யும் நத்தைச்சூரி செடிக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து சூ சூ சூ என்ற மந்திரத்தை நான்கு லட்சஞ்செபித்து, வேரைக்கொண்டுவந்து வைத்துக்கொண்டு எக்காரியங்களைச் செய்தாலும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல பலிதமாகும்.

### சூரியகாந்தி சாபநிவர்த்தி வித்தை.

சூரியன் உதிக்காமுன் சூரியகாந்தி செடியருகிற்சென்று சுத்திசெய்துப் பொங்கலிட்டு, காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வா வா வா என்ற மந்திரத்தை லட்சந்தரஞ்செபித்து உச்சிவேரறாமல் மறுநாளுதயம் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு எக்காரியங்களுக்கும் உபயோகிக்கச் சித்தியாம்.

### விஷ்ணுகாந்தி சாபநிவர்த்தி வித்தை.

செவ்வாய்க்கிழமைய தினம் விஷ்ணுகாந்திச்செடிக்கு தூபதீபங்கொடுத்துக் காப்புகட்டிப்பொங்கலிட்டு சிம் சிம் சிம் என்ற மந்திரத்தை லட்சமோதிக்கொண்டுவந்துப் பிரயோகிக்கச்சித்தியாம்.

### குப்பைமேனி சாபநிவர்த்தி வித்தை.

குப்பைமேனிச் செடிக்குத் தூபதீபத்துடன் பொங்கலிட்டுக் காப்புகட்டி தூ தூ என்னும் பிரணவத்தை லட்சந்தரஞ்செபித்து ஆணிவேரறாதுகொண்டுவந்து பத்திரப்படுத்தி, வேண்டுமானபோது பிரயோகிக்க சகல வசியங்களும் கைகூடுமென்று முன்னோர்களெல்லாம் மொழிந்திருக்கின்றனர்.

### ஆனைவணங்கி சாபநிவர்த்தி வித்தை.

குருவாரங்காலை சூரியோதயத்திற்குமுன் ஆனைவணங்கி செடியருகிற்சென்று சுத்திசெய்துப் பொங்கலிட்டு, கன்னிநூல் காப்புகட்டி, தூபதீபங்கொடுத்து ஓம் ரீங் றீயும் என்று லட்சமுருசெபித்து சாபநிவர்த்திசெய்து ஆணிவேரறாமல் பிடுங்கிக்கொண்டு எவ்வேலைகளுக்கும் உபயோகிக்கச் சித்தியாம்.

### சோதிமூலிகையின் சாபநிவர்த்தி வித்தை.

மலைதனிலிருக்குஞ்சோதி மூலிகையைக்கண்டு பிடித்து, செவ்



வாய்க்கிழமையதினம் நடு உச்சி வேளையிற் காப்புகட்டிப் பொங்கலிட்டுத் தூபதீபங்காட்டி தா தா என்ற மந்திரத்தை லட்சத்தியெட்டுதரஞ்செபித்து, மறுபடியும் ஓம் சுமுகாயென்று ஆயிரத்தெட்டுருசெபித்து ஆணிவேரறாமல் பிடுங்கிக்கொண்டு அறுபத்தினாலு சித்தும், ஜெகஜால முதலிய வசியங்களும், மிருகவசியங்களும், பட்சி வசியங்களும் இன்னும் உலகத்திலுண்டாகிய பலவிதமான வேலைகள் யாவற்றையும் சித்தனைப்போல விளையாடலாமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர்.

### தலைச்சுருளி சாபநிவர்த்தி வித்தை.

குருவாரங்காலை சூரியோதயத்திற்குமுன் தலைச்சுருளி மூலிகையிருக்குமிடத்திற்சென்று, அவ்விடத்தைப் பசுங்கோமயத்தால் சுத்திசெய்து, பொங்கலிட்டுக்காப்புகட்டி தூபதீபங்கொடுத்து றீம் றீம் றீம் என்று லட்சமுருகொடுத்து குலதேவதையைப்பணிந்து வேரறாமல் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு சகல வேலைக்கு முபயோகிக்கச்சித்தியாம்.

### செந்தொட்டி சாபநிவர்த்தி வித்தை.

செவ்வாய்க்கிழமையதினம் செந்தொட்டிச் செடியருகிற்சென்று சுத்திசெய்துப் பொங்கலிட்டுக் காப்புகட்டி ரும் ரும் என்ற மந்திரத்தை லக்ஷந்தரஞ்செபித்து, மறு செவ்வாய்க்கிழமை உச்சியிற் சென்று குருவைப்பணிந்து ஆணிவேரறாமற்பிடுங்கி வேலைகளின் பேரிற் பிரயோகிக்கக்கைகண்ட பலனைத்தரும்.

### கொல்லைப்பல்லி சாபநிவர்த்தி வித்தை.

ஞாயிற்றுக்கிழமையதினம் நடுமத்தியான வேளையாகப்பார்த்து கொல்லைப்பல்லிச் செடிக்குக் காப்புகட்டி பொங்கல் முதலிய பூசைகளைச்செய்து ரா ரா ரா என்ற மந்திரத்தைச்செபித்து, சாபநிவர்த்திசெய்து வேரைக்கொண்டுவந்து பேதன வேலைகளைச் செய்ய பச்சைமரத்தாணிக்குச் சமமாகவேலைகளைச் செய்யும்.

### விடதாரியின் சாபநிவர்த்தி வித்தை.

விடதாரிச்செடியிருக்குமிடத்தைச் சுத்திசெய்துப் பொங்கலிட்டுக்காப்புகட்டி தூபதீபங்கொடுத்து சிம் சிம் என்ற மந்திரத்தை லட்சமுரு கொடுத்து வேரறாமல் பிடுங்கிவந்து பிரயோகிக்க சகல வசியங்களுமாகும்.

### குடிக்குச் சகுனியின் சாபநிவர்த்தி வித்தை.

குடிக்குச்சகுனி யிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, அவ்விடத்தைப் பசுங்கோமயத்தால் சுத்திசெய்து பொங்கலிட்டு, கன்னிநூல் காப்புகட்டி, உம் உம் உம் என்ற மந்திரத்தை லட்சமுரு

செபித்துத் தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து பிரயோகிக்க சகல வேலைகளும் கைகூடும்.

### ஆகாசகேருடமூலியின் சாபநிவர்த்தி வித்தை.

முன்மாதிரியே இவ்விடத்தையுஞ் சுத்தஞ்செய்து பொங்கலிட்டு, காப்புகட்டி, டங் டங் டங் என்ற மந்திரத்தை 1008 செபித்துதூபதீபங்கொடுத்து மறுநாள் காலையில் வேரை அறுது பிடுங்கி வந்து வைத்துக்கொண்டு, தேவையானபோது உச்சாடிக்க இதன் பெருமையையும் சொல்லப்போமோ!

### தேவதாரமூலி சாபநிவர்த்தி வித்தை.

செவ்வாய்க்கிழமையும், அமிர்தயோகமும், அஸ்தநக்ஷத்திரமுங்கூடிய சுபவேளையில் தேவதாரமூலிகை யிருக்குமிடத்திற்சென்று சுத்திசெய்து, பொங்கலிட்டு கன்னிநூல் காப்புகட்டி தூம் தூம் தூம் என்று லட்சந்தரஞ்செபித்து, தூபதீபங்கொடுத்து மறுநாளுதயஞ்சென்று ஆணிவேரறுமற் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டால் வசியங்களெல்லாம் நம்முடைய மனம்போலவே நடக்கும்.

### திகைப்பூண்டின் சாபநிவர்த்தி வித்தை.

திகைப்பூண்டுச் செடியிருக்கு மிடத்தைக்கண்டுபிடித்து அவ்விடத்தைப் பசுஞ்சாணங்கொண்டு சுத்தஞ்செய்து, பொங்கலிட்டுக் கன்னிநூல் காப்புகட்டி, சா சா சா என்ற மந்திரத்தை சந்திர கலையில் நின்று லட்சந்தரஞ்செபித்து, தூபதீபங்காட்டிப் பிடுங்கி வந்து வைத்துக்கொண்டு தேவையானபோது உபயோகித்துக்கொள்ளவும்.

### கஞ்சாங்கோரையின் சாபநிவர்த்தி வித்தை.

கஞ்சாங்கோரைச்செடி யிருக்குமிடத்தைச் சுத்தஞ்செய்து பொங்கலிட்டு கன்னிநூல் காப்புகட்டி, குரு குரு என்ற மந்திரத்தை லட்சத்தியெட்டுவிசைசெபித்து ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு விளையாட சகலவேலைகளுஞ் சித்தியாம்.

### கருவூமத்தையின் சாபநிவர்த்தி வித்தை.

வியாழக்கிழமையதினம் கருவூமத்தைச்செடியிருக்கு மிடத்தைச்சுத்தஞ்செய்து பொங்கலிட்டு கன்னிநூல் காப்புகட்டி ரங் ரங் ரங் என்று லட்சமுருசெபித்து வேரறுமற்பிடுங்கிப் பிரயோகிக்க எடுத்தகாரியங்களெல்லாம் விக்கினமின்றி நிறைவேறும்.

### பெருவாகையின் சாபநிவர்த்தி வித்தை.

செவ்வாய்க்கிழமை சூரியோதயத்திற்குமுன் பெருவாகைச்செடியினருகிற்சென்று அவ்விடத்தைக்கோமயத்தால் சுத்தஞ்செய்து, பொங்கலிட்டு காப்புகட்டி ஓம் நமசிவய என்று லட்சத்தியெட்டு



உருசெபித்து, ஆணிவேரறுமற் பிடுங்கிவைத்துக் கொண்டு பிரயோகிக்க சத்துருக்கள் முதல்யாவர்களும் வசியமாவார்கள்.

### காசாமூலிகையின் சாபநிவர்த்தி வித்தை.

காசாமூலிகை யிருக்குமிடத்தைக் கண்டுபிடித்துக்காப்புகட்டி பொங்கலிட்டு, கூ கூ கூ என்ற அக்ஷரத்தை லட்சந்தரஞ் செபித்து, தூபதீபங்கொடுத்து வேரறுமற்கொண்டுவந்துப் பிரயோகிக்க வசியமாகாதது முண்டோ என்று முன்னோர்களெல்லாஞ் சொல்லியிருக்கின்றனர்.

### குறளி வசிய வித்தை.

ஓம் காட்டேரி குறளிவாவா, ஓம் சாத்தான்வாவா, ஓம்ரத்த காட்டேரிவாவா, ஓம் சுடலைக்காத்தான் வா வா, ஓம் வீரமுத்துவா வா, ஓம் வீரமுத்துலாடா வா வா, ஓம் நரசிங்கா ஓம் குமரசிங்கா ஓம் லாடசிங்கா, என்று ஆயிரத்தெட்டுருகொடுத்து முப்பலியுடன் பூசித்துப்போற்ற குறளிவசியமாகி நம்மனம்போல் இட்ட வேலைகளைச் செய்யும்.

### இதுவுமது.

சண்டி சண்டி, மொண்டி மொண்டி, தட்டு தட்டு தட்டு, நோக்கு நோக்கு, மொண்டி மொண்டி, கெண்டி கெண்டி, மேக்கு மேக்கு, மோகன மோகன, வசி வசி, கண்டி கண்டி, விண்டி விண்டி, ஓண்டி ஓண்டி, பூபி பூபி, பண்டி பண்டி, உண்டி உண்டி, பாடை பொரிகாத்தான், பாவாடைகாத்தான், ஓம்பகவதே நமஹ: என்று லட்சத்தியெட்டுருசெபிக்க வசியமாகி நாம் இட்ட வேலைகளையெல்லாம் செய்யும். இதனால் ஆகாதவேலைகள் இல்லை. அஷ்டமாசித்துகளும் விளையாடலாம். ஆனால் இம்மந்திரத்தைக் குருமுகாந்திரமாகத் தெரிந்துகொண்டு இன்னவேலைகளுக்குச் செய்யலாம், இன்னவேலைகளுக்குச் செய்யக்கூடாது என்றதைக் கவனிக்காமல் படி செய்வரேல், கடல்சூழ்ந்த உலகத்தில் அவர்களுக்கு நேரிடும் சாபங்களுக்கு மெல்லையுண்டோ?

### மஞ்சளின் வித்தை.

நன்றாகத்தேறின ஓர் மஞ்சளைக் கையிலெடுத்துக்கொண்டு மஞ்சளாத்தி, கண்புளிச்சி, மஞ்சளபிகுணாவி வா வா என்று 108 விசை செபித்துக்கொடுக்க, அதைப்பூசிக்கொண்டு யார் ஸ்நானம் செய்கிறார்களோ அவர்களுக்கு கண்ணோறு, மார்புக்கட்டி, கலசக்கட்டி, ஸ்தனக்கட்டி, பால்கட்டு, மார்குடைச்சல், மார்சிலந்தி, முதலியவைகள் பறந்துபோகும்.

### காய்ந்த இரும்புசங்கிலியைக் கையிலுருவும் வித்தை.

பச்சைத்தவளைநெய், சோத்துக்கத்தாழைச்சார், வெங்காயச்

சார் இவைகளை விளக்கெண்ணெயிற் கலந்து கலக்கி வைத்துக்கொண்டு, சபையில் காய்ந்த சங்கிலியைக்கொண்டு வரச்சொல்லி முன் கலக்கிய மருந்தைக்கையில் பூசிக்கொண்டு சங்கிலியை யுருவக்கை சுடாது.

### தலைவலி தீரும் வித்தை:

ஒருகாலில் காலாழிதரித்தும், ஒருகாலில் காலாழியில்லாமலும் நடக்கும் பெண்பிள்ளையின் பிறகேபோய் அவளுக்குத்தெரியாமல் அவளுடைய இடதுகாலடி மண்ணையெடுத்துக் கொண்டுவந்து அதை நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சித் தலைமுழுக, இரண்டு முழுக்கில் அத்தலை நோயானது இவனைவிட்டு அவளைப்பற்றும், இது ஒரு சாமார்த்தியமானதந்திரம். ஆனால் அவளும் அந்நோய்தீர முன்மாதிரிதான் செய்யவேண்டும்.

### கற்றாழை நாற்றமகலும் வித்தை.

கற்றாழை நாற்றத்தினால் கஷ்டப்படுகிறவர்கள் கொஞ்சம் வெற்றிலையை கற்றாழைநாற்றமுள்ள அக்குளில் வைத்துக்கொண்டு படுத்துக்கொள்ளவும். மறுநாள் விடியற்காலையில் எழுந்து ஒருவர் முகத்திலும் படாமல் முச்சந்திகூடுமிடத்திற்குச்சென்று அக்குளை தூக்க வெற்றிலையானது விழுந்துவிடும். அதைத்தான் திரும்பிப் பாராது நேரேவந்துவிட, அவ்வெற்றிலையை யார் எடுத்துக்கொள்ளுகிறார்களோ அவர்களுக்கு மேற்படி கற்றாழை நாற்றமானது தொத்திக்கொள்ளும். இவ்வாறு இரண்டு அல்லது மூன்றுவிசை செய்தல் நலம். அவர்களும் அம்மாதிரிசெய்துதான் அதை விலக்க வேண்டும்.

### கேச்சக்காய்களின் வித்தை.

தேவையான கெச்சக்காய்களை யெடுத்துக் கும்பலாகக்கொட்டி ஓர் ஆண் கெச்சக்காயை அனைவருக்குங்காட்டி மேற்படி கும்பல் காய்களின் நடுவில் சொருகிமூடிவிட்டு மேலே ஓர் கூடையைப்போட்டுக் கவிழ்த்துச் சிறிதுநேரம்பொருத்துத் திறந்துபார்க்க நடுவில் சொருகின காயானது மேலேறி நிற்கும் இதைத்தான் ஆண்கெச்சக்காயென்று சொல்வது. அது எல்லாகாய்களையும்விட சற்றுப்பருமனும், நீளவசமாயுமிருக்கும்.

### மண்ணைப்பூச நாற்றமடிக்கும் வித்தை.

கொஞ்சம் மலத்தை முன்னதாகவே மண்ணில் கலந்து வைத்துவிட்டு, சமயம்வரும்போது இதோபார் இம்மண்ணை மலநாற்றம் வீசும்படிச்செய்கிறே னென்றுசொல்லி கீழ்குனிந்து மண்ணைக் கிள்ளிப்பூச அது நாற்றம்வீசும். பார்ப்பவர்கள் உனக்கு குட்டிச் சாத்தன் வசியமென்று சொல்வார்கள். இம்மாதிரியே தந்திரமாக இன்னம் எதைவேண்டுமானாலும் செய்யலாம்.



### சோக்குப்பொடி வித்தை.

சொக்குப்பாக்கு, அப்பக்கோவைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு தானிவேர், பேயத்திவேர், ஆலம்வேர், குப்பைமேனிவேர், வேளைவேர், கெச்சக்காய்வேர், ஊமத்தன்விரை, நஞ்சுக்கொடி, மாதவிடாய்ச்சீலை, பைத்தியம்பிடித்தவனைக் கொளுத்தியசாம்பல், ஊமையின் மண்டையோட்டுப்பொடி இவைகளையெல்லாம் வகையொன்றுக்கு ஒரு வராகனெடையாக யெடுத்துப்பொடிசெய்துக்கொண்டு பேயத்திப்பால், ஆலம்பால் இவைகளை விட்டரைத்துக்காயவைத்துப்பொடியாக்கி அப்பொடியை யார் பேரிலாகிலுந்தூவ அவர்கள் அறிவிழந்து புத்திமயங்கி கேட்டதைக் கொடுப்பார்கள். மறுபடியும் எப்போதும்போல் தெளியவேண்டுமாகில் அவர்களைக்குளிர்ந்த நீரில் ஸ்நானஞ்செய்துவைக்க எப்போதும்போல் இருப்பார்கள்.

### விந்திறுகும் வித்தை.

ஆடுதின்னும்பாளைவிரை, பூமிச்சக்கரைக்கிழங்கு, பூனைக்காலிவிரை இவைகள் வகைக்கு வராகனெடை 2 எடுத்துப் பசும்பாலிலரைத்துக் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி அரைமண்டலம் அந்திசந்தி சாப்பிட்டுவந்தால் இந்திரியமிறுகும். கலிதமாகாது. கலிதமாகவேண்டுமென்றால் எலுமிச்சம்பழம் சாப்பிடவேண்டும். அல்லது குளத்திலேயோ ஏறியிலேயோ கழுத்தளவு ஜலத்திலிறங்கியிருக்கக் கலிதமாகும். கைகண்டது.

### வசிய வித்தை.

சூரியகாந்திபூச்சார், செங்கழுநீர்ப்பூச்சார், முல்லைப்பூச்சார், கோழியவரைப்பூச்சார், வெள்ளைக்காவளைப்பூச்சார், செவ்வலரிப்பூச்சார், கரியசாலைச்சார் இவைகளை வகையொன்றுக்கு வராகனெடை ஒன்றாகயெடுத்துக் கலவத்திலிட்டு, கொம்புத்தேனும், பெண்மதுவும் சேர்ப்பதுடன், கோரோசனை, புனுகு, பச்சைக்கற்பூரம் இவைகள் வகைக்குக் கால்வராகனெடையாகச் சேர்த்து, மைபோலரைத்துச் செப்புசிமிழில் வைத்துக்கொண்டு, மறுபடியும் நல்ல அமிர்தயோகநாளில் அச்சிமிழைச் சுடுகாட்டிற் புதைத்து மோகினி மந்திரத்தை தினமொன்றுக்கு 1008 உருகொடுத்துப் பூசித்து மூன்றுநாள் பொருத்து நாலாவது நாளெடுத்துத்திலர்தமிட்டுக் கொண்டு செல்ல கண்டபெண்களெல்லாம் வசியமாகி கேட்டதைக் கொடுத்து வணங்குவார்கள்.

### காயசித்தி வித்தை.

விழுதியிலையையாகிலும், அதனுடைய கிழங்கையாகிலும் பசும்பாலிலரைத்து ஒருமண்டலம் புசித்துவந்தால் காயசித்தியுண்டாகி யானையைப் போன்றவலுவேற்படும்.

### வேறு.

வெள்ளறுகு என்னும் மூலிகையைக் கண்டுபிடித்துக்கொண்டுவந்து அதைப்பசும்பாலிலரைத்து ஒருமண்டலம் வரைக்கும் புசித்துவந்தால் காயசித்தியுண்டாகி, சரீரத்திலுள்ள நோய்களெல்லாம் விலகும்.

### வேறு.

கொத்தான்கிழங்கைக் கொண்டுவந்து பசும்பாலிலரைத்து உண்டுவந்தால் காயசித்தியுண்டாவதுடன் தேவர்களெல்லாம் வசியமாகி நம்முடைய கண்களுக்குத் தென்படுவார்கள். கடல்சூழ்ந்தகாசினியிலுள்ளமாதர்களும் வசியமாவதுடன், சித்தர்முனிவர் முதலியவர்களெல்லாம் வசியமாவார்கள்.

### வேறு.

பொற்சீந்தில் கிழங்கைப் பசும்பாலில்லரைத்துச் சாப்பிட்டுவந்தால் காயசித்தியுண்டாவதுடன் நரைதிரைமாறி என்றும் பதினறு வயது பாலியனுகவே யிருக்கலாம்.

### வேறு.

கரிசலாங்கண்ணியேனும், பொன்னுங்கண்ணியேனும் நாற்பது நாள் அல்லது ஒருமண்டலம் வரைக்கும்விடாது புசித்துக்கொண்டுவந்தால் நரைதிரைமாறுவதுடன் பகலில் நக்ஷத்திரந்தெரியும்.

### மூலிகை வித்தை.

வெள்ளிக்கிழமையதினம் நல்ல அமிர்தயோகமாக யிருக்கும் வேளையில் மிளகுசாரணைச்செடிக்குச் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி, பொங்கலிட்டு பலியுடன் தூபதீபங்கொடுத்து ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து குளிசத்திலடைத்துக் கட்டிக்கொள்ள சகல பெண்களும் வசியமாகி கேட்டதைக்கொடுப்பார்கள். சிலநேரம் உன்னைக்காணவிட்டால் மதிமயங்கிப் புலம்புவார்கள்.

### புருஷவசிய வித்தை.

ஊமத்தை, பொன்னுங்கண்ணி, செம்முள்ளி, சிவந்த கஞ்சா, செகப்புருவனை, பொன்னவாரை, புல்லாமணக்கு, சிகப்புநாயுருவிவேர், இவைகளின் சாறுவகைக்கு வராகனெடை ஒன்றுகயெடுத்துக்கலவத்திலிட்டு அதனுடன் புனுகு, சவ்வாது, கோரோசனை இதுகளை வகையொன்றுக்கு வராகனெடை ஒன்று ஆகச்சேர்த்து கொம்புத்தேன், சிற்றண்டக்கரு, காராவின் நெய் இதுகளைத் தேவையானவரைக்கும் ஒன்றுக்கொன்று பேதப்படாமல் சரிபாகமாகவிட்டு அரைத்து மைபோலானபின் செப்புச்சிமிழில் வைத்துக் கொண்டு கணபதியைப் பூசித்துப்பணிந்து பிறகு வாலையைப்



போற்றிப்பணிந்து ஸ்திரீகள் நெற்றியில் பொட்டிடக்கண்ட புருடர்களெல்லாம் மதிமயங்கித்தடுமாறி கேட்டதைக் கொடுத்துப் பணிவோடு அவளுடைய வாயலைக்காவலும் புரிவார்கள். அங்கயீனமுள்ள மாதராயிருந்தாலும் அவளை இரதிதேவியே யென்று நினைத்துச் சந்தோஷப்படுவார்கள்.

### பற்களுதிரும் வித்தை.

உக்கானைப்பிடித்து பகைவனுடைய தம்பலத்தை அதின்வாயிற்செலுத்தி, அவனுடையபேரை ஓர் நறுக்கில் எழுதி, அதற்கு ஐங்கோலந்தடவி யாவற்றையும் ஒன்று சேர்த்துப் பகைவனுடைய வாயலில்புதைத்த நாற்பதுநாளைக்குள் அவனுடைய பற்களெல்லாம் வெகு சுலபமாக உதிர்ந்துவிடும். கஷ்டமிருக்காது.

### குருடனுகும் வித்தை.

குளத்திலிருக்கும் அட்டையைப் பிடித்துவந்துக் கலவத்திற்போட்டு நாற்பதுநாள் விளக்கெரிக்க எதிரிகண்கள் பிரகாச மழுங்கிக் குருடாய்ப்போகும்.

### வியாதியுண்டாகும் வித்தை.

மூஞ்சூரைப்பிடித்து அதன்வயற்றி லிருப்பவைகளையெல்லாமெடுத்துவிட்டு அதற்குப்பதில் எதிரியினுடைய மலமும், நீரும் அதிற்போட்டு, பஞ்சுகொட்டு நரம்பால்கட்டி, மண்டலம் வரைக்கும் 'ஓம் நமோ பகவதி காளி ஓம் யோகி நீ சுவஹா' வென்று அந்தி சந்தி ஜெபித்துக்கொண்டு வர எதிரிக்குப்பலவித வியாதிகளுண்டாகி துன்பப்படுவான்.

### பூதவசிய வித்தை.

அவல், கடலை, பழம், சத்தி முதலியவைகளுடன் 'ஸ்ரீம் ரீம் ஓம் ரீம் சுவஹா' என்று லக்ஷத்தியெட்டுருசெபிக்க சகல பூதங்களும் வசியமாகி நாம் இட்டவேலைகளைச்செய்யும்.

### வேறு.

வீடுகள், தோட்டங்கள், வயல்கள், கோயில்கள், வாழ்மனைகள் பாழடைந்த யிடங்கள் குகைகள் முதலிய இடங்களிலிருந்துக்கொண்டு வருகிறவர்களையும், போகிறவர்களையும் பயமுறுத்திக்கொண்டிருக்கும் பிசாசுகள், முனிகள், காட்டேரிகள், ஜின்கள், தபமுனிகள் முதலிய கொடிய பூதங்களுக்கெல்லாம் தந்திரமாக சிரமமில்லாமல் பிரதிதினமும் காலையில் எருமை மூத்திரத்தையும், ஆட்டுமுத்திரத்தையுங்கலந்து தெளித்துக்கொண்டேவர சிலநாளில் அதுகள் அவ்விடத்தைவிட்டு அகலும்.

வேறு.

சில பேய்கள் தினந்தோறும் நடக்கின்ற சங்கதிகளெல்லாவற்றையும் விடாயல்படி தபாலைப்போன்று இங்கு நடக்கின்றதை அங்கும், அங்குநடக்கின்றதை இங்கும் தெரிவித்துக்கொண்டிருக்கும். இச்சங்கதி சில மந்திரவாதிகளுக்கும் தெரிந்தவிஷயமே. அப்பேர்ப்பட்ட பேய்களை வசியஞ்செய்துக்கொண்டுதான் அகற்றவேண்டும். இல்லையேல் எந்த மந்திரத்திற்கும் அசையாமல் இங்குமந்திரம் செபிக்கும்போது அங்கும் அங்கு மந்திரஞ்செபிக்கும்போது இங்குமாக தப்பித்துக்கொண்டுதிரியும். அப்பேர்ப்பட்டதற்கு செபிக்கும் மந்திரம் என்னவென்றால் ஓம் ஸ்ரீரீம் ஸ்ரீரீங் கிரீம் என்று லட்சமுரு செபிக்க வசியமாம். அதன்பிறகு அதற்கு செய்யவேண்டிய வேலைகளைச்செய்து அகற்றவும்.

| | | | |
|---|---|---|---|
| 24 | 31 | 2 | 7 |
| 6 | 3 | 28 | 27 |
| 30 | 25 | 8 | 1 |
| 4 | 5 | 26 | 29 |

வேறு.

தங்கத்தகட்டில் பதினாறு அரைகள் வரைந்து அறைகள்தோறும் சூலமிட்டு அறுபத்திநாலு எண்ணை அதிலடைத்துப் பிறகு 'டங்டங்டங், ரிங்ரிங்ரிங்' என்ற மந்திரத்தை லட்சத்தியெட்டுருசெபிக்க வசியமாம்.

லாடசங்கிலி வசிய வித்தை.

அறுகோணசக்கரம்போட்டு அதில் பிரணவத்தைமாறி அவல், கடலை, கரும்பு, இளநீர் முதலியவைகளைவைத்து தூபதீபங்களுடன் 'டிங்டிங்டிங், ராராராரா, ரீரீரீ' என்று லட்சமுருசெபிக்க லாடமுனிவசியமாகும். அதனால் அறுபத்திநான்கு சித்தும் விளையாடலாம்.

சுப்பிரமணியர் வசிய வித்தை.

முன்போல் சக்கரங்கீறி பிரணவத்தை அதில்மாட்டி 'ரிங்ரிங் ரிங்ரிங், சாசாசா, ஹஹஹ, ஸ்ரீஸ்ரீஸ்ரீ, கம்கம்கம், அரிஅரிஅரி, வாவாவா, தும்தும்தும், என்ற மந்திரத்துடன் சவ்வெழுத்தைக்கலையில்மாறி, நவ்வெழுத்தைத்தலையில்போட்டு, மவ்வெழுத்தை ஆகாயத்தில் தாக்கி, யங்கென்று பிரணவத்தை இடகலையில் பிங்கலையால் மாறி, பீசத்தை சுழிமுனையில் நிறுத்தி, முன்பிரணவத்தைகாலில் நின்று லட்சமுருசெபிக்க ஸ்ரீ சுப்பிரமணியர் வசியமாம்.

தம்பன வித்தை.

சில வீடுகளில் இருக்கும் ஆண்பிள்ளைகளின் அதிகாரத்திற்கடங்காத சில ஜாடமாலிச்சிறுக்கிகளெல்லாம் தங்கள்பேரில் தெய்வ



மிருக்குதென்றும் அதுசொன்னது சொன்னபடி நடக்குமென்றும் சொல்லி வெள்ளிக்கிழமைதோறும் தலைவிரித்து ஆடிகுறிசொல்லுகிற பழக்கம் நாளதுவரையிலும் நம் நாட்டிலுண்டு. அதுகளையடக்கும் வகையெப்படியென்றால் ஏதாவதொரு புஷ்பத்தையேனும் வேறு வஸ்துவையேனும் கையில்வைத்து மூடிக்கொண்டு அதினுடைய உருட்டலுக்கும், ஓங்காரத்திற்கும் அஞ்சாது கையிலுள்ள வஸ்துவின்பேரைக்கேழ்க்கும் பக்ஷத்தில் உண்மையாகிய தெய்வமாயிருந்தால் உண்மையைச்சொல்லும், கெர்வித்தனம் பிடித்தாடுகிறதாயிருந்தால் நம்மை மிரட்டப்பார்க்கும். அதுசமயம் அதற்குத்தகுந்த சூடுகொடுத்து புத்திகற்பிக்கும் பக்ஷத்தில் சாவனவும் தலைக்கறியாடாது.

வேறு.

உண்மையாகவே ஏதாவதொருமுனியோ, தெய்வமோ மூடியிலிருந்துகொண்டு ஆடுகிறபழக்கமுண்டு. அதுகளை நிறுத்தும் தந்திரமெப்படியென்றால் கல்லுருவி, கருங்கழுதைமயிர் தலைமயிர் இம்மூன்றையும் வேடுவச்சியின் கட்டுக்கயற்றால்கட்டி தெய்வமாடுகிற வீட்டிறப்பில் சொருகிவைக்க எப்பேர்ப்பட்ட தெய்வமாயிருந்தாலுமாடாது. மறுபடியும் அதையெடுத்து ஜலத்தில்போட்டுவிட்டு பசங்கோமயத்தைக்கொண்டு வீட்டைச்சுத்திசெய்து வரவழைக்கும் பக்ஷத்தில் வந்து ஆடும்.

வேறு.

ஒத்தைப்பிரமட்டை யென்னும் செடியைக் கண்டுபிடித்து அதை வேருடன் கொண்டுவந்து வீட்டிறப்பில் சொருகிவைத்தாலும் எவ்வித பேய்களுமாடாது.

வேறு.

பன்றி இரைச்சியை பன்றிப் பிச்சியிலிருக்கும் நீரைவிட்டு அரைத்து தெய்வமாடுபவர்களின்பேரில் தடவிவிட அவர்கள் ஆட்டமெல்லாமடங்கிவிடும். சாதாரணமாக பன்றியிரைச்சியை யார் புசிக்கின்றார்களோ, அவர்கள் வீட்டில் கருப்புதேவதை யொன்று தவிர நல்ல தேவதைகளெல்லாம் விலகிவிடும்.

வேறு.

சுடுகாட்டில் பிணத்தைச்சுற்றி வந்துடைக்கும் தோண்டியின் ஓட்டில் கொஞ்சம் துண்டையெடுத்துச் சாணியில் பொதித்து பதிவிளக்கின் கீழ்வைத்துவிட அவ்விளக்கில் எவ்வித குறிகளும் நடவாது, பூசாலியும் பிரமித்துவிடுவான்.

சோம்புமேல் நடக்கும் வித்தை.

ஒரே அளவுள்ள சொம்பு இரண்டு கொண்டுவந்து அவைகள்

ளுக்குங்காட்டி இந்த சொம்பின்பேரில் நடக்கின்றேன் பாருங்களென்றுசொல்லி, மந்திரஞ்செபித்துக்கொண்டே சொம்பைக்கவிழ்த்து வைத்து அதின்பேரில் விபூதியைப்போட்டு தன் இரண்டு கால்களையுங்கழுவிக்கொண்டு பயபக்தியுடன் சொம்பின் பேரிலேறிக்காலை சரியாக வைத்துக்கொண்டு நடக்கச்சொம்பானது காலைவிடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கும். இவ்வேலையைப் பார்த்த அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள். இதற்கு முன்னடியே விபூதி போடுவதைப்போல் விளாம்பிசினியைக்கலந்த விபூதியைப்போட்டு நடக்க ஆச்சரியமாயிருக்கும்.

## மிதியடியின்பேரில் நடக்கும் வித்தை.

குமிளில்லாத இரண்டு மிதியடியைக்கொண்டுவந்து சபையில் வைத்து அனைவர்களையும்நோக்கி இதன்பேரில் நடக்கின்றவேடிக்கையைப்பாருங்களென்று சொல்லி, முன்போல் தயாரித்த விபூதியைப் போட்டுக் காலைக்கழுவிக்கொண்டு ஈரமாயிருக்கும்போதே அதின்பேரில் வைத்தரக்க அதுபிடித்துக்கொள்ளும். உடனே சபையிலிருக்கின்றவர்கள் ஆச்சரியப்படும்படி நடந்து காண்பிக்கச் சந்தோஷப்பட்டு உனக்குக்காணிகாதேனி வசியமென்று சொல்வார்கள்.

## வியாதியுண்டாகும் வித்தை.

நாபிகள் இரண்டையும் எடுத்துக்காற்று வாட்டம்பார்த்து எருவடுக்கிப்புடம்போட அக்காற்றுப்புகைபட்ட மனிதர்களெல்லாம் சுரமுங்குளிருங்கண்டு வருந்துவார்கள். அச்சமயம் அவ்வூரிலிருக்கும் வயித்தியர்களுக்கு இம்மர்மந் தெரியாதாகையால் அவர்கள் உண்மையாகவே சுரத்திற்குத்தக்க ஔஷதங்களைக் கொடுப்பார்கள். அது உண்மையாகிய சுரமாயிருந்தாலல்லவோ போகும். பாஷாணப்புகையால் வந்ததாகையால் விடாது அவர்களை இம்சை செய்யும். அச்சமயம் நாம் அவ்வூருக்குப்போய் நம்முடைய பெருமைகளையெல்லாம் சண்டப்பிரசண்டமாகச்சொல்லி ஆகாயக்கோட்டைகட்டி, அவுரிவேர், சிறுகீரைவேர், மிளகு இவைகளைக்கியாழம் வைத்துக்கொடுக்கச் சொஸ்தமாகிவிடும். இவ்வேர்களை ஒருவர் கண்களுக்குந் தெரியாது உபயோகிக்கவேண்டும். தெரிந்தால் நம்முடைய மர்மம் வெளியாய்விடும்.

## இதுவுமது.

தொடிக்கள்ளிச்சார், கார்த்திகைக்கிழங்கு, பாஷாணம், மயில்துத்தம், நேர்வாளம் கருநாபி இவைகளையெல்லாம் ஒன்றாகயிடித்து ஓர் குடுவையில்போட்டு வாய்க்குச்சீலைசெய்து ஓர் கிணற்றில் ஒருவருக்குந்தெரியாது விட்டுவிடவும். அந்தசலத்தைக்குடிக்கும் அவ்வூரிலுள்ளவர்களெல்லாம் வாந்தியும் பேதியுமாகி அவஸ்தைப்பட்டு ஒன்றுந்தோன்றாதவர்களாய் பிரமித்து என்னமோ அனித்தியகாலந்



தெரியவில்லை, ஏதோ கெட்டதேவதை இவ்வூரில் வந்திருக்கின்றது அதினால்தான் திடீரென்று இம்மாதிரி நோய் சம்பவித்திருக்கின்றதென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுவார்கள். அதுசமயம் நீபோய் இவ்வூரில் ஓர் துஷ்டதேவதை வந்திருக்கின்றது அதையொழித்தால் தான் இந்நோய் விலகுமென்று சொல்ல, அவர்களும் அதை உண்மையென்றுநம்பி, அத்தேவதையை உன்னையே ஒழிக்கும்படி கேட்டுக்கொள்ளுவார்கள். நீயும் தந்திரமாக ஒருவருக்குந் தெரியாமல் முன் கிணற்றில் விட்டிருக்கும் கலசத்தையெடுத்துவிட்டு, அங்கிருக்கும் பிள்ளையாருக்கு பலமான பூசைபோட்டு, வீடொன்றுக்கு நூறுகுடம் ஜலம் பிள்ளையாருக்கு ஊற்றி அபிஷேகஞ்செய்து அவர்மனதைத் திருப்திசெய்தால்தான் அக்கிரகம் போகுமென்றுசொல்லி, ஜலத்தைமொண்டு ஊற்றச்சொல்ல, அவர்களும் கிரகமொழிந்து தேகம் சுகப்பட்டால் போதுமென்று கிணற்றிலுள்ள ஜலத்தையெல்லாம் அடியோடேவாரி ஊற்றிவிடுவார்கள். அந்தசமயம் தந்திரமாகக்கொஞ்சம் நீலிவேரையிடித்துக் கிணற்றில் போட்டுவிடவும். பிறகு எல்லோரையும் பார்த்து அவரவர்கள் சக்திக்கியன்றவிதமாய்ப் பிள்ளையாருக்குப் பூசைபோடச் சொல்லி, நீயும் அகப்பட்டதை வாங்கிச்சுருட்டிக்கொண்டு திரும்பிப்பாராது போய்விடவும்.

## லோக வசியம்.

றீம், ஐயும், கிலியும், ஸ்ரீம் சவ்வும், இறீம், கிலீம், ஓம் என்று சொல்லி திரிகாலமும்விடாது லட்சமுருசெபிக்கச்சித்தியாம். அதையே பஞ்சலோகத்தகட்டிலெழுதிக்கட்டிக்கொண்டு செல்ல எக்காரியமும் சித்தியாகி யாவரும் வசியமாவர்கள்.

## மூடமாகும் வித்தை.

சூரியக்கிராணம் பிடிக்கும்போது எட்டிமரத்திற்குக் காப்புகட்டி பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிக்கொள்ளவும். மறுபடியும் கிராணம் விடும்போது இன்னொரு வேரைப் பிடுங்கிக்கொள்ளவும் முதல்பிடுங்கினவேரில் எதிரியைப்போல் உருவஞ்செய்துக்கொண்டு, பின் பிடுங்கினவேரில் எழுத்தாணியைப்போல் முளைசெய்துக்கொள்ளவும். பிறகு இரண்டையும் எடுத்துக்கொண்டு கூட ஒரு வெள்ளைச்சாவலையும் பிடித்துக்கொண்டு கங்கைக்குச்சென்று மேட்டின்பேரில் சாவலை இரண்டு கால்களையும் கட்டி வைத்துவிட்டு, பதுமையுடன் ஜலத்திலிறங்கிக் கழுத்தளவு ஜலத்தில் பதுமையைக்கையில் வைத்துக்கொண்டு (ஹு) என்னும் மந்திரத்தைச் செபித்துக்கொண்டே பொம்மையின் கீல்களிலிருக்குந்துவாரத்தில் முளையைநாட்டிக் கொண்டேவந்தால் மேட்டிலிருக்குஞ்சாவலானது மாண்டுபோகும். அதன்பிறகு நீ கரையேறி வந்து விடவும். முளையைக்குத்தும்போது கருவைச் சேர்த்துக்

கொண்டு குத்தவேண்டியது. இதன்றி பதுமைசெய்யும்போதே வேளைகளிலெல்லாம் துவாரம் வைத்துச்செய்யவேண்டும். பிறகு எதிரியானவன் நீசெய்தாயென்று கண்டுகொண்டு உன்னைவந்து வணங்கும்பக்ஷத்தில் அடித்திருக்கும் முளையைப்பிடுங்கி விட்டுப் பதுமையை நீரில்கழுவி சுத்தஞ்செய்துவிட எப்போதும் சுகமடைவான். அப்படிச் செய்யாவிட்டால் தீராதபாவமானது சேருமென்று முன்னோர்களெல்லாஞ் சொல்கின்றனர்.

கண்கட்டு மைசெய்யும் வித்தை.

ஊக்குருவியைப்பிடித்து அதன்வாயில் 10-குன்றியெடை பாதரசத்தைவார்த்து, கால்கழஞ்சு சங்குபாஷாணமும் அதனோடு சேர்த்துப்போட்டு வாயையும், அபானவாயையும் தைத்துவிட்டு ஒரு சிறிய பானைக்குள்போட்டு அதில் ஒருபடிதென்னங்கள்ளை வார்த்து மேலே ஓர் சாணகியைமூடி அடுப்பின்பேரில் வைத்து ஒரேமரத்து விறகினால் எரித்து, நன்றாகச்சுண்டக்காய்ந்த பிறகு யெடுத்து, பதத்தைப்பார்த்துக் கலவத்திலிட்டு அஸ்தி, ரோமம் முதலியவைகளை நீக்கி பேய்க்கரும்புச் சாறுவிட்டு மைபோலரைத்து அம்மையை வெள்ளைத்துணியில் தடவித்திரித்துக் காயவைத்து, தலைசன்பிள்ளை மண்டையோட்டில் ஐங்கோலத்தைலம் வார்த்து மேற்படி திரியை அதில்போட்டு விளக்கேற்றி அதிலுண்டாகும் மையை பிராமணப்பிள்ளையின் மண்டையோட்டில்பிடித்து வழித்துச் செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு ஜாலக்காளை பூசித்து வணங்கி ஜாலமாடுகிறவிதமெப்படி யென்றால் :—

மையை பச்சைக்கோலில் தடவி சபைக்குமுன்னே போடப் பாம்பாகும்.

மையைக்கையில் பூசிக்கொண்டு புளியயிலையை யுருவிப்போடக் குளவியாகும்.

மையைக்கையில் தடவிக்கொண்டு வேப்பிலையை உருவிப்போடத் தேளாகும்.

மையைக்கையில் தடவிக்கொண்டு மலைவேப்பிலையை யுருவிப்போட நண்டு தூக்க்ாவாகும்.

மையைக்கையில் தடவிக்கொண்டு கொய்யாயிலையை உருவிப்போட பெருந்தேளாகும்.

மையைச்சதுரமாகிய ஓட்டிற்குத்தடவிப்போட ரூபாய்களும், வராகன்களுமாகத் தெரியும்.

மையை மண்ணிற்குத்தடவிக்காட்ட கந்தப்பொடியாகும்.

மையை அம்மிக்குப்பூசினால் அம்மி நடக்கின்றதைப்போலத் தெரியும்.



மையை கெச்சக்காய்களுக்காகிலும், கூழாங்கற்களுக்காகிலுந்தடவிப்போட அதுகள் ஒன்றுடனொன்று மோதிக்கொண்டு சண்டைகள்போடும்.

மையை எந்தப்பக்ஷியின் இறகில்பூசிக் கீழே போடுகிறோமோ அந்தப்பக்ஷியைப்போலவே பார்ப்பவர்கண்களுக்குத் தெரியும்.

இரந்துபோன கீரிப்பிள்ளையின் தோலுக்கு மையைத்தடவினால் உயிருள்ளதைப்போலவே தெரியும். பாம்புத்தோலுக்கு மையைத்தடவினால் உயிருள்ள பாம்பைப்போலவே தோன்றும். அப்போது கீரிப்பிள்ளையையும், பாம்பையும் சண்டைவிட்டால் பார்ப்பவர்கள் உண்மையாகவே சண்டைபோடுகிறதென்று நினைப்பார்கள்.

ஒரு மாங்கொட்டைக்கு மையைப்பூசி இதோ மாஞ்செடிமுளைக்க வைக்கின்றேன் பாருங்களென்றுசொல்லி துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொருத்துத் திறந்துக்காண்பிக்க உண்மையான மாஞ்செடியானது இலை, பூ, காய், பிஞ்சுகளோடு களகளவென்று தோன்றும். பார்ப்பவர்களெல்லாம் உன்னை ரொம்பவும் மெச்சிக் கொண்டாடுவதோடு வேலையிலும் நீ மகாநிபுணனென்று சொல்வார்கள். இன்னும் இந்த மையைக்கொண்டு எவ்வளவு வேலைகள் வேணுமானாலும் செய்யலாம். அவைகளையெல்லாம் குரு முகாந்தரமாகக்கண்டுக் கொள்வதுடன் புத்தி சாமர்த்தியமும், சமயத்திற்கேற்ற யோசனையும் வேண்டும். இதுதவிர இம்மையைக்கொண்டு யாதொரு கெட்டவேலைகளையுஞ் செய்யக்கூடாது. அப்படி செய்யவும் நினைக்கக்கூடாது. அப்படி நினைக்கும் பக்ஷத்தில் மையின் வலுவானது அற்று ஜாலக்காளும் நம்மைவிட்டு நீங்கிவிடுவாள். தமாஷாக மலையைப்பிரட்டிக் காண்பிக்க வேண்டுமென்றாலும் காண்பிக்கலாமேயொழிய துன்மார்க்க வேலைகளுக்கு இம்மையானது இடங்கொடுக்கா தென்றறியவும்.

ஜாலக்காள் வசிய வித்தை.

ஒரு மஞ்சள் கிழங்கைப் பெண்ரூபமாகச்செய்து அதன்மேல் சித்திரமூலக்கொடியைச் சுற்றி சத்திபூசைசெய்து ஓம் ஜாகினி, டாகினி, ஜாலக்காள் தேவிநீ ராராரா என்று லட்சத்தியெட்டு உருதூபதீபத்துடன் சத்தி, அவல், கடலை, நீர்மோர், இளநீர், கரும்பு முதலியதுகளைவைத்துப் பூசித்தால் ஜாலக்காள் பிரசன்னமாகி உன்னுடன் விளையாடிக்கொண்டிருப்பாள். அதனால் உலகத்தார்களெல்லாம் உன்வேலையில் மதிமயங்கி யிருப்பார்கள். இது சூதல்ல, செய்து பார்த்தால் உண்மை தெரியவரும்.

வேறு பாம்பு வித்தை.

ஒரு பச்சைப்பாம்பைப்பிடித்து அதின்வாயில் முத்துக்கொட்டையையும், பருத்திக்கொட்டையையும் ஒன்றின்பின் ஒன்றாகப்

போட்டுத்துருத்து மண்ணில் புதைத்து சலத்தை வார்த்துக்கொண்டுவந்து மூன்றுநாளானதும் நாலாவதுநாளெடுத்து அக்கொட்டையை எண்ணெயாக்கி, அந்த எண்ணெயை அகலில்விட்டு மூன்றுமுறைவெடித்த பஞ்சினால் திரிபோட்டு, முன் எண்ணெயுடன் கொஞ்சம் ஐங்கோலம்விட்டு விளக்கேற்ற வீடுமுழுவதும் பச்சைப்பாம்பாகவேதோன்றும். கண்டவர்களெல்லாம் பயப்படுவார்கள். விளக்கை அணைத்துவிட்டால் யாவும் மறைந்துபோய்விடும். இவ்வித்தையை யேதாகிலுமொரு பிரயோசன காலங்களில் செய்ய மஹா வேடிக்கையாயிருக்கும்.

## மூலிகைஜால வித்தை.

இருளியென்னும் மூலிகையைக்கண்டு பிடித்துக் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு, தேவையானபோது பல பேர்கள் நிறைந்திருக்கின்ற சபையில் தமாஷாக புலி, கரடி, குரங்கு, கழுதை, குதிரை, ஆனை, ஒட்டகம், சிம்மம், கழுதைக்குறத்தி, காண்டாமிருகம், ஓணான், பல்லி, நாரை, நரையான், நாய், பூனை, கோழி, கருங்கோழி, புறு, பன்றி, மான், ஆடு, எருமை, எருது, மரம், மலை, குன்று, கல்லு முதலியதுடன் ஆண், பெண், இராஜன், குரு, சிஷியன், சித்தர், முத்தர், தபோதனர்கள், தாசிகள், குளம், கிணறு, பாம்புமுதலிய சர அசரபேதங்களில் எதைப்போல் ஆகவேண்டுமென்று நினைத்துக்காதில்வைத்துக் கொள்ளுகின்றாயோ அதைப்போல எதிரிகளின் கண்களுக்குத் தென்படுவாய். மூலிகையினுடைய பெருமையை அனுபவித்தவர்களே யறிவார்களன்றி மற்றவர்களறியமாட்டார்கள். மேலும் இம்மூலிகை புண்ணிய புருஷோத்தமர்களின் கண்களுக்குத்தோன்றுமேயன்றி கர்மிகளுக்குத் தென்படாது. ஒருக்கால் புண்ணியவசமிருந்து இம்மூலிகைத் தென்படும் பக்ஷத்தில் அதைக்குழித்தைலமிறக்கிக் காற்றில்வைக்க அசல் வீரமாகும்.

## தேவர்களைக்காணும் வித்தை.

கிறுமுன்னைச்செடிக்குச் செவ்வாய்க்கிழமையதினம் அமிர்தயோக வேளையாகப்பார்த்துக் காப்புகட்டி பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்து, ஆணிவேரறுமல் பிடுங்கிக்கொண்டுவந்து உலர்த்திப் பொடியாக்கிச் சீலையில் வைத்துத்திரித்து, ஐங்கோலத்தைலத்தில் நனைத்து அகலில்போட்டு கோயிலிலாகிலும், வீட்டிற்குள்ளாகிலும் விளக்கேற்றிப்பார்க்க தேவர்களெல்லாங் கண்களுக்குத் தெரிவார்கள். அதைப்பார்த்தவர்கள் யாவரும் பிர்மித்து இதுவும் காலத்தின் கோலந்தானென்று பெருமூச்சு விடுவார்கள். திரியை அணைத்துவிட சகலமும் மறைந்துவிடும். ஆனால் விளக்குமாத்திரம் காராவின் நெய்விட்டுக்கொளுத்தவும்.



## சீசாவோட்டை மெல்லும் வித்தை.

கோபுரந்தாங்கி என்ற செடிக்குப்பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்து அதின் ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் கண்ணாடி ஓடுகளைக்கொண்டுவந்து வைத்துக்கொண்டு, இவ்வேரைவாயிலிட்டு நன்றாகமென்று அந்த ரசம் வாயெல்லாம் படும்படியாகத் தடவிக்கொண்டு, பிறகு கண்ணாடி ஓடுகளை முறுக்கைப்போல நாநரவென்று மெல்லலாம். வாய்கூசாது, அறுக்காது ஆனால் உள்ளுக்குமாத்திரம் விழுங்கக்கூடாது. அப்படி உள்ளுக்குப் போயிருக்குமென்ற சந்தேகமிருக்கும் பக்ஷத்தில் கேழ்வரகுகளியாவது, சாதமாவது நாலைந்து உருண்டையை விழுங்கி விடவும்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 11 | 2 | 7 |
| 6 | 3 | 8 | 7 |
| 10 | 5 | 8 | 1 |
| 4 | 5 | 6 | 9 |

## கிரகநீங்கும் மந்திரம்

சயத்தகட்டிற் பதினாறு அரைச்சக்கரங்கீறி அதில் இருபத்தினாலு இலக்கத்தையடைத்துப் பூசித்துக் குளிசமாடி நவக்கிரக சாந்திசெய்து தங்கக்குழாவி லடைத்து கட்டிக்கொள்ள சகல கிரகங்களும் நீங்கும்.

## எலுமிச்சம்பழம் வித்தை.

கழுதைகள் சேரும்போது அவைகளின் வால்மயிரைத்தனித்தனியாகக் கலந்துபோகாமல்படி வெவ்வேறாகத்தரித்து மோதிரத்தைப்போல வளையமாகத்தனித்தனி சுற்றி, ஐங்காயம் மேலே தடவி, அதற்குமேல் தங்கத்தகட்டைச்சுற்றி, வலது கைவிரலில் ஆண்மயிர்மோதிரமும், இடதுகைவிரலில் பெண்மயிர் மோதிரமும் போட்டுக்கொண்டு ஒரு எலுமிச்சம்பழத்தைப்பேனாகத்தியால் நடுவில் துவாரஞ்செய்து, அதில் ஒண்ணேகால் விராகனெடைப்பாதரசத்தைவிட்டு, மெழுகினால் அந்தத்துளையை அடைத்து அதுதெரியாமல் கொஞ்சம் அரிதாரப்பொடியைப்பூசி, இடக்கையைக்கிழே பூமிமேல் மூடிக்கொண்டு, வலக்கையினால் எலுமிச்சங்கனியை ஆகாயத்தில் விட்டெறிய மேலே கிளம்பின கனியும் கீழ்விழாதுசல் ஜகஜ்ஜால லக்ஷணிபழத்தைக்கீழே போடென்று இடக்கையை நிமிர்த்திக்காட்ட ஆகாயத்திலிருக்கும் பழம் கீழேவிழும். பார்ப்பவர்களெல்லாம் உனக்கு குட்டிச்சாத்தான் வசியமென்று சொல்லுவார்கள்.

## மணலைக் கண்களில் கோட்டிக்கொள்ளும் வித்தை.

நத்தைச்சூரிவேருக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு, பலிகொடுத்து, தூபதீபங்காட்டி இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமல் வேரைக்கெல்லி கொண்டுவந்து சிறுதுண்டுகளாக நறுக்கிவைத்துக்கொ

ண்டு சபையில் அனைவர்களும் பார்க்கும்போதே ஒரு சிறிய துண்டைத்தெரியாமல் வாயில்போட்டுக்கொண்டு இரண்டுகண்களிலும் மண்ணைவாரிக் கொட்டிக்கொண்டால் கண்ணருகாது. கையினால் அரக்கியும் காண்பிக்கலாம். மறுபடியும் சல் எக்ஷணி போவென்று நீழுகுனிந்தால் மண்ணெல்லாம் கொட்டிவிடும். உடனே கண்ணைத்திறந்து பார்க்கலாம். இதனால் யாதொரு கெடுதலையுங்கிடையாது.

## பாரந்தூக்கும் வித்தை.

மலைத்தாங்கிச்செடியென்பது சாதாரணமாக நாடுகளில் எங்கு பார்த்தாலும் விசேஷமாக முளைத்திருக்கும். அதைக்கண்டு பிடித்துக்கொண்டு வரவேண்டும். எப்படிக்கண்டுபிடிக்க வேண்டுமென்றால் அதைப்பிடுங்கிச்சுருட்டி அதின்பேரில் பளுவாகிய ஒரு கருங்கல்லைவைத்தால் வைத்த சில நாழிகைக்குள் கல்லானது நகர்ந்து அப்புறம்போய்விடும். அது சாதாரணமாக கொழுஞ்சியைப்போலவே யிருக்கும். அதைக்கண்டுபிடித்துக்கிரானம் பிடித்திருக்கும்போது அவ்விடத்தை சுத்திசெய்து, பொங்கலிட்டுக் காப்புகட்டி, பலிகொடுத்து, தூபதீபங்களுடன் பயபக்தியாகக்கிரானம் விடுகிறதற்கு முன்னமேயே வேரைப்பிடுங்கிக்குளிசமாடிச்சிரசில் வைத்துக்கொண்டு எவ்வித கனத்த பாரத்தையேனும் தலைமேல் ஏற்றிப்பார்த்தால் பளுவில்லாமலேயே யிருக்கும். அதை வாயில்வைத்துக்கொண்டு எவ்வித மரங்களையேனும், கல்லுகளையேனும், கையாலெடுக்கக் கனக்கமாட்டாது. இவ்வேரைவைத்திருப்பவன் ஆனையின் வாலைப்பற்றி யிழுத்தாலும் அது நகராமல் நின்றுவிடும்.

## பாம்புகள் உண்டாகும் வித்தை.

பிர்மசாரியாக இறந்துபோனவனுடைய பிணம்வேகும்போது அப்பிணத்தினுடையவாயில் இரும்பாணியும் மார்பில் வெள்ளி ஆணியும், தொப்புளில் செம்பாணியும் அடித்துவைத்து, அப்பிணம் வெந்து காடாற்றுமுன்னமே அவ்வாணிகளை எடுத்து அவைகளைப்பூசைமுகத்தில்வைத்து ஒரு பிரம்பிற்கு நடுவில் வெள்ளிக்கட்டும், முன்னே இரும்புக்கட்டும், பின்னே செம்புக்கட்டுமாகப்போட்டு, ஐங்கோலத்தைஸம்பூசி ஜாலக்காளைத்தியானித்து, ஜாலக்காள் மந்திரத்தை லக்ஷமுருகொடுத்துப் பூசித்துப்பிரம்பை யெடுத்துக்கொண்டு செம்பு பக்கமாக ஒருபெட்டியின் மேல்தட்டினால் அதற்குள்ளிருந்து பாம்புகள் வெளிப்படும். அதைத்திருப்பி இரும்பு பக்கமாகத்தட்டினால் மறைந்துவிடும். பார்ப்பவர்கள் சந்தோஷப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

## கீரைபயிராகும் வித்தை.

கோழிமுட்டையை அவயம்வைக்கும்போது அதில் ஒரு முட்டையை எழுத்தாணியால் குத்தி அதற்குள்ளிருக்கும் அம்பிலியை



யெல்லாங்கீழே கொட்டிவிட்டு அதின்நிறையக் கீரைவிரையைப்போட்டுத்துறுத்து வாய்க்கு மெழுகடைத்து அவயமுட்டைகளுடன் இதையும் வைத்துவிடவும். பிறகு எல்லாங்குஞ்சு பொரித்தானதும் இம்முட்டையைப் பத்திரமாகப் பார்த்தெடுத்து வைத்துக்கொண்டு பூமியில் பாத்திகட்டி இந்த விரையைவிரைத்துக் கொஞ்சநேரம்கழித்துத்திறந்துபார்க்கச் செடியாகியிருக்கும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். இப்படியே இன்னம் எந்தவிரையையேனும் செய்து காட்டலாம்.

## தீயில்குதிக்கும் வித்தை.

சங்கஞ்செடியின் புதரில் பூத்திருக்குங்காளான்களைக்கொண்டுவந்து பாண்டத்தில்போட்டு வெய்யலில்வைத்தால் அதிலிருந்து தைலம்வரும். அத்தைலத்தையெடுத்துத் தேகத்தில் பூசிக்கொண்டு எவ்வளவு தீயில் குதித்தாலும் நெருப்பு சுடாது. பார்ப்பவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்லுவார்கள்.

## விஷந்தீரும் வித்தை.

பாம்புகடித்தால் உடனே உச்சியில் மூன்றுகீறிகீறி, அக்கீற்றின்மேல் தக்காளிசாற்றைப்பிழிந்துத் கையினால் அரக்கித்தேய்க்க விஷங்கக்கி எழுந்திருப்பார்கள். உடனே அவர்களுக்கு கஞ்சிகாய்ச்சிக்கொடுக்கவும். அல்லது செறுப்படை, கீழாநெல்லி; குப்பைமேனி இதுகளிலும் விஷமிறங்கும் சமயத்திற்கேற்றவாறு செய்யவும்.

## விஷமேற்றும் வித்தை.

வெண்டைக்காயின் பேரிலிருக்குஞ் சுணையும், காட்டுப்பூனைப்புடுக்குக்காயின் பேரிலிருக்குஞ்சுணையும், கருப்புப்பூனைக்காஞ்சொரியின் சுணையும், காயின்பேரிலிருக்குஞ்சுணையும் இந்நான்குதினசுகளையும் விபூதியிற் கலந்து காளியைத்தியானிப்பதுபோல் கண்ணை மூடித்தியானித்து ஓகாளிவிஷம் ஏறென்று சொல்லிக்கொண்டே மேற்படி விபூதியையள்ளி கீழ்ப்புரமிருந்து மேற்புரமேத்தினாற்போல தட்டவிஷமேறும். அவர்கள் குய்யோமுறையோவென்று கூச்சலிடுவார்கள். மறுபடியும் இரங்கவேண்டுமாகில் சாம்பல்தடவி தேய்த்துக் கழுவி, பிறகு நல்லெண்ணையைத்தடவி இலுப்பைக் கட்டிபோட்டு தேய்த்துக்கழுவ விஷமிரங்கும்.

## தேங்காய் உருளும் வித்தை.

ஒரு தேங்காயையெடுத்து உடைத்து அதனுள்ளிருக்கும் தேங்காயை யெல்லாம் நன்றுகக்கீறியெடுத்துவிட்டு அதனுள் ஒரு சுண்டெலியைவிட்டு மூடிவாய்புறந்தெரியாது வஜ்ஜிரத்தால் ஒட்டவைத்துவிட்டு அதற்கு மஞ்சள் குங்குமமிட்டு, புஷ்பஞ்சூடி, கணபதியைத்தொழுது வாசலில்விட்டால் அது ஒரே விடத்தில் நிற்காமல்

வாசலெல்லாம் உருண்டுக்கொண்டே யிருக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### கையால் தென்னமரத்தைக்குத்த தேங்காய்விழும் வித்தை.

இரங்கழிஞ்சி விரையைக்கொண்டுவந்து பூந்தயிலமிறக்கி அதைக்கையில் பூசிக்கொண்டு காய்கள் காய்த்திருக்கும் தென்னமரத்தை நோக்கிக்கையினால் ஓங்கிக்குத்த குத்தொன்றுக்கு ஒருகாய் விழும்.

### தேனுங்குளவியுண்டாகும் வித்தை.

காட்டிலிருக்குங் குளவிக்கூண்டைக் கொண்டுவந்து, கள்ளிக்காக்கையின் இரத்தமும், சிற்றுமணக்கெண்ணெயும் விட்டரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சம் கையிற்பூசிக் கொண்டு வேப்பிலையையுருவிப்போடத் தேளாகவும், புளியிலையை யுருவிப்போட குளவியாகவும் ஓடும். உடனே அதுகளை மறைத்து விடவும்.

### தண்ணிமொள்ளா திருக்கும் வித்தை.

ஆதிவாரத்தில் ஒரு பச்சை ஓணானைக்கொண்டுவந்து தேன் விட்டரைத்து ஒரு புதுதோண்டியின் அடிப்புறத்தில்பூசி உலரவைத்து ஓ பத்திரகாளியென்று நூற்றியெட்டுருசெபித்து அதைக்கயறு கட்டிக்கிணற்றில்போட தண்ணீர்மொள்ளாது. அதை எவ்விதமாகத்தூக்கிப்போட்டாலும் தண்ணீர்மொள்ளாது. பார்ப்பவர்கள் என்னமோ பிரளயமென்று பிரமிப்பார்கள்.

### பானையின்பேரில் தேங்காயுடைக்கும் வித்தை.

ஆதிவாரத்தில் கீழாநெல்லிச் செடிக்குக்காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து, தூபதீபத்துடன் வேரையெடுத்துவந்து சிம்மாட்டைப்போல் சுற்றி, புதுத்தோண்டியொன்று கொண்டுவந்துக் கவிழ்த்து அதின்பேரில் மேற்படி சிம்மாட்டைவைத்து, சிம்மாட்டின் பேரில் ஒருதேங்காயைவைத்து தடியாலடிக்கப் பானையுடையாமல் தேங்காய்மாத்திரமுடையும். ஆனால் அடிக்கும்போது மாத்திரம் ஸ்குவாச ஜாட்டியாலடித்தாற்போல அடித்து மேலுக்குத் தூக்கிக் கொள்ளவேண்டும்.

### தேள்விஷ மேருத வித்தை.

ஆதிவாரங்காலையில் கருங்கரூமைச்செடிக்குக்காப்புகட்டி தூபதீபமிட்டு விநாயகரைத்தொழுது மறுபடியும் மாலைவேளைபோய் தூபதீபமிட்டு தேங்காயுடைத்து அதின்வேரைக் கொண்டுவந்து குளிசத்திலடைத்துக் கையில் கட்டிக்கொள்ள தேள்கடித்தால் விஷமேராது.



### தீவட்டியைக்கொளுத்தி வாயில்வைக்கும் வித்தை.

பூங்கற்பூரத்தை வாயில்போட்டுமென்று நன்றாகக்குழப்பித்துப்பிவிட்டு, சபையில் நின்றுக்கொண்டு பந்தத்தைக்கொளுத்திசபையோர்களுக்குக்காட்டி, சல் எக்ஷணீ நீ என்பக்கம்வந்து இந்த சமயம் நிற்பாயென்று சொல்லிக்கொண்டே பந்தத்தை வாயில் வைத்துக் காட்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

### நெருப்பைக் கையில் வாரும் வித்தை.

உத்தாமணிவேரும், அதின் கொழுந்தும் அரைத்துக் கையில் பூசிக்கொண்டு கட்டை நெருப்பைவார கைசுடாது. பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### செக்கில் எண்ணெவராத வித்தை.

நாயுருவி வேரைத்தூள்செய்து செக்காடுகிறபோது அதிற் கொஞ்சம்போட எவ்வளவுநேரம் ஆடினாலும் செக்கில் எண்ணெய் வராது. மறுபடியும் அச்செக்கைச்சுத்தப்படுத்தி வேறே எள்ளைக் கொண்டுவந்து போட்டாள்தான் எண்ணெய் இறங்கும்.

### இதுவுமது.

ஆமணக்கன் கொட்டையை செக்கில்போட்டு ஆடும்போது, அக்கொட்டையை வறுத்து அச்செக்கில்போட எத்தனைநாள் ஆடின போதிலும் எண்ணெய்வராது.

### இதுவுமது.

நிலக்கடலைக்கொட்டையை செக்கில்போட்டு ஆடும்போது அக்கொட்டையில் கொஞ்சமும், கொஞ்சம் எள்ளு புண்ணாக்கும் போட்டு வறுத்துச் செக்கில்போட்டுவிட அழுதாலும் எண்ணெய் வராது.

### ஜலத்தைக்கவிழ்த்துக்காட்டும் வித்தை.

ஓர் தாகத்துச்செம்பின்நிறைய ஜலம்விட்டு அதை சபையோர்களுக்குக்காட்டி, இச்செம்பை ஜலத்துடன் கவிழ்க்கின்றேன். இதிலிருக்கும் ஜலங்கொட்டாத வேடிக்கையைப்பாருங்களென்று சொல்லி, ஓர்மெல்லிய துணியை வாயின்மேல்போட்டு, செம்பை உள்ளங்கையில் கவிழ்த்துக்காட்ட ஒரு துளிஜலமேனும்சிந்தாது. பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### பாலைத்தயிராக்கும் வித்தை.

வாழைக்கிழங்கை உலர்த்தி இடித்தத்தூளை அரை ஆழாக்கு யெடுத்து ஓர் படிபாலில் போட்டுக்கலக்க அது தயிராகிவிடும். சாப்பிடுவதற்கும் யோக்கியதையாக யிருக்கும்.

வாட்டமாய் நின்றுக்கொண்டு, நகக்கண்ணிலிருக்கும் பாஷாணத்தை அத்துணியின்மேல் தெரியாதுவைத்து வாயினாலூத அது குபீரென்று பற்றியெரியும். பார்ப்பவர்கள் உன்னை மெச்சுவார்கள்.

### பெரும்பாடு சாய்க்கும் வித்தை.

திருகுகள்ளிப்பாலில் களிப்பாக்கை ஊறப்போட்டு எடுத்துக் காயவைக்கவும். இப்படி நாலைந்துவிசை ஊறப்போட்டுக்காயவைத்துத்தூளாக்கி ஏலம், கிராம்பு, சாதிக்காய் முதலியவாசனைகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு, வெற்றிலைப்பாக்கருந்தும்போது இத்தூளைக்கொடுக்க சாப்பிட்டவர்களுக்குப் பெரும்பாடு சாய்க்கும். முறிப்பு அருகம்வேர் கியாழம்.

### கண்கேடும் வித்தை.

குளத்தட்டை, அரசமரத்துப்பால் இவைகளை ஒரு சீலையில் வைத்துத்திரியாக்கி 32 நாளைக்குத்தன் எதிரிவீட்டின் விளக்கில் போட்டு எரிப்பாயாகில் அவன் கண்கெட்டு குருடாகிப்போய்விடும்.

### சீலைக்குடைபிடிக்கும் வித்தை.

ஆதிவாரதினம் கருவிழியிலையைக் கண்டுபிடித்துக்காப்புகட்டி, பொங்கலிட்டுப் பலிகொடுத்து, தூபதீபங்காட்டி ஆணிவேரறாமல் பிடுங்கிவந்து அதன்வேரைக் கொஞ்சமெடுத்து நாம் மேல்போடும் சவுக்கத்தில் ஓர் மூலையில் கொஞ்சமுடிந்து அதை ஆகாயத்தில்விட்டெரிய அது குடைபிடித்துக்கொண்டே நாம் எங்குபோனாலும் நம்முடன்கூடவரும். பார்ப்பவர்கள் அதிசயித்து உன்னைச்சித்தபுருடனென்று மெச்சிக்கொள்வார்கள்.

### நான்காம்முறை சுரமகலும் வித்தை.

ஞாயிற்றுக்கிழமையதினம் நெருஞ்சி செடிக்குத்தூபதீப நைவேத்தியத்துடன் காப்புகட்டி, சூரியனைப்பூசித்துக்குளிசமாடி தலைக்குடுமியிற்கட்டி, பிறகு நெருஞ்சியிலையும், பூண்டும், மிளகும் கூட்டி ஒன்றாயரைத்து உள்ளுக்கேற்றி நசி மசி என்று 1008-உரு செபிக்க சுரமகலும்.

### முதல்முறை சுரமகலும் வித்தை.

உத்தாமணியிலை 9 மிளகு 9 இதை யரைத்து காலையிற்கொடுத்தப்பின், பகலுக்கும் இவ்வாறே அரைத்துக்கொடுத்து, சாயுங்காலமும் இவ்வாறே அரைத்துக்கொடுக்க சுரந்தீரும். இதுசிறுவர்களுக்கு மிக்வும் விசேஷமானது.

### இரண்டாமுறை சரந்தீரும் வித்தை.

மிளகு, பூண்டு, உத்தாமணியிலை இம்மூன்றையும் அரைத்துக் கெச்சக்காயளவு மூன்றுவேளையுங் கொடுக்கத்தீரும்.



### மூன்றாம்முறை சுரந்தீரும் வித்தை.

முன்மாதிரியே இதற்கும், அம்மூன்று சரக்கையும் அரைத்துக் கெச்சக்காயளவு கொடுக்கத்தீரும். பெரியவர்களா யிருந்தால் ஒரு நாள் அதிகங்கொடுக்கவும்.

### ஊதுகாமாலைதீரும் வித்தை.

பேய்த்தும்மட்டி செடியருகிற்போய், அவன்பேரைச்சொல்லி சூரியனைப்பார்த்து, தூபதீபங்கொடுத்து, நோய்போகவென்று சொல்லி, அச்செடியை வேரறாமல் பிடுங்கி தலைகீழாய் போட்டுவிட்டுவர மூன்றுநாளைக்குள் நோய்தீரும்.

### சூனியம் அகலும் வித்தை.

அமாவாசையும், ஆதிவாரமும் சேர்ந்ததினத்தில் வெள்ளெருக்கன் காய்களை, காக்கைக்கூண்டின் விரகினால் சுட்டுச்சாம்பலாக்கி, அதனுடன் மயானச்சாம்பலைக்கலக்கி, அதில் 3 விரற்கடை தூளையெடுத்து பேய், பிசாசு, பில்லி, சூனிய முதலியவைகளுக்கு மேலேபோட்டு வாயினாலூத யாவும்விலகிவிடும்.

### வேறு சுரமகலும் வித்தை.

ஒரு சல்லியைத் துணியில் முடிந்து ஆணுக்கு வலக்கையிலும், பெண்ணுக்கு இடக்கையிலுங்கட்டி நாலாவது நாளவிழ்த்து, வெள்ளருகு 9, பூண்டு 3 பல், மிளகு 4-சேர்த்து அரைத்து முன்னரம்பில் வைத்து மேலே ஷை சல்லியை அழுந்த வைத்துக்கட்ட சுரந்தீரும். வேறு மருந்து வேண்டியதில்லை.

### வேறு இரண்டாமுறை சுரமகலும் வித்தை.

நல்வேளையிலை, மிளகு, பூண்டு இம்மூன்றையும் நறுக்கி வலது கையிற்கட்ட சுரந்தீரும். பெண்களுக்கு இடது கையில் கட்டவும்.

### வேறு மூன்றாமுறை சுரமகலும் வித்தை.

சூரியோதயத்திற்குமுன் கோவையிலையை அறுத்து வெள்ளைத்துணியில்முடிந்து, சூரியனைப்பூசித்து தூபதீபங்கொடுத்துக்கட்ட நின்றுவிடும். பெண்களுக்கு இடதுகையில் கட்டவும்.

### குன்மம்தீரும் வித்தை.

காலையில் தும்பைச்செடியருகிற்சென்று சூரியபகவானைப் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்து இரண்டு கையிலும் அவ்விலையைப் பரித்து 1-பிடி கீழேபோட்டுவிட்டு, மற்றொரு பிடியைக் கலவத்திற்போட்டு, வெள்ளை வெங்காயஞ் சேர்த்தரைத்து, சுண்டைக்காய்வீதம்

உருண்டைகளாக்கி, வேளையொன்றுக்கு 3-உருண்டைவீதம் 4-நாளைக்கு விடாமல்படி அரிசி தவிட்டிற்பிரட்டி தின்றுவர குன்மக் தீரும்.

## பல்வலிதீரும் வித்தை.

விஷ்ணுகிரந்தி செடியருகிற்போய் தூபதீப முதலிய நைவேத்தியங்கொடுத்து, இன்னானுக்குள்ள பல்வலி இத்தனை வருஷம்வரையில் வராதிருக்க வேணுமென்றுசொல்லி, அச்செடியின் ஆணிவேரருமற்பிடுங்கி மல்லாத்திவைக்கவும். வைக்கும்போது நசிமசிவசி சசிகிசாகா என்று 108-தரம் மந்திரத்தை சொல்லிவைக்கவும். அப்பல்வலிதீரும். ஆனால் மூலிகைக்கு முன்னதாக சாப நிவர்த்தி செய்து மற்றவேலைகளை பின்பு செய்யவும்.

## வேறு வாட்டிலோடு கடிக்கும் வித்தை.

அதிமதுரத்தையேனும், அப்பளாகாரத்தையேனும் மென்று வாயிலடக்கிக்கொண்டு வாட்டிலோடு, அல்லது பீங்கான் ஓடுகளைக்கடிக்க சுலபமாக மாவாகும் வாயறுபடாது. ஆனால் விழுங்கக் கூடாது.

## வேறு ஜலம்கீழ் விழாதிருக்கும் வித்தை.

மயிரோசனை, நாறுகரந்தைவேர், கோரைக்கிழங்கு, அரசமரத்துவேர் இவைகளைச் சமயெடையாக யெடுத்து அரைத்துக்குடத்திற்குள் பூசிக்காயவைத்து, அதில் நிறைய ஜலத்தைமொண்டு தலைகீழாகக்கவிழ்க்க துளிஜலங்கூட கீழேவிழாது. ஆச்சரியப்படுவார்கள்.

## விளக்கில் விநோதங்காணும் வித்தை.

நீளமாயுள்ள மயிலிறகைத்துளைத்து அதிற்கொஞ்சம் இரசம் விட்டு, மெழுகினலடைத்து இறகுதெரியாமல் மெல்லிய வெள்ளைத் துணியைச்சுருட்டி, அகலில் ஒருபக்கமாகவைத்து, எண்ணெயூற்றி விளக்கேற்ற வெகு விநோதங்களுடன் எரியும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

## வாயில் நெருப்புகக்கும் வித்தை.

இந்திரகோபப்பூச்சியை நன்றாக வெய்யலில் உலர்த்தி, அதற்குச்சமயெடை வெள்ளைக்கல்லைப் பொடிசெய்து அதனுடன் கலந்து ஒருவருக்குந் தெரியாமல் இரண்டையும் தாடையில் அடக்கிக்கொண்டு யாவரும்பார்க்க இதோ நெருப்பு கக்குகிறேன் பாருங்களென்றுசொல்லி வாயைத்திரந்து கக்கநெருப்பானது குபீர்குபீரென்று பொரிபரக்க கீழ்விழும்.

## மூலிகை சாபநிவர்த்தி.

ஓம் மூலிமூலி, மஹாமூலி, சிவன்சத்தி நிற்கச்சுவஹாவென்று



சகல மூலிகைகளுக்கும் இம்மந்திரத்தை 9-விசைசொல்லி, நகம் படாது கொண்டுவரும்பக்ஷத்தில் எல்லாவேலைகளுக்கும் உதவும்.

## ஒடிவுகட்டிகள் நீங்கும் வித்தை.

கருங்கல்லை 7-விரட்டியிற் புடம்போட்டு எடுத்து அதை விளக்கெண்ணெயிற்குழைத்துத் துணியில் பிளாஸ்திரியைப்போல தடவிப்போட அக்கட்டியானது அழுந்திவிட்டாலும் அழுந்திவிடும். உடைந்தாலும் உடைந்துவிடும். மறுபடியும் விடாது அதையே தடவிப்போட்டு வரவும்.

## இதுவுமது.

சூரியோதயத்திற்குமுன் கோவைச்செடியருகிற்சென்று அவாள்பெயரைச்சொல்லி, ஒடிவுதீரவேணுமென்று மூன்றிலையை சுண்டுவிரலால் நகம்படாதுக்கிள்ளி, மெல்லிய வெள்ளைத்துணியில்முடிந்து வலதுக்கிடம், இடதுக்கு வலமாகக்கையிற்கட்ட ஒடிவுமாறும். அல்லது அரையிற் கட்டிக்கொண்டாலும் பாதகமில்லை.

## பெரிய மரங்களின் பூச்சியகலும் வித்தை.

செப்புக்கம்பியும், துத்திநாகக்கம்பியும் எடுத்து இரண்டையும் ஒன்றாகக்கயற்றைப்போல் திரித்து, அம்மரத்தினடியில் தோண்டி மண்ணையெடுத்துவிட்டு ஒருபெரியவேருக்கு இக்கம்பியைச்சுற்றி மேலே மண்ணைத்தள்ளிவிட்டுவர 5-6 தினத்தில் அம்மரத்திலுள்ள பூச்சிகளெல்லாம் நசிந்துவிடும்.

## வேப்பிலைத்தின்னும் வித்தை.

ஒரு சட்டியில் வேப்பிலையை உருவிப்போட்டு இளநீர்ஜலத்தை விட்டுப்பிரட்டி, சாதாரண கீரைக்குப்போடுகிறமாதிரி உப்பு காரமுதலியவைகளைப் போட்டுத்தின்ன ருசியாயிருக்கும். கசக்காது இதனால் சில ரோகங்களும் விலகும்.

## இரும்புக்கம்பியை ஒடிக்கும் வித்தை.

ஒரு இரும்புக்கம்பியை வாழமரத்தில் மூன்றுநாள் சொருகி வைத்திருந்து நாலாவதுநாள் எடுத்து உடைக்க, அது தூள் தூளாகப்போய்விடும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். வாழைப் பட்டை சாற்றில் ஊறவைத்தாலும் வைக்கலாம்.

## சுண்ணும்பை தின்னும் வித்தை.

சங்கம் விரையைக்கொஞ்சம் வாயில்போட்டு மென்றுக்குழப்பித்துப்பிவிட்டு, சுண்ணும்பைப்போட்டுமென்றால் காரமிருக்காது. ஆனால் உள்ளுக்குமாத்திரம் விழுங்கக்கூடாது. அப்படிமீறி உள்ளுக்குப்போய்விடும் பக்ஷத்தில் உடனே மஞ்சளைப்போட்டு மெல்ல

காரந்தணியும். இதன்றியும் தேங்காய் பாலும் சாப்பிடுவது உலகோர்வழக்கம்.

### ஆடுகளைக்கைதட்டி அழைக்கும் வித்தை.

கோவை வடக்குவேரும், அதினுடைய இலையுங்கொண்டுவந்து நன்றாயரைத்து, இரண்டு கைகளிலும் பூசிக்கொண்டு ஆடுகளிருக்கும் இடத்திற்போய் கைதட்டி அழைக்க அதுபின்னாலேயேவரும், மறுபடியும் போவென்று சொன்னால் போய்விடும்.

### படுத்த ஆடுகள் எழுந்திராத வித்தை.

தேவாங்கு தோலைக்கொண்டுவந்து ஆடுகள் படுத்திருக்கும் இடத்தில் புதைத்துவைத்துவிட்டால் அங்குபடுத்திருக்கும் ஆடுகளெல்லாம் எழுந்திருக்காமல் அப்படியே பத்துநாளானாலும் இருக்கும். அத்தோலை எடுத்தால் தான் அது எழுந்திருக்கும். இரையும் எடுக்கும்.

### பசியில்லாதிருக்கும் வித்தை.

நாயுருவி விதையை அரைத்து பசும்பால்விட்டுக் கூழாக்கிச் சாப்பிட்டால் எத்தனைநாளானபோதிலும் பசியெடுக்காது. ஆனால் இது யோகிகளுக்குத்தகுமேயன்றி ஏனையோர்களுக்குதவாது.

### வேறு சங்கிலி உருவும் வித்தை.

பச்சைத்தவளைநெய், கற்றாழைமடல், வெங்காயச்சாறு, வெந்தயம், உப்பு இவைகளையெல்லா மரைத்து விளக்கெண்ணெயிற் கலந்து வைத்துக்கொண்டு, நெருப்பில் காய்ந்திருக்கும் சங்கிலியை குறடாவினால் பிடித்துக்கொண்டு, மேற்படி எண்ணெயைக்கையினால்வாரி சங்கிலியையுருவ குபீலென்றெரியும் கைசுடாது.

### முள்ளின்மேல் நடக்கும் வித்தை.

ஓரிலைத்தாமரை வடக்குவேரும், செப்புநெருஞ்சித் தெற்குவேரும் கொண்டுவந்து தலைமாற்றிக்குளிசத்திலடைத்து வாயில்போட்டுக்கொண்டு நடக்க எந்த முள்ளும் காலில் தைக்காது.

### கோழி சண்டையில் கெலிக்கும் வித்தை.

நத்தச்சூரி சமூலத்தை ஜலத்தில் ஒருமாதம்போட்டு ஊறவைத்தெடுத்து, அதை சண்டைவிடுஞ் சாவலுக்குக் கொடுத்து கத்திகட்டி சண்டைக்குவிட சண்டையில் கெலிக்கும். எதிரிசாவலுடைய கத்திபட்டாலும் அருக்காது. நத்தைச்சூரியைத் தனியாகவாவது, ஆகாரத்தோடாவது உள்ளுக்குச்செலுத்தவும்.

### வாயில் நெருப்புண்டாகும் வித்தை.

ஒரு கடுகளவு திமிர்கல் பாஷாணத்தை உதட்டில் தெரியாது



வைத்துக்கொண்டு, சபையில் நாரையேனும், பஞ்சையேனும் கொண்டுவரச்செய்து அதைப் பந்துபோலுருட்டி வாயில்போட்டுக்கொண்டு, காற்றுவாட்டமாகநின்று காற்றுவரும்போது வாயை ஊத குபீலென்று புகைகிளம்பும். பார்த்தவர்கள் மகாவேடிக்கையென்று சந்தோஷிப்பார்கள்.

### கோழிமுட்டை பறக்கும் வித்தை.

ஒரு கோழிமுட்டையைத்துவாரஞ்செய்து அதிலிருக்கும் அம்பிலியில் பாதி ஊற்றிவிட்டு, அவ்வளவிற்கு சீனக்காடியையூற்றி, கொஞ்சம் ஊசிக்காந்தத்தைப்போட்டு, துவாரத்தைக் காகிதத்தால் ஒட்டி, வெய்யலில் வைத்தால் அது சூடேற சூடேற கீழே தங்காமல் மேலே கிளம்பும்.

### வேறு மீன்கள்மிதக்கும் வித்தை.

பேன்கொட்டையை வறுத்து அதற்குச்சரியிடை பச்சையிறவை வைத்து அரைத்து குளம், குட்டை, ஏரி, மடுவு இதுகளில் போட்டால் அதிலிருக்கும் மீன்களெல்லாம் மிதந்துவிடும். சுலபமாக வாரிக்கொள்ளலாம்.

### கையில் பந்தமெரியும் வித்தை.

கற்றாழைமடல் சோற்றைபில்லையாக அறுத்து உள்ளங்கையில் வைத்துக்கொண்டு, அதன்மேல் சல்லாத்துணியைப்போட்டு மூடி, எண்ணெயில் கொளுத்தியபந்தத்தைவைக்க, கையுஞ்சுடாது துணியும்வேகாது. ஆச்சரியமா யிருக்கும்.

### கனிகள் ருசிக்கும் வித்தை.

தேவையான விதைகளை நல்ல அப்பட்டமான தேனில் ஒருநாள் ஊறவைத்து எடுத்து நிழலிலுலர்த்தி எருவுகளுள்ள குழியில் நட்டு, அது முளைத்த இரண்டு மூன்றுமாதத்திற்குப்பின், அதைபெயர்த்து வேறொரு இடத்தில் புதைத்து வளர்ந்தாலும்சரி அல்லது அவ்விடத்திலேயே வளர்ந்தாலும்சரி அக்கனிகள் மிகவும் ருசியாயிருக்கும்.

### செடிகளின் பூச்சிகள் அகலும் வித்தை.

புகையிலைத்தூள், கெந்தகத்தூள், காளிக்காத சுண்ணாம்புத்தூள் இவைகள் மூன்றும் வகைக்கு அரைபவுனெடையெடுத்து அதை ஒருகாலன் ஜலத்தில்கலக்கி 6-மணிநேரம் வைத்திருந்து, அதில் தெளியும் நீரையிறுத்து, பீச்சாங்குழலையைக்கொண்டு பூச்சிபிடித்திருக்கும் செடிகளின்மீது படும்படிதெளிக்க எப்படிப்பட்ட பூச்சியாயிருந்தாலும் நசிந்துவிடும். பீச்சாங்குழை யில்லாவிடில் கையினால் அள்ளியுந் தெளிக்கலாம்.

கிறேன் பாருங்களென்றுசொல்லி, சமமாயுள்ள தரையின்மீது, மிகுதியாக மணலைக்குவித்து, இப்பழமுடிச்சியை அதின்மேல் வைத்து, கத்தியைக்கொண்டு ஓங்கிவெட்ட பழமறுபடுமேயன்றி, துணி கிழியாது.

### ஜடைவளர்க்கும் வித்தை.

பெரிய பெரிய சன்னியாசிகளைப்போல ஜடைகள் நீளமாக வளரவேண்டுமானால் ஆலம்பால், அரசம்பால், அத்திப்பால் இம்மூன்றையும் எண்ணெய்யைப்போல தலைமயிரிற்பூசி வேறு ரோமங்களை ஒட்டவைத்து விபூதி பூசித்திரித்துவிட உண்மையாகக்கட்டின ஜடையைப்போலவே இருக்கும்.

### ஆட்டுத்தலை கதறும் வித்தை.

ஒரு ஆட்டுத்தலையிலிருக்கும் மூளையைப்பக்குவமாக அப்புறப்படுத்திவிட்டு, அதற்குப்பதில் சொரியாந்தவளையை அதில் விட்டு மூடி, ஒருவருக்குந்தெரியாது மஞ்சள், குங்குமமிட்டு சபையில் யாவரெதிரிலும்வைத்து ஓர் தட்டில் நெருப்பைப்போட்டு, சாம்பிராணிப்புகையுண்டாக்கி, அதை அதின்மூக்கிற்கு நேரே காட்ட அது கத்தும். பார்ப்பவர்களெல்லாம் என்னமோ பிரளயகாலம் வந்துவிட்டது அதினால்தான் ஆட்டுத்தலை கத்துகிறதென்று பயப்படுவார்கள்.

### பகைவர் நாவடங்கும் வித்தை.

மரத்தினால் எதிரியைப்போல உருசெய்து தாளிப்பனையோலையில் அவர்கள்பேரை தலைமாற்றி யெழுதி, பிறகு அதற்கு எலிமயிர், பூனைமயிர், நாய்மயிர், பன்றிமயிர், பாப்பான்மயிர், பறையன்மயிர் இவ்வாறையுங்கறுக்கி, வேப்பெண்ணெய்விட்டுக் குழப்பி சீட்டிற்குத் தடவி அதன்மார்பில் ஸ்தாபித்து, கொல்லைப்பல்லி, முள்ளம்பன்றி முள் இவை இரண்டையும் தலைமாட்டில் வைத்து முன் எழுதியசீட்டில் காட்டேரி சக்கரமெழுதி, மேலே மசி-நசி, கீழே நசி-மசி என்றெழுதி இம்மந்திரத்தையே 1008-உருசெபித்து சுடலையில்புதைக்க எதிரி பலவித நோய்களால் துன்பப்படுவான். புதைத்ததை எடுத்துவிட ஒன்று மிருக்காது.

### தேள் விஷமகற்றும் வித்தை.

தேள்கொட்டினவுடன் அதை ஒருவருக்குஞ் சொல்லாது நேரே தண்ணீர்துறைக்குப்போய் ஜலத்தில் சிலநேரமிருக்க அவ்விஷமானது ஜலத்தில்கலந்து இவர்களுக்கு பாதைநீங்கும். ஆனால் தேள் கொட்டினது மாத்திரம் யாருடனேயுஞ் சொல்லப்படாது.

### ஆண்பெண்ணாகும் வித்தை.

எந்தைச்சொன்னாலுங்கேட்கும் நத்தைச்சூரிசெடிக்கும், எண்ணிய எண்ணத்தை யீடேறவைக்கும் இருளிமூலிகைக்கும், பௌர



ணமியும் சோமவாரமும் வருகிறதினமாகப்பார்த்துக் காப்புகட்டிப் பொங்கலிட்டு நேமநிஷ்டையுடன் தூபதீபங்கொடுத்து, உச்சிவேரறாமல் கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டு பெண்ணாகவேணுமென்று நினைத்தால் பெண்ணாவாய். அல்லது சபையில் ஒருவரை அழைத்து அவர்கள்காதில் வைத்தாலும் அவர்களும் பெண்ணைப்போலவே தோன்றுவார்கள். இதனால் அனேகரைப்பரிகாசஞ்செய்யலாம்.

### பெண் ஆணாகும் வித்தை.

முன்சொன்னபிரகாரம் அமாவாசைதினஞ்செய்தால் பெண் ஆண்பிள்ளையைப்போலத் தோன்றுவது மிகவும் ஆச்சரியமா யிருக்கும்.

### பெண்ணாகும் வித்தை.

கிருத்திகை நட்சத்திரத்தில் நேமநிஷ்டையுடன் தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து (ஓம்) என்ற மந்திரத்தை 108 விசை வாயில்சொல்லிக்கொண்டே எந்தப்பெண்மாதிரி ஆகவேணுமென்று நினைக்கின்றாயோ அந்தப்பெண்மாதிரி பார்ப்பவர் கண்களுக்குத் தோற்றப்படுவாய்.

### இராஜனாகும் வித்தை.

இருளிமூலிகையை சாபநிவர்த்திசெய்து பலிகொடுத்துக்கொண்டுவந்து குலதேவதையைப் பூசித்துக்காதில் வைத்துக்கொண்டால் இராஜனைப்போலத்தோன்றும்.

### ஞானியாகும் வித்தை.

ரோகணி நக்ஷத்திரத்தில் மேற்படி மூலிகையைப் பூசித்துக் கொண்டுவந்து ஐங்காயந்தடவி காதில் வைத்துக்கொண்டால் பார்க்கின்றவர்களெல்லாம் உன்னை ஞானியென்றே நினைப்பார்கள்.

### குருவாகும் வித்தை.

சுவாதியில் எலுமிச்சங்கனிகாவுகொடுத்து மூலிகையைக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் குருவாகத்தோன்றுவாய் எல்லோரும் பணிவார்கள்.

### குளமாகும் வித்தை.

ரேவதி நக்ஷத்திரத்தில் கருஊமத்தங்கனியைக் காவுகொடுத்து வேரைக்கொண்டுவந்து காளியைத்தியானித்துக் காதில் வைத்துக் கொண்டால் பார்ப்பவர்கள் உன்னைக்காணாது தியங்குவார்கள். நீயிருந்த இடத்தில் குளமிருப்பதாகத்தான் தெரியும்.

### கிணறாகும் வித்தை.

முன்சொன்ன நட்சத்திரத்தில் கன்னிநூல் காப்புகட்டி முன்

மாதிரிசெய்து உச்சிவேரறுது கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் ஒரு பெரிய கிணர் இருப்பதைப்போல் தோன்றுமேயன்றி உன்னைக்காணாது தியங்குவார்கள். அச்சமயம் நீ காதிலிருக்கின்றதை எடுத்தெறிந்துவிட்டால் எப்போதும் மனிதனைப்போல் தெரிவாய் அதைப்பார்த்தவர்கள் ரொம்பவும் சந்தோஷப்படுவார்கள்.

### பூனையாகும் வித்தை.

பூராட நக்ஷத்திரத்தில் காப்புகட்டி வேரைக் கொண்டு வந்து காதில் வைத்துக்கொண்டால் பூனையைப்போலத் தோற்றப்படுவாய்.

### கோழியாகும் வித்தை.

மேற்படி நக்ஷத்திரத்தில் சேவல்பலிகொடுத்து வேரைப்பிடுங்கி ஐங்காயந்தடவிக் காதில் வைத்துக்கொண்டால் கொழியைப் போலவே தோற்றப்படுவாய்.

### சேவலாகும் வித்தை.

மேற்படி நக்ஷத்திரத்தில் ஊமத்தங்காய் பலிகொடுத்து காப்புகட்டிக்கொண்டு வந்து ஐங்காயந்தடவி காதில் வைத்துக்கொண்டால் சேவலைப்போலத் தோற்றப்படுவாய்.

### மானாகும் வித்தை.

மகா நக்ஷத்திரத்தில் காப்புகட்டி, எலுமிச்சங்கனியைப் பலிகொடுத்து வேரைக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர் கண்களுக்கு நீ மானைப்போலத் தோற்றப்படுவாய்.

### ஆடாகும் வித்தை.

அஸ்வனி நக்ஷத்திரத்தில் மேற்சொன்ன மூலிகையும், நிண்ணல்சிணுங்கி மூலிகையுங் காப்புகட்டிக்கொண்டுவந்து காதியில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்கள் உன்னை ஆடாகவே நினைப்பார்கள்.

### முயலாகும் வித்தை.

கேட்டை நட்சத்திரத்தில் பலிகொடுத்து மூலிகையைக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் முயலைப்போல் சிறியவுருவாகவே பார்ப்பவர்களுக்குத் தென்படுவாய்.

### வேங்கையாகும் வித்தை.

ரேவதியில் கருஞ்சேவலைப்பலிகொடுத்துப் பூசித்துக்கொண்டு வந்து காதில் வைத்துக்கொண்டு வேங்கையாக வேணுமென நினைத்தால், பார்ப்பவர்கள் கண்களுக்கு வேங்கையைப்போலவே தோற்றப்படுவாய்.



### புலியாகும் வித்தை.

பரணி நட்சத்திரத்தில் சேவல்பலிகொடுத்து தாமரை நாலுக்கு மஞ்சள் தடவிக்காப்புக்கட்டிக் கொண்டுவந்து காதில்வைத்துக் கொண்டால் புலியைப்போல் தோற்றப்படுவாய். எல்லோரும் பயந்து ஓடுவார்கள்.

### கல்லாகும் வித்தை.

அஸ்த நட்சத்திரத்தில் கன்னிநூல் காப்புகட்டிக்கொண்டு வந்து காதில்வைத்துக்கொண்டால் அனைவர்களும் உன்னைக்கல்லென்றே நினைப்பார்கள்.

### மலையாகும் வித்தை.

பூராட நக்ஷத்திரத்தில் எலுமிச்சங்கனிகாவுகொடுத்து வேரைக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் மலையைப்போலவே தோற்றப்படுவாய்.

### ஆள்மாராட்டமாகும் வித்தை.

ரோகணி நட்சத்திரத்தில் கன்னிநூல் காப்புகட்டி, ஆற்றுத்தும்மட்டிக்காயைப் பலிகொடுத்து வேரைப்பிடுங்கிக் காதில் வைத்துக்கொண்டு, அச்சபையில் நீ யாரை மனதில் நினைக்கின்றாயோ அவர்களைப்போலவே தென்படுவாய், அதைப்பார்த்தவர்களெல்லாம் மதிமயங்கி உனக்குக்காளி வசியமென்று சொல்வார்கள்.

### குதிரையாகும் வித்தை.

சுவாதியில் மூலிகைக்குக் காப்புகட்டிக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் குதிரையைப்போலவே தென்படுவாய்.

### சிறுத்தையாகும் வித்தை.

கேட்டையில் கருவூமத்தன் காவுகொடுத்துக்காப்புகட்டி மூலிகையைக்கொண்டு வந்து குருவைத்தியானித்துக் காதில் வைத்துக் கொண்டால் சிறுத்தையைப்போல தோற்றப்படுவாய். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்,

### பன்றியாகும் வித்தை.

இருளியென்னும் மூலிகையை யாதொருமந்திரமுமின்றிக் கொண்டுவந்து ஒரு தட்டில் விபூதிபோட்டு, விபூதிமேல் அறுகோணசக்கரமிட்டு அதின்மேல் மேற்படி மூலிகையை வைத்து, முன் மந்திரத்தைப் பதினறுதடவை சொல்லிக்காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்கண்களுக்குப் பன்றியாகவே தோற்றப்படுவாய்.

### புலியாகும் வித்தை.

முன்சொன்னமாதிரி கொண்டுவந்த மூலிகையை, ஆஞ்சநேயர்

சக்கரத்தின்மேல் வைத்து மந்திரத்தை 108-உரு செபித்துக்காதில் வைத்துக்கொண்டால் புலியைப்போலவே தென்படுவாய்.

## காண்டாமிருகமாகும் வித்தை.

அவிட்ட நக்ஷத்திரத்தில் முப்பலியுங்கொடுத்துக் காப்புகட்டி மூலிகையைக்கொண்டுவந்து காதில்வைத்துக் கொண்டால் பார்ப்பவர்கண்களுக்குக் காண்டாமிருகத்தைப்போல தோற்றப்படுவாய்.

## காட்டுப்பன்றியாகும் வித்தை.

அமாவாசையதினம் மூலிகையைச் சுத்தப்படுத்திப் பொங்கலிட்டுக்காப்புகட்டி சாபநிவர்த்திசெய்து வேர்றுதுக்கொண்டுவந்து காளியைப்பூசித்துக்காதில் வைத்துக்கொண்டால், காட்டுப்பன்றியைப்போல தோற்றப்படுவாய். பார்ப்பவர் பயங்கொண்டு ஓடியத் தனிப்பார்கள்.

## எருமையாகும் வித்தை.

பூசநக்ஷத்திரத்தில் எலுமிச்சம்பழம் காவுகொடுத்து மந்திரத்துடன் மூலிகையை கொண்டுவந்துக்காதில் வைத்துக்கொண்டால் எருமையாகத் தோற்றப்படுவாய்.

## எருதாகும் வித்தை.

ஆயில்ய நக்ஷத்திரதினம் வெள்ளைசேவல் பலிகொடுத்து மூலிகையைக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் எருதைப்போல தென்படுவாய்.

## பசுவாகும் வித்தை.

சித்திரை நக்ஷத்திரத்தில் சூரியோதயத்திற்கு முன்காப்புகட்டி வந்துவிட்டு, மறு சித்திரை நக்ஷத்திரத்தில் பெட்டைக்கோழி பலிகொடுத்து காப்புகட்டினதை அவிழ்த்து (ஓம்) என்ற மந்திரத்தை 108-செபித்துக்கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் பார்ப்பவர் கண்களுக்கு பசுவாகத்தோற்றப்படுவாய்.

## நாயாகும் வித்தை.

முன்சொல்லிய பிரகாரம் பலியைநீக்கி மற்றவேலைகளைச்செய்து மூலிகையைக்கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களெல்லாம் உன்னைநாயென்றே சொல்லுவார்கள்.

## கெண்டபேரண்ட வித்தை.

ஆம், ஓம், அகோர பிரபலகெண்ட பேரண்ட ரீங்கார, வியாக்ரவாசா, சர்வமிருககாலா, காற்றுருபல்லா, அஷ்டவஜ்ஜிரதேகா, சங்கு, சக்கரம், சூலம் அன்றிதாதுப்பிரானே, மாலிதாகா, கெஜபக்ஷ நாரசிம்மா, கற்பாந்தகாலா, அகணிதலீலா விநோதா, வச்ர



குண்டா, தாஷ்டிக உக்ரா, பட்சமாறுதமச்சாந்த உத்தமா உத்தண்ட வஸ்திராலங்காரா, நான் இப்பரதகண்டத்தில் உன்னையேநம்பினேன், என்னப்பனே காப்பாற்றவேணுமென்று பூசைசெய்துக்கொண்டு வந்தால் சித்தியாகும்.

## இதற்கு மூலமந்திரம்.

ஓம், ரீம், கிலீம், ஐயும், சுவாஹா என்று பதினாயிரம் உருவும் ஓம் என்ற தனி மந்திரம் ஆயிரமுஞ்செபித்து அரைமண்டலம்வரைக்கும் பிராமணர்களுக்கு பஞ்சகச்சாய பரமான்னத்துடன் அன்னமளித்து பூசையை நிறைவேற்றும் பட்சத்தில் மந்திரம் சித்தியாகி நீ நினைத்த காரியங்களெல்லாம் கைகூடும்.

| | | | |
|---|---|---|---|
| 12 | 19 | 2 | 7 |
| 6 | 3 | 16 | 15 |
| 18 | 13 | 8 | 1 |
| 4 | 5 | 14 | 17 |

## தேள்கடி நீங்கும் வித்தை.

செப்புத்தகட்டில் பதினாறு அறையைக் கீறி அதில் நாற்பதையடைத்து அறைகள்தோறும் சூல்மிட்டு 'நமசிவய' என்ற மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு கொடுத்துக் கட்ட கொடிய தேள்விஷமானது அகலும். இம்மந்திரத்தையே லட்சமுருசெபித்து, நவக்கிரக பூசைசெய்து, பரதேசிகட்கு அன்னமளித்து, குருவைப்பணிந்து தானதர்மங்கள்செய்து கட்டிக்கொள்ளும்பக்ஷத்தில் காக்கைவலி நீங்குமென்று பெரியோர்கள் சொல்லினர்.

## புலியாகும் வித்தை.

இருளியென்னும் மூலிகைக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து, மேற்படி மந்திரத்தைச்செபித்துக் காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்கண்களுக்கு நீ புலியைப்போலத் தென்படுவாய். எல்லோரும் பயப்பட்டு ஓடுவார்கள்.

## கரடியாகும் வித்தை.

அஸ்த நட்சத்திரத்தில் முன்செய்த மாதிரிபூசித்து மூலிகையைக்கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் பார்ப்பவர்கண்களுக்குக்கரடியைப்போல தென்படுவாய்.

## ஆனையாகும் வித்தை.

மேற்படி நட்சத்திரத்தில் மூலிகையை நேமநிஷ்டையுடன் பூசித்து தூபதீபங் கொடுத்துப் பிடுங்கிவந்து, மேற்படி மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே காதில் வைத்துக்கொண்டால், அங்கிருக்கும் ஜனங்களுக்கு நீ ஆனையாகத்தோற்றப்படுவாய். எல்லோரும் உன்னைக்காணாது மயங்கிதிகிலடைவார்கள். அதுசமயம் நீ காதிலிருக்

கும் மூலிகையை எடுத்தெரிய எப்போதும்போல் மனிதனுகவே தோற்றப்படுவாய். அதைப்பார்த்த ஜனங்கள் மகாசந்தோஷப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

## குரங்காகும் வித்தை.

திருவோண நட்சத்திரத்தில் மேற்படி மூலிகையை நேமநிஷ்டையுடன் பூசித்துக்காதில் வைத்துக்கொண்டால், பார்ப்பவர் கண்களுக்குக் குரங்கைப்போல தோற்றப்படுவாய்.

## கழுதையாகும் வித்தை.

பூராடத்தில் மூலிகைக்கு காப்புகட்டி, பொங்கலிட்டு, தூபதீபங்கொடுத்து, எலுமிச்சங்கனி பலிகொடுத்து எடுத்துவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களுக்கு கழுதையைப்போலத்தோற்றப்படுவாய்.

## கோவேறு கழுதையாகும் வித்தை.

முன்சொன்ன நட்சத்திரத்தில், கருங்கோழி பலிகொடுத்துக் காப்புகட்டி பொங்கலிட்டு, காதில் வைத்துக்கொண்டால் கோவேறு கழுதையைப்போல தென்படுவாய். பார்ப்பவர்கள் உன்னைமெச்சி உனக்கு ஜாலக்காள் வசியமென்று சொல்வார்கள்.

## துட்டுநடக்கும் வித்தை.

ஒண்ணரைமுழ நிகளம் தலைமயிரை யெடுத்து அதின் முனையில் மெழுகை ஒட்டவைத்துக்கொண்டு, தம்படியாகிலும் காலணுவாகிலும் எடுத்து மயிர் முனையிலிருக்கும் மெழுகில் ஒட்டவைத்து, மற்றொருமுனையை கால்பெருவிரலிற்கட்டி, சடக்கென்று காலையெடுத்து நடக்க துட்டு எகிரிவிடும்.

## மர அன்னம் தண்ணியில்மேயும் வித்தை.

மரத்தினுல் அன்னமொன்றுசெய்து அதின் நெற்றியில் கொண்டையைப்போல இரும்பாணி அடித்து, ஒரு மூங்கில் முனையில் காந்தத்தைவைத்து ஒரு மரத்தொட்டியில் ஷை அன்னத்தைவிட்டு, தொட்டிநிறைய ஜலமும்விட்டு, மேற்படி மூங்கில்கோலை யெடுத்து காந்தமிருக்கும்பாகத்தை அன்னத்தின் நெற்றிக்கு நேரே காட்டி திருப்பிக்கொண்டேவர அது கோலுடன் சுழண்டுக்கொண்டே வருவது வெகு ஆச்சரியமாயிருக்கும்.

## ஜலத்தை இரண்டு விதமாகக்காட்டும் வித்தை.

ஒரு பொகணியில் ஜலத்தைவிட்டு, அதில் லிட்மஸ் என்னும் மருந்தைக்கொஞ்சம் போட்டால் அது குபீலென்று நீல நிறமாகும். அதை எல்லோருக்குங்காட்டி மறுபடியும் அதில் கொஞ்சம் கெந்தக திராவகத்தைவிட்டால் சிகப்பு நிறமாகத்தோன்றும்.



## உலர்ந்த கருவாடு ஜலத்தில்மேயும் வித்தை.

வயிற்றைப்பிளக்காத கருவாட்டை நாலைந்து கொண்டுவந்து, புளி துடக்கி இலையையும், கிருவைபிலையையும் சமனுய்ச் சாறுபிழிந்து அதில் மேற்படி கருவாட்டை ஊறப்போட்டு எடுத்துக்கொண்டு அனைவர்களும் பார்க்கக்கிணறு அல்லது குளத்தில்விட அது உயிருள்ளதைப்போன்று இங்குமங்குமோடும். பார்த்தவர்கள் இது என்னமோ வசியமென்பார்கள்.

## வியாதியுண்டாகும் வித்தை.

மூஞ்சூரைப்பிடித்து அதினுடைய குடல் முதலிய அசுத்தங்களைப்போக்கி, பகையாளியினுடைய மலமும், மூத்திரமுஞ் சேர்த்து அதின் வயிற்றிலடைத்து நாற்பதுநாள் வைத்திருந்து அதன்பிறகு, ஓம் நமோபகவதி என்று லக்ஷமுருசெபித்துப் புதைத்துவிட எதிரிபடுவான்.

## இதுவுமது.

பச்சைநாபி, கருநாபி இவ்விரண்டையும் எடுத்துக்கொண்டு போய் ஓரூரில் காற்றுவாட்டம்பார்த்து விரட்டியை அடுக்கி அதில் முன்மருந்திரண்டையும் புடம்போட அக்காற்றுபட்ட மனிதர்களெல்லாம், சுரமுங்குளிருங்கொண்டு வருத்தப்படுவார்கள். முறிப்பு-நீலிவேர், சிறுகீரைவேர், மிளகு இம்மூன்றையும் கியாழம் வைத்துக்கொடுச் சுகமாகும்.

## இதுவுமது.

கள்ளிச்சார், கார்த்திகைமூலம், பாஷாணம், துருசு, சேர்வாளம், கருநாபி இவைகளைச்சேர்த்திடித்து, துணியில் முடிந்து ஒரு குடுவையில் போட்டுத்துறவில் விட்டுவிட, அச்சலத்தைக் குடித்த மனிதர்களெல்லாம் வியாதியால் அவஸ்தைப்படுவார்கள். அதுசமசம் அத்தண்ணீரைச் சுத்தமாக இறைத்துவிட்டு அவுரிவேரையிடித்துப்போட எப்போதும்போல் சௌக்கியமாகும்.

## கரைத்தசாம்பலை எடுக்கும் வித்தை.

ஒரு ஏனத்தில் சாம்பலைக்கரைத்து அனைவருக்குங்காட்டி, இதில் கரைத்த சாம்பலை எடுத்துக்காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி, நெருஞ்சிவிரையைத்தூளாக்கி விபூதியுடன் கலந்து வைத்துக்கொண்டு விபூதிபோடுகிறமாதிரி போட்டுக்கலக்கி எடுக்க உருண்டையாகவரும். ஆச்சரியப்படுவார்கள்.

## நெருப்பு மிதிக்கும் வித்தை.

தாளிச்சமூலம், கொத்தான்சமூலம், மருக்காரை, உப்பு இவைகளைச்சேர்த்து பசும்பால் விட்டரைத்து உள்ளங்காலில் பூசிக்

கொண்டு நெருப்பின்பேரில் நடக்க நெருப்புசுடாது. சாதாரணரோட்டில் நடக்கின்ற மாதிரியிருக்கும்.

### இதுவுமது.

முன் நெருப்புமிதிக்கும் வித்தையில் சொல்லியுள்ள சரக்கு நான்கையுமரைத்து சட்டியில்பூசி நெருப்பைப் போட்டுமெடுக்கலாம் கைசுடாது.

### தீபம் மஞ்சள் நிறமாகக்காணும் வித்தை.

கைபொறுக்கும்படியான சூடாக சாராயத்தைக் கொதிக்கவைத்து, அதில் கொஞ்சம் உப்புத்தூளைப்போட்டால் வீடெங்கும் மஞ்சள் நிறமாகத்தோற்றும். ஆனால் அக்காலத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தால் விகாரமாகத்தோற்றும்.

### வெள்ளாய் வேகாதிருக்கும் வித்தை.

ஆவாரை விரைகைக்கொளுத்தி எருமை மூத்திரத்தை விட்டவித்து அக்கரியை வெள்ளாயடுப்பில் போட்டால், எவ்வளவுதீயைப் போட்டுக் கொளுத்தினாலும் வெள்ளாய் வேகாது. அதை அவித்து வேறுகரியைப் போட்டுக்கொளுத்தினால்தான் எரியும்.

### நாய்கடியாதிருக்கும் வித்தை.

நாயுருவியிலை, எருக்கன்மொக்கு, எருக்கன்யிலை இம்மூன்றையும்கசக்கி, கடிக்கவரும் நாயின்முகத்தில் எரிந்தால் அந்நாய் அதை முகர்ந்துப்பார்த்தவுடனே மயக்கமாகிநின்றுவிடும். அதைப்பார்த்தவர்கள் எவனோ நாயைக்கட்டி விட்டானென்று சொல்லுவார்கள்.

### குளத்தில் முழுகிநாமமிடும் வித்தை.

கொடிக்கள்ளிப்பாலால் திரேகத்தில் துவாதச நாமம்போட்டுக்கொண்டு வெய்யலில் நின்றால் அதுகாய்ந்துவிடும். அதன் பிறகு ஜனங்களைப்பார்த்து நான் குளத்திலிரங்கி நாமமிட்டுக்கொண்டு வருகிறேனென்று சொல்லி குளத்தில் முழுகி சற்றுநேரம் ஜலத்திலிருந்து வெளிக்கிளம்ப, பட்டைபட்டையாக நாமந்தோன்றும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

### இதுவுமது.

காட்டாமணிக்கன் பாலைக்கறந்து விபூதியைப்போல திரேகமாதியந்தமும் இட்டுக்கொண்டு, குளம், குட்டை, ஏரி இதுகளிலிறங்கிமுழுகி வெளிக்கிளம்பிவந்தால் பார்ப்பவர்களுக்கு யோகியைப்போலிருக்கும்.

### இதுவுமது.

முன்சொன்னதைப்போல் எருக்கம்பாலைத் தடவிக்கொண்டும் செய்து காட்டலாம். காய்ந்தால் ஒன்றுமிருக்காது.



### நூலைக்கொளுத்தி பின்னமில்லாமல்காட்டும் வித்தை.

கஞ்சித்தண்ணியில் உப்பைக்கரைத்துக்குழப்பி, பால்திரட்டுநூலில்பூசி உலரவைத்துக்காய்ந்த பிறகு, அதன்மேல் விளக்கெண்ணெயைப்பூசி கொளுத்தினால் எரியும், நூல் சேதமாகாது. அது அவிந்த பிறகு நூலையெடுத்து அனைவருக்குங்காட்டலாம். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

### அக்கினிசட்டியேந்தும் வித்தை.

புதுச்சட்டியில் சாம்பலைக்கொட்டி நன்றாக அழுத்திவிட்டு அதன்மேல் கட்டையைப்போட்டுக் கொளுத்தி நெருப்பாக்கி, சட்டியைக்கையிலெடுத்துக் கொண்டுவர கைகள்சுடாது. இது அனேகர் செய்து மிருப்பார்கள்.

### இதுவுமது.

பச்சைத்தவளை நெய்யை வேண்டுமானவரையிலும் சட்டியின் அடிப்புறத்தில்பூசி, சட்டியில் நெருப்பைப்போட்டுக் கொளுத்திக் கையில் யேந்திக்கொண்டுவர ஆச்சரியமாயிருக்கும். கைசுடாது.

### தாதுபுஷ்டியுண்டாகும் வித்தை.

சந்தனம், தேற்றான்கொட்டை, பூனைக்காலிவிரை, பூமிசர்க்கரைக்கிழங்கு, முருங்கைவிரை, முருங்கப்பட்டை இவைகளை வகைக்கு விராகனெடை இரண்டாகயெடுத்து தேங்காய்ப்பாலிலரைத்து அந்தி சந்தி குடித்துவர வீரிய விருத்தியுண்டாகும்.

### வேறு வசிய வித்தை.

மதலைப்பூச்சியில் ஆணுக்குத்தலை பெரிதாயும், பெண்ணுக்குத் தலைசிறிதாயுமிருக்கும். அதில்பெண் பூச்சியையெடுத்து அதனிடைக்குச்சரியாய் வெண்காரஞ்சேர்த்துக் கொஞ்சம் சுண்ணாம்பு விட்டரைத்து ஏலரிசியைப்போல் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது ஏலக்காயைப்பிரித்து அதனுள்ளிருக்கும் விரையில் நாலைந்தெடுத்துவிட்டு அதற்குப்பதில் மாத்திரையை வைத்து தாம்பூலத்தில் பெண்களுக்குக்கொடுக்க வசமாவார்கள்.

### பகைவர்களைக் கெடுக்கும் வித்தை.

ஆதிவாரம் சாயங்காலவேளையில் ஒரு மூஞ்சூரைப்பிடித்துக் கொன்று சூரணமாக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது அதில் ஒருசிட்டிகையெடுத்து சர்க்கரையிற்கலந்து பகைவர்களுக்கு உள்ளுக்கேற்றிவிட அவர்கள் பலவித வியாதிகளால் வருந்துவார்கள்.

### முறிப்பு வித்தை.

செவ்வல்லி அல்லது வெள் அல்லி கிழங்கைக்கொண்டுவந்து

அரைத்துப்பாலிற்கலக்கி மூன்றுநாள் உள்ளுக்குக்கொடுக்கத்தீரும். தீராவிடில் கடும்பத்திய மிருக்கவும் அல்லது சுட்டபுளி, வறுத்த உப்பு சேர்க்கவும்.

### இதுவுமது.

காட்டுமரவட்டையில் நிகளமாயுள்ளதைக் கொண்டுவந்து உலர்த்திச் சூரணமாக்கி பேய்க்கரும்பு சூரணத்திற்கலந்து முன்போல் கொடுக்க, கைகால் முடங்கி வருத்தப்படுவார்கள்.

### முறிப்பு வித்தை.

கனமாகத்தடித்த கோவைக்கொடியைக்கொண்டுவந்து கணுவுகளை நறுக்கி யெறிந்துவிட்டு நடுக்கண்டத்தை மாத்திரமெடுத்து நறுக்கி சட்டியில்போட்டு ஒருபடிஜலம்விட்டு, ஆழாக்காகச்சுண்ட வைத்து 3-நாள் 6-வேளைகொடுக்க சவுக்கியமாம்.

### கையில்புகையெழும்பும் வித்தை.

கெந்தகக்குச்சியிலுள்ள மருந்தையெடுத்து வெற்றிலையில் வைத்து மடித்து, உள்ளங்கையில் வைத்துத்தேய்க்க அதிலிருந்து புகையெழும்பும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

### திரேகத்தில் புகையெழும்பும் வித்தை.

மூன்மாதிரி மடித்தவெற்றிலையை திரேகத்தில் எந்த பாகத்திலேனும் வைத்து தண்ணியைத்தொட்டுத் தேய்க்க புகையானது மேகத்தைப்போல எழும்பும்.

### பெரும்பாடு சாய்க்கும் வித்தை.

கன்னிப்பெண் நூத்த நூலைக் கோணி ஊசியிற்கோர்த்து ஆதிவாரம்பிடித்த மூஞ்சூரின் வாயிற்புகுத்து பின்புறமாகவாங்கி முடிபோடவும். இப்படி ஒன்பது தரங்கோர்த்து ஒன்பது முடிபோட்டு வைத்துக்கொண்டு பகைவர்களுடைய வாயிற்படியில் மேற்படி கயிற்றைப்போட்டுவைக்க அவர்கள் அதைத்தாண்டிச்செல்லும் பட்சத்தில் உடனே பெரும்பாடுகண்டு அவஸ்தைப்படுவார்கள்.

### இதுவுமது.

முன்செய்தமாதிரி மூஞ்சூருக்கு அபானவாய் வழியாக கயிற்றைச்செலுத்தி, வாய்வழியாகவாங்கி முன்மாதிரி முடிபோட்டு வைத்துக்கொண்டு மேற்படி பெரும்பாடு நிற்கவேண்டுமென்றால் இக்கயிற்றைப்போட்டுவைக்க அவர்களதைத்தாண்டும்பட்சத்தில் பெரும்பாடுநின்று சௌக்கியப்படுவார்கள். ஆனால் இது மஹா பாதகமானதொழில்.

### பக்ஷிகளாகும் வித்தை.

சுவாதி நட்சத்திரத்தில் பலியுடன் பொங்கலிட்டுக் காப்புகட்டி



வேரைக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர் கண்களுக்கு ஒரு சிறிய பக்ஷியைப்போலவே தென்படுவாய்.

### பாம்பாகும் வித்தை.

மேற்படி நட்சத்திரத்தில் கொண்டுவந்த வேரைக்காதில் வைத்துக்கொண்டு பாம்பாகத் தெரியவேணுமென்று நினைப்பாயாகில் பார்ப்பவர்களுக்கு நீ பாம்பைப்போலவே தென்படுவாய்.

### இதுவுமது.

இதுவரையில் சொல்லிவந்த வேலைகளுக்கெல்லாம் எந்தெந்த நட்சத்திரம் சொல்லியிருக்கின்றதோ அந்தந்த நட்சத்திரத்தில் செய்தால்தான் கைகூடும். ஒவ்வொரு வேலைகளுக்கும் மூலிகையருகிற்சென்று அவ்விடத்தைச் சுத்திசெய்து, அதன்பின் சாபநிவர்த்திசெய்து, பொங்கலிட்டு பலிகொடுத்து, காப்புகட்டி, தூபதீபங்கொடுத்து, நம் குலதெய்வத்தை நினைத்துதான் வேரைப்பிடுங்கவேண்டும். வேர்பிடுங்கும்போது உச்சிவேர் அரக்கூடாது. தவிரநாமெவ்வளவு கருத்துடன் மூலிகையை எடுக்கின்றோமோ அவ்வளவும் நமக்கு நல்லது. பலிசொல்லாததற்குப் பலிகொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் இம்மூலிகை கர்மிகளுக்குத் தெரியாது. மேற்படி மூலிகையைப் பிடுங்கிவந்து ஒரு கோப்பையில் சார்பிழிந்துக் காற்றில்வைத்தால் அது அசல் வீரமாகும்.

### வேறு வசிய வித்தை.

ஓம், றீம், ஐயும், கிலியும், ஸ்ரீயும், சவ்வும், றீம், கிலீம், ஓம் என்று லட்சத்தியெட்டுருசெபித்து விபூதியைத்தொட்டு இட்டுக்கொண்டுபோக இராஜாக்கள் முதல் வசியமாவார்கள்.

### பிரிவுசெய்யும் வித்தை.

இறந்துபோன ஆட்டுணியும், விஷவாலம்பட்டையும் சமயெடையாக யெடுத்துத் தேங்காய்ப்பால்விட்டு அரைத்து துவரை பிரமாணம் மாத்திரையுருட்டி நிழலில் உலரவைத்து தேவையானபோது பதார்த்தங்களில் உள்ளுக்கேற்றிவிட்டால் ஒருவரைவிட்டு ஒருவரைப்பிரித்துவிடும்.

### சர்வஜனவசிய வித்தை.

பொன்னுவாரைவேரை நறுக்கி நிழலிலுலர்த்திக் குழித்தைலமிறக்கிக்கலவத்திலிட்டு அதனுடன் கோழிமுட்டை வெண்கருவும், மாக்கொடி, புனுகு, பூரம், கோரோசனை இவைகளைச் சமனாய்ச் சேர்த்து அரைத்துச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்துத்திலர்தமிட உன்னைக்கண்டபேர்கள் வணங்கி நீயிட்ட வேலையைச்செய்வார்கள்.

## சர்வலோக வசியம்.

புல்லாமணக்குச் சமூலத்தை நீட்டுச்சீலையில் மூன்றுநாள்முடிந்து வைத்திருந்து நாலாநாள் பேய்க்கரும்புசாறு விட்டரைத்துக் குளிகைசெய்து வைத்திருந்து தேவையானபோது அறுசுவையில் கொடுக்க வசியமாம். பெண்கள் காதத்தில் குழைந்து ஆண்களுக்கேற்ற பிரியமாட்டார்கள்.

## வேறு பெண்பிரிவு குளிகை.

கடுகுபானைசாம்பல், குடிபோனவீட்டின்மண், ஆதிவாரமிரவில் கழுதைபுரண்டமண், முச்சந்திமண், உளிச்செதில் இவைகளை ஒன்றாய் சேர்த்து தகட்டில்பேரைமாறி யெழுதி, ஐங்காயம்பூசி, மூன்பிரிவுக்குச்செபித்த மந்திரத்தைச்செபித்து எதிரி வீட்டிரப்பில் சொருக இருவரும் பிரிவார்கள்.

## பொய்க்காலிரு உற்பத்தியாகும் வித்தை.

நீர்சுண்டிய ஓர் குட்டையில் சேற்றைக்குழப்பி, வைக்கோலின் கூளத்தைப்போதுமான வரைக்கும் அமிழ்த்துவைத்துக்கலக்கி 5-6-7-தினங்கள் பொறுத்துப்பார்க்க வேண்டுமான எருக்கள் உற்பத்தியாகிமேயும்.

## குயவன் சூளைசிதறும் வித்தை.

குயவன் பாண்டங்களை அடுக்கிச்சூளையில் தீயிடுமுன் நாலு மூலைகளிலும் கெச்சக்காய்களை சூளைக்குள்வைக்க, குயவன் தீயிட்டால் சூளை சிதறிப்போகும்.

## சர்வவசிய வித்தை.

விழுதியிலையும், விழுதிக்கிழங்குங் கொண்டுவந்து ஒருமண்டலம்வரைப் பாலிலரைத்து அந்தி, சந்தி இருவேளையுந்தின்றுவந்தால் காயசித்தியுண்டாகி, சரீரத்திலுள்ள நோய்கள்விலகி தேவர்களெல்லாம் வசியமாவதுடன், சித்தர்களும் வசியமாகி நீ கேட்டதைச்கொடுப்பார்கள்.

## இதுவுமது.

வெள்ளறுகு சமூலத்தைக்கொண்டுவந்து பசும்பாலிலரைத்து முன்சொன்னபடி சாப்பிட்டுவந்தால் மேற்சொன்னதெல்லாம் நடக்கும்.

## இதுவுமது.

கொத்தான்கிழங்கைக் கொண்டுவந்து பசும்பாலிலரைத்து ஒருமண்டலம் சாப்பிட்டுவந்தால் காயசித்தியுண்டாகி மேற்சொன்னதெல்லாம் நடக்கும்.



## இதுவுமது.

பொற்சீந்தில் கிழங்கைக்கொண்டுவந்து பாலிலரைத்து ஒரு மண்டலஞ்சாப்பிட்டு வந்தால் காயசித்தியுண்டாகி, நரைதிரை மாறும். செய்துபார்த்தால்தான் உண்மை தெரியவரும்.

| | | | |
|---|---|---|---|
| 32 | 39 | 2 | 7 |
| 6 | 3 | 36 | 35 |
| 38 | 33 | 8 | 1 |
| 4 | 5 | 34 | 37 |

## குழந்தையுண்டாகும் வித்தை.

செப்புத் தகட்டில் பதினாறறையைக் கீறி அறைகள்தோறும் சூலமிட்டு எண்பதை அதிலடைத்து 'நமசிவய' என்னும் மந்திரத்தைப் பதினாயிரம் உருகொடுத்துக் கட்ட குழந்தையுண்டாகுமென்று கூறினர் பெரியோர்.

## தேங்காயைக்கையால் உடைக்கும் வித்தை.

ஃ இம்மாதிரிமூன்று பெரிய உப்புக்கல்லைவைத்து உரித்ததேங்காயை அதின்பேரில்வைத்து கையினால் ஓங்கிக்குத்த தேங்காய் உடையும், ஆனால் இதற்குச்சாதகம் வேண்டும்.

## ரப்பர் செய்யும் வித்தை.

குதிரைவாலிப்புல்லின் பாலைதன்முழங்கையில் தளும்ப மேலுமேலுமாகப்பூசி, சற்றுலர்ந்தபின் கையை ஜலத்தில் தோய்த்துப் பிரித்து ஒன்றின்மேலொன்றாக மடித்து எவ்விதமேனும் செய்துக் கொள்ளலாம்.

## சபையில் பானகம் பரிமாறும் வித்தை.

ஒரு குடத்தில் ஜலங்கொண்டுவரச்சொல்லி அதில் கொஞ்சமெடுத்து சபையோர்களுக்குக்காட்டி, மறுபடியும் ஏதோ மந்திரஞ் சொல்கிறதைப்போல் சொல்லிக்கொண்டே விபூதிபோடுகிறபாவனையாக சாக்ரீன் என்னும் பவுடரைக்கொஞ்சம் தந்திரமாகப்போட்டுக் கலக்கிக் குடிக்கக்கொடுக்க இனிப்பாகயிருக்கும் சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

## விலங்கு தெறிக்கும் வித்தை.

கருடன் குஞ்சுபொரித்திருக்கும்போது அக்குஞ்சிற்கூட்டில் இரும்பு வளையத்தைப்போட்டு விட்டுவந்தால் அவைகளையுடைக்கத்தக்கதாய்ப் பறவையானது சஞ்சீவியைக்கொண்டுவந்து கூண்டில் வைக்கும். நாம் அதைப்பார்த்திருந்து அக்கூண்டையெடுத்து ஓடுகிற தண்ணீரில்போட்டால், சஞ்சீவியானது ஜலத்தை எதிர்த்து வரும் அதைக்கண்டு பிடித்தெடுத்துக்கொண்டு, சமயம் வந்தபோது விலங்கின்பேரிலும், பூட்டின்பேரிலும் வைத்தால் படீரெ

ன்று வெடித்துவிடும். இன்னும் அவரவர்கள் சாமர்த்தியத்தினால் வேண்டியவைகளை இதைக்கொண்டு செய்துகொள்ளலாம்.

## வியாதியுண்டாகும் வித்தை.

இந்திரகோபப்பூச்சி, புறாமுட்டை, வல்லூரின்விந்து, கரு இவைகளைச் சேர்த்தரைத்துக் காளிக்குப்பூசைசெய்து, பகையாளியின் வீட்டில்வைக்க நாதனவியாதிகளெல்லாங்காணும்.

## உருமாற்றும் வித்தை.

வாகைப்பிசின், அத்திவிரை, வாழைரசம், கரும்பூனைபீசம் இவைகளை அரைத்துச்சத்திபூசைசெய்து ஒரு உருண்டையைக் கொண்டால் பார்ப்பவர்களுக்கு நீ வேறு உருவாகத்தோற்றப்படுவாய்.

## சத்துருவைஜெயிக்கும் வித்தை.

கடலைக்கருவினால் கோழிமுட்டையின்பேரில் எதிரியின் உருவத்தையெழுதி காளியைத்தியானிக்க எதிரிவணங்கி வருவான்.

## வியாதிநீங்கும் வித்தை.

பாம்பின் ஊனில் நாய்பால் விட்டரைத்துக்கூட கருவைபுஞ் சேர்த்துக் காளியைத்தியானிக்க, வியாதிகளெல்லாம் உன்னைவிட்டு ஒழியும்.

## வேறு வசிய வித்தை.

புல்லாமணக்கன் விரையை நெய்யில்வறுத்து, மாதச்சீலையில் நனைத்து அறுசுவையில் கொடுக்க வசியமாம்.

## வேறு மீன்கள் மிதக்கும் வித்தை.

குளம், குட்டை, கிணறு முதலியவைகளில் கொட்டைக்கரந்தையைக் கத்தை கத்தையாகக்கட்டிப் போட்டுவிட்டு, மறுநாள் காலையில் பார்க்க மீன்களெல்லா மிதந்திருக்கும்.

## காகிதத்தைக்கொளுத்தி உருவங்காட்டும் வித்தை.

ஒரு காகிதத்தில் அம்மான் பச்சரிசிப்பாலால் உருவமெழுதிக் காய்ந்தபிறகு கொளுத்திக்காட்ட, எழுதின உருவம் நன்றாகத்தோன்றும். ஆச்சரியப்படுவார்கள்.

## சென்னகுன்னி உற்பத்தியாகும் வித்தை.

தேவையான சென்னகுன்னிகளையெடுத்து, கற்பூரத்தைப் பொடிசெய்து அதில்போட்டு, நன்றாகப்பிசைந்து கிணற்றில்போட அது உயிருள்ளவைபோன்று மேய்ந்து உள்ளேபோகும்.



## தேள் உற்பத்தியாகும் வித்தை.

ஒரு பழையபீச்சன்பாயை ஜலத்தில் ஊரவைத்து, சாம்பல் கொட்டிய குப்பையின்பேரில் விரித்துப்போட்டு, 4-5 தினங்கள் சென்று பாயை எடுத்துப்பார்க்க, நூற்றுக்கணக்கான தேள்கள் உற்பத்தியாகியிருக்கும். இது கொட்டினால் பொல்லாத விஷமாக்கும்.

## புருடவசியம்.

சென்னயுருவி, செம்முள்ளி, சிகப்புகஞ்சா, செங்குவளை, பொன்னாங்கண்ணி, சுழல்வண்டு, திகைப்பூண்டுபூச்சி, புனுகு, கஸ்தூரி மஞ்சள், கடலைக்கரு இவைகளையெல்லாம் கருக்கிக்குழைத்துத்திலர்தமிட வசியமாம்.

## இதுவுமது.

நீட்டுச்சீலையும், களிப்பாக்கும் பேய்க்கருப்பன்சாற்றி லூரப்போட்டு, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தாம்பூலத்தில் கொடுக்க வசியமாம்.

## இராஜவசியம்.

ஆனைவணங்கி, நிலப்பனை, வெள்ளெருக்கன், குப்பைமேனி, காஞ்சொறி, ஆவாரை, முசுமுசுக்கை, சுழலாவாரை, பொற்றலைக் கையான், வேம்பு இதுகளின்வேரை சமயெடையாக யெடுத்துத்திலர்தமிட வசியமாம்.

## ஸ்ரீவசியம்.

அரிதாரம், துருசு, சந்தனம், சவ்வாது, கற்பூரம், குப்பைமேனி, கொன்றை இதுகளை சமயெடையாகயெடுத்து அரைத்துத்தேனில் குழைத்துத்திலர்தமிட வயசிமாம்.

## மிருகவசியம்.

விஷ்ணுகிரந்திவேர், விஷங்கொட்டி, காடுகட்டி, தொட்டால்வாடி, நாயுருவி, முன்னை, சங்கன்விரை, எரழிஞ்சில் இவைகளைச் சமயெடையாகத் தேனிலரைத்துத் திலர்தமிட மிருகங்கள் வசியமாகும்.

## சர்ப்பவசியம்.

பொற்றலைக்கையான், தும்பைவேர், நிலம்புரண்டி, சிறுகீரை, நீலி, கரியசாலை, நாயுருவி, காஞ்சொறி, பொற்கொடி, ஆடையொட்டி இவைகளைப் புத்துத்தேனிலரைத்துத் திலர்தமிட சர்ப்பங்கள் வசியமாகும்.

## சத்துரு வசியம்.

பொற்றலைக்கையான், வெள்ளெருக்கு, விஷ்ணுகாந்தி இவைகள் வேரை காராவின் நெய்யிலரைத்துத்திலர்தமிட வசியமாம்.

### உலகவசியம்.

நின்றுல்சிணுங்கி, செவ்வகத்தி, ஆவாரைமுல்லை, கொழுந்தெட்டு, கூத்தன், குதம்பை இவைகளின்வேரை கொன்றைப்பன்னீராலரைத்துத்திலர்தமிட வசியமாம்.

### மோகனம்.

செவ்வாம்பல், அல்லி, அதிமதுரம், கோஷ்டம், புல்லுருவி, வெண்குன்றிவிரை இவைகளை முலைப்பாலிலரைத்துத் திலர்தமிட மோகனமாகும்.

### இராஜமோகனம்

குங்குமம், புல்லுருவி இவ்விரண்டையும் நெய், தேன், ஆலம்பால் இவைகளைச்சமன்சேர்த்து அரைத்துத்திலர்தமிட இராஜமோகனமாகும்.

### புருஷமோகனம்.

செவ்வாமணக்கு, செவ்வகத்தி, சென்னுபுருவி, செம்முள்ளி, புல்லுருவி, மானைத்தேடிச்சென்றன் சிலை இதுகளைச்சேர்த்து அரைத்துத் திலர்தமிட வசியமாம்.

### ஸ்திரீமோகனம்.

குங்குமம், வாழை, அல்லி, மரலி, சந்தனம், நீலி, கோடாசூரி, செங்குன்றி, மண்டூகம் இவைகளை புத்துத்தேனிலரைத்துத் திலர்தமிட ஸ்திரீ மோகனமாம்.

### மிருகமோகனம்.

வெண்குன்றி, முத்தக்காசு, கெச்சக்காய், நரித்தலையோடு இவைகளை முலைப்பாலில் அரைத்துத்திலர்தமிட மிருகமோகனம்.

### சோர்னமோகனம்.

மருதன், ஊமத்தை, மருனுமத்தை, நன்னாரி இவைகளின் வேரை வெள்ளுமத்தன்சாற்றி லரைத்துத்திலர்தமிட சொர்னமோகனமாம்.

### சத்துருமோகனம்.

செந்நாயுருவி, வெண்குன்றி, பொன்னுங்கணி, செங்கழுநீர், தூதுவேளை, சிறுபுன்னை இவைகளைக் கோடாசூரிச் சாற்றிலரைத்துத்திலர்தமிட சத்துருமோகனமாம்.

### லோகமோகனம்.

முல்லை, வெண்கொழுஞ்சி, நரிப்பயறு, குன்றி, நொச்சி, கையாந்தகரை, ஐவிரலிவேர், சோம்பு, கெஞ்சா இவைகளை நன்னரிச் சாற்றிலரைத்துத் திலர்தமிட லோகமோகனமாம்.



### தம்பனம்.

கருங்குன்றி, சதுரக்கள்ளி, ஆவாரை, கருங்கெஞ்சா, ஊமத்தை, திகைப்பூண்டு, சுவரொட்டி, நிலத்தம்பி இவைகளை கொசுகின் தேனுலரைத்துத் திலர்தமிட தம்பனமாகும்.

### சுக்கிலத்தம்பனம்.

விஷ்ணுகிரந்திமூலம், விளாம்பிசின், சிவந்தகஞ்சா, கருப்புகஞ்சா, ஊமத்தை, ஊமருதத்தை இவைகளைப் பசுநெய்யிலரைத்துத் திலர்தமிட சுக்கிலத் தம்பனமாகும்.

### ஆயுதத்தம்பனம்.

நத்தைசூரிவேர், பொன்முசட்டைவேர், வாழைவேர், பேவாழைத்தண்டு, பச்சைப்பாம்பு, பருத்தி, கண்டங்கத்தரி, மூங்கிலிலை இவைகளைத்தேனிலரைத்துத் திலர்தமிட ஆயுதத்தம்பனமாம்.

### மிருகத்தம்பனம்.

பச்சோந்தி, கன்னிமூலம், இருள்மூலிவேர், நன்னரி, பாலை, பேய்பீர்க்கு இவைகளை பசுநெய்யிலரைத்துத் திலர்தமிட மிருகத்தம்பனமாம்.

### ஜலத்தம்பனம்.

நீர்மேல் நெருப்பு, வன்னி, கட்டுக்கொடி, நின்னுசிணுங்கி, நிலப்புரண்டி, பேய்முசட்டை, தூதுளை, சீரகம், இருபிரம்பு, சுளத்தி, முடக்கொத்தான் இதுகளை அரைத்து தேன்கூட்டி திலர்தமிட ஜலத்தம்பனமாம்.

### அக்கினித்தம்பனம்.

சங்கம்வேர், கற்றாழைவேர், தாமரைக்கிழங்கு, குப்பைமேனி, வெள்ளைக்காக்கட்டான், செவ்வகத்தி, சுண்டை, செங்கொடி, வட்டத்திருப்பி, ஓரிலைத்தாமரை, இரசம் இவைகளை தேனிலரைத்துத் திலர்தமிட அக்கினித்தம்பனமாம்.

### தேவதம்பனம்.

கொத்தான், கொளுஞ்சி, நிலவாகை, ஆலம்வேர் இவைகளைப் பசும்பாலிலரைத்துத் திலர்தமிட தேவதம்பனமாகும்.

### சர்வதம்பனம்.

சிறியாநங்கை, நந்தியாவட்டை, சின்னி, பெருஞ்சின்னி, முகமினுக்கி, நாகவல்லி, ஆத்திவேர், செவ்வாமணக்கு, சுவரொட்டி, கருங்குன்றி, தண்ணீர் விட்டான் இவைகளை அரைத்துத்திலர்தமிட சர்வதம்பனமாம்.

### சர்வ உச்சாடனம்.

தடைபத்தான், பாம்புகண்ணி, சாத்திரபேதி, நத்தைச்சூரி, குடியோட்டி, நாய்மயிர், கழுதைப்புட்டை, அதிவிடையம் இது களைத் தேனிலரைத்துத்திலர் தமிட சர்வமும் உச்சாடனமாகும்.

### மிருக உச்சாடனம்.

நரிமிரட்டி, இருவரைமிரட்டி, எருமைப்புட்டை, புலையரைச் சுட்டசாம்பல், சீதாதேவி, செங்கழுநீர் இவைகளை புத்துத்தேனி லரைத்துத்திலர் தமிட மிருகங்கள் உச்சாடனமாகும்.

### சத்துரு உச்சாடனம்.

இலைக்கள்ளிவேர், திகைப்பூண்டுபூச்சி, அரமுரித்தான், காக் கைக்கூடு, வேம்பு, பிணஞ்சுட்டயெலும்பு, சீலை இவைகளை சத்துரு உச்சாடனஞ்செய்ய நல்லது.

### தேவ உச்சாடனம்.

காக்கைக்கூண்டு, கழுதைப்புட்டை, சீலை, துருசு, சடை, சுடு காட்டுச்சாம்பல் இவைகளைச்சேர்த்து தேவ உச்சாடனஞ்செய்ய வும்.

### விஷ உச்சாடனம்.

நீலிவேர், நீர்மேல் நெருப்புவேர், மாவிலங்கன்வேர், விஷ்ணு காந்திவேர், பாம்பு பிச்சு, நாபி, நேர்வாளம் இவைகளைக்கூட்டி அ ரைத்து (லங்-மங்) என்று லக்ஷமுரு கொடுத்து வைத்துக்கொள்ள விஷங்கள் உச்சாடனமாகும்.

### ஸ்திரீ உச்சாடனம்.

பூனைவணங்கி, கௌதும்பை, பச்சை ஓணான் முதுகெலும்பு, வாழை, தேள் கொடுக்கிலை, சீலை, திகைப்பூண்டு இவைகளைச்சேர்த் துச்செய்ய ஸ்திரீகளை உச்சாடிக்கும்.

### வியாதி உச்சாடனம்.

காந்தை, திரிகடுகு, சித்திரமூலம், மிளகு, சீந்தில், மஞ்சள், மிளகா இவைகளைச்சேர்த்துசெய்ய வியாதிகள் உச்சாடனமென்று சொல்லுவர்.

### பில்லி சூன்யங்களுக்கு சிலகைமந்திரம்.

கொன்றை, செங்கழனி, கோஷ்டம், வெண்குன்றி, மாடப்புரு வெச்சம், விந்து, நகம் இதுகளைப்பழச்சாற்றிலரைத்து (ஓம், பரி கினை, சர்பனை, அந்தத்தெகுதெகு, சிங், ரங், சித்திரரூபி, சிஷ்ட பரிபாலனி, ரங், ரங், வாங்கு, வாங்கு, உருளு, உருளு, ஓடு, ஓடு,



உங, உங, எங, எங் ஐயும் சுவஹா வென்று ஆயிரத்தெட்டுருகொடுக்க சித்தியாகும்.

### போத லேபனம்.

குண்டுமணிவிரை, நீர்முள்ளிவிரை, அரிதாரம், கோஷ்டம் இவைகளை முலைப்பாலிலரைத்துப் பெண்ணின் தலையிற்றேய்த்து அவளுடன்சேர, என்னாளும் பிரியமாட்டாள்.

### ஸ்திரீ லேபனம்.

பொன்னுவாரை, வசம்பு, விஷ்ணுகிரந்தி இவைகளை நல்லெண் ணெயிற்காய்ச்சி, பூசிக்கலந்தால் ஆயுள்பரியந்தம் பிரியமாட் டாள்.

### இவை இரண்டிற்கும் போதுமந்திரம்.

அரி, ஓம், லம், லம், சர்வம் வணங்கு, மாதங்கி, சிங், ஐ, மோகி, மோகி, ஔவும், ஸ்ரீயும், நமநமாவென்று ஆயிரத்தெட்டுரு செபி க்கவும்.

### போது ஏடனே.

கொற்றான், கொழுஞ்சி, வன்னே, புன்னை, வெள்ளாமணக்கு, கருங்கண்ணி, செம்போத்தெச்சம், புறாயிறகு, நல்தாமரை நூல், ஜாதிலிங்கம் இவைகளைச்சேர்த்தரைத்து மந்திரமோத பொது ஏடனை யாகும்.

### இராஜ ஏடனே.

காக்கைப்பூண்டு, கருங்குன்றி, கொல்லைக்கம்பு, நாகத்திநூன், லிங்கம், அரிதாரம், கோஷ்டம் இவைகளைச்சேர்த்தரைத்து மயான பூசனைசெய்ய இராச ஏடனையாகும்.

### புருட ஏடனே.

திருகுகள்ளி, வெள்ளைக்காக்கட்டான், செம்முள்ளி, தகரை, கொழுஞ்சி, ஆரை, கோஷ்டம், சுக்கு இவைகளைச்சேர்த்துச் செய்ய புருட ஏடனையாகும்.

### ஸ்திரீ ஏடனே.

சித்திரமூலம், ஆமணக்கு, கோஷ்டம், வாழை, பூநீர், பாம்பு, தவளையூன் இவைகளைச் சேர்த்துச்செய்ய ஸ்திரீ ஏடனையாகும்.

### மிருக ஏடனே.

பூனைக்காலி, செங்கத்தார், அருகன்வேர், முத்தக்காசு, இரு வரையொட்டி, காஞ்சொறி இவைகளில் நாயூன் கூட்டிச்செய்ய மிருக ஏடனையாகும்.

### தேவ ஏடனே.

கருங்காக்கட்டான், திருகுகள்ளி, செங்கத்தாரி, வெள்ளைக்கா

க்கட்டான், குப்பைமேனி, திகைப்பூண்டு, தொட்டால்வாடி, பன்றி இரத்தம், நாரை இரத்தம் இவைகளைக்கலந்து தேவ ஏடணை செய்யவும்.

### லோக ஏடணை.

ஆடுதீண்டாப்பாளை வடக்கு வேருடன், கள்ளி, கொத்தான், தும்பைப்பால், பன்றிநெய் இவைகளைக்கூட்டி லோக ஏடணை செய்யவும்.

### பூதப்பசாசு ஏடணை.

கிலுகிலுப்பை, ஆடுதீண்டாப்பாளை, கீழ்க்காய்நெல்லி, சிறுகீரை, பொற்றலைக்கையான், பயித்தியம் பிடித்தவன் மண்டையோடுஞ்சேர்த்துச்செய்ய சர்வபூதப்பசாசு ஏடணையாகும்.

### சர்வபூத ஆக்ருஷ்ணம்.

கற்றாழை, பாதிரி, முல்லை, காக்கணம், கோழியவரை, காக்கணங்குருவி, செம்பைவித்து, உப்பு, சுண்டை, நாகப்பூச்சி இவைகளைச்சேர்த்துத்தீட்ட சர்வ ஆக்ருஷ்ணமாகும்.

### இராஜ ஆக்ருஷ்ணம்.

தலைச்சுருளி, முள்ளி, சத்திச்சாரணை, ஆந்தைக்கண், நீர்மேல் நெருப்பு, செம்பூலா இவைகளைப் புத்துத்தேனி லரைத்துத்தீட்ட இராஜ ஆக்ருஷ்ணமாம்.

### புருட ஆக்ருஷ்ணம்.

சிறுபுன்னை, விஷ்ணுகாந்தி, கொத்தான், குறுந்தொட்டி, வசம்பு, குன்றி, மஞ்சள், காக்கைப்பூண்டு, விலாமிச்சு, வெட்டிவேர் இவைகளை வகைக்கு ஒரு விராகனெடையாக யெடுத்துத்தேனிலரைத்துத்திலர் தமிட ஆக்ருஷ்ணமாம்.

### ஸ்திரீ ஆக்ருஷ்ணம்.

உள்ளொட்டி, புன்னை, கொன்றை, உப்பு, செம்போத்துவால், அரணைவால், புறாவெச்சம், நாகத்தின் சட்டை இவைகளைக்கூட்டிச் செய்ய ஸ்திரீ ஆக்ருஷ்ணமாம்.

### மிருக ஆக்ருஷ்ணம்.

நன்னாரி, துடரி, மேனி, சிறுகீரை, கொன்றை, பொன்னாவாரை, முட்டை, கஸ்தூரி மஞ்சள், புறாவெச்சம் இவைகளையொன்றாய்க்கூட்டிச்செய்ய மிருக ஆக்ருஷ்ணமாகும்.

### தெய்வ ஆக்ருஷ்ணம்.

குப்பைமேனி, சிறுபுன்னை, பொற்கொன்றை, சிவனார்வேம்பு,



சென்னாயுருவி, மருளூமத்தை இவைகளை முலைப்பாலில் அரைக்க தெய்வ ஆக்ருஷ்ணமாகும்.

### லோக ஆக்ருஷ்ணம்.

தொட்டால்வாடி, வெள்ளெருக்கு, கலப்பைக்கிழங்கு, பால்சுரண்டி, சிறுபுன்னை, ஐங்கோலம், புறாயிறகு, சீலை இவைகளைச் சேர்க்க லோக ஆக்ருஷ்ணமாகும்.

### சர்வ பேதனம்.

கோட்டான்முட்டை, மடிக்குருவி, செம்பருத்தி, வெண்கொழுஞ்சி, செவ்வாலி, கோஷ்டம், துளசி, நெடுவாலம், தலையில்லாடி இவைகளையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்துச்செய்ய பேதனமாகும்.

### இராஜ பேதனம்.

கோழியவரை, காக்கைக்கூடு, தேள் முதுகெலும்பு, சிந்தில், தும்பை, முசுட்டை, காஞ்சிரை, பச்சோந்தி இவைகளைச் சேர்த்துச் செய்ய இராஜபேதனமாகும்.

### புருட பேதனம்.

ஆடுதீண்டாப்பாளை, கௌதும்பை, நச்சுப்பல்லி, பெருந்தும்பை, பகையாளியின் வாய்ச்சோறு இதுகளை முலைப்பாலிலரைத்துச்செய்ய புருடபேதனமாம்.

### ஸ்திரீ பேதனம்.

சீதாதேவி, செங்கழுநீர், வாழை, குடியலைத்தான், பெருந்தும்பை, காந்தல், காக்கைக்கூடு, கழுதைச்சடை இவைகள் மாதர்மனத்தை முறித்தோட்டும்.

### மிருக பேதனம்.

சங்கு, கருங்குன்றி, எட்டி, முசுட்டை, கழுகொம்பு, செம்போத்து, கருங்காக்கை மண்டை, முசுருமுட்டை இவைகளைப்பதியலைத்தானிலரட்டிக் குளிகைசெய்துப் பிரயோகிக்க மிருகபேதனமாகும்.

### தேவ பேதனம்.

கழுதைக்குளம்பு, கழுதைச்சடை, கழுதைப்புட்டை, புலிக்கொழுப்பு, பாதரிமாவிலங்கு, பூதமடைத்தான், ஆடுதின்னாப்பாளை வித்து, சாக்குருவி இவைகளை ஆலம்பாலிலரைத்துப் பிரயோகிக்க தெய்வபேதனமாகும்.

### அக்கினி பேதனம்.

தாளி, செவ்வத்தி, ஆலங்கொழுந்து, சுண்டை, வாழைக்கிழங்கு, துத்தி, சிறியாநங்கை, கற்றாழை, பச்சோந்தி, கொத்தான்

விரை, குப்பைமேனி, சங்கு, ஓரிதழ்தாமரை இவைகளைச்சேர்த்து உபயோகிக்க அக்கினிபேதனமாகும்.

## லோக பேதனம்.

நச்செலி, நச்சுப்பல்லி, வேப்பமரக்காக்கைக்கூடு, பச்சோந்தி, இந்திரகோபம், சுண்டை, தும்பை, ஆவாரைப்பூச்சி, சிலை இவைகள் லோக பேதனஞ்செய்யும்.

## வேறு மாரணம்.

மஞ்சள்கிழங்கில் பாவைசெய்து மாக்கொடிசுற்றி அதின்மேல் இருமலமும் ஐங்காயமும்பூசி, மயானத்தில் பலியுடன் மசிநசி என்ற மந்திரத்தைச்செபிக்க எதிரிமாரணமாவான்.

## சர்வ மாரணம்.

சிகப்புதும்பை, சிகப்புவண்டு, ஏழுமுள்ளு, காக்கைமுட்டை, கொத்தான், ஊமத்தை, செருப்படை, வெட்டிவேர் இவைகளையெல்லாம் சேர்த்துச்செய்ய மாரணமாகும்.

## இராஜ மாரணம்.

அரசு, புரசு, அருணி, பிணத்தின்பல், மண்டையோடு இவைகளைக்காலமறிந்து உபயோகிக்க இராஜமாரணமாகும்.

## சத்துரு மாரணம்.

நஞ்சு, புங்கு, ஐங்காயம், காகத்தின் தலையெலும்பு, கொளுஞ்சி இவைகளை உபயோகிக்க சத்துருமாரணமாவான்.

## பூத மாரணம்.

நச்சுப்பல்லி, நாக்கழுக்கு, கழுதைக்குளம்பு, கழுதைக்கண், கடுகு, முருங்கைவிரை, கழுதைச்சடை, பன்றிபுட்டை, கருநாபி, கள்ளி, ஐங்காயம் இவைகளைச்சேர்க்க பூதமாரணமாகும்.

## ஜீவஜெந்துக்கள் மாரணம்.

கொல்லைப்பல்லி, கொம்மட்டி, குழந்தைமலம், குழந்தைநகம், குழந்தைப்பல், கல்நெருக்கி, கடுகொட்டி, திகைப்பூண்டு, கருநாபி, சொல்மயக்கி, பிணமயக்கி இவைகள் வகைக்கு 1-விராகனெடையாகச் சேர்த்துச்செய்ய ஜீவஜெந்துக்கள் மாரணமாகும்.

## தெய்வ மாரணம்.

காரெள்ளெண்ணெய், தலைமண்டை, காக்கையெச்சம், புறாவெச்சம், அரிதாரம், மயிர் மாணிக்கம், தேவாங்கு, பச்சோந்தி இவைகள் சேர்த்துச்செய்ய தெய்வங்கள் மாரணமாகும்.



## சர்ப்பவிஷிகள் மாரணம்.

கொத்தான்விரை, ஐங்கோலம், புறாபிச்சு, புறாவெச்சம், கருங்குருவி, தெள்ளிமருட்டி, பகல்மருட்டி, குழந்தை மலம், கை இரத்தம் இவைகளை அரைத்துத்திலர்தமிட்டால் சகலவிஷிகளும் மாரணமாவார்கள்.

## பூத அஞ்சன வித்தை.

தேற்றான்விரை, கௌதும்பை, குப்பைக்கீரைவிரை, கரிசலாங்கண்ணி, மஞ்சள், காக்கைக்கண் இவைகளையெல்லா மொன்றாக அரைத்துத்திலர்தமிட பூதகூட்டமெல்லாந் தோன்றும்.

## பாதாள அஞ்சன வித்தை.

மஞ்சள், சாதிக்காய், துளசிவித்து, தும்பை, பொற்றலைக்கையான், பசுவின்கண், தேற்றான்விரை இவைகளை ஆமணக்கெண்ணெயில் மைசெய்து தீட்டிப்பார்க்க பாதாளத்திலுள்ள நிதிகளெல்லாந் தோன்றும்.

## தூலதூரம் பார்க்கும் மை வித்தை.

ஈசவிறகு, சிறுகீரை, ஆடுதீண்டாப்பாளை, காக்கை நெஞ்சுக்குழி, மேற்படி பிச்சு, குரங்கு பஞ்சுமண்டை, செம்போத்து இவைகளைக்காரவின் நெய்யினால் மைசெய்துத்தீட்டிப்பார்க்க தூரத்திலுள்ள நிதிகளெல்லாந் தோன்றும்.

## நீர் அஞ்சன வித்தை.

கோசம், பச்சை ஓணான் பிச்சு, பச்சை ஓணான்கண், கீழ்காய்நெல்லி, நரிமோட்டி, கையாந்தகரை இவைகளைத் தேன்விட்டரைத்துப்பார்க்க நீரிலுள்ள வஸ்துக்களெல்லாந் தோன்றும்.

## குறிசொல்லும் அஞ்சன வித்தை.

கூகைக்கண், கூகைப்பிச்சு, கூகைத்திராட்சி, தக்காளி, புன்னைவாகைவேர், பொற்றலைக்கையான், தக்காட்டிவேர், நாகமழைத்தான்வேர், தும்பை இவைகளை நெய்விட்டரைத்து வாலைப்போற்றித்திலர்தமிட்டுக் கொண்டு குறிசொல்ல யாவர் மனதிலுள்ளதையுஞ் சொல்லலாம்.

## சர்வ அஞ்சன வித்தை.

பூனைவணங்கி, கிலுகிலுப்பை, ஓரிலைத்தாமரை, கீழாநெல்லி, மாலைக்கட்டி, ஆடுதீண்டாப்பாளை, நீலி, தும்பை, நீர் விலக்கி, தூங்கன், கௌதும்பை இவைகளைச்சேர்த்து மைசெய்துப்பார்க்க உலகத்திலுள்ள யாவுந் தோன்றும்.

## வேறு அஞ்சன வித்தை.

ஆள்காட்டிமுட்டையைப் புதிய சட்டிக்குத்தடவி, கற்பூரப்

புகைபிடித்து மையை வழித்து டப்பியில் வைத்துக்கொண்டு, அஞ்சனதேவியைப்போற்றி, வெற்றிலையில் தீட்டிப்பார்க்க சகலமுந்தெரியும்.

### பரவை அஞ்சனம்.

வேர்ப்பலாக் கொட்டையைக்கருக்கி புத்துத்தேனிலரைத்துத் திலர்தமிட பரவை அஞ்சனமாம்.

### மோகனங்களுக்குப் போதுமந்திரம்.

ஆரோ, ஆரோ, அரி, அரி, மோகாய், மோகாய், மோகினி, ஊங் ஊங், ல, ல, ல என்று 108-விசை செபிக்கச்சித்தியாகும்.

### தம்பனங்களுக்கு போதுமந்திரம்.

ரீங், வங், சிங், லங், மங், மங், லங், வங், லங், யங், லங், தம்பாயா, தம்பாயா, அரே, அரே, நிர்சிய, நிர்சிய, நீலகண்டரூபி, சரணம் ரூபி, ஆதியானந்தி, ஆத்தாள், கம்பனபாராயணி, ஐயுங், கிலியும், சுவஹா வென்று லட்சமுருசெபிக்க சித்தியாகும்.

### உச்சாடனங்களுக்குப் போதுமந்திரம்.

ஆம், ஓம், குரோங், அரங், அரங், ரா, ரா, சீக்கிர, சீக்கிர, உச்சாடாய, அதிபைரவி, தூளி, தூளி, தூக்கு, தூக்கு, அருணி, அருணி, ஆங்காராட்சி, அகோரரூபி, சுவஹா யென்று ஆயிரத்தெட்டுரு செபிக்கச் சித்தியாம்.

### எடனைகளுக்குப் போதுமந்திரம்.

ஓம் காட்டேரி, சாமுண்டி ஆத்தாள், காமரூபி, அங், அங், நாரி, நாரி, எந்து, எந்து, எதையா, எதையா, அவடே, அவடே, ர, ர, ர, ர, சிங், சிங், சிங், வங், வங், சுவஹாயென்று ஆயிரத்தெட்டுரு செபிக்கச் சித்தியாகும்.

| | | | |
|---|---|---|---|
| 67 | 74 | 2 | 7 |
| 6 | 3 | 71 | 70 |
| 73 | 68 | 8 | 1 |
| 4 | 5 | 69 | 72 |

### நினைத்தகாரியம் சித்தியாகும் வித்தை.

செப்புத்தகட்டில் பதினாறு அறையைக் கீறி அறைகள்தோறும் சூலமிட்டு 'நமசிவய' என்னும் மந்திரத்தை அதிலடைப்பதுடன் நூற்றி ஐம்பதையுங்கூட அடைத் திப்பூசையில் வைத்து 'ஓம் ரீம்' என்ற அக்ஷரத்தை லக்ஷத்தியெட்டுரு செபித்துக் கட்டிக்கொண்டுபோக நினைத்த காரியங்களெல்லாஞ் சித்தியாகும்.

### ஆக்ருஷ்ணங்களுக்குப்போது மந்திரம்.

மாகாளி, வைரவி, முக்கண்ணி, ஆக்ருஷ்ண தூளி, ஆனந்த



வல்லி, நீலி, பகவதி, ஜெய, ஜெய, வெசயா, வெசயா, ஆக்ருஷ்ணபாரங், சூங், கிலிங், லிங், கிமடி, கிருடி, யிம், யிம், லா, லா, லங், நங் பரா, பரா, ரா, ரா, கசீ, கசீ சுவஹா யென்று ஆயிரத்தெட்டுரு செபிக்கச் சித்தியாகும்.

### பேதனங்களுக்குப் போதுமந்திரம்.

அரகர, வபகம, திரிபுரதகனி, தேவி, காரணி, செந்தாமரையே, ஆத்தாள், எறிட்ட பார்வையாளே நீலி, முக்கண்ணி,பாங்,டாங், குங், டுங், சரரூபி, சக்ரரூபி, ஆபி, பிரத்தியங்கிரே, ஜெய ஜெய, பேதையா, பேதையா, சிங், சிங், யங், யங், லங், லங், மங், மங், யா, யா, சுவஹாயென்று ஆயிரத்தெட்டுருகொடுக்க சித்தியாகும்.

### மாரணங்களுக்குப்போது மந்திரம்.

மாரி, பகவதி அம்மாள் திரிசூலி, டாகினி, டாகினி, சாடு, சாடு, அய்யா, அய்யா, சர்வமாரணி, ஆபி, சீ, போ, தேவியென்று ஆயிரத்தெட்டுரு செபிக்க சித்தியாகும்.

### முருங்கக்காயில் புழு நெளியும் வித்தை.

நன்றாகத்தேரின முருங்கக்காயின்மேல் கல் சுண்ணாம்பை கனக்கப்பூசி வெய்யலில்வைக்க அது சூடேறினவுடன் அதிலிருந்து புழுக்களைப்போல் வெளிகிளம்பும்.

### வேறு வசிய வித்தை.

(தூம்) என்னும் மந்திரத்தை வெள்ளிக்கிழமை உச்சிவேளையில் 108-ஜெபித்து இடதுகால் மண்ணையெடுத்து, மயானத்திற்கொண்டுபோய் மஞ்சள் பாவைசெய்து, மேற்படி மண்ணைப்போட்டு மந்திரஞ்செபிக்கச் சித்தியாகும்.

### வேறு மோகன வித்தை.

உடன்கட்டை யேறினவர்களுடைய கருவில் இடதுகால் மண்ணைச்சேர்த்து (தூம்) என்று 1008-செபிக்க சித்தியாம்.

### நயனங்கெடும் வித்தை.

பகையாளியின்வாய் சோற்றில் மின்மினிப் புழுவைச்சேர்த்து அரைத்து அவர்கள் வீட்டு விளக்கில் கடுகளவு போட்டுவிட்டால் அவர்கள் கண்கெட்டுவிடும்.

### இதற்கு நிவர்த்தி வித்தை.

புளியந்தேனில் மிளகிட்டரைத்து அஞ்சனம்போட எப்போதும் போலாகும்.

### மோரைக் குழம்பாக்கும் வித்தை.

கொஞ்சந்தயிரை ஒரு பெரியகுடத்திலிட்டு அதின்நிறைய ஜல மூற்றி கொத்தானைப்போட்டுக் கலக்கியெடுக்க மோர் திக்காக யிருக்கும்.

### தீபம் குறிசொல்லா வித்தை.

தீபம்வைத்துக் குறிசொல்லுமிடத்தில் அவர்களுக்குத்தெரியாது சுடலைப்பானை யோட்டைத்தீபத்தின் கீழ்வைக்க தீபங்கட்டிவிடும்.

### முட்டைகளைப் பரிக்ஷிக்கும் வித்தை.

முட்டைகளைச் சோதிக்கவேண்டுமானால், ஜலத்தில்கொஞ்சம் உப்பைச்கரைத்து, முட்டையை அதில்போட்டால், நல்லமுட்டை அமிழ்ந்து கெட்டமுட்டை மேலே கிளம்பும், அதைப்பார்த்து எடுத்துக்கொள்ளவும்.

### காசுவிழிப்பு வித்தை.

கறமுேராடில்லாத ஒரு டம்ளரின் அடிப்புரத்தில் தண்ணீரை யூற்றி அதில் காலணாவைப்போட்டு, மேலொரு கடிதத்தைவைத்து மூடிக்கவித்துப்பார்க்க அதினுள் காலணா-1, அரையணா-1, இருக்கும். மறுபடியும் அதை ஊற்றி நிமித்தியெடுக்க காலணா ஒன்றுதானிருக்கும்.

### பத்திர வித்தை.

இருட்டு வீட்டில் நைட்ரேட் ஆப்சில்வர் என்பதைத் தண்ணீரில் கரைத்து அதைக்கடிதத்தின் மேற்பூசி அதின்மேல் ஒரு மெல்லிய கடிதத்தில் எழுதிய படம், பத்திர முதலிய எதுவாகிலும் அதினோடு பொருந்தவைத்துப்பிரித்து அப்படியே வெய்யலில்வைத்து 5-நிமிஷம் பொருத்து இருட்டில்வைத்து எடுத்துப்பார்க்க வெறுங் கடிதத்தில் அவையெல்லாம் பதிந்திருக்கும். அதை வெய்யலில் வைக்க மறைந்துவிடும். நிழலில் இருக்க வெகு நாளைக்கிருக்கும்.

### விரற்புரட்டு வித்தை.

ஒருவன் நெற்றியில் தனது வலதுகை நாலுவிரல்களையுமடக்கி, ஆள்காட்டி விரலைமாத்திரம் நெற்றியின் புருவமத்தியிலூன்றி, வலது கண்ணைமூடி இடது கண்ணாற்பார்த்தாலும் இடது கண்ணைமூடி வலது கண்ணாற்பார்த்தாலும், கைவிரலானது கோணலாய் வளைந்து புரண்டிருப்பது போலிருக்கும்.

### என்கிரேவர் வித்தை.

ஒரு செப்புதகட்டை இரண்டு பக்கமுந்துலக்கி, மெழுகையுருக்கி இரண்டு பக்கமும்பூசி அதில் எழுதவேண்டியதை கூர்மையுள்ள ஊசியினால் எழுதி நைட்ரீக் ஆசிட்டும், ஆசேடிக் ஆசிட்டும் ஒன்றாய்க்கலந்து இதை யதிற்றேய்த்து 5-நிமிஷம்பொருத்து எடுத்து மெருகை துடைத்துப்பார்க்க என்கிரேவர் செய்ததுபோல எழுத்துகள் பதிந்திருக்கும்.



### நீர் ஒட்டாதிருக்கும் வித்தை.

ஸ்கோபொடியாம் என்னும் பவுடரைக்கையிற் பூசிக்கொண்டு ஒரு கோப்பையில் ஜலம்வார்த்து அதில் ஏதேனும் ஒருவஸ்துவைப் போட்டுக் கையினாலெடுக்க, கையில் தண்ணீர் ஒட்டாது, மேற்படி கைகளில் ஈரமுமிருக்காது.

### வெறிபிடிக்கும் வித்தை.

பன்றிமலம், மனிதர்மலம், நீட்டுச்சிலை இம்மூன்றையும் குழித்தைலமிறக்கி, ஜாலக்காளைப்பூசித்து தணலில்விட்டு எரிக்க, அப்புகைபட்ட பேர்களெல்லாம் பேய் பிடித்தவர்களைப்போல் ஆடுவார்கள்.

### இதுவுமது.

ஆதிவாரங்காலையில் ஒனான் கொடிக்கிக்காப்புகட்டி வேரோடு மற்பிடுங்கிவந்து வளையமாடி (ஜும்) என்ற மந்திரத்தை 108-உரு செபித்து, அதை நெருப்பிற்போட அப்புகைப்பட்ட மனிதர்களெல்லாம் தலைசுற்றி ஆடுவார்கள். அவர்களை தண்ணீரில் முழுகவைக்க அது நின்றுவிடும்.

### சாபநிவர்த்தி வித்தை.

ஆசாசாடிகி தாராருகு, வெகு சித்திராகு, ஆகுசன்னமுசலாமுராம் என்று 9-விசை செபித்து வேர்களைப்பிடுங்கிவர சித்தியாகும்.

### இதுவுமது.

ஐயும் சக்கிர சாபாயா, கிலியும் அகோராஸ்திராயா, சவ்வும் சர்வசாப விமோசய, விமோசய என்று 9-விசை செபித்துப் பத்திரங்களை உபயோகிக்க சித்தியாகும்.

### வேறு மீன்படும் வித்தை.

நிமிர்ந்திருக்கும் அகத்திச்செடிக்கு காப்புகட்டி, வேரறுமல் பிடுங்கிவந்து (வம்) என்ற மந்திரத்தை 1008-உருசெபித்து, அதை வலையிற்கட்டி தண்ணீரில்வீச, அவ்வலையில் ஒருமச்சமேனும் அகப்படாது. அதை அவிழ்த்துவிட்டு வீச மீன்கள்படும்.

### கோழிகள் மடியும் வித்தை.

ஈரவெங்காயத்தை எருக்கம்பாலிற்றோய்த்துக் காயவைத்துக் கோழிமுன்போட அதைத்தின்ற கோழிகளெல்லாம் பேதியாகி மாளும்.

### திரைமாறும் வித்தை.

பௌர்ணமி அல்லது பூரணைக்கு முன் ஐந்துநாளும், பின்னைந்து நாளும் இரவிற் சந்திரனைப்பார்த்துக் கொண்டேவர, சூரியன் தீக்ஷண்ணியமாறி, சந்திரன் குளிர்ச்சிதங்கும். அப்போது சாலேசரமகலும். இப்படி 4-5 மாதம் தவறாதுசெய்ய கண்துலங்கும்.

### பற்களுதிரும் வித்தை.

ஒருவர் மற்றொருவனைக்கடித்த மாத்திரத்தில் அக்கடிவாயில் எத்தனை பற்களழுந்தியிருக்கிறதோ அத்தனைக்கும் கோழியின் எச்சத்தைத்தடவ அப்பற்களெல்லாம் உதிர்ந்துவிடும்.

### சாராயபுட்டி வெடிக்கும் வித்தை.

கடுகுவைத்திருந்த புட்டியில் சாராயம் ஊற்றினால் உடனே வெடித்துவிடும் அல்லது சாராயத்தில் 5-6 கடுகைப்போட்டாலும் புட்டிவெடித்துவிடும்.

### கள்ளிறங்காத வித்தை.

சாதிக்காயின் தொம்பினால் ஆப்புசெய்து தென்னை, பனை, ஈச்சன் இம்மரங்களில் எதற்காகிலும் வேரில் துளைசெய்து மேற்படி ஆப்பை அடித்துவிட கள் கிஞ்சிற்றேனும் இறங்காது.

### கற்சிலை அழும் வித்தை.

கோயிலில் இருக்கும் கற்சிலைகளுக்குத் தலையில் பள்ளம் வைத்து அப்பள்ளத்தில் விழுகிறஜலம் கண்களின்வழி வரும்படியாகத் துவாரஞ்செய்து கார்க்கினால் அடைத்து வைத்திருந்து, அத்தேவதைகளுக்குத் திருவிழா காலங்களில் பூசை முதலிய அபிஷேகம் செய்யும்போது தந்திரமாகக் கார்க்கை யெடுத்துவிட்டு அபிஷேகஞ்செய்ய ஜலமானது கண்களின் வழியாய்வரும். அதைப் பார்த்தவர்கள் யாது காரணத்தினாலேயோ இத்தேவதை புலம்புகிறதென்று இக்கலியுகத்தில் கபடமறியாதவர்கள் நினைப்பார்கள். கலியுகத்தில் கற்சிலை யழுகிறது என்னபுதுமை.

### கற்சிலை பால்குடிக்கும் வித்தை.

கற்சிலையின்வாயிற் பாலைவிட்டால் அதுவயற்றில் தங்கும்படியாகிய பள்ளமமைத்து அதைக்கோடிக்குங்காலத்தில், அதன்பசியை ஆற்றும்படிக்கு பாலைச்சுயமாய்க்கரந்து அதின்வாயிலூற்ற அது வயற்றிலிரங்கிவிடும். அதைப்பார்த்த சனங்கள் இச்சத்தியுள்ள தேவதை பால் சாப்பிட்டு பசியாறிற்றென்று மேலுமேலுங்கொண்டு வந்து கொடுப்பார்கள். இதுவும் காலத்தின் கோலமே.

### மரமுலரும் வித்தை.

பனை, தென்னை, ஈச்சன், பாக்கு இம்மரங்களில் எதிலேனுஞ்



சரி அதின் நடுக்குருத்தைத்துளைத்து ஒரு கடுக்காயைவைத்துவிட அம்மரம் உலர்ந்துபோகும்.

### உருவங்காட்டும் வித்தை.

செப்புத்தகட்டை ஓடுபோல் வளைத்து அதனுட்புரத்தில் வெள்ளிக்கிலிட்டுப்பூசி, மேலே தூக்கிக்கட்டி அதை யார்பார்த்தாலும் அவர்கள் முகமெல்லாம் விகாரமாய்த்தோன்றும்.

### மோதிரம் உடையும் வித்தை.

கையில் போட்டிருக்கும் மோதிரமானது கழட்ட முடியாமலிருக்கும்போது அதன்பேரில் கொஞ்சம் பாதரசத்தைத்தேய்த்து சிறிது நேரங்கழித்துத்தட்ட பளீரென்று உடையும்.

### இந்தியன் இங்கிசெய்யும் வித்தை.

வஜ்ஜிரத்தை இளகக்காய்ச்சி அதில் நல்லெண்ணெய் விளக்கேற்றின கரியைச்சேர்த்துக்குழைத்து உலர்ந்தபின் பார்க்க அசல் இங்கியைப்போலிருக்கும். அதை எழுத உபயோகித்துக்கொள்ளலாம்.

### சகல விஷங்களும் நீங்கும் வித்தை.

எட்டிமரத்தைத்துளைசெய்து அதில்கொட்டையில்லாத பழம் புளியைத்துருத்து மேற்படி மரத்தினால் தமர்போட்டு 40-நாள் சென்றெடுத்து, பிறகு எட்டி மரத்தினால் பரணைசெய்து அதில் அப்புளியை வைத்துக்கொண்டு (நல்ல சர்ப்பம் சாரை) இதுகள் நீங்கலாக மற்ற சில்லரை விஷங்களுக்கெல்லாம் குன்டுமணிப் பிரமாணங்கொடுக்க விஷம் பரக்கும். கைகண்டது.

### வேறு வழக்கு வெல்லும் வித்தை.

நெருஞ்சிவேர், மயிரோசனை, அறுகன்வேர் இவைகளைச் சமயெடையெடுத்துக் கணேசரைப்பூசித்து வாயிலடக்கிக் கொண்டு போக வழக்குகள் வெல்லும். எதிரிகள் வணங்கி வருவார்கள்.

### கரிப்பூச்சறும் வித்தை.

முன்மாதிரி ஆடுதின்னாப்பாளை வேரைக்கொண்டுவந்து சாராயம் விட்டரைத்து (ஐயும்கிலீம்) என்று 108-விசை செபித்து, அதின் பேரிற்றெளிக்க கரிப்பூச்சகலும்.

### கரையான் அகலும் வித்தை.

கொட்டைக்கரந்தையை முன்போல் கொண்டுவந்து கழுதை மூத்திரம் விட்டரைத்துக்கலக்கி, (கிலீசா) என்று 108-செபித்துப் பூசித்துத்தெளிக்கக் கரையான்கள் நசியும்.

## விஷமிறங்கும் வித்தை.

சிறியாநங்கைச்செடிக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டி மறு ஆதிவாரத்தில் எடுத்துவந்து நிழலிலுலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு உள்ளுக்குக்கொடுத்தால் கூடிய சீக்கிரத்தில் விஷமிறங்கும்.

## கிளிஞ்சல் உற்பத்தியாகும் வித்தை.

மக்கிப்போன ஊமச்சியைப்பொடித்து ஒரு பாத்திரத்தில் ஜலம்விட்டு அதில் ஒரு சிட்டிக்கை தூளைத்தூவி, பத்து நிமிஷம் பொருத்துப்பார்க்க கிளிஞ்சல்கள் மேய்ந்துகொண்டிருக்கும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

## வேறு தம்படி நகரும் வித்தை.

நன்றாகயிழைத்த ஒரு மரப்பலகையின்மீது முத்தெண்ணெய்யை ஒரு விரல் பிரமாணம் தழும்பப்பூசி, அதிலொரு மூலையில் சல்லியொன்றைவைத்து சூடத்தைக்கொளுத்தி, சல்லியின்மீது வைக்க அது நகர்ந்துபோகும்.

## புகைக்கூண்டு வித்தை.

கோழிமுட்டைக் காகிதத்தில் இரண்டரை அடி உயரமு, இரண்டடி வட்டமுள்ளதாகக் காற்று வெளியே போகாதபடி ஒட்டி, வாய்ப்புரத்தில் மூங்கில் பத்தையை வட்டமாகக்கட்டி அதின் நடுவில் தந்திக்கம்பியைக்கட்டி, அதின்நிறைய புகையைநிறப்பி, மேலே தூக்கிவிட்டுவிட அது ஆகாயத்தில் பரக்கும். பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

## தாள்குத்தும் வித்தை.

தாள்குத்திக்கொண்டு நடக்கவேண்டுமானால், காதுகுத்துவதைப்போல் தாடையில் குத்திச்சடைபோட்டு வளர்த்துக்கொண்ட பின்னர், வெள்ளியால் செய்ததாளைப்போட்டு மாட்டிக்கொண்டு நடிக்க உண்மையென்று நம்புவார்கள்.

## தோல்பந்து பரக்கும் வித்தை.

ஆட்டின் மூத்திரப்பையை வாயினலூதி, அதில் சிறிது பாதரசமும், பனிநீரும்விட்டுக் காற்றுப்போகாமல்கட்டி, வெய்யலில் வைக்க சூடேறினவுடன் ஆகாயத்தில் எழும்பும். பார்ப்பர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

## மீன்படா வித்தை.

வள்ளிக்குக் காப்புகட்டி வேரறுதப்பிடுங்கி வீரயமாடி (சி) என்ற மந்திரத்தை நூற்றெட்டு உருசெபித்து அதைவலையிற்கட்டி



தண்ணீரில்வீச, அவ்வலையில் ஒருமச்சமேனு மகப்படாது. அதை அவிழ்த்துப்போட்டால்தான் மீனகப்படும்.

## மீன் அழைப்பு வித்தை.

தவிடும், எள்ளும் வெவ்வேறயரைத்து ஒன்றாகக்கலந்து (ஊம்) என்ற மந்திரத்தை 108-உருசெபித்துப் பூசித்து, தண்ணீரிற்றெளிக்க மீன்களெல்லாந்திரளும். வலையில் சுலபமாக பிடிக்கலாம்.

## வேறு பயிர்செழிக்கும் வித்தை.

நாயுருவிக்குக்காப்புகட்டி வேரறுதப்பிடுங்கி வீரயமாடி (மா) என்ற மந்திரத்தை நூற்றெட்டு உருசெபித்து பூசித்து வயலில் புதைத்துவைக்க பயிர் நன்றாகச்செழித்து வளரும்.

| | | | |
|---|---|---|---|
| 46 | 53 | 2 | 7 |
| 6 | 3 | 50 | 49 |
| 52 | 47 | 8 | 1 |
| 4 | 5 | 48 | 51 |

## ருத்திரவசிய வித்தை.

தங்கத்தகட்டில் பதினாறறை வரைந்து அறைகள்தோறும் சூலமிட்டு நூற்றெட்டைக்கிரமத்துடன் அதிலடைத்து ருத்திரனை மனதிலிருத்தி 'நமசிவய' என்று 1008-விசை செபிக்க வசியமாம்.

## அலையடிக்கும் வித்தை.

கோழிமுட்டையில் நவாச்சாரத்தைப்போட்டு அரைத்து (பா) என்ற உருவை 108-உரு செபித்து தண்ணீரிற்போட, அதில் மிகுதியாய் அலையடித்து சமுத்திரம்போல் தண்ணீர்பொங்கும்.

## அலையடங்கும் வித்தை.

துருசு, விஷ்ணுகாந்தி இவ்விரண்டையும் வெவ்வேறாய்ப் பொடிசெய்து (ஆ) என்ற மந்திரத்தை 108-செபித்து சமுத்திரத்தில் விட்டெறிய அலையடங்கிவிடும். பொங்கி எழும்பாது.

## குளிர்ந்த ஜலம் சுடும் வித்தை.

நீர்மேல் நெருப்பைப்பொடிசெய்து (ஈ) என்ற மந்திரத்தை 108-செபித்துக்குளிர்ந்த நீரிற்போட நீர்கொதிப்பேறும். இம்மூலிகை தண்ணீரிலேயே தானிருக்கும். அதின் சாற்றை தண்ணீரிற் பிழிந்தால் புகையெழும்பும்.

## சுடுநீர் குளிரும் வித்தை.

முடக்கொத்தானைப் பொடிசெய்து (ஐ) என்ற மந்திரத்தை 108-உருசெபித்து தண்ணீரிற்போட சுடுகைமாறி குளிரும். மேற்

சொன்னவைகளைத் தக்கபடி போட்டால்தான் சித்தியாகும். அதிகப்படின் காரியங்கெடும்.

### குளம் உடையாத வித்தை.

அழுக்கரா வேரைக்குளிசமாடி (கிலீம்) என்னும் மந்திரத்தை 108-செபித்து குளத்தங்கரையிற் புதைத்துவைக்க அக்குளமுடையாது.

### வேறு தேள் உற்பத்தி வித்தை.

ஒரு புதிய செங்கல்லுக்கு நீர்வாத்துத்தீயில் வைத்தெரித்து கையினால் அரக்கித்தேய்த்து அப்படியே தரையில்வைத்து, அதின்மேல் செத்தைக்குப்பைகளைப் போட்டுமூடி, 4-5 நாள் பொறுத்துப் பார்க்க, கணக்கில்லாததேள்கள் உற்பத்தியாகி யிருக்கும்.

### வேறு விளைவுபெருகும் வித்தை.

சீதாதேவி செங்கழுநீருக்குக் காப்புகட்டி, வேரறுமல் பிடுங்கிவந்து (ஏ) என்று 108-தாஞ்செபித்துக்குளிசமாடி, அதை புலங்களில் புதைத்துவைத்தால் விளைவுகள் நன்றுகபெருகும். சாவியாகப் போகாது, சேதாரமாகாது, கைகண்டது.

### விளைவுகேடும் வித்தை.

முன்சொல்லியபடி கொடிவேலிச் செடிக்குச்செய்து (யா) என்று 108-விசைசெபித்து அதைப்புலத்திற் புதைத்துவைக்க அப்புலங்கெடும். விருத்தியாகாது.

### பச்சான் அகலும் வித்தை.

முன்மாதிரி ஆடுதின்னாப்பாளையைக் கொண்டுவந்து அதற்குச் சரி வசம்பு வைத்தரைத்து தோலுரிய நீரிற்கலந்து (ஒவ்வு) என்ற மந்திரம் 108-செபித்துத்தெளிக்க பச்சான்முதலியது பறந்துவிடும்.

### நெடுமுக்குணமறும் வித்தை.

முன்போல ஊணுங்கொடிக்குச்செய்து வேரைப்பிடுங்கி சாருயம் விட்டரைத்து (சீயா) என்ற மந்திரத்தை 108-விசை செபித்து, அள்ளித்தெளிக்க நெடுமுக்குணமகலும்.

### குருத்துப்புழுக்களறும் வித்தை.

தின்றவிடாங்கீஞ்சானுக்குக் காப்புகட்டி பூசித்து வேரறுமல்பிடுங்கி சாராயம் விட்டரைத்து (கா) என்று 108-விசை செபித்து எந்த மரங்களாயினுஞ்சரி அதின் குருத்துகளின்மேல் தெளிக்க அக்குருத்துப்புழுக்கள் நசித்துவிடும்.



### எலிப்புழு அகலும் வித்தை.

முன்போல் குப்பைமேனியைக் கொண்டுவந்து சாராயம் விட்டரைத்து (ஐயா) என்ற மந்திரம் 108-செபித்து அதை ஒரு கொம்பின்முனையில் தடவி வயலில்புதைத்துவைக்க அவ்விடத்திலுள்ள எலிப்புழுக்கள்சாகும்.

### அதிகமாகக்காய்க்கும் வித்தை.

பாதசரத்தை ஊமத்தன் சாற்றிலரைத்து அதைத்தேவி சக்கிரத்திற்குப்பூசி (கிலீ) என்ற மந்திரத்தை 108-சேபித்து மரம், கொடி, வேர் இதுகளில் புதைக்க அதிகமாகக்காய்க்கும்.

### அதிகமாகப்பூர்க்கும் வித்தை.

அரிதாரத்தைச் சுண்ணும்பு விட்டரைத்து தேவி சக்கரத்திற்குப்பூசி (ஐ) என்ற மந்திரம் 108-செபித்து புதைக்க அம்மரம் அல்லது செடியானது விசேஷமாகப்பூர்க்கும்.

### இலே-பூ-காய் உதிரும் வித்தை.

பரங்கிப்பாஷாணத்தை சாராயம் விட்டரைத்து தேவி சக்கரத்திற்குப்பூசி (கிலி) என்ற மந்திரத்தை 108-செபித்து, வேரிற்புதைக்க அம்மரம அடியுடன் உதிர்ந்துவிடும்.

### இலே-பூ-காய் விருத்தியாகும் வித்தை.

நவாச்சாரத்தை குதிரை மூத்திரத்திலரைத்து தேவி சக்கரத்திற்குப்பூசி (ஊக்கு) என்று 108-செபித்து வேரிற்புதைக்க அம்மரம் ஓங்கி வளரும்.

### ஒருபுறங்காய்க்கும் வித்தை.

படிகாரத்தைச் சிறுநீரிலரைத்து சக்கரத்திற்குப்பூசி 108-செபித்து பூசித்துப்புதைக்க அப்பக்கம் காய்கள் அதிகங்காய்க்கும் புதைக்காதபக்கம் அதிகங்காய்க்காது.

### தழை தழைக்கும் வித்தை.

வெண்காரத்தைத் தண்ணீரிலரைத்து தேவி சக்கரத்திற்குப் பூசி (சிவாஐ) என்று செபித்து, மறுபடியும் (மாவா) என்று 108-செபித்து ஒரு குடுவையில்வைத்து, சிகப்புச்சாவல் பலிகொடுத்து, காற்பக்கங்களைகளைச் சுற்றிவந்து ஈசானியதிசையிற் புதைக்க அம்மரம் உதிராதுதழைக்கும்.

### தேவிசக்கர வித்தை.

குருக்கேயும், நெடுக்கேயும் மும்மூன்று கோடிழுத்து 8-குல

நிடவும் நான்கறையா யிருக்கும் அதற்குமேல் ந-சி, கிழ் சி-ம, போட்டு அந்தந்த செய்தொழில் மருந்தை இச்சக்கரத்திற்குப்பூசி, அந்தந்த மந்திரத்தை 108-செபிக்க வேலைகள் கிறைவேறும்.

## வசியமுதலியதற்கு வாரம் அறியும் வித்தை.

ஞாயிறுக்கு வசியமும், திங்களுக்கு மோகனமும், செவ்வாய்க்கு ஏடணையும், புதனுக்கு தம்பனமும், வியாழத்திற்கு உச்சாடனமும், வெள்ளிக்கு ஆக்ருஷ்ணமும், சனிக்கு மாரணமுஞ்செய்ய தகுதியுள்ளதென்று சொல்லினர்.

## மந்திரங்களுக்குத்திசையறியும் வித்தை.

கிழக்கு வசியமும், தெற்கு மோகனமாரணமும், மேற்கு உச்சாடனமும், வடக்கு பேதனமும், தென்மேற்கு ஏடணையும், தென்கிழக்கு தம்பனமும், வடமேற்கு ஆக்ருஷ்ணமும், வடகிழக்கு சகல வேலைகளுக்கும் நல்லது.

## மந்திரத்திற்கு உடுப்புகளறியும் வித்தை.

சிவந்த வஸ்திரத்திற்கு வசியமும், மஞ்சள் வஸ்திரத்திற்கு மோகனமும், பட்டு வஸ்திரத்திற்கு சகல கர்மமும், வெள்ளை வஸ்திரத்திற்கு பேதனமும், பச்சைப்பட்டு வஸ்திரத்திற்கு உச்சாடனமும் பலிக்கும்.

## சகல கர்மத்திற்கும் உலோகங்கள் அறியும் வித்தை.

காரீயம் வசியமும், வங்கம் மோகனமும், பொன் அழைப்பிற்கும், செம்பு தபனத்திற்கும், வெள்ளீயம் உச்சாடனத்திற்கும், குறுத்தோலை வித்துவேஷணத்திற்கும் இரும்புபேதனமும், வெள்ளி மாரணமுஞ்செய்ய உத்தமமாம்.

## சகல கர்மத்திற்கும் எண்ணெய் அறியும் வித்தை.

நல்லெண்ணெய் மோகனமும், ஏரண்டத்தெண்ணெய் ஆக்ருஷ்ணமும், ஆவின்நெய் வசிகரமும் வேப்பெண்ணெய்மாரணமும், புங்கெண்ணெய் உச்சாடனமும், ஆதளையெண்ணெய் தம்பனமும், மேதி, ஆடு, பன்றி இதுகளின் நெய் வித்வேஷணத்திற்கும் நல்லது.

## சமித்துகளறியும் வித்தை.

வன்னி, ஆல், விளா இச்சமுத்துகள் சுபத்திற்கும், கள்ளி, எருக்கு, எட்டி, அத்தி, இச்சி, விடத்தலை இச்சமுத்துகள் அசுபத்திற்கும் ஆகும்.

## கஸ்தூரிசெய்யும் வித்தை.

இரத்தபாளம், வீரம், வேங்கை, மரப்பிசின், , பழந்தின்னும்



வௌவாலெச்சம் இதுகளைச் சமயெடையாகக்கலைமானின் இரத்தத்தாலாட்டி உருண்டைசெய்து தாழைப்பூவினால் கவசஞ்செய்து சட்டிக்குள்வைத்து மேல்சட்டிமூடி ஒரு மண்டலஞ்சென்றெடுத்துப்பார்க்க கஸ்தூரிதோன்றும். அதையெடுத்து ஜலத்தில்போட்டுப் பரிக்ஷை செய்துப்பார்த்தால் அசல் இரத்தம் போலிருக்கும்.

## இதுவுமது.

எட்டுப்படி சுத்தமாகிய காண்டாமிருகத்தின் இரத்தத்தில் கருங்காலிப்பட்டைத்தூள், காசிக்கட்டி, கிராம்பு, ஏலக்காய் இவைகளைச் சரியெடையாய்க்கூட்டி ஒரு சாடியில்போட்டு, அதின் நிறைய பந்நீர்விட்டு வாயைமூடி சீலைசெய்து மூன்றுநாளெரித்தால் சரக்கெல்லாம் ஒன்றாகக்கட்டி கஸ்தூரியாக இருக்கும்.

## இதுவுமது.

இரத்தபாளம், கார்போகரிசி வாலுளுவை, கூகைநீர் இவைகளைச் சமயெடையாகயெடுத்து பன்னீராலாட்டிப் பாண்டத்திலிட்டு பூமியில் புதைத்து நாற்பதுநாள்சென்று எடுத்துப்பார்க்கத் தண்ணீரெல்லாஞ்சுண்டி கஸ்தூரிகட்டி யிருக்கும். அதை யெடுத்து முகர்ந்தால் மூச்சுத்திணறிக்காட்டும்.

## இதுவுமது.

காசிக்கட்டி, கருவாப்பட்டை இவைகளைச்சமயெடையா யெடுத்து அவுரிசாற்றாலரைத்து மறுபடியும் ஒட்டையின் இரத்தத்தாலரைத்து பிறகு பன்னீராலரைத்து முன்போல் பாண்டத்திலிட்டு 40-நாள் சென்றெடுத்துப்பார்க்கக் கஸ்தூரிகட்டி யிருக்கும். கோல்சிவந்த வைப்புக்கஸ்தூரியை எல்லாமருந்துகளுக்கும் உபயோகித்துக் கொள்ளலாம்.

67817

## பாம்புகள் வசியமாகும் வித்தை.

உம், எ, ஒ என்று 108 விசை செபித்தால் ஓடுகின்ற பாம்பு னது நின்றுவிடும்.

## இதுவுமது.

அம், எ, ஒ, என்று 108 விசை செபித்தால் தேளு முதலியவைக ளெல்லாம் அடங்கி நின்றுவிடும்.

## இதுவுமது.

நம், கிலீ என்று 108 விசை செபிக்க சர்ப்பங்களெல்லாம் படமெடுத்தாடும்.

## இதுவுமது.

சீ, யாம் என்று 108 விசை செபித்தால் சீறி கடிக்கவரும், அது சமயம் முன் மந்திரத்தை மனதில் நினைக்க அடங்கி நின்றுவிடும்.

இதுவுமது.

வம், யா, யா என்று 108-விசை செபித்தால் சர்ப்பங்கள் எங்கிருந்தாலும் ஓடிவந்து எதிரில் ஆடும்.

இதுவுமது.

நவ் என்னும் அக்ஷரத்தை 108-விசை செபிக்க சர்ப்பங்களெல்லாம் பயந்து அடங்கி, ஒடுங்கிப்போய்விடும்.

இதுவுமது.

கிலீம் என்று 108-விசை செபிக்க சர்ப்பங்களெல்லாம்வாயில் இரத்தங்கக்கும்.

இதுவுமது.

வா, வா, என்னும் அக்ஷரத்தை 108-விசை மனதில் நினைக்க சர்ப்பங்களெல்லாம் நகர்ந்துகொண்டே போகும்.

இதுவுமது.

நங்-சிங் என்று 108-விசை தியானஞ்செய்ய சர்ப்பங்களெல்லாம் விஷங்களைக்கக்கிவிடும்.

இதுவுமது.

அங், உங்கென்று 108 விசை மந்திரமோத எறின விஷமிறங்கும். ஆனால் மேற்படி மந்திரத்தையெல்லாம் முன்னதாகச்செபித்து சித்தியாக்கி வைத்துக்கொண்டால்தான் சமயத்திற்கு உதவும். அஃதன்றி சித்தியில்லாமல் நினைத்தபோது திடீரென்று உருகொடுத்தால் ஒன்றும் நடக்காது. ஆகையால், தகுந்த ஆசானைக்கொண்டு ஒவ்வொன்றையும் முன்னதாகவே சித்திசெய்து வைத்துக்கொள்வது நலம்.

கதவில் ஊசிநிற்கும் வித்தை.

ஒரு ஊசியில் ஒருமுழம் நூலைக்கோர்த்து கதவிற்கு சற்று தூரத்திலிருந்து விட்டெறிந்தால் அது சடக்கென்று கதவில் மாட்டிக்கொள்ளும். நூலில்லாமல் சாதா ஊசியை விட்டெறிந்தால் பொக்காது கீழே விழுந்துவிடும்.

காதவழி நடக்கக்கால்வலி தோற்றாத வித்தை.

ஆலமரத்தின் கீழ்முளைத்திருக்கும் ஆலங்கண்ணுக்கு வெள்ளிக்கிழமையதினங் காப்புகட்டி பூசித்து வேரை அறாது எடுத்து வந்து புதிய பாதரட்சைக்குள் வைத்து தைத்து காலில் போட்டுக்கொண்டு எவ்வளவு தூரமேனும் அலுப்பில்லாது நடக்கலாம்.

அவித்தநண்டு ஓடும் வித்தை.

அவித்த நண்டுகளை ஒரு பாத்திரத்தில் மஞ்சள் மஜிண்டாபவு



ரைக் கொஞ்சந்தூவி ஜலம் கொஞ்சம்விட்டு சற்று வைத்திருந்து பிறகு கீழேவிட ஓடும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

கிணற்றிலிறங்கி சாதம் சமைக்கும் வித்தை.

ஒருகுடுவையில் அரிசியைப்போட்டு எடுத்துக்கொண்டு சபையோர்களைப்பார்த்து, நான் இந்த அரிசியை தீயில்லாமல் கிணற்றிலிறங்கி சமைத்துக்கொண்டு வருகிறேன் பாருங்களென்று சொல்லிக்கிணற்றிலிறங்கி அரிசிக்குத்தகுந்த நீரைவிட்டு, குடுவையைத் தண்ணீருக்கு மேலே தூக்கிப்பிடித்திருக்க அரிசிவெந்து சாதமாகிவிடும். மறுபடியும் வெளியே வரும்போது கிணற்றில்முழுகி எழுந்துவர வேண்டும். அப்போதுதான் சபையார் நீரிலிறங்கிச்சமைத்தாயென்று நினைத்துக்கொள்ளுவார்கள். இவ்வித்தைக்கு அரிசியை மூன்றுதரம் வஸ்திரத்தில் மூட்டைகட்டி சுண்ணாம்புக்காளவாயின் கீழ்புதைத்துவைத்து காளவாய் வெந்தபிறகு எடுத்துக்கொண்டு செய்யவும்.

வேறு நரை மயிர்கறுக்கும் வித்தை.

தவஸ்முருங்கையென்னும் மூலிகைக்கு மங்களவாரம் கன்னிநூல் காப்புகட்டி வேரறாது பிடுங்கிவந்துக் குளிசமாடி, கையில் கட்டிக்கொள்ள நரைமாறும்.

சகல மூலிகைக்கும் உயிர்கோடுக்கும் வித்தை.

எந்த மூலிகைகளுக்கு உயிர் கொடுக்கவேண்டுமானாலும், முன்னம் மூலிகை யிருக்குமிடத்தைச் சுத்தஞ்செய்தப்பின் தூபதீபமிட்டுத்தேங்காயுடைத்து ஓம் மூலி, சர்வமூலி உன்னுயிர் உன்னுடலில் நிற்க சுவஹாவென்று 32-தரம் செபித்துக்கொண்டு வரவும்.

தீபவித்தை.

வெள்ளை அபிரேக்கை சிறுதுண்டுகளாக நறுக்கி சுவர் முள்ளங்கியென்னும் மூலிகைச்சாற்றில் ஊறவைத்து, மறுநாள் காலையிலெடுத்து, சுத்தப்படுத்தி மறுபடியும் ஊறவைத்துச் சுத்தப்படுத்தி வெண்மையானபின்பு அதை கிளிஞ்சல் சுண்ணாம்பு நீரில்கலந்து வெள்ளையடிப்பதுபோல் சுவர்களுக்கு அடித்துவிடவும், அது காய்ந்தபிறகு அவ்விடத்தில் ஓர் பவர்லைட்டைக் கொளுத்திவைக்க பார்ப்பவர் கண்களுக்கு எத்தனையோ தீபங்கள் எரிகிறமாதிரி தோன்றும். இவ்வித்தையை ஏதாகிலும் விசேஷமானதினங்களில் செய்தால் மிகவும் வேடிக்கையாயிருக்கும்.

துட்டுநகராதிருக்கும் வித்தை.

ஒருதுண்டு கற்பூரத்தைக்கொளுத்தி அதின்பேரில் கொஞ்சம் படிகாரத்தைப் பொடித்துப்போட்டு, அது அரைவேக்காட்டிலிருக்கும்போது ஓர்காலணா அல்லது அரையணாவை அதில்வைத்து அமு

தநிவிட கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும். எவ்வளவு பிரயாசைப் பட்டு எடுத்தாலும்வராது. கொஞ்சம் ஜலத்தைக் கையிலெடுத்துக் கொண்டு எடுத்தால் சுலபமாய் வந்துவிடும்.

பாலைத்தண்ணீராக்கும் வித்தை.

எவ்விதபாலாயிருந்தாலும் அதில் தாமரைக்கொட்டை மணியைத்தூளாக்கி ஒருசிட்டிகைப்போட அப்பாலெல்லாம் தண்ணீரைப்போலாகிவிடும்.

சாதம் அதிகமாகப்புசிக்கும் வித்தை.

குப்பைமேனிவேரையும், சிறுகண்பூளைவேரையும் சமயெடையாகவெடுத்துமென்று வாயிலடக்கிக்கொண்டு எவ்வளவு சாதமாகிலும் புசிக்கலாம். பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

இதுவுமது.

கழுதைக்குறத்தியின் மூக்கையறுத்து ஓர்கைக்குட்டையில் முடிந்துவைத்துக்கொண்டு, சாப்பிடும்போது அம்முடிப்பை முகர்ந்துக்கொண்டே எவ்வளவு சாதமாகிலும் புசிக்கலாம். பசியும் எடுத்துக்கொண்டேயிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1067 | 1074 | 2 | 7 |
| 6 | 3 | 1071 | 1070 |
| 1073 | 1068 | 8 | 1 |
| 4 | 5 | 1069 | 1702 |

சண்டாள பூதமந்திரம்.

காரியத்தகட்டில் பதினாறைக் கீறி, அறைகள்தோறும் சூலமிட்டு இரண்டாயிரத்தி நூற்றி ஐம்பதை அதிலடைத்து 'நமசிவய' என்று லட்சமுரு செபித்துக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள சண்டாளபூதமானது விலகுமென்று பெரியோர்கள் கூறினர்.

பாழாக்கும் வித்தை.

கழுதையின் கொழுப்பையுருக்கி அகலில்விட்டு, கன்னிநூல் போட்டு விளக்கேற்ற எவ்விதகொடிய பூதப்பிசாசுகளாயிருந்தாலும் அவ்விடத்தைவிட்டு விலகிவிடும் அவ்விளக்கை கோவில், வீடு முதலிய இடங்களில் வைத்தாலும் அவ்விடம் பாழாய்போய்விடும்.

கருந்தேள் உற்பத்தியாகும் வித்தை.

எருமைச்சாணியை ஜலம்விட்டுப்பிசைந்து குழம்பாக ஓர் பாண்டத்திலிட்டு வாய்மூடிபூமியில் புதைத்து ஒருமண்டலஞ் சென்றெடுத்துப்பார்க்க அதின்நிறைய கருந்தேள்களிருக்கும்.

பாம்புகள் உற்பத்தியாகும் வித்தை.

எருமைச்சாணியில் கோணிப்பட்டையைக் கலந்து பிடித்து



முன்போல பாண்டத்தில்போட்டுப் புதைத்து எடுத்துப்பார்க்க அதின்நிறைய பாம்புகள் உற்பத்தியாகியிருக்கும்.

இதுவுமது.

எள்ளுச்செத்தையைக் குப்பையாகக் கொட்டிவைத்திருந்து சிலநாள் பொருத்துப்பார்க்க அதில் இரத்தப்பனையன் என்னும் பாம்புகள் உற்பத்தியாகியிருக்கும்.

சோக்குபோடி வித்தை.

மூன்றுவருடத்திய அவரைச்செடியின் வேரைப் பொடித்து, வஸ்திரகாயஞ்செய்து விபூதியில் கலந்துவைத்துக்கொண்டு, தேவையானபோது கொஞ்சமெடுத்துக் காற்றுவாட்டமாக யார்மேல் தூவுகிறோமோ அவர்கள் நம்சொற்படி நடப்பார்கள். முறிப்பு:-சிரசில் ஜலம்விடத்தெளியும்.

வெற்றிலை சிவக்கும் வித்தை.

கருவேலங்கொழுந்தை கொஞ்சமெடுத்து வாயில்போட்டு மென்றதுப்பிவிட்டு வெறும் வெற்றிலையில் சுண்ணாம்பைத்தடவிப் போட வெற்றிலைப்பாக்கு போட்டதைப்போலிருக்கும்.

வெள்ளைத்தேள் உற்பத்தியாகும் வித்தை.

முன்மாதிரி பசுஞ்சாணத்தைச்செய்து ஒருமண்டலஞ் சென்றெடுத்துப்பார்க்க நிறைய வெள்ளைத்தேள்களாயிருக்கும்.

விபூதி விநாயகர் கரையாத வித்தை.

பிளாஸ்டர் ஆப்பாரீஸ் என்னும்மாவை விபூதியில்கலந்து ஒருவருக்குந் தெரியாதுவைத்துக்கொண்டு, சபையில் எல்லோருக்கும் முன்பாக மேற்படிவிபூதியைத்தாம்பாளத்தில்போட்டு விநாயகர் அஷ்டோத்திரத்தைச் சொல்லிக்கொண்டே ஜலம்விட்டுப்பிசைந்து விநாயகரைப்போல் உருவஞ்செய்து, கொஞ்சங்காற்றுவுடன் அவர்மீது ஜலம்விட்டு அபிஷேகஞ்செய்ய அவர்கரையாது குந்திருப்பார். ஆனால் ஜலத்தைமாத்திரம் தந்திரமாக விடவேண்டியது.

யக்ஷிணிவசிய வித்தை.

ஸ்ரீரீம், கிரீம், கிலீம், அவ்வும், சவ்வும், வவ்வும், மவ்வும், நமசிவய, ஓம் என்று செபித்து சாதிக்காய், கிராம்பு, வால்மிளகு, கற்கண்டு, புஷ்பம், பழம், பால் முதலிய என்ன வஸ்துக்கள் வேண்டுமென்று மனதில் நினைக்கின்றேயோ அதுகளெல்லாம் தடையின்றி வரும். அதைப்பார்த்தவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

வயிற்றில் டம்ளர் ஒட்டும் வித்தை.

ஓர்டம்ளரையெடுத்து அனைவர்களுக்குங்காட்டி அனைசரைத்

துதிப்பதுபோல் தூபதீபங்கொடுத்து, கற்பூரப்புகையைத் தந்திரமாக டம்ளரில்பிடித்து வயற்றில்வைத்து அழுத்திவிட அப்படியே பிடித்துக்கொள்ளும் விழாது.

### ரசகுண்டு பரக்கும் வித்தை.

காட்டாமணக்கன்பாலை ஓர் சிப்பையில் பிடித்துக்கொண்டு, வைக்கக்காரையை மேற்படி பாலில் தொட்டு வாயில்வைத்து ஊத முட்டைமுட்டையாக ரசகுண்டுகள் பரப்பது வெகு வேடிக்கையாயிருக்கும்.

### இரகசிய கடித வித்தை.

படிகாரத்தை ஜலத்தில்கரைத்து, பேனாவைத்தொட்டு காகிதத்தின்மேல் வேண்டுமானசமாச்சாரங்களை யெழுதிக்காட்ட எழுத்துகள்தெரியாது. அதை மறுபடியும் ஜலத்தில் தோய்த்துப்பார்க்க இங்கியில் எழுதின எழுத்துகளைப்போல் தோன்றும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### குளிசம் குதிக்கும் வித்தை.

ஓர் செப்புக்குளிசத்தில் பாதரசத்தையூற்றி வாயைமூடிவைத்துக்கொண்டு, சபையில் ஜாலமாடும்போது இக்குளிசத்தையெடுத்து அக்கினியில்போட அதுகுதிக்கும். பார்ப்பவர்கள் உனக்கு எக்ஷணி வசியமென்று சொல்வார்கள்.

### கோழிமுட்டை கண்ணில் ஒட்டும் வித்தை.

— கோழிமுட்டையிலிருக்கும் அம்பிலியைப்போக்கி அத்துவாரத்திற்கு ஜவ்வடைத்து அதின்மேல் வெள்ளைப்பிசினியைத் தூளாக்கித் தூவி காயவைத்து, வைத்திருந்து ஜாலமாடும்போது மேற்படி முட்டையைக் கையிலெடுத்து சல்மலையாளபகவதி, காளியாயியென்று வாயில்வைத்து ஈரஞ்செய்துக் கண்ணில் ஒட்டிக்கொள்ள விழாது. ஆச்சரியப்படுவார்கள்.

### நாய்த்தோல் நாயாகும் வித்தை.

நாயின்தோலுக்கு மாயாசக்தி மையைத்தடவி (கிலீம்) என்று செபித்துமூடி ஜாலக்காலைத்தியானித்துத்திரக்க உயிருள்ள நாயாகயிருக்கும்.

### குரங்குத்தோல் குரங்காகும் வித்தை.

குரங்குத்தோலுக்கு முன் மையைத்தடவி (யா) என்று செபித்துக் கூடையைப்போட்டு மூடித்திரக்க பார்ப்பவர்களுக்கு உயிருள்ள குரங்கைப்போல் தோன்றும்.



### அட்டகர்ம வித்தை.

தலைமஞ்சங்கொடியில் மாவைப்பூசி உலரவைத்துப் பிறகு, முப்பூ, ரவிபீஜம், மதிபீஜம் இவைகளைச்சேர்த்துத் தைலம்வாங்கி, இறம், கிலீம், ஓம் என்றுசொல்லி லக்ஷமுருசெபிக்கச் சித்தியாகும். இதனால் அஷ்டகர்ம வித்தைகளையுமாடலாம்.

### கள்ளனைப்பிடிக்கும் வித்தை.

10-பலம் நிலவாகைவித்தில் தலைமஞ்சங்கொடியும், மாவும் முப்பும் வகைக்கு ஒருவிராகனெடைச்சேர்த்து அரைத்துப் பில்லை செய்து உலரப்போட்டு, ஓர் பழகின பாண்டத்திலிட்டுக் குழித்தைலம்வாங்கி, ஆள்காட்டிபக்ஷியின் முட்டையைத் தைலமிறக்கி அதில் சேர்த்துக்கலந்து வைத்துக்கொண்டு தேவையானபோது ஆண்வெற்றிலையில் தடவிப்பார்க்க களவு, சூன்யம், ஏவல் முதலியதும் நன்றாய்த்தெரியும்.

### வேறு பேதன வித்தை.

சதுரமான ஓர் வேங்கைப்பலகைக்கு ஒனான் தோலைக்கட்டி, பேதன சக்கரத்தைப்போட்டு, சலாகையினால் சக்கரத்தைச் சுற்றி உள்பதிந்து அடைக்க எதிரி புத்திதடுமாறித்திகைப்பான்.

### பாம்பாகும் வித்தை.

ஜாலக்காலைத் துதித்து வைக்கோலில் மையைத்தடவிப்போட சபையோர்களுக்கு பாம்பு ஓடுகிறமாதிரி தோன்றும்.

### செங்குளவியாகும் வித்தை.

புளியன் இலைக்கு மையைத்தடவி (ஜிம்) என்று நினைத்துக்கீழே போட செங்குளவிகள் மேயுகின்றமாதிரி தோன்றும்.

### பக்ஷிகளாகும் வித்தை.

ஓம் என்று மையைத்தொட்டு எந்தப்பக்ஷியின் இறகில் தடவிப்போடுகிறாயோ அப்பக்ஷியாகவே பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.

### தேளாகும் வித்தை.

வேப்பிலைக்கு மையைத்தடவி ஜாலக்காலை நினைத்துப்போட எத்தனையிலைகள் கீழ்விழுந்ததோ அத்தனையும் தேளாகத்தோன்றும்.

### முப்பூ வித்தை.

தலைமண்டையோட்டை சிறு துண்டுகளாக நறுக்கி, உழமண்ணைக்கரைத்து வடிகட்டின ஜலத்தில் போட்டு, நீர் சுண்டக்காய்ச்சி, பிறகு நல்லஜலம்விட்டலம்பி உலரவைத்து அதன்பின் நாலுபடி சுண்ணாம்புக் கல்லைக்கரைத்து தெளிவையிறுத்து மேற்படி

பாண்டத்திலூற்றி, முன்னுலரவைத்த ஓட்டைப்போட்டு நீர்வற்றக் காய்ச்சி, அதையெடுத்துக் கல்வத்திற்போட்டு முன்தெளிவுநீரை விட்டு மைபோலரைத்து பில்லை செய்துக்காயவைத்து, கருமானுலையில் வைத்தூத சுன்னமாகும். அப்படிச் சுன்னமாகாவிட்டால் முன்போலரைத்து மறுபடியும் உலையில்வைத்து ஊதவும், பிறகு அதை நீரில்கலக்கி, சுண்ணாம்புக்காரையால் பாத்திகட்டி, அதில் ஊற்றி வரண்டபின் மறுபடியுமெடுத்துக் கலக்கியூற்றவும். இம்மாதிரி ஒன்பதுவிசைசெய்து எடுத்து வெய்யலில் உலரவைத்து, சத்திபூசை செய்து, அதன்பின் சுடுகாட்டுச்சாம்பலைக்கரைத்து முன்மாதிரி ஒன்பதுவிசைகலக்கி உலர்த்தினால் உப்பாகும். அதையும், முன் உப்பையும், நாதத்தினலரைத்து உலர்த்திமுழப்புடம்போட்டு ஆறின பின்னெடுத்து டப்பியில்வைத்து இஷ்டதேவதையைத் தியானித்து வைத்துக்கொண்டால் நினைத்த தொழில்களெல்லாம் சித்தியாகும்.

ரசமணி வித்தை.

காலையில் பன்றிக்குட்டிகளையெல்லாம் தாயிடம் பால்குடிக்கவொட்டாது ஓட்டிவிட்டால் சிலநேரத்திற்குள் தாய்பன்றிக்குப் பாலானது மூக்குவழியாகச்சிந்தும். அப்போது அப்பாலைவரவொட்டாமல் பிசைந்து அழுத்தி, ஐம்பத்தொருவிராகனெடை சுத்தி செய்தரசமும், ஒருவிராகனெடை முப்பூவுஞ்சேர்த்து, சத்தியைத் தியானித்து அதன்வாயில்போட்டுவாய், மூக்கு, காதுகளைத்தைத்து ஓர்புதிய பாண்டத்திலிட்டுமூடி, ஒருமாதஞ் சென்றெடுத்துப்பார்க்க ரசம்மணியைப்போல் கட்டியிருக்கும், அந்தரசக்கட்டு 1-எடையும் நாகம் 1-எடையும், தங்கம் 1-எடையுமாகவெடுத்து முதலில் தங்கத் தைமூசையிலிட்டுருக்கி அது உருகும்போது மற்ற இரண்டையுஞ் சேர்த்து களங்காக்கிவைத்துக்கொண்டு 10-எடை செம்பையுருக்கி அதற்கு மேற்படி களங்கை ஒரு எடைகொடுக்க அது ஒன்பதரை மாற்றாகும்.

இதுவுமது.

சுத்திசெய்த பாதரசத்தைப் பாம்பின் வாயில் வார்த்து அதில் முப்பூ ஒரு கழஞ்சுபோட்டு வாயைத் தைத்து மேலே தூக்கிக் கட்டிவிட்டு, அதற்கடியில் ஒரு பானையை வைத்தால் பாம்பானது அழுகி பானையில் விழும் அப்போது நாம் முன்வார்த்த ரசமானது மணியாகக் கட்டியிருக்கும் அதை யெடுத்து கொதிக்கவைத்து செந்தூரஞ் செய்துக்கொண்டால் சகல லோகத்தையும் வேதிக்கலாம்.

பாலைக் கடம்பாக்கும் வித்தை.

கடம்புபாலை ஓர் வெள்ளைத்துணியில் நனைத்துக் காயவைத்துக்கொண்டு, சபையில் ஒரு சொம்பில் பாலைக் கொண்டுவரச் செய்து, முன்காயவைத்த துணியைக்கொண்டு வடிகட்டி துணியைப்



நன்றாக அதில் பிழிந்துவிட்டுக் காய்ச்ச கடம்பாகும். அதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

மஞ்சள் சிகப்பாகும் வித்தை.

விபூதியுடன் சங்குநீரை போதுமான அளவு கலந்து முன்னுடியே வைத்துக்கொண்டு அரைத்த மஞ்சளை சபையில்காட்டி நான் மந்திரத்தினல் இம்மஞ்சளை சிகப்பாக்குகிறேன் பாருங்களென்று சொல்லி, முன் விபூதியைக் கையிலெடுத்து மந்திரஞ் சொல்லிக்கொண்டே மஞ்சளைப் பிசைய சிகப்பாகும். பார்ப்பவர்கள் இது வராகி வசியமென்று சொல்வார்கள்.

பானைகள் உடையும் வித்தை.

வெள்வேலன் பட்டைக்குங் கருச்சிலை சுற்றி, காளிகோயிலின் முன்வைக்க பானைகளெல்லாம் உடைந்துவிடும், அதனால் வியாபாரங்கெட்டு வருந்துவார்கள்.

தேங்காயில் முட்டை யிருக்கும் வித்தை.

ஓர்பெரிய தேங்காயின் கண்ணைத்திறந்து அதிலிருக்கும் நீரை அப்புறப்படுத்திவிட்டு காடியில் ஊறிய முட்டையை அதில்விட்டு கொஞ்சம் ஜலம்விட்டு மூடி, அதற்கு மஞ்சள், குங்குமம், புஷ்பம் முதலியது சாத்தி சபையில் கொண்டுவந்து காண்பித்து உடைக்க அதிலிருந்து முட்டை வருவது ரொம்பவும் ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

கோலில் இரத்தம்வரும் வித்தை.

ஒருசிறிய சோத்துப் பிரம்புத்துண்டில் இருக்கும் சடையை அப்புறப்படுத்திவிட்டு அதில் நிறைய, சிகப்புப்பவுடரைக் கலந்து ஜலத்தையூற்றி வைத்துக்கொண்டு, தேவையானபோது சபையில் அனைவர்களும் பார்க்க வாயில் கொஞ்சம் ஜலத்தையூற்றிக்கொண்டு முன் பிரம்பை வாயில் வைத்து ஊத, உதிரத்தைபோன்று ஜலம் கீழேவிழும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் இம்மாதிரி கைப்பிரட்டு வேலைகளை யெல்லாம் வெகு தந்திரமாகச் செய்யவேண்டும்.

ரொட்டியைப்பிட குருவி பறக்கும் வித்தை.

ரொட்டியை தந்திரமாக அறுத்து அதனுள்ளிருக்கும் சோற்றை யெடுத்துவிட்டு அதில் ஒரு சிட்டுக்குருவியைவிட்டு, வாய்புறந் தெரியாது பிசினியைத் தடவி மூடி, சபைக்குக் கொண்டுவந்து, மந்திரஞ் சொல்லித் தியானித்துவிட அதிலிருக்குங் குருவியானது பறந்துவிடும் எல்லோரும் பிரமிப்பார்கள்.

வயிற்றைக்கீறி நூலெடுக்கும் வித்தை.

நூலை வட்டவடிவமாகச் சுற்றி வயிற்றின்மீது வைத்து அதின்

மேல் மான் ஜவ்வை ஒட்டவைத்தால் அது ஒருவருக்குந் தெரியாமல் நமது தேகத்தைப்போலவே யிருக்கும். மேற்படி ஜவ்வைக் கீறி தோல் முனையைப் பிடித்து உருவிக்காட்ட பார்ப்பவர்கள் பிரமித்து உனக்கு காளி வசியமென்று சொல்லுவார்கள்.

கற்களை கடித்துக்காட்டும் வித்தை.

நத்தைச்சூரி செடிக்கு செவ்வாய்க் கிழமைய தினங் காப்பு கட்டி உச்சிவேளையது பிடுங்கிக்கொண்டுவந்து வாயில் போட்டுக் கொண்டு கற்களைக் கடிக்க தூள் தூளாகப்போகும் வாய் கூசாது.

பல்லுதிரும் வித்தை.

அவலைமென்றவர்களுக்கு உடனே கொஞ்சம் கரும்பைக் கொடுத்துத் தின்னச்சொல்ல, அவர்கள் அக்கரும்பை மென்றமாத்திரத்தில் வாயில் உதிரம் வருவதோடு பற்களெல்லாம் சீருகக் கழன்று விடும் ஆனால் இது மகாபாதகம்.

மோட்டுப்பூச்சி நாசமாகும் வித்தை.

கொஞ்சம் வெல்லத்தைக் கரைத்து மோட்டுப்பூச்சிகளுள்ள இடங்களில் தெளித்து வைக்க, அவ்விடத்தை எறும்புகள் சூழ்ந்துகொள்வதோடு, அங்குள்ள மோட்டுப்பூச்சிகளையும் நாசஞ் செய்யும்.

துடப்பம் நெளியும் வித்தை.

கனமாகவுள்ள துடப்பத்தை காலைந்தெடுத்து கயற்றைப் போல் முறுக்கிக் கீழேபோட்டு கொஞ்சம் ஜலந்தெளிக்க அது மெதுவாக நெளியும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

மயிரில் கல்லைத்தூக்கும் வித்தை.

குண்டுமணிப் பிரமாணமுள்ள ஓர் கல்லைத் தலை மயிரிற்கட்டி அசையாது தூக்க, கல்லெழும்பும் மயிர் அராது இம்மாதிரி பழக்கம் செய்துகொண்டே வந்து எலுமிச்சங்கனிப் பிரமாணமுள்ள கல்லையுந் தூக்கலாம்.

வேறு பேன் மாரண வித்தை.

ஓர் பேனைப் பிடித்துச் சபையோர்களுக்குக் காட்டி இதை தொல்லாமல் கொல்லுகிறேன் பாருங்களென்று சொல்லி, உள்ளங்கையில் வைத்து ஓர் சிட்டிக்கை மூக்குத்தூளை அதின்மேல் போட அது உடனே மாரணமாகும்.

வெற்றிலை சுழலும் வித்தை.

ஓர் வெற்றிலையை கிருகலாக முறுக்கி ஒரு சாணி உருண்டை



யில் சொருகி அதின்மேல் கொஞ்சம் ஜலந்தெளிக்க அது சுழலும் பார்ப்பவர்கள் சந்தோஷமடைவார்கள்.

வானவில் காட்டும் வித்தை.

சூரியன் நன்றாகப் பிரகாசிக்கும்போது அதன் நேரே நின்றுக் கொண்டு வாயில் ஜலத்தைவிட்டுக் கொப்பளித்துத் துப்ப, அச்சலம் விழுகிற சமயம் அதில் பலவித வர்ணங்களுடன் வானவில் தோன்றும் இது சிலருக்குத் தெரிந்தே யிருக்கலாம்.

நாகப்பூச்சி உற்பத்தியாகும் வித்தை.

சாதாரண பூமியைப் பண்படுத்தி அதில் சிறிது பச்சரிசி நொய்யைப் போட்டு ஜலந்தெளித்து வைக்கோலால் மூடி சில தினங்கள் பொறுத்துப் பார்க்க அதில் நாகப்பூச்சிகள் இருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 242 | 219 | 2 | 7 |
| 6 | 3 | 246 | 245 |
| 248 | 243 | 8 | 1 |
| 4 | 5 | 244 | 247 |

மயானபூத மந்திரம்.

ஈயத்தகட்டில் பதினாறறைக்கீறி அதில் ஐந்நூற்றை முறை பிசகாமலடைத்துப் பிரணவ மந்திரத்தை லட்சமுரு செபித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள மயான பூதமானது விலகுமென்று சொல்லினர்.

பூதக்கண்ணாடி காட்டும் வித்தை.

ஓர் சிறிய தாம்பாளத்தின் நடுவில் ஊசி முனை போன்ற துவாரஞ்செய்து அதை ஜலத்தில் தோய்த்துப் பார்க்க எந்த வஸ்துக்களும் பெரிதாகத் தோன்றும்.

புஷ்பத்தின் நிறம் மாறும் வித்தை.

நன்றாக மலர்ந்த ஓர் ரோஜா புஷ்பத்தை யெடுத்து கெந்தகக் குச்சியைக் கொளுத்திக்காட்ட அதின் நிறம் மாறிவிடும் மறுபடியும் அதை வெல்லப் புகையில் பிடிக்க எப்போதும்போ லாகிவிடும்.

மோட்டுப்பூச்சிகள் சாகும் வித்தை.

தாமரையிலையை தொன்னைதைத்து, அதில் மோட்டுப்பூச்சியைப்பிடித்துப்போட அது மாரணமாகும்.

பூமியில் வேடிகிளம்பும் வித்தை.

இரும்புப்பொடியில் கெந்தகத்தூளைக் கலந்து பூமியில் புதைத்துவிட்டால் சூரிய வெப்பம் தாக்கினவுடன் புதைபாணம்போல் கிளம்பும். எல்லோரும் திடுக்கிடுவார்கள்.

### வேறு அஞ்சன வித்தை.

காரெள்ளெண்ணெய், தூக்கணங்குருவிமுட்டை, கழுதைத் தண்டு, வெட்டுண்டிறந்தவன் மண்டையோடு இதுகளை வகைக்குச் சமவெடையாக வெடுத்து, செருப்படைச்சார், குப்பைமேனிச்சார் இவைகள் வகைக்குப்படியும், கன்னிகோழிமுட்டை, ஏரழிஞ்சித் தைலம், நாய்க்கடியாதவன் கையழுக்குஞ் சேர்த்துக்காய்ச்சி மை பதத்திலிறக்கி அஞ்சனாதேவியையும், ஆஞ்சநேயரையுந் துதித்து வெற்றிலையில் தடவிப்பார்க்க உலகத்திலுள்ள சகல பொருள்களுந் தோன்றும். இதில் அரைக்கவேண்டிய வஸ்துக்களை முன்சொல்லிய சாற்றைவிட்டு அரைத்துக் கொள்ளலாம்.

### வாள் அறுபடும் வித்தை.

கிராணம் பிடித்திருக்கும்போது சங்கஞ்செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்து வேரறுமல் பிடுங்கிக்கொண்டு அப்படியேபோய் சட்டிலையை மூன்று சுத்து சுத்திவந்து இரண்டாகத் துண்டித்து குளிசஞ்செய்து கட்டிக்கொண்டு, எதிரிகளுடைய கத்தி வாள் முதலியவைகளைவெட்ட அது துண்டாகப்போய்விடும்.

### பூட்டு தெறிக்கும் வித்தை.

கள்ளிக்காக்கையினுடைய கூண்டைக்கொண்டுவந்து ஓடுகிற ஜலத்தில் போட்டால் அதில் எவ்வஸ்து எதிர்த்துநீரில் வருகின்றதோ அதை எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு சமயம் வரும்போது அதைப்பூட்டின்மேல் வைத்தால் பூட்டானது பளீரென்று உடைந்து விடும்.

### வீரிய விர்த்தி வித்தை.

பசும்பாலில் முருங்கைப்பூ, அல்லது முருங்கைவிரையைப் போட்டுக்காய்ச்சிக் குடித்தால் யானைபல முண்டாகும்.

### வேறு மாரண வித்தை.

வெட்டுண்டு இறந்தவனுடைய சிரசை நாய்முகராதமுன் கொண்டுவந்து வேப்பெண்ணெயில் ஐங்கோலத்தை விட்டுக்கலக்கி எட்டிமுளைக்குத்தடவி எதிரிபேரை பனையோலையிலெழுதி, சிரசின் வாயில் வைத்து, அவ்வெழுத்தின்மேல் மேற்படி முளையைக்குத்த எதிரி மரணமாவான். நிவர்த்தி யாவற்றையுங்கழுவி சுத்தப்படுத்தச் சுகமாகும்.

### இதுவுமது.

கத்தரிக்காய்க்கு மாக்கொடியைச்சுற்றி ஐங்காயம்பூசிக் கருவைத்தடவி எதிரியின்பேரைச் செபித்தால் அவனுக்குப்பிளவை கண்டு துளைகள் விழுந்து அவஸ்தைப்படுவான். நிவர்த்தி இதையும் ஜலத்தில் கழுவிச்சுத்தஞ்செய்ய சுகமாகும்.



### காசுகள் உண்டாகும் வித்தை.

பானையோட்டைக் காசுகள்போல் நறுக்கி ஜெகஜால மையைத் தடவி, இஷ்டதேவதையைத்தியானித்துக் கீழேபோட மற்றவர் கண்களுக்கு பொன்காசுகளாகத் தோன்றும்.

### கூழாங்கல் சண்டைசெய்யும் வித்தை.

வேண்டுமான அளவு கூழாங்கற்களைக் கொண்டுவந்து சபையில் கொட்டி இதுகள்சண்டைசெய்யும் வேடிக்கையைப்பாருங்களென்று சொல்லி மையைத்தடவி ஓம் ஜாலக்காள் ரரரரவென்று சொல்லிக்கீழேபோட ஒன்றுடனொன்று கலகலவென்று மோதும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### திசைமயக்குப்பொடி வித்தை.

மருளுமத்தன்காய், பேயத்திக்காய், பேய்ப்புடலன்விரை, பேய்ப்பீர்க்கன்விரை, பேய்மிரட்டிவேர், பேய்த்தும்மட்டிவேர், காடாற்று முன்னெடுத்த எலும்பு, மயானச்சாம்பல், பயித்தியம் பிடித்திறந்தவனைச் சுட்டபல், தேவாங்கு மண்டையோட்டுப்பொடி இதுகளையெல்லாம் சமவெடையாக வெடுத்துப்பொடிசெய்து ஐங்கோலத் தைலம் விட்டரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு ஜாலக்காளைப் பூசித்துச் சாலமாடுஞ்சபையில் கொஞ்சமெடுத்துப் பிரயோகித்து விட்டால் சபையை மயக்கிக்கண்ணைக் கட்டிவிடும்.

### மாயாசக்தி மைசெய்யும் வித்தை.

ஏரழுஞ்சி சமூலம், சுணங்கன் மூலி சமூலம் இவையிரண்டையும் நிழலிலுலர்த்தி மண்பாண்டத்திலிட்டு அதில் மரவெட்டையைச் சமனாய்க்கூட்டிக் குழித்தைலமிறக்கி ஒரு புட்டியில் பதனஞ்செய்துக்கொண்டு வசம்பு, சூதம், புனுகு, பூரம், கஸ்தூரி, தேவாங்குகண், கரும்பூனைக்கண், சுழல்வண்டு, குழியானைக்கண் இதுகளை வகையொன்றுக்குக் கால்கழஞ்சாகக்கூட்டி, மைபோலாட்டி சிமிளில் வைத்துக்கொண்டு, சத்திபூசையுடன் தூபதீப முதலியவைகளைச்செய்து விளையாடவும்.

### மறைப்புமை வித்தை.

சிறுத்தை விரையை இரண்டாகப்பிளந்து ஒரு பீங்கானில்வைத்து சூரியன்முன்வைக்க அதிலிருந்து நெய்கசியும். அதையெடுத்துக் கல்வத்திலிட்டு ஏரழுஞ்சிகறுக்கின தூளைப்போட்டு மைபோலரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு பைரவரையும், சத்தியையுந்தியானித்துத் திலர்தமிட்டுக்கொண்டுபோக தன்னை ஒருவருங்காணமாட்டார்கள் மையைக்கலைக்க யாவருங்காணுவார்கள். பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். இம்மையினும் அநேக வேலை

கலைச்செய்து சபையைச் சந்தோஷப்படுத்தலாம். ஆனால் அவ்வேலைகளையெல்லாம் குருமுகாந்தரமாய் தெரிந்துகொள்ளவும்.

### வீடெல்லாம் குரங்குகளாகும் வித்தை.

இறந்துபோன குரங்கின் அபானவாய் வழியாகப்போதுமான முத்துக்கொட்டையைத் துறுத்துப்பூமியில் பள்ளந்தோண்டி புதைத்துவிட்டால் அது சில நாளைக்குள் முளைத்துச்செடியாகிக் காய் காய்க்கும் அந்தக்கொட்டையை யெடுத்து எண்ணெயாடி விளக்கேற்றிப்பார்க்க, அவ்வெளிச்சம், எவ்வளவு தூரந்தெரிகிறதோ அவ்வளவு தூரமும் குரங்குகளாகவே தெரியும்.

### கிணற்றில் முழுகி நாமமிடும் வித்தை.

நாமத்திற்குப்பதில் கொடிக்கள்ளிப்பாலையும், ஸ்ரீ சூரணத்திற்குப்பதில் பிரமதண்டிப்பாலையும் இட்டுக்கொண்டு காய்ந்தபிறகு, கிணறு குள முதலியவைகளில் இறங்கி முழுகி வெளியே வந்தால் பட்டை பட்டையாக நாமமிட்டதைப் போலிருக்கும்.

### பேய்க்கூட்டம்வரும் வித்தை.

மாயாசத்திக்கரு, திசைமயக்குப்பொடி, ஐங்கோலக்கடுகு இம்மூன்றையுஞ்சமனாகக்கூட்டி சிமிளில் வைத்துக்கொண்டு, சபையில் மண்ணையள்ளி மையைத்தடவி நாலுதிக்கும்வீச பார்ப்பவர்கண்களுக்குப் பயங்கரமான பேய்க்கூட்டங்கள் தோன்றும்.

### கீரிப்பிள்ளைத்தோல் கீரிப்பிள்ளையாகும் வித்தை.

கீரிப்பிள்ளையின்தோலை சபையில்காட்டி, இந்தத்தோலை உயிருள்ள கீரிப்பிள்ளையாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி, மாயாசத்திக்கருவைத் தந்திரமாகத் தோலின்மேல் தடவி மூடித் திறந்துக்காட்ட உயிருள்ள கீரிப்பிள்ளைதோன்றும்.

### பாம்புத்தோல் பாம்பாகும் வித்தை.

நல்ல சர்ப்பத்தின்தோலை சனங்களுக்குக்காட்டி இதை உயிராக்குகிறேன் பாருங்களென்றுசொல்லி மையைத்தடவி மூடித்திறந்து காட்ட உயிருள்ள பாம்பு ஓடும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

### நரித்தோல் நரியாகும் வித்தை.

நரித்தோலையெடுத்து (ரா ரா ரா) வென்று செபித்துக்கொண்டே மாயா சத்திமையைத்தடவி மூடித்திறந்துக்காட்ட, உயிருள்ள நரியாயிருக்கும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

### மான்தோல் மானாகும் வித்தை.

மான்தோலுக்கு மையைத்தடவி (நம) என்று சிந்தித்துக் கூடைபோட்டுமூடி திறந்துக்காட்ட மானைப்போலதோன்றும்.



### பகலில் நக்ஷத்திரந்தோன்றும் விநோதம்.

ஆழமான கிணற்றிலிறங்கி முழுகி ஜெபதபமுதலிய அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அசையாது மல்லாந்து கண்களைத் திறந்துப்பார்க்க ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள் தோன்றும். ஆனால் இதற்கு அநுபவம் வேண்டும்.

### சர்ப்ப வசியம்.

பொற்றலைக்கையான், தும்பைவேர், நிலம்புரண்டி, சிறுகீரை, கரிசலாங்கண்ணி, நாயுருவி, தொட்டால் சிணுங்கி, பொற்சிந்தில், ஆடையொட்டி இதுகளைசமயெடையாக யெடுத்து அரைத்துத் திலர்தமிட சர்ப்பங்களெல்லாம் வசியமாகும்.

### சத்துரு வசியம்.

பொற்றலைக்கையான், வெள்ளெருக்கு, விஷ்ணுகாந்தி இம்மூன்று வேர்களையும் சமயெடையாக யெடுத்து காராவின் நெய்விட்டு மைசெய்துத் திலர்தமிட எவ்வளவு பகையாளியா யிருந்தாலும் வணங்குவார்கள்.

### இதுவுமது.

நின்று சிணுங்கி, செவ்வகத்தி, சபுலாவாரை, முல்லை, கொழுந்தெட்டு, கூத்தன் குதம்பை இதுகளைப்பன்னீர்விட்டு அரைத்துத் திலர்தமிட வசியமாம்.

### இதுவுமது.

வெள்ளி-ஞாயிறு தேனிலும், திங்கள்-வியாழம் நெய்யிலும், செவ்வாய்-புதன் காராவின்பாலிலும், சனி தயிரிலும், ஆவின் புல்லுருவியைக் குழைத்துத்திலர்தமிட வானோர்களும் வசமாவார்கள்.

### இதுவுமது.

பாக்கை ஐங்கோலத்தில் நனைத்து யமவநசி, சியமவந, நமசிவய, வமநசிய என்று 108-உருகொடுத்துக் கொடுக்க வசியமாம்.

### வசியங்களுக்கு போது மந்திரம்.

ஆம், ஓம், ஜெய, ஜெய, வா, வா, அவ்வும், உவ்வும், வசிய, வசிய, சுவஹாவென்று 1008-உருக்கொடுக்க சகலமும் சித்தியாகும்.

### மலசலமடைக்கும் வித்தை.

நாயினைச்சுட்ட கோலில் முனைசெதுக்கி ஐங்கோலம்பூசி, எதிரியின் மலத்தில்போட்டு சொருகிவிட அவனுக்கு மலசலங்களடைத்துவிடும்.

இலக்கக்கக்கிஷத்தின் மூலங்களைக்காட்டும் இயந்திரம்.

| | | | |
|---|---|---|---|
| பொற்றலைக்கையாந்தகரை | சீதா தேவி செங்கழுநீர் | மயிர்ச்சிகைப்பூடு | ஆடையொட்டி |
| ஆணை வணங்கி | தாளி | பேய் தும்மட்டி | வெண் கொழுஞ்சி |
| வெள் ளெருக்கு | வாழை | பிரம தண்டி | சிறியா நங்கை |
| ஆண் கழற்சி | முத்தெருக்கன் செவி | சத்திச் சாட்டரணை | அழு கண்ணி |

இலக்கக்கக்கிஷத்தின் எண்களைக்காட்டும் இயந்திரம்.

| | | | |
|---|---|---|---|
| 16 | 3 | 13 | 2 |
| 9 | 6 | 12 | 7 |
| 4 | 15 | 1 | 14 |
| 5 | 10 | 8 | 11 |

இலக்கக்கக்கிஷத்தின் ஜீவன்களைக்காட்டும் இயந்திரம்.

| | | | |
|---|---|---|---|
| குழியானை | கருநாயின் நாக்கு | மயில்பிச்சு | சுழல்வண்டு |
| காட்டட்டை | ஆறுபுள்ளி வண்டு | இந்திரகோபப்பூச்சி | அண்டங்காக்கைத் தலை |
| பச்சோந்தி | தேவாங்கு | வெள்ளாட்டு நாக்கு | கோரோசனை |
| மண்டேப் பிச்சு | புராயெச்சம் | ஆதிக்கொடி | கரும்பூனை பஞ்சாங்கம் |



## இலக்கக்கக்கிஷக்கிரியை.

இவ்வுலகில் மறையோர்களையும், ஞானிகளையும், தெய்வங்களையும், பெரியோர்களையும், புண்ணிய புருடோத்தமர்களையும், இன்னும் மற்றவர்களையும் நிந்தித்துத்தூஷிக்கும் அஞ்ஞானிகளாகிய சண்டாளர்கள் நசிய இது ஒரு வஜ்ஜிரக்குரடாவென பலருங்கண்டு கையாடி அனுபவிப்பர்.

## வே று.

இதில் பற்பல மருந்துகளின் பாகைவருணங்களும், பதினாறை சாகைகளின் மூலச்சீவன் இலக்கங்களையும் தலைமுறையாக யாவர்களுக்கும் உதவும்படி இந்தத்தத்துவங்களை உரைக்கலாயின.

## எந்திர விவரம்.

மேற் சொன்னவைகளுக்கு இயந்திரமாவது குறுக்கே ஐந்து கோடும், நெடுக்கே ஐந்துகோடும் கீறினால் அது பதினாறு அறைகளாகும். இது ஒவ்வொன்றிலும் இலக்கம், மூலம், ஜீவன் முதலியனதக்காட்டி அது அதுகளின் செய்வினைப்பகுப்புகளைப் பின்னால் சொல்லுகின்றேன்.

## பாகை விவரம்.

இப்பாகைகளில் முதலறையிலிருந்து இலக்கமானது 16-3-13-2-7-14-11-8-10-5-4-9-6-12-1-15, ஆகிய 16-வீடுகளிலுள்ள இந்த எண்களால் மூலங்களையும், சீவன்களையும் காட்டும்.

## இதுவுமது.

மேலும் இப்பதினாறு அறைகளிலுள்ள எண்களை நன் நான்காகக் கொண்டு எப்படி எண்ணிப்பார்த்தபோதிலும் 34-தான்வரும். ஆகையால் இந்த இலக்கங்களைக்கொண்டு இதற்குரிய மூலங்களை விவரமாய்க்கண்டு கொள்ளலாம்.

## பாகைக்கு மூலிகையின் விவரம்.

சொல்லிவந்த பாகைமூலிகைகளில் 1-பொற்றலைக்கையான், 2-சீதாதேவி செங்கழுநீர், 3-மயிர்ச்சிகைப்பூண்டு, 4-ஆடையொட்டி, 5-வெண்கொழுஞ்சி, 6-சிறியாநங்கை, 7-அழுகண்ணி, 8-சத்திச் சாட்டரணை, 9-முத்தெருக்கன்செவி, 10-ஆண்கழற்சி, 11-வெள்ளெருக்கு, 12-ஆணைவணங்கி, 13-தாளி, 14-பேய்த்தும்மட்டி, 15, பிரமதண்டி, 16-வாழையாகும்.

## பாகைக்கு சீவன்களின் விவரம்.

இப்பாகை சிவன்களில் 1-குழியானை, 2-கருநாயின் நாக்கு, 3-மயில்பிச்சு, 4-சுழல்வண்டு, 5-அண்டங்காக்கைத்தலை, 6-கோரோசனை, 7-கரும்பூனைப்பஞ்சாங்கம், 8-ஆதிக்கொடி, 9-புராயெச்சம், 10-மனிதர்பிச்சு, 11-பச்சோந்தி, 12-காட்டட்டை, 13-ஆறுபுள்ளிவண்டு, 14-இந்திரகோபம், 15-வெள்ளாட்டுநாக்கு, 16-தேவாங்கு ஆகியவைகளாகும்.

## செய்யுந்தொழிலின் விவரம்.

இதில் சொல்லிவரும் தொழில்களுக்கு அறைகளை நன் நான்காய் எண்ணிப்பார்க்க 34-தான்வரும். அந்த நன்நான்கு அறைகளில் 1-மூலம், 2-சீவன், 3-மூலம், 4-சீவனுஞ்சேர்த்து யாதொரு தொழில்கட்கும் கூட்டுக.

## கிரியைசெய்யும் விதி.

நல்லயோகமுள்ள பொருத்தமான நாளில் மூலிகையினிடம் போய் சுத்தஞ்செய்து பூசித்து காப்புகட்டி, இதனடியில் வரும் மந்திரத்தைச்செபித்து, வேரைக்கெல்லி அதின் ஆணிவேரறுமல் பிடுங்கி செய்தால் யாதொரு மூலிகையும் நல்லபலனைத்தரும்.

## மூல மந்திரம்.

மேற்சொன்ன மூலிகைகளுக்கு மூலமந்திரமாவது :—ஓம் நம : மூலரூபிணி, அங்கிஷ : இங் இங், உங் உங், ரீங், திஷ்ட திஷ்ட, மாமாட்சர, ஓம் சுவஹா என்று 108 உருகொடுத்து பிடுங்கிவந்து உபயோகிக்கவும்.

## ஐம்மல விவரம்.

கண்டத்துக்கு மேலுள்ளவாய்நீர், மூக்குச்சளி, கண்பீளை, காதுகுறும்பி, இந்திரியம், ஒருக்கால் இந்திரியமகப்படாவிடில் தலைப்பேனைச் சேர்த்துக்கொண்டு வித்தைகளைச் செய்யவும்.

## லோக வசியம்.

இதில் 16-3-13-2 ஆகியவைகளைப் பொடித்து நன்றாய்த்திரியாக்கி பசுநெய்யில் விளக்கேற்றி தலைமண்டையோட்டில் மைபிடித்து, அதைக்காராவி நெய்யிலிழைத்துக் கண்களில் தீட்டிச்செல்ல யாவரும் வசியமாவார்கள்.

## ஈடு வித்தை.

9-6-12-7 இதில் ஐம்மலமுஞ்சேர்த்து நல்லசித்தயோக நாளில் அரைத்து ஆணுக்குப்பெண், பெண்ணுக்குஆண் பல பதார்த்தங்களிலிட அவர்களுடனே வசமாவார்கள்.



## வசிய சந்தனம்.

14-4-1-15 இதில் மும்மலமுஞ்சேர்த்து நல்லநாளிலரைத்து பாலியர்கள்முதல் ஆண்பெண் யாவர்களும் சந்தனத்திற் கலந்துபூச, இஷ்டப்பட்டவர்கள் சதாகாலமும் பிரியார்கள்.

## வசிய புடவை.

5-10-11-8 இதை ஓர் சேலையினுள் வைத்திருக்க, அச்சேலையை யுடுத்தியவர்கள் யாவரும் வசியமாய் இட்ட வேலைகளைச்செய்து சதாகாலமும் பிரியாதிருப்பார்கள்.

## வேறு வசிய ஈடு.

16,9,4,5 இதில் ஐம்மலமுஞ்சேர்த்து அரைத்து வேண்டியவர்களுக்குப் பலகார முதலியவைகளிலிட என்னாளும் வசமாகி பிரியாதிருப்பார்கள்.

## லோக வசியம்.

3-10-15-6 இதில் ஐம்மலமுஞ் சேர்த்துப் பொடித்துத் திரியாகத்திரித்து, பசுநெய் விளக்கேற்றி புதிய பனையோலையில் மைபற்றவைத்து, அதைக்காராவி நெய்யிலிழைத்து, கண்களுக்குத் தீட்டிசெல்ல உலகிலுள்ள யாவர்களும் வசியமாவார்கள்.

## இலக்குமி சேரப்புகை.

13-12-1-8 இதில் ஐம்மலங்கள் சேர்த்துப்பொடியாக்கி சர்க்கரை, தேன் கூட்டிக்கலந்து நெருப்பிற் புகையிட இலக்ஷ்மியானவள் சதாகாலமும் விளையாடிக்கொண்டிருப்பாள்.

## வெட்டறுதிருக்கும் வித்தை.

11-14-7-2 இதுகளை உரைத்துரைத்து உருண்டை செய்து நிழலிலுலர்த்தி புருடர்கள் உடம்பிற்பூசி, சண்டைக்குச்செல்ல எதிரியின் ஆயுதங்கள் இவன்மேற்படாது. கத்தியால் வெட்டினாலும் வெட்டுப்படாது. தானே கெலித்துவருவான்.

## படைமுறியும் வித்தை.

2-12-15-5 இதுகளை அமாவாசையதினம் புலித்தோலிற் சுருட்டி, வளையமாடி கடகமாகச்செய்து கையிற் போட்டுக்கொண்டு போர்முனைக்குச் செல்ல கண்ட படைகளெல்லாம் முறிந்தோடிவிடும்.

## வசிகரமை.

1-11-6-16 இதுகளைத் திரிதிரித்து செம்மறியாடு, எருமை, பசு இதுகளின் வெண்ணெயையுருக்கி விளக்கேற்றி, புது ஓட்டில்

மைபிடித்து, அம்மையை நெய் அல்லது நல்லெண்ணெயிற் குழைத்து நெற்றியிலிட்டுச்செல்ல நினைத்த காரியங்கள் கைகூடும்.

## சொக்குப்பொடி வித்தை.

13-7-12-2 இதுகளைச் சிவாலயத்தின் வடபுறத்திலிருந்து இடித்துக்கொண்டு அதில் 4-6 இதுகளின் தலைகளைப் பொடித்துப்போட்டுத்தூளாக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்துத்தூவிவிட அவர்கள் புத்திகெட்டுத்தடுமாறி உன்பின்னே வருவார்கள். அவர்களை உடனே தண்ணீரில் ஸ்நானஞ்செய்து வைக்க யாவும் விலகும்.

## இருளில்வாசிக்கும் வித்தை.

1-11-14-8 இவைகளை நல்ல நாளில் பொடித்துத் திரிசுற்றி நெய்யும், நல்லெண்ணெயுங்கூட்டி விளக்கேற்றி, புது ஓட்டில் மையைப்பிடித்து அதை நெய்யிலிழைத்து கண்களிற்றீட்டி இருளில் வாசிக்க எழுத்துகள் நன்றாகத்தெரியும்.

## வேறு வசிய வித்தை.

15,1,10,8 இவைகளை வியாழக்கிழமை புனர்பூசங்கூடிய நாளில் பொடிசெய்து வெண்ணெய் சேர்த்துப்பிசறி நெய்யிலிட்டுத் தன்னுடம்பிற் புகையேற்ற யாவரும் வசமாவார்கள்.

## இதுவுமது.

4,5,15,10 இதில் ஐம்மலமுஞ்சேர்த்து குருவாரநாளில் ஒரு குளத்தில் புதைத்துவைக்க அந்நீரைக்குடிப்பவர்களெல்லோரும் வசியமாவார்கள்.

## இதுவுமது.

9,4,15,6 இதை பருவமுந் திங்கட்கிழமையுங்கூடிய நாளில் சர்க்கரை, தேன்கூட்டி ஒரு பாத்திரத்தில் கொதிக்கவைத்து தன் வீட்டிற்கு வந்தவர்களுடைய முகத்திற்பூச யாவரும் பணிவார்கள்.

## இதுவுமது.

1,15,12,6 இதில் இன்னும் 7,9 ங் கூட்டி ஞாயிற்றுக்கிழமையன்று வீட்டிலுள்ளவர்கள்மேற்பூச வீட்டிலுள்ளவர்கள் யாவரும் பிரியமாட்டார்கள்.

## இதுவுமது.

3,6,9,16 இதுகளைச் சித்தயோகநாளிற் பொன்னூமத்தஞ்சாற்றிலரைத்து உடம்பிற்பூசி, அதில் ஐம்மலமுஞ்சேர்த்து பல பண்டங்களிலிட்டுச் சாப்பிட்டவர்கள் யாவரும் பிரியமாட்டார்கள்.



## மூன்று லோகவசியம்.

8,9,3,14 ல் பொன்னூமத்தைவேர் சமனாய்ச்சேர்த்து, குங்குமச்சாந்து, ஐம்மலமுஞ்சேர்த்து வெண்ணெயிற்குழைத்து உடம்பிற்பூசிச்செல்ல மூன்று லோகத்திலுள்ளவர்களும் வசியமாவார்கள்.

## குத்துவெட்டறுதிருக்கும் வித்தை.

13,1,16,4 இத்துடன் கோயில் மண்ணும், புத்துமண்ணும் சேர்த்தரைத்த சாந்தை உடம்பிற்பூசிச்செல்ல எவ்வித ஆயுதங்களும் மேற்படாது.

## முயல்கள் ஓடும் வித்தை.

16,3,4,11 இதுகளைச் சித்தயோகத்திற் பொடிசெய்து ஐம்மலமுஞ்சேர்த்து அரைத்துவைத்துக்கொண்டு வனங்களுக்குச் செல்ல அவ்வனத்திலுள்ள முயல்களெல்லாம் ஓடிப்போய்விடும்.

## ஆயுதமழுங்கும் வித்தை.

16,1,10,7 இதுகளில் பஞ்சதிரவியங்களின் நீரும், காகங்கள் கூட்டமாகக்குளிக்கும் குளத்துநீரும்விட்டு, சித்தயோகத்திற்சாந்துபோலரைத்து, உடம்பிற்பூசி போருக்குச்செல்ல, அங்குதன்மேற்படுகிற ஆயுதங்களெல்லாம் கூர்மழுங்கும். அதினால் யாதொரு கெடுதியும் நேரிடாது.

## விஷமீளும் வித்தை.

14,7,12,1 இதனுடன் காவேரிக்கரைமண்ணும், யானைக்கூட்டத்திலிருக்கின்ற மண்ணும் மாட்டுக்குளம்படி மண்ணும் சேர்த்தரைத்து உடம்பிற்பூசிச்செல்ல எவ்விதசர்பங்களுங்கடியாது. அப்படி ஒருக்கால் மீறி கடித்தபோதிலும் அதின்விஷ மேறாது.

## விஷங்களுக்கு நசிய வித்தை.

11,8,12,3 இவைகளில் குதிரை, கழுதை, மனிதர் இம்மூன்று நீருஞ்சேர்த்து, ஆதிவாரமும் பருவமுங் கூடியதினத்தில் அரைத்து நசியமிட தலைக்கேறிய விஷங்களும் விலகும்.

## குலைப்புத்தீரும் வித்தை.

1,8,14,11 இதை அஷ்டமிகூடியதினத்தில், ஆனைக்காலடி மண், மனிதர்நீர், கழுதைநீர் இவைகளை விட்டரைத்துக்கண்களின் மேலெழுதிவிட குலைப்புத்திரும்.

### திகைப்புண்டாகும் வித்தை.

**9,10,4,11** இதில் ஊமத்தன்சார், எருக்கன்பால் விட்டரைத்துப் பகைவர்களின்மேற்பூச அவர்கள் ஒன்றுந்தெரியாமல் திகைத்து நின்றிடுவர்.

### மாறல்தீரும் வித்தை.

**2,10,15,7** இவைகளை நல்ல யோகத்தில் சிவாலயத்தில் இடித்தரைத்துச்சீலையில் வைத்துத்திரிசெய்து பசுநெய்விளக்கேற்றி மைபிடித்துக் கண்களிலெழுத மாறல்விலகும்.

### பூதப்பிசாசகலும் வித்தை.

**9,12,8,5** இவைகளை நல்ல யோகத்தில் சாங்கைப்போலரைத்து உடம்பிலும், முகத்திலும் பூசிச்செல்ல கொடிய பூதப்பிசாசுகளெல்லாம் நிலைகெட்டோடும்.

### சத்துருவை ஜெயம் பண்ணும் வித்தை.

**7,13,5,9** இதை நல்ல சுபயோகதினத்தில் பொடிசெய்துபகைவர்மேற்றூவ அவர்கள் பயந்து நடுங்கி யொடுங்கி சமாதானப் படுவார்கள்.

### ஷை ஸ்தம்பன வித்தை.

முன்பொடிசெய்த மருந்தில் பனங்குருத்தைத் தூள்செய்துக் கலந்து சத்துருக்கள்மேற்றூவ அவர்கள் ஸ்தம்பனமாகுவர்.

### ஷை நாசமாகும் வித்தை.

முன்பொடியை மரணயோகமாகப் பார்த்து சத்துருக்களின்மேற்றூவ சத்துருக்கள் கெடுவதுமன்றி நாசமடைவார்கள்.

### நோய்தீரும் வித்தை.

**3,7,9,15** இவைகளில் யானைக்கால் மண்ணைச் சேர்த்துப் பொடிசெய்து நோயாளிகளின்மேற்பூச எவ்வித நோய்கள் யிருந்தாலும் விலகும். அன்றியும் பூதப்பிசாசுகளால் நேர்ந்த வியாதியிருந்தாலும் விலகும்.

### வழக்குகள் வெல்லும் வித்தை.

**5,15,3,11** இவைகளை நல்லயோகத்திலரைத்து உருண்டைசெய்து எவ்வித வழக்குகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வாயிலடக்கிக்கொண்டுபேச எல்லாம் ஜெயிக்கும். எதிரிகள் தோல்வியடைவர்.



### இலிங்கம் வளரும் வித்தை.

**10,8,9,7** இதில் மாடப்புறாவெச்சமும், ஊர்க்குருவி யெச்சமும் சயனைடைசேர்த்தரைத்து பூசிவர நாளுக்குநாள் விருத்தியாகி வளரும்.

### மஞ்சள் வசிய வித்தை.

**15,7,1,11** இதுகளைப் பொடிசெய்து மஞ்சளிற்கலந்து பூசிச்சேர எந்நாளும்விட்டுப் பிரியமாட்டார்கள்.

### எதிரிகேடும் வித்தை.

**15,6,11,2** இதை அமரபட்ச அஷ்டமிதினத்தில் அத்தர், பன்னீர்விட்டு பெண்கையினல் அரைக்கச்செய்து, நிழலிலுலர்த்திப் பொடிசெய்து எதிரிதலைமேற்றூவ கெடுவான்.

### நீர்மேல் நடக்கும் வித்தை.

**12,15,3,4** இதுகளின் எடைக்கு நாலத்தொன்று முள்ளிவேர் கூட்டி அரைத்து உள்ளங்காலிற்பூசி நீர்மேல் நடக்க சாதாரண ரஸ்தாவைப்போலிருக்கும், ஆனல் அப்பியாசம் வேண்டும்.

### இலட்சுமிசேரும் வித்தை.

**9,16,3,6** இதில் ஐம்மலமுஞ்சேர்த்து பஞ்சமிநாளில் கோவிலிலுள்ள கந்தஞ்சேர்த்து பொடித்துத்திரியிலூட்டி வீட்டிலுள் தீபமேற்றிவைக்க அவ்விடத்தில் பாம்புகள்சேராது எக்காலும் இலட்சுமி வாசமா யிருப்பள்.

### மேற்பூசும் வசியம்.

**4,5,11,14** இதில் ஐம்மலமுஞ்சேர்த்து எருக்கஞ்சாற்றிலரைத்து அங்குள்ளவர்மேற்பூச அவர்கள் எந்நாளும் பிரியமாட்டார்கள்.

### ஈடுமருந்து வித்தை.

**5,3,16,10** இதுகளைப் பஞ்சமிநாளிற் சூரியனைப் பரிவேடஞ்சூழ்ந்திருக்கும்போது பொடிசெய்து ருதுச்சீலையைக் கருக்கி, ஐம்மலங்களுஞ் சேர்த்து தின்பண்டங்களிலிட தின்றவர்கள் வசமாவார்கள்.

### சத்துருவை ஜெயிக்கும் வித்தை.

**3,8,13,10** இதில் பெருங்காயம் 1-பங்கு கூட்டிப்பொடியாக அரைத்துப்பருவநாளிற் பகைவர் தலைமேற்றூவ அவர்கள் பயந்து ஓடிப்போவார்கள்.

### வழக்கு வெல்லும் வித்தை.

**13,11,2,8** இதுகளை அரைத்தாகிலும், சும்மாவாகிலும் தனது

மடியில்வைத்துக்கொண்டு; பகைவர் எதிரிற்செல்ல வழக்குவென்று எதிரிகள் வணங்கிவருவார்கள்,

### சண்டைவெல்லும் வித்தை.

7,12,5,10 இதுகளை நல்ல யோகத்திற் பொடிசெய்து வைத்துக்கொண்டு நெற்றியிற்றிலர்த மிட்டுக்கொண்டுபோக சத்துருக்கள் படைமுறியும்.

### வசியம்.

13,2,15,4 இதுகளைப் பொடித்து சீலையில் வைத்துத் திரித்து விளக்கில்போட்டு நெய் அல்லது நல்லெண்ணெய் விட்டு விளக்கேற்றிவைத்து மாதரைச்சேர அவர்கள் எந்நாளும் பிரியமாட்டார்கள்.

### சுக்கில ஸ்தம்பன நெய்.

1,14,16,3 இதுகளை பசுவெண்ணெயை வெய்யலில் வைத்துருக்கி முன் சரக்குகளைப் பொடியாக்கி அதில்போட்டு அரைத்துக்குழப்பி தனது கால்களில் பூசிக்கொண்டு புணர சுக்கில ஸ்தம்பனமாகும்.

### வேறு வசியம்.

9,6,8,11 இதுகளைக்கிராணம் பிடித்திருக்கும்பொழுது பொடித்து அதில் ஐம்மலங்களுஞ்சேர்த்து தேனிலரைத்து உலராமல் படி மாதர்களின்பக்கம் பூசிப்புணர அவர்கள் எந்நாளும் பிரியமாட்டார்கள்.

### இதுவுமது.

13,1,14,6 இதுகளைப் பொன்னூமத்தன் சாற்றி லரைத்து தேன் கலந்து சீலையிற்சுற்றி விளக்கேற்றி, நல்லெண்ணெய் விட்டுக் கொளுத்திச்சேர சுக்கிலஸ்தம்பனமாகி எந்நாளும் பிரியமாட்டார்கள்.

### சோடு பிரிவு.

2,7,15,10 இதுகளின் பொடியுடன், வேம்புதான்றி, புங்கம் பால் 2 கழஞ்சுவிட்டு இலந்தை எண்ணெய்யிலரைத்து, புது அகலில்வைத்து வாய்மூடி அவர்கள் வீட்டிற் புதைத்துவைக்க சதிபுருஷர்க ளிருவர்களையும் பிரித்துவிடும்.

### குடியோட்டும் வித்தை.

12,13,5,4 இதுகளை சத்துருவின் சீர்க்குழி மண்ணூற் பாவை செய்து அமாபக்ஷத்தில் அவர்கள் பெயரைமாறி யெழுதி அப்பாவையில்வைத்து முன் மருந்துகளையும் அதோடு வைத்துச் சுருட்டி கருப்புக்கம்பளியினால்மூடி, கட்டுக்கயிற்றாற்கட்டி எதிராளி வீட்டில் வைக்க உடனே அவர்களை வீட்டைவிட்டு ஓட்டி நாசமாக்கும்.



### மலடு நீங்கும் வித்தை.

11,5,12,6 இவைகளை ஞாயிற்றுக்கிழமைய்தினம் பசும்பாலிலரைத்து சரிபதார்த்தங்களிற் உண்டுவர மலடு நீங்கி புத்திரபாக்கியமுண்டாகும்.

### பேய் பிசாசுகள் விலகும் வித்தை.

1,15,16,2 இதுகளைப்பொடிசெய்துப் புதைத்துவைக்க அவ்வீட்டிலுள்ள பேய், பிசாசுகளெல்லாம் விலகி சுபகரமாகும்.

### வேறு சர்வ வசியம்.

11,13,3,7 இதுகளைப்பொடித்து ஐம்மலமுஞ்சேர்த்து சித்தயோகத்தில் பசுநெய் விட்டரைத்து, மாதர்கள் முகம், பாதங்களிற் பூச வசியமாவார்கள். இதில் சர்வ வசியமுமாகும்.

### தீமைகள் விலகும் வித்தை.

2,11,6,15 இவைகளை யெடுத்துக்கொண்டு அன்றிரவில் போசனஞ் செய்யாமல் மறுநாள் சூரியோதயத்தில் ஸ்நானஞ்செய்து பொட்டிட்டு, புஷ்பஞ்சூடி உபவாசமிருந்து முன்கூறிய மருந்துகளில் ஐம்மலமுஞ்சேர்த்து பசும்பாலிலரைத்து உலர்த்தி நியமமுடன் தலைப்பாகையில் வைத்துக் கட்டிக்கொள்ள சகல துன்பங்களும் விலகும்.

### குருடு நீங்கும் வித்தை.

5,8,9,12 இதுகளை இளநீர் விட்டு மைபோ லரைத்துக் கண்களுக்குத்தீட்ட கண்குருடு நீங்கிச்சௌக்கியமாகும்.

### வேறு வசிய வித்தை.

7,8,9,10 இவைகளைச் சூரியனுக்குப் பின்னுகை யிருந்து அரைத்து நிழலிலுலர்த்தி உமிழ்நீர்சேர்த்து மாதர்முகத்திற்பூசி சேர்ந்திட அவர்கள் எந்நாளும் பிரியமாட்டார்கள்.

### இதுவுமது.

13,2,14,5 இவைகளை நல்லயோகத்திற் பொடிசெய்து அதில் கொஞ்சம் வாயிலடக்கிக்கொண்டு மாதர்களைச்சேர அவர்கள் எக்காலும் பிரியமாட்டார்கள்.

### இராஜவசிய வித்தை.

9;6,12,7 இவைகளைத் தண்ணீரிலரைத்து சாந்தைப்போலாக்கி நிழலிலுலர்த்தி உருண்டைசெய்து வாயிலடக்கிச் செல்ல இராஜவசியமுடன் சகலவேலைகளும் சித்தியாகும்.

### மாதர்சரீரம் சிறுக்கும் வித்தை.

13,4,14,3 இதுகளை 16,1 னுடன் அரைத்துப்பூச சிறுக்கும்.

### ஒடி பெருக்கும் வித்தை.

முன்கூறிய சரக்கில் பன்னீர் விட்டரைத்து அதை உமிழ் நீரிற்கலக்கி விரலில் தொட்டுப்பூசப் பெருக்கும்.

### சமனாகும் வித்தை.

14,5,3,12 இவைகளை யரைத்துப்பூசிச்சேர ஆண்பெண் இருவர்களுக்கும் விருப்பமதிகமாகி யிருப்பதுடன் பிரியார்கள்.

### புண்ணாரச்சீலை.

10,3,12,9 இவைகளை அரைத்து புகநெய்யிற் குழைத்துச்சீலையிற்றடவி புண்களின்மேற் போட்டுவர எட்டுநாளிற் சுத்தமாக ஆறிவிடும்.

### கர்ப்பந்தரிக்கும் வித்தை.

7,15,8,4 இதுகளை நெய்யிலெரித்து நோயுள்ளவிடங்களிற் பூசிவர, நோய்கள் விலகி கர்ப்பமுண்டாகி நல்ல மக்களைப்பெறுவார்கள்.

### விஷக்கடி மீளும் வித்தை.

13,6,1,14 இதில் கழுதைநீர் குதிரைநீர்விட்டு அரைத்து விஷக்கடி அல்லது விஷக்கட்டிகளின்மேல் தடவ சகல விஷங்களும், விஷக்கட்டிகளும், காணாக்கடியும் விலகும்.

### வேறு சர்வலோக வசியம்.

14,8,10,2 இதில் பச்சோந்தி சேர்த்து அரைத்து நிழலிலுலர்த்தி, முகத்திற்பூசிப்பார்க்க விண்ணுலகத்தோர்களும் வசிய மாவார்கள்.

### உரோமங்கருக்கும் வித்தை.

10,3,15,6 இவைகளைச் சாந்துபோலரைத்து நல்லெண்ணெயிற்குழப்பி சிலநாள் மக்கவைத்துப் பிறகு நரைத்த ரோமங்களுக்குத் தடவ கறுப்பாகும்.

### இதுவுமது.

13,9,4,8 இவைகளைப் பொடியாக்கித் கொப்பரைத்தேங்காயிலடைத்துக்கட்ட கொஞ்சங் கருங்கொள்ளைத் தூளாக்கிப்போட்டு, வாயை அடைத்து ஒருமாதம் சேற்றில் புதைத்து வைத்தெடுத்து நரைமயிரிற்றடவ கறுப்பாகும்.

### சோறுவேகாத வித்தை.

13,7,9,5 இவைகளை அரைத்து உருண்டை செய்துவைத்துக் கொண்டு தேவையானபோது பகைவர் அடுப்பிற்போட நெருப்புத்



தீயேறாது. கரி முதலிய பதார்த்தமெல்லாம் போட்டது போட்டபடியே யிருக்கும்.

### யோனிப்புத்தகலும் வித்தை.

1,12,16,5 இதுகளைப் பொடிசெய்து எருமை வெண்ணெய், தேன் இதுகளைவிட்டுக்குழைத்துப் பூசிவர, நாற்றமுதல் புண்களெல்லாமகலும்.

### சத்துருகேடும் வித்தை.

12,9,10,3 இவைகளை சத்துருவின் நிதானத்தைக்கொண்டு அவரைப்போல பொம்மைசெய்து அதின்மார்பில், அவர்பேரையெழுதி பூசித்துப் பட்டுபோன மரநிழலில்வைக்க சத்துரு நாசமாவான்.

### நோயகலும் வித்தை.

12,8,11,3 இவைகளைச் சூரியகிரணத்தில் பொடிசெய்து நெய்யிற்குழப்பி உருண்டையாக்கி புத்து அல்லது தொழுவத்திற்புதைத்துவைக்கச் சகலநோய்களும் விலகும்.

### குடிகேடும் வித்தை.

3,10,12,9 இவைகளை நல்லநாளிற் பொடியாக்கி, வெப்பமாக் காக்கைக் கூண்டை சுட்டுச்சாம்பலாக்கி, அதையும் முன் மருந்தையும் பகையாளி வீட்டில் புதைத்துவைக்க, அவர்கள் மனையிலுள்ள யாவர்களும் சண்டையினால் விலகிவிடுவர். அவ்வீடு நாசமடையும்.

### இதுவுமது.

12,10,11,1 இதில் ஐம்மலமுஞ்சேர்த்து அரைத்துக் குழைத்து அதை எட்டிக்கொம்பின் முனைக்குத்தடவி பகையாளியின் வீட்டில் அப்படிக்க சத்துருக்கள் யாவரும் இருந்த இடந்தெரியாது பிரிந்துவிடுவார்கள்.

### சித்தியுண்டாகும் வித்தை.

8,12,9,5 இதுகளை நல்ல யோகத்திலரைத்து நெய், தேன் கூட்டிப்பிசிறிவைத்துக் கொண்டு ஒருமாதந்தின்றுவர யாவுஞ்சித்தியாகும்.

### இலக்கக்கக்கிஷத்தின் முடிவு.

இந்த இலக்கக்கக்கிஷக்கிரியையானது பாகை நாலுக்கு இலக்கம் 34-ஆகமூலம் 2 சிவன் 2 இன்னும் மற்றதைக்கொண்டு செய்யும் தொழின்முறைகள் யாவும் தவறின்றி நடந்தேறும்பொருட்டு இதை இயற்றியவர் செழுமணவை, சித்திரகவி தேவேந்திரநாத பண்டிதரென்றறியவும்.

## இந்திரியக்கட்டு வித்தை.

கன்னியாகுமரியிலையும், விஷ்ணுகிராந்தியிலையும் சமனாய்ச்சேர்த்து சிரகம்வைத்தரைத்து வாயிலடக்கிமென்று உமிழ்நீரை விழுங்கிப்புணர இந்திரியம்விழாது.

## இதற்கு முறிப்பு.

சரியசாலைச்சாறும், எலுமிச்சம்பழச்சாறும் சமனாய்ச்சேர்த்து இரும்புச்சட்டியில் வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும் மூன்றுநாளருந்த ஸ்கலிதமாகும்.

## தேளிசிங்கு வித்தை.

சொரிந்தவளையின்வாயில் நீறுறுகல்பாஷாணத்தைத் திருத்து ஒரு குடுவையில் போட்டு வாய்மூடி பூமியில் புதைத்து இருபத்தொருநாள் சென்றெடுத்து, எலும்புகளைநீக்கி அதை அப்படியே குழித்தைலமிறக்கி அதில் கொஞ்சந்தொட்டு பகைவர்களின்மேற் றெளிக்க, அதுபட்டவுடனே உடம்பெல்லாங்கொப்பளமாகி வெடித்து ரணமாகும்.

## இதற்கு முறிப்பு.

தேள்போல முளைத்திருக்கும் புல்லின்வேரைக் கொண்டுவந்து அரைத்துச்சாப்பிட்டுவர ரணம், வெடிப்பு முதலானதுகள் ஆறும். இதிற்கொஞ்சம் கல்வீரஞ்சேர்க்க மெத்தவேகமா யிருக்கும்.

## இந்திரியக்கட்டு வித்தை.

கரும்பூனையின் வலது விலாவெலும்பை கொஞ்சமெடுத்து அரைஞாண்கயற்றில் கட்டிக்கொண்டு புணர இந்திரியம்விழாது. அதைப் பின்பக்கந்தள்ளவிழும்.

## மருந்து வித்தை.

சப்புலியும், காகமும் உலர்த்திபஸ்பஞ்செய்து வியர்வையிலுருட்டி ஊரவைத்து வேண்டியவர்களுக்குக்கொடுக்க அவர்கள் வசமாவார்கள்.

## இதுவுமது.

பெய்மிரட்டி இலையையும், வெள்ளைப்பூண்டையும் ஒன்றாய்க் கசக்கி சாறுபிழிந்து அந்தச்சாற்றை இஷ்டமானவர்களின் உச்சந்தலையில் தன்கையாற்றேய்த்துவிட அவர்கள் எந்தக்காலமும்பிரிய மாட்டார்கள்.

## மந்தைகிளம்பாத வித்தை.

ஆடுதின்னும் பாளையை யரைத்துச் செருப்படிபிற்றடவி அதைக்காலில் போட்டுக்கொண்டு ஆட்டுமந்தையைச் சுற்றிவந்து



விட, அவ்வாடுகளில் ஒன்றேனுங்கிளம்பாது. அதற்கு மாற்று சுருக்கருவாட்டை யரைத்து செருப்பின் மேற்றடவி காலிற் போட்டுக்கொண்டு சுற்றிவர ஆடுகளெல்லாங்கிளம்பி இறைதேடும்.

## பிரம்பு உச்சாடன வித்தை.

ஒருதம்பிடி அகலவெள்ளித்தகட்டில் ஐங்கோணங்கீறி 5-முனைகளுக்கும் சூலங்களிட்டு மேலிருந்து வலம்புரியாக (ய-ந-ம-சி-வ) என்றெழுதி நடுவில் ஹரி என்றெழுதி அதின்மேல் ஓம் எழுதி 1-கஜ நிகளப்பிரம்பின் மேல்முனையில்வைத்து, அதின்மேல் வேறொரு வெள்ளிப்பூண்கட்டும், அடியில் மற்றொரு வெள்ளிப்பூண் கட்டும் கட்டி, நடுவில் வெள்ளித்தகடும், செப்புத்தகடுஞ்சுற்றி முன்மந்திரம் 108-உரு கொடுத்துப்பூசித்துக் கையிற்பிடித்துக்கொண்டு போனாலுஞ்சரி, அல்லது இப்பிரம்பை பேயாடுபவர்கள்முன் நீட்டிக்காட்டினாலும் சரி, எவ்விதப்பூதப்பிசாசுகளும் அலறி நான் போகிறேன் போகிறேனென்று முடியெடுத்துக்கொடுத்துவிட்டு ஓடிப்போய்விடும். அப்போது நமசிவயவென்று செபிக்கவும் நன்மை.

## தலைமேல் தேங்காயுடைக்கும் வித்தை.

ஆதிவாரம் சூரியோதயத்தில் செம்முள்ளிவேருக்கு பஞ்சவர்ண நூல் காப்புகட்டி, வேரறுத்துப்பிடுங்கி குளிசமாடி வாயிலடக்கிக் கொண்டு, தேங்காயைத்தலைமேல் உடைத்தால் சுக்கல் சுக்கலாகப் போய்விடும். தலைநோகாது.

## தண்ணீர் சிவப்பாகும் வித்தை.

ஒரு படிகபாத்திரத்தில் நல்ல ஜலம்விட்டுக் கொஞ்சம் மஜிண்டாப் பவுடரைப்போட்டு சற்று மூடிவைத்துத் திறந்துக்காட்ட தண்ணீரெல்லாம் சிவந்தநிறமாயிருக்கும்.

## ஜலத்தில் விளக்கெரியும் வித்தை.

குங்கிலியத்தையுங் கற்பூரத்தையும் பொடியாக்கி ஒருசீலையில் வைத்துத் திரியாகத்திரித்து விளக்கெண்ணெயில் தோய்த்துதடையுள்ள கலசத்திற்போட்டு, தடைக்குக் கொஞ்சங் குறைவாகவே ஜலம்விட்டுக் கொளுத்தி சபையில் வைத்தால் இரண்டு நாழிகையெரியும். பார்ப்பவர்கள் உனக்கு அக்கினி வசியமென்று சொல்லுவார்கள்.

## இதுவுமது.

திருகுகள்ளிப்பாலும், கற்பூரமும் சமஎடையாகவெடுத்துத் திரித்து முன்போல் கொளுத்திக்காட்ட ஆச்சரியப்படுவார்கள்.

## உடுக்கையைக்கட்டும் வித்தை.

ஐயும், கிலியும், சவ்வும், உடுக்கையைக்கட்டு, ஐயும், கிலியும்

கவரா வென்று உடுக்கையடிப்பவனெதிரில் சொல்லிக்கொண்டிருந்தால் உடுக்கையானது கட்டிவிடும்.

### கண்ணாடி புட்டிகளை அறுக்கும் வித்தை.

காட்டு முருக்கிலையைச்சார்பிழிந்து அதில் பால்திரட்டு நூலை யூரவைத்து நன்றாயுலர்த்திக்கொண்டு, பிறகு எந்த புட்டியையேனும் தாராளமாக அறுக்கலாம். நூலைமாத்திரம் துணிக்காது உலர்த்தவேண்டும்.

### குட்டை குடை பிடிக்கும் வித்தை.

கருவிழுதியிலைக்கு ஆதிவார தினங்காப்புகட்டி வேரை அறுத்துப்பிடுங்கிவந்து அதன் கிழங்கைக் குட்டையின் முனையில் முடிந்து மேலேயெறிய அது குடையைப்போன்று நிழலைக்கொடுத்துக் கொண்டு நம்முடன் கூடவே வரும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### பாணவேடிக்கை காட்டும் வித்தை.

ஒரு பெரிய பீங்கானில் ஜலத்தைவிட்டு அதை யாவர்களுக்குங்காட்டி அதில் பாஸ்பரைட் ஆப் லயம் என்னும் மருந்தைக் கொஞ்சம்போட அதுபாணத்தைப்போல் கிளம்பும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

### ஆடுகள் இறையெடுக்கா வித்தை.

ஒருமுஞ்சூரைப்பிடித்து ஓடுகிற ஜலத்தில் விட்டால் அது எதிர்நோக்கியோடும். அதுசமயம் அதைக்கத்தியினால் ஒரே வெட்டாக வெட்டித் தலையை மாத்திரம் யெடுத்துக்கொண்டு வந்து ஆடுகளிருக்கும் மந்தையினிடத்தில் புதைத்துவைக்க எத்தனை நாளானபோதிலும் அவ்வாடுகள் எழுந்து இறைக்யெடுகாது. புதைத்ததை யெடுத்துவிட்டு அவ்விடத்தில் மஞ்சள்நீரைத்தெளிக்க பழையபடி ஆடுகள் இறையெடுக்கும்.

### வாட்டிலோடு மெல்லும் வித்தை.

பனிதாங்கியின் வேரைமென்று வாயிலடக்கிக்கொண்டு எவ்வளவு வாட்டிலோடுகளையேனும் சர்க்கரையைப்போல் மாவாக மென்றுவிடலாம். வாயறுக்காது.

### இதுவுமது.

கோபுரந்தாங்கி மூலிகையை செவ்வாய்க்கிழமையதினம் சூரியோதயத்தில் கொண்டுவந்து மென்று வாயிலடக்கிக்கொண்டு சீசாவோடுகளை யெல்லாம் முறுக்கைப்போல் மென்றுவிடலாம். இதுவும் வாயறுக்காது.



### மோடிவைக்கும் வித்தை.

| | | | | |
|---|---|---|---|---|
| ய | ந | ம | சி | வ |
| வ | ய | ந | ம | சி |
| சி | வ | ய | ந | ம |
| ம | சி | வ | ய | ந |
| ந | ம | சி | வ | ய |

ஒரு செப்புத்தகட்டில் நெடுக்கே ஆறுகோடும், குறுக்கே ஆறுகோடும் கிழித்து முனைகள்தோறும் சூலம் போட்டு அறைகள்தோறும் பஞ்சாக்ஷரத்தை அடைத்துப்பூசையில் வைத்து அவல் கடலை தேங்காய் பழம் சாம்பிராணிவத்தி முதலியதுகளுடன் தூபதீபங்காட்டி ஓம், ஸ்ரீம், கிலியும், அவ்வும், உவ்வும், மவ்வும், சிவ்வும், நமசிவய சுவறாவென்று லக்ஷத்தியெட்டுருகொடுக்கச்சித்தியாம் அதன் பிறகு அதைக்குளிசமாடி, கையில்வைத்துக்கொண்டு தடாகக்கரை, பெரிய மைதானம், தோப்பு அல்லது முச்சந்தி கூடுமிடம் இவைகளில் ஏதாகிலும் ஓர் இடத்தைக்குறித்துக்கொண்டு அதை நன்றாகச் சுத்திசெய்து பச்சைப்பந்தல்போட்டு மாவிலைத்தோரணங்கட்டி பந்தலிற்குள் நம்முடைய விக்கினங்களைத்தீர்த்து ரக்ஷிக்கும் எம்பெருமானாகிய விக்னவிநாயகரை ஸ்தாபித்து சோடசோபசாரத்துடன் பூசித்துத்தொழுது பிறகு ஓர் செம்பைச்சுத்திசெய்து பச்சை நூல் சுற்றி மாவிலைப்போட்டு மஞ்சள் குங்குமமிட்டு அச்செம்பின்பேரில் ஒரு உரித்த தேங்காயை வைத்துக் கலசஸ்தாபனஞ்செய்து அதில் காளியை ஆவாகனஞ்செய்து பூசை முதலியவைகள்போட்டு அதன் பிறகு அக்கலசத்திற்கெதிரில் ஓர் கத்தியைநட்டு அதிற்கெதிரில் உலக்கையும், இரும்புக்குறடாவும், பாதரட்சையும், துடப்பமும் வரிசையாக நட்டுக்கடைசியில் ஒரு வாழைக்கன்றைநட்டு அதற்கு இரண்டடி தூரத்தில் சதுரத்திற்குச்சதுரம் ஓரடிக்குழிவெட்டி அதின் நிறைய ஜலத்தையூற்றி அதற்கெதிரில் ஆடு பன்றி கோழி இம்மூன்று ஜீவன்களின் தலையைவைத்து சுற்றிலும் எட்டுமூலைகளிலும் எட்டி முளையைக்கூறாகச்சீவி ஐங்கோல மையைத்தடவி அடித்துவைத்துவிடவும். அதுகால்மோடி எடுப்பவன் அஷ்டதிக்கையும் பந்தனஞ்செய்துக்கொண்டு மகுடர்குழையூதி வீரியம் பேசிக்கொண்டு நாம் வைத்திருக்கும் சாமான்களை எடுத்துவிட வருவான். அப்போது காளியைத்தியானித்து கண்கட்டு மையைக்கையில் பூசிக்கொண்டு அக்ஷதையை யெடுத்து அவன்பேரில்போட அவன் திரேகமாதியக்கமாம் எரிச்சலாகி சகிக்கமுடியாமல் ஓடிவிடுவான். மறுபடியும் சுதாரித்துக்கொண்டு அஷ்டதிக்குகளையும் கட்டிக்கொண்டு மகுடக்குழையூதி விருதுகள் கூறிக்கொண்டு வருவான். அப்போது முன்போல் கண்கட்டு மையைக்கையில் பூசிக்கொண்டு வேப்பிலையை யுருவி அவன்பேரில்போட ஒவ்வொரு வேப்பிலையும் ஒவ்வொரு தேளாகி அவனைக்கொட்டித் துன்பப்படுத்தும். அதை சமாளித்துக்கொண்டு மறுபடியும், வருவானாகில் காளியைத்தியா

னித்து கக்கு, கக்கி, காளி, தூர்க்கி, அரி, அம், உம், ஓம் சுவாஹாவென்று செபித்து அக்ஷதையை யெடுத்துப்போட்டு ரங் ரங் கூலியென்றால் அவன் நிரேகமாதியந்தமும் நெருப்பைப்போட்டுக்கொளுத்துவதைப்போன்று கொளுத்தும் அவன் தட்டுக்கெட்டுத்தடுமாறி அவஸ்தைப்பட்டு ஓடிவிடுவான். மறுபடியும் சுதாரித்துக்கொண்டு மீசையை முறுக்கி பலே மந்திரக்காரர்! பலே மந்திரக்காரர்! இவர்களை நான் ரொம்பவும் மெச்சிக்கொள்ளுகிறேன், ஆனால் நான் இதை விட்டுவிடவா போகிறேன் என்று விருது கூறிக்கொண்டு வருவான். அப்போது வரி வரி, மரி மரி, சண்டாளி, அம், அம், அம் என்று விபூதியை எடுத்து அவன்மேல்போட அவன் படாதபாடுபட்டுக் கீழேவிழுந்து இரத்தங்கக்குவான். மறுபடியும் சமாளித்து விருதுகூறிக்கொண்டு வருவான். அப்போது மையைக் கையில் தடவிக்கொண்டு மலைவேப்பிலையையும், புளியன் யிலையையும் உருவிப்போட ஈண்டு நூறக்காவும், குளிரியுமாகி அவனை இம்சைப்படுத்தும். அதை சமாளிக்க முடியாது ரொம்பவுங் கஷ்டப்பட்டு வெளியில்வந்து கொஞ்சநேரம் இளைப்பாறி மறுபடியும் விருதுகூறி பருடக்குழையூநிக்கொண்டு வருவான் அப்போது மையைக்கையில் பூசிக்கொண்டு அக்ஷதையை யெடுத்துப்போட்டால் நிரேகமாதியந்தமும் எரிச்சல்கண்டு ரொம்பவும் அவஸ்தைப்பட்டு கீழே விழுந்து விடுவான். மறுபடியும் சமாளித்துக்கொண்டு விருதுகள்கூறி வெகு ரோஷமாக மீசையை முறுக்கிக்கொண்டு அஷ்டபந்தனஞ்செய்து மைகிமிளுடன் குருவைத்தியானஞ் செய்துக்கொண்டு வருவான். அப்போது நாம் ஆவாகனஞ்செய்து வைத்திருக்கும் காளியைத்தியானித்து அம் மம் ரீம் ஓம் என்று தியானித்து கையில் கண்கட்டு மையைப்பூசிக்கொண்டு உளுந்து, வேப்பிலை, விபூதி, அரிசி இவைகளை யெல்லாம் ஒன்றாகச்சேர்த்து அவன்பேரில் போட அவன் கீழேவிழுந்து புரண்டு வாயிலும் மூக்கிலும் இரத்தங்கக்கிக்கொண்டு மூர்ச்சையாக விழுந்து விடுவான். அப்போது நாம் நட்டு வைத்திருக்கும் உலக்கையானது எழுந்து அவனையடிக்கும். அவன் அதையும் சமாளித்துக்கொண்டு மறுபுடியும் விருதுகூறி வருவானாகில் கண்கட்டு மையை அங்கு நட்டுவைத்திருக்கும் சாமான்களுக்குத்தடவி காளியைத்தியானித்து மையைக்கையில் பூசிக்கொண்டு அட்சதையை யெடுத்து அவன்பேரில் போட்டு சாமான்கள்பேரிலும் கொஞ்சம்போட அவைகளெல்லாம் எழுந்து அம்மோடி எடுக்க வந்திருக்கும் சோனகனைக்சாடும். அவன் அதுகளைச் சமாளிக்க முடியாமல் தத்தளித்து உன்னைவந்து வணங்குவானாகில் நீ காளியைப்பார்த்து ஓம் ரம் வம் அம் அம் அம் நங் மங் சிங் யங் அங் அங் அங் சுவாஹாவென்று செபித்து விபூதியை யெடுத்துப்போட சாமானெல்லாம் ஸ்தம்பித்து நின்றுவிடும். அதன் பிறகு மோடி யெடுக்கும் சோனகனும் அவனிஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுவான்.



## புல்லுருவி.

புல்லுருவியின் மகிமையானது சொல்லத்தரமல்ல. அதன் மகிமையை அறிந்தவர்கள் அறிவார்களே யன்றி மற்றவர்கள் அறியமாட்டார்கள். எப்படியெனில், ஆலமரத்தின்மேல் இருக்கும் புல்லுருவிக்கு சுவாதி நக்ஷத்திரத்தில் காப்புகட்டி சாபநிவர்த்திசெய்து கொண்டுவந்து சட்டியிற் போட்டுக்கருக்கி புத்துத்தேனில் குழைத்து மையாக்கிச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது நெற்றியிற் றிலர்தமிட்டுச் செல்ல, சகல காரியங்களும் கைகூடும். அல்லது அதைக் குளிசமாடி கட்டிக்கொண் டிருந்தாலும் சகல காரியங்களுங் கைகூடுவதோடு பகையாளிகளெல்லாம் உறவாவார்கள் வழக்குகள்வெல்லும் சகல சம்பத்துகளும் பெருகும். வெட்பாலை மரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை அஸ்த நக்ஷத்திரத்தில் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி கொண்டுவந்து காராவின் பாலிலரைத்துக் குடிக்கக் கர்ப்பமுண்டாகும். அதைப் பசுமோரிலும் அரைத்துக்குடிக்கலாம். வயிற்றிலுள்ள கல்மிஷங்களைப்போக்கி கர்ப்பத்திற்குண்டான பிரயத்தினங்களைச் செய்யும். பூவரசன் மரத்தின்மேலுள்ள புல்லுருவிச்செடிக்குச் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி, உயிர்கொடுத்து பொங்கல் பலி தூபதீபத்துடன் பயபக்தியாகக்கொண்டுவந்து பசும்பால் விட்டரைத்துச்சமனெடை கோரோசனை கலந்துக்குழைத்து மைவாங்கிச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது புத்துத்தேனில் குழைத்து நெற்றியில் திலர்தமிட்டுச்செல்ல பகையாளிகளெல்லாம் வணங்கி இஷ்டப்படி நடப்பதோடுகூட எடுத்த காரியங்களெல்லாங் கைகூடும். தீராதவழக்குகளெல்லாம் தீர்ந்துவிடும். மாமரத்தின்மேல் பயிராகிப்படர்ந்திருக்கும் புல்லுருவியைக்கண்டுபிடித்து திருவாதிரை நக்ஷத்திரத்தில் முன்போல் செய்யவேண்டிய கிரியைகளைச்செய்து கொண்டுவந்து அதனுடன் கடலைக்கருவைச்சேர்த்து அரைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்து கொத்தான்சாற்றில் குழைத்துப்பகையாளியின் வீட்டுவாசற்படியில் தெளிக்க அவ்வீடு நாசமடையும். அல்லது பகையாளியின்மேற்றெளிக்க அவன் பலவித நோய்களால் வருந்தி அலைவான். அதில் சந்தனம், குங்குமம், கஸ்தூரி, கோரோசனை இதுகளைச்சேர்த்து அரைத்து மைவாங்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு மோகினி மந்திரத்தை நூற்றெட்டுரு கொடுத்து திலர்தமிட்டுச்சென்றால் சகல சனவசியமாகும். வேங்கைமரத்தில் படர்ந்திருக்கும் புல்லுருவிக்கு திங்கள்கிழமையும் பூராட நக்ஷத்திரமுங்கூடிய தினத்தில் சாபநிவர்த்திசெய்து செய்யவேண்டிய கிரியைகளுடன் கொண்டுவந்து சாறுபிழிந்து அச்சாற்றில் கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், எலுமிச்சம்பழச்சாறு, கரியசாலைச்சாறு இவைகளை விட்டரைத்துக் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது புத்துத்தேனில் குழைத்து திலர்தமிட்டுச்சொல்ல எப்பேர்ப்பட்ட காரியங்களுங்

கைகூடும். எதிரி படைகளெல்லாம் உன்னைக்கண்ட மாத்திரத்தில் நடுநடுங்கி ஓடிப்போய்விடும். புளியன் மரத்தில் படர்ந்திருக்கும் புல்லுருவியைக் கொண்டுவந்து புனுகு, கற்பூரம், வால்மிளகு, கோரோசனை இவைகளைச்சேர்த்து பசும்பால் விட்டரைத்து தேகத்திற் பூசிக்கொண்டு சண்டைக்குச்செல்ல எதிரிகளெல்லாம் பின்னிடைந்து ஓடிவிடுவார்கள். அதைக்குளிகையாக உருட்டி வைத்துக்கொண்டு தேவையானபோது உபயோகித்துக்கொள்ளலாம், அதிக நன்மையைத்தரும். இலவமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவியை முன்போல் கொண்டுவந்து கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம் இவைகளைச்சேர்த்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு அரைத்து குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது அதைக்காராவின் நெய்யில் குழைத்து திலர்தமிட்டுச்செல்ல சகல சனங்களும் வசிய மாவார்கள். பகையாளிகளும் வலிய உறவாடி வருவார்கள் மகா கைகண்டது. அதைக் குளிசமாடி அரையிற் கட்டிக்கொண்டிருக்க ஸ்திரீ வசியமாகும். இலுப்பை மரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவியை கேட்டை நக்ஷத்திரத்தில் காப்புகட்டிக்கொண்டுவந்து புனுகு, சவ்வாது, பச்சைக்கற்பூரஞ்சேர்த்து அரைத்து மாத்திரைகளாகத்திரட்டி நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு தேவையானபோது பசும்பாலில் குழைத்து தேகத்திலும், கைகளிலும் பூசிக்கொண்டு சண்டைக்குச்செல்ல எவ்வித ஆயுதங்களும் மேலே படாது. அப்படி மீறிபட்டாலும் கூர்மழுங்கி முறியுமேயொழிய நம்மையொன்றுஞ் செய்யாது. அதையே குளிசமாடி பூசைமுகத்தில்வைத்து சிவந்த புஷ்பங்களினால் அர்ச்சனைசெய்து கட்டிக்கொள்ள மாற்றான்படைகளெல்லாம் பயந்து ஓடிவிடும். எட்டிமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவிக்கு ரோகணி நக்ஷத்திரத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வெள்ளைச்சாவல் பலியிட்டுக்கொண்டுவந்து அதனுடன் கஸ்தூரி மஞ்சள்சேர்த்து பாலிலரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது அதை நல்லெண்ணெய் அல்லது நெய்யில் குழைத்து இட்டுக்கொண்டுபோக எவ்வித படைகளும் உன்னைக்கண்ட மாத்திரத்தில் நடுநடுங்கிப்போய்விடும். சந்தனமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவிக்குச்செய்யவேண்டிய கிரியைகளைச்செய்து கொண்டு அதனுடன் பச்சைக்கற்பூரம், சவ்வாது, குங்குமப்பூ இவைகள் மூன்றையும் வகைக்கு வீராகனெடை அரையாகச்சேர்த்து அரைத்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது புத்துத்தேனிலுரைத்து நெற்றியிற் றிலர்தமிட்டுச்செல்ல கடல்சூழ்ந்த உலகிலுள்ளவர்களெல்லாம் வசியமாவார்கள். அடப்பமரத்தின் பேரிலிருக்கும் புல்லுருவியைக் காப்புகட்டிக்கொண்டுவந்து சவ்வாது, குங்குமப்பூ, கஸ்தூரி சேர்த்து அரைத்து மாத்திரைகளாகத்திரட்டி வைத்துக்கொண்டு தேவையானபோது புனுகிலே இழைத்து நெற்றியிலிட்டுச்செல்ல வசியமாம். வேப்பமரத்தின்



பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிக்குச் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி கொண்டுவந்து கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளைச் சேர்த்து மைபோலரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது பசும்பாலிலிழைத்து நெற்றியிலிட்டுச்செல்ல சகலசனங்களும் வசியமாவார்கள். அதைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஸ்திரீ வசியமாகும். பாதிரி மரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு உத்திர நக்ஷத்திரமும் திங்கட்கிழமையுமாகப் பார்த்து சாபநிவர்த்திசெய்து உயிர் கொடுத்துக்கொண்டுவந்து அதனுடன் கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம் இவைகளைச் சேர்த்துக் கொன்றைப்பன்னீர் விட்டரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது தேனிலிழைத்து திலர்தமிட்டுக்கொண்டுபோக சர்வவசியமுமாகும். பரணி நட்சத்திரமும் சோமவாரமும் ஒன்றுகக்கூடிய தினத்தில் ஆலமரத்திலிருக்கும் புல்லுருவிக்கு காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்துக்கொண்டுவந்து அதனுடன் ஐங்காயம்சேர்த்து கழுதை மூத்திரத்தாலரைத்து வைத்துக்கொண்டு உச்சாடன மந்திரத்தைச்செபித்துப் பிரயோகிக்க ஏவல், பில்லி, சூன்யங்களெல்லாம் பறக்கும். அதைக்குளிசமாடி ஐங்கோலந்தடவி மேற்படி பார்வை முதலியவைகளால் அவஸ்தைப்படுகிறவர்களுக்குக்கட்ட அதுகளெல்லாம் விலகிவிடும். காட்டு வாகை மரத்தின்மேலிருக்கும் புல்லுருவிக்குச் சாபநிவர்த்திசெய்து உயிர் கொடுத்து பொங்கல் பலி தூபதீபத்துடன் காப்புகட்டிக்கொண்டு வந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஸ்திரீவசியமாகும். அவ்விலையை எடுத்து அதற்குச்சமன் கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி சேர்த்து மைசெய்து டப்பியில் வைத்துக்கொண்டு தேவையானபோது காராவின்நெய் அல்லது புத்துத்தேன் இதுகளில் குழைத்து திலர்தமிட்டுக் கொண்டுபோக ஸ்திரீகள் வசியமாவார்கள். மேற்படியிலையைச்சாறுபிழிந்து அதில் இந்திரகோபப்பூச்சி, ஆலாரம்பூச்சி, குழியானை இதுகளைச்சேர்த்து அரைத்து துவரைப்பிரமாணம் குளிகைதிரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது ஆணுக்குப்பெண்ணும், பெண்ணுக்கு ஆணுமாக அவரவர்கள் நாதத்திலிழைத்துக்கொடுக்க வசியமாவார்கள். இலவமரத்தின் பேரிலிருக்கும் புல்லுருவியை முன்சொன்னமாதிரி பூர நக்ஷத்திரத்தில் கொண்டுவந்து குங்குமப்பூ, சந்தனஞ்சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு பசுநெய்யில் திலர்தமிட புருஷவசியமாகும். அல்லது அச்சாற்றை புதுச்சட்டிக்கு கனக்கப்பூசிக்காயவைத்து அதின் பேரில் காராவின்நெய்யைத்தடவிக் கற்பூரப்புகைபிடித்து வழித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு வேண்டியபோது காரெள்ளெண்ணெய் விட்டுக்குழைத்து திலர்தமிட புருஷவசியமாகும். தேனும் கஸ்தூரியுஞ்சேர்த்துப் பொட்டிட ஸ்திரீவசியமாகும். அவ்வேரைக் குளிசமாடி ஐங்காயந்தடவிக் கட்டிக்கொள்ள வியாபாரவசியமாகும். கடுக்காய் மரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவிக்குக் காப்புகட்டிக்

கொண்டுவந்து கொசுத்தேன் விட்டரைத்து சட்டியில் தடவிக்காய
வைத்து ஓர் அகலில்காராவின் நெய்விட்டு தாமரைநூல் வத்திபோட்
டுக்கொளுத்தி அப்புகையை அச்சட்டியில் பிடித்து மைவாங்கி
வைத்துக்கொண்டு திலர்தமிட்டுக் கொண்டுவர சகல வசியங்களுங்
கைகூடும். எட்டி மரத்தின்மேலிருக்கும் புல்லுருவிக்கு சாபநிவர்
த்திசெய்து காப்புகட்டி பொங்கல், பலி, தூபதீபங்கொடுத்து கொ
ண்டுவந்து பால் விட்டரைத்துக் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி
வைத்துக்கொண்டு விஷக்காலிகளுக்கு பேய்க்கருப்பஞ்சாற்றிலிழைத்
துக் கடிவாயில்போட விஷங்கள்நீங்கும் அல்லது முருங்கயிலைச்சாற்றி
லரைத்துக் கடிவாயில்போட்டு அனல்காட்ட விஷங்கள் தீரும்.
பாவக்காய் சாற்றிலிழைத்து உள்ளுக்குக்கொடுக்க விஷங்கள் தீரும்.
சோரங்கொட்டை மரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவியைக்
கருஞ்சேவல் பலிகொடுத்துக்கொண்டுவந்து அரைத்துவைத்துக்கொ
ண்டு விஷக்காலிகளுக்கு அகத்திச்சாற்றிலிழைத்துக் கடிவாயில்பூசி
உள்ளுக்குக்கொடுக்க விஷங்கள் நீங்கும். அத்திமரத்தின்மேல் படர்ந்
திருக்கும் புல்லுருவிக்குச் சுவாதி நக்ஷத்திரத்தில் காப்புகட்டி பொ
ங்கல் பலிகொடுத்துக் கொண்டுவந்து அதனுடன் கோரோசனை,
குங்குமப்பூ, கஸ்தூரிசேர்த்து பசும்பால் விட்டரைத்து துவரைபிர
மாணக் குளிகைதிரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவை
யானபோது புத்துத்தேனிலிழைத்து திலர்தமிட்டுச்செல்ல சர்வ
காரியங்களும் ஜெயமாகும். புங்கமரத்தின்மேல் படர்ந்திருக்கும்
புல்லுருவிச்செடிக்குப் பூசநக்ஷத்திரத்தில் சாபநிவர்த்திசெய்து காப்
புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து சமூலமுங்கொண்டுவந்து அத
னுடன் நெய்ச்சிட்டிக்கீரையைச்சேர்த்து அரைத்துப்பசும்பாலில்
கலக்கி உள்ளுக்குச்சாப்பிட காணவியாதிகளெல்லாம் போகும்.
இச்சாற்றை புதுச்சட்டிக்குத்தடவி வேப்பமர விறகைக்கொளுத்தி
அச்சாம்பலை அதின்மேல்பூசி வேப்பெண்ணெய் விளக்கேற்றி அப்
புகையை அச்சட்டியில் பிடித்து மைவாங்கி வைத்துக்கொண்டு உச்
சாடன மந்திரத்தைச்செபித்துப்பிரயோகிக்க சகலமும் உச்சாடன
மாகும். அதைக்குளிசமாடி மோகினி மந்திரத்தைச்செபித்துக்
கட்டிக்கொள்ள வசியமாம். வேப்பமரத்திலிருக்கும் புல்லுருவி
யைக்கேட்டை நக்ஷத்திரமும், செவ்வாய்க்கிழமையுமாகப் பார்த்
துக்கொண்டுவந்து சாபமிழிந்து, அம்மரத்திலிருக்குங் காக்கைக்
கூண்டைக்கொளுத்திய சாம்பலை வேப்பெண்ணெய் விட்டரைத்து
மூன் சாற்றையுஞ்சேர்த்துக் குழைத்து வைத்துக்கொண்டு தேவை
யானபோது முன்போல் பிரயோகிக்க சகல உச்சாடனங்களையுஞ்
செய்யும். பகையாளிகளின் வாயற்படியில் கருவுக்குப்பதிலாக
இதைப்பிரயோகிக்க அவர்களை வீட்டைவிட்டு ஓட்டுவதுமன்றி செய்
யாத இம்சைகளையெல்லாஞ் செய்யும். கொத்தான் செய்யும்படி
யான வேலைகளை இதுவும் செய்வதில் சந்தேகமில்லை. வாதமை
மரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவியை அஸ்த நட்சத்திரத்



தில் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கலிட்டுக்கொண்டுவந்து
அதனுடன் எரழிஞ்சில், இந்திரகோபப்பூச்சி இவைகளைச்சேர்த்து
அரைத்து டப்பியில் வைத்துக்கொண்டு தேவையானபோது ஒரு
வெள்ளைத்துணியில் கொஞ்சந்தடவி உலர்த்தி திரிதிரித்து அகலில்
போட்டு நல்லெண்ணெய்விட்டு விளக்கேற்றிவைக்க அங்குள்ள ஜன
ங்களெல்லாம் கூத்தாடுவார்கள். அவ்விலையைச் சாபமிழிந்து அச்
சாற்றில் கோரோசனை, கஸ்தூரி, குங்குமப்பூ இம்மூன்றையுஞ்சேர்
த்து அரைத்துச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது
தேனில் குழைத்து திலர்தமிட்டுச்செல்ல ஸ்திரீ வசியமாகும். காரா
வின் நெய்யில் குழைத்துத் திலர்தமிட்டுச்செல்ல புருடவசியமா
கும். அவ்வேரைக்குளிசமாடி கட்டிக்கொள்ள சகலவசியமுமாகும்.
அக்குளிசத்தில் ஐங்கோலஞ்சேர்த்துக் கட்டிக்கொள்ள பேய், பிசா
சுகளெல்லாம் உச்சாடனமாகும். நாகமரத்தில் படர்ந்திருக்கும்
புல்லுருவியைச் சுவாதி நட்சத்திரத்தில் காப்புகட்டி கொண்டுவந்து
பூசையில்வைத்து மோகினி உச்சாடன மந்திரத்தைச்செபித்து எடு
த்துக்கொண்டு அதன்கூட பூனைக்காலிவிரை, கட்டுக்கொடி, வாதம்
பிசின் இம்மூன்றையுஞ்சேர்த்து நாயுருவிச்சாறு விட்டரைத்துக்
குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தினம் தினம்
காலை மாலை ஓர் குளிகை யெடுத்து வாயில்போட்டு விழுங்கி ஆழாக்
குப்பசும்பால் சாப்பிட்டுவர இந்திரியங்கட்டும். அதைக்குளிசமாடி
பூசையில் வைத்து தம்பனமந்திரஞ்செபித்து கட்டிக்கொள்ள இந்தி
ரியங் கலிதமாகாது. இலவமரத்தின் பேரிலிருக்கும் புல்லுருவியை
அவிட்ட நக்ஷத்திரத்தில் கொண்டுவந்து புனுகு, கஸ்தூரி, குங்கும
ப்பூ இதுகளைச்சேர்த்து அரைத்து உருண்டைசெய்து வைத்துக்
கொண்டு தேவையானபோது பேய்க்கருப்பன் சாற்றிலிழைத்துக்
கொடுக்க வசியமாகும். அதைப்புத்துத்தேனிலிழைத்து நெற்றியில்
திலர்தமிட்டுச்செல்ல சகல காரியங்களும் கைகூடும். வெட்பாலை
மரத்தின்பேரில் முளைத்திருக்கும் புல்லுருவியை கேட்டை நக்ஷத்தி
ரத்தில் காப்புகட்டிகொண்டுவந்து அதனுடன் கொத்தான், கொல்
லைப்பல்லி இவைகளைச்சமனுப்சேர்த்து வேப்பெண்ணெய் விட்
டரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது எதிரிகளின்பேர்
களை தாளிப்பனையோலையில் எழுதி மேற்படி மருந்தை அதிற்பூசி
மந்திரஞ்செபித்து பகைவர்களின் வாயிற்படியருகில் புதைத்துவைக்க
அவ்வீடு நாசமடைவதோடு அவ்வீட்டிலுள்ளவர்களை யெல்லாம் பிரி
த்து ஓட்டிவிடும். அல்லது முன்னரைத்ததையெல்லாம் புதுசட்டி
யில் தடவிக்காயவைத்து ஓர் அகலில் வேப்பெண்ணெய்விட்டு எரு
க்கன் காரினால் திரித்த திரியைபோட்டுக்கொளுத்தி அம்மையைச் சட்
டியில்பிடித்து வழித்துச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையான
போது கோழிரத்தம் விட்டுக்குழைத்து பகைவர்களின் வாயிற்படி
யில் தெளிக்க அவர்களின்வீடு நாசத்தையடையும். மருதமரத்தின்
பேரில் முளைத்திருக்கும் புல்லுருவிக்கு ஆதிவாரமும் அஸ்த நட்சத்

திரமுங்கூடிய தினத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்காட்டி
கொண்டுவந்து அதனுடன் சீதாதேவி, செங்கழுநீர், சவ்வாது சேர்
த்து அரைத்துச்சிமிளில் வைத்துக்கொண்டு பகையாளிகளின் பே
ரை ஓர் நறுக்கிலெழுதி அதின்பேரில் மருந்தை பன்னீர் விட்டுக்
குழைத்துப்பூசி அவர்கள் வீட்டுவாயிற்படியில் புதைத்துவைக்க
அவர்கள் வலிய உறவாடி வருவார்கள். அதைக்கொன்றைப் பன்
னீர்விட்டுக்குழைத்து திலர்தமிட ஸ்திரீ வசியமாகும். அவ்வேரைக்
குளிசமாடி கஸ்தூரி சேர்த்துக்கட்டிக்கொள்ள வியாபாரவசியமா
கும். முந்திரிமரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவியை உத்தி
ராட நட்சத்திரத்தில் காப்புகட்டிக்கொண்டுவந்து அதனுடன் கோ
ரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரிசேர்த்து பன்னீர் விட்டரைத்துக்குளி
கைசெய்து வைத்துக்கொண்டு தேவையானபோது நெய்யில்குழை
த்து திலர்தமிட வசியமாம். பேயத்திமரத்தின்பேரில் படர்ந்திருக்
கும் புல்லுருவிக்குச் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டிக்கொண்டு
வந்து அதனுடன் குடியோட்டிப் பூண்டைச்சேர்த்து வேப்பெண்
ணெய் விட்டரைத்துக் குளிகைசெய்து வைத்துக்கொண்டு தேவை
யானபோது இலுப்பெண்ணெய் விட்டுக்குழைத்து பகைவர்களின்
வாயிற்படியில் தெளித்துவைக்க அவர்கள் சதி புருஷர்களுடன் வெளி
யேறுவார்கள். அசோகமரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுரு
விக்கு சுவாதி நக்ஷத்திரத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு சேவல்
பலிகொடுத்து கொண்டுவந்து அதனுடன் சங்கன்விரை, அழிஞ்சில்
விரை, குடியோட்டிப்பூண்டின்விரை இதுகளைச்சேர்த்து அரைத்து
ஓர் பானைக்குள்போட்டு குழித்தைலமிறக்கி அதில் சீலையைக்கறுக்
கிச்சேர்த்து பேய்க்கருப்பன் சாறுவிட்டுக் குழைத்துப் பகைவர்க
ளின்வீட்டில் சொருகிவைக்க அவ்வீடு நாசமடையும். தேக்கமரத்
தின்பேரிலிருக்கும் புல்லுருவியை உத்திராட நட்சத்திரத்தில் காப்பு
கட்டிக்கொண்டுவந்து கோரோசனை, சந்தனம் சேர்த்து அரைத்து
வெய்யலில்வைத்து காய்ந்தபிறகு மறுபடியும் கொன்றைப்பன்னீர்
விட்டரைத்து வழித்து புதுச்சட்டிக்குத்தடவி காயவைத்து அதின்
பேரில் காராவின் நெய்யைத்தடவி கற்பூர புகைபிடித்து வழித்துச்
சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது மேற்படி நெய்யில்
குழைத்து திலர்தமிட்டுச்செல்ல சகல சனங்களும் வசியமாவார்
கள். அதில் வேப்பெண்ணெய் விட்டுக்குழைத்து நறுக்கில் எதிரி
யின்பேரையெழுதி அதன்மேல்பூசி மயானத்தில் புதைக்க எதிரி
மாரணமாவான். கோங்கிலவ மரத்தின்பேரிலிருக்கும் புல்லுரு
விக்கு சித்திரை நட்சத்திரத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொ
டுத்துக்கொண்டுவந்து அதனுடன்வட்டக்கிலுகிலுப்பையைச்சேர்த்து
பேய்க்கருப்பஞ்சாறு விட்டரைத்து வைத்துக்கொண்டு தேவையான
போது வெண்ணெயில் குழைத்து திலர்தமிட்டுக்கொண்டுபோக
பேய்களெல்லாம் விலகிப்போய்விடும். அல்லது அதை வேப்பெண்
ணெயில் குழைத்து பேய்பிடித்தவர்களின் தலைமாட்டில் ஓர் நறுக்



கில் தடவிவைக்க அப்பேயானது விலகிவிடும். புங்கமரத்தின்பே
ரில் படர்ந்திருக்கும் புல்லுருவிக்கு பூசநக்ஷத்திரத்தில் சாபநிவர்
த்திசெய்து காப்புகட்டி பொங்கல், பலி முதலியதுசெய்து கொ
ண்டுவந்துக் குளிசமாடி பஞ்சலோகத்தகட்டில் மோகன சக்கரங்
கீறி அதின்பேரில் மேற்படி குளிசத்தை வைத்துச்சுருட்டிக்கட்டிக்
கொள்ள சகல காரியங்களும் கைகூடும். பொன்னுங்கொட்டை
மரத்தின்பேரில் முளைத்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு அவிட்ட
நக்ஷத்திரத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு கருப்புக்கோழி பலிகொ
டுத்துக்கொண்டுவந்து அதனுடன் அழிஞ்சில், குடியோட்டிப்பூண்டு,
கொல்லைப்பல்லி இதுகளைச்சேர்த்துக் குழித்தைலமிறக்கி அந்தை
லத்தில் வேப்பமரக் காக்கைக்கூட்டைக் கொளுத்திய சாம்பலைச்
சேர்த்துக்குழைத்து பேதன மந்திரத்தைச்செபித்து எதிரிகளின்
பேரில் பிரயோகிக்க அவர்களை சொல்லக்கூடாத வேலைகளையெல்
லாஞ்செய்து பேதித்துவிடும். இன்னும் இப்புல்லுருவியினு லாகவே
ண்டிய வேலைகளையெல்லாம் தகுந்த ஆசானின் மூலமாகக்கண்டுக்
கொள்ளவும். ஒவ்வொருவிசையும் சாபநிவர்த்தி செய்து, உயிர்
கொடுத்து, காப்புகட்டி பொங்கல், பலி முதலானதுகளை யெல்லாம்
குறைவரச்செய்து மூலிகையைக் கொண்டுவந்தால் காரியங்கள் நிறை
வேறும் அப்படிக்கில்லாது அவரவர்கள் மனதின்படி கொண்டுவந்து
செய்துபார்த்து பலிதமில்லாவிடில் நூலின்பேரில் குறைகூறுவதில்
பிரயோசனமில்லை. பலிசொல்லாததற்கெல்லாம் எலுமிச்சங்கனி
பலிகொடுத்துக் கொள்ளவும். நக்ஷத்திரங்கள் சொல்லாததற்கெல்
லாம் வியாழக்கிழமைபதினம் செய்துக்கொள்ளவும். உள்ளங்கை
நெல்லிக்கனிபோல் பலிதமாகும்.

## ஆண்வெற்றிலை பெண்வெற்றிலையைத் தேடிவரும் வித்தை.

ஒரு பெண்வெற்றிலையை பூசையில் வைத்து ஆண்வெற்றிலை
யைக் கையில் பிடித்துக்கொண்டு முன் வெற்றிலையை வா வென்று
கூப்பிட அது தானுய் ஆண்வெற்றிலையி னிடத்தில் வரும். ஆனால்
இவ்வேலைக்கு முன் சாக்கிரதையாகவே பெண்வெற்றிலையி னடியில்
தெரியாது கொஞ்சம் மெழுகைவைத்து அதில் 2-முழ அளவுள்ள
தலைமயிர் ஒன்றைப் பதியவைத்து அம் முனையை தந்திரமாகக்
கையில் பிடித்துக்கொண்டு நடித்துக் காண்பிக்கவும்.

## ஆனையாகும் வித்தை.

ஆனைத்தோலுக்கு மாயாசத்தி மையும், ஐங்கோலமுந்தடவி
(ஸ்ரீம்) என்று மனதிலிடமாகத் தியானித்துப்பெரிய துப்பட்டியை
க்கொண்டுமூடி. பிறகு, எக்ஷிணியைத் தியானித்துத்திறந்துகாட்ட
பெரிய யானையானது கொம்புகளுடன் நிற்கும். இதில் ஆண் ஆனைத்
தோலாயிருந்தால்தான் ஆணுகிக்கொம்புகள்தெரியும் பெண்ணுயிருந்
தால் பெண்ணுகவே தோன்றும். அதிலும் நாம் மையைத் தடவு

றபோது என்னமாதிரி ஆகவேணுமென்று நினைத்துத்தடவுகிறோமோ அம்மாதிரிதான் எதிரி கண்களுக்குத்தோன்றும்.

### மாடாகும் வித்தை.

மாட்டுத்தோலுக்கு மாயாசத்தி மையைத்தடவி துப்பட்டியைக்கொண்டு மூடி (நமசிவய) என்று தியானித்துத்திறந்துகாட்ட பார்ப்பவர்களுக்கு மாடாகத்தோன்றும்.

### எருமையாகும் வித்தை.

எருமைத்தோலுக்கு மாயாசத்தி மையும், ஐங்கோலமுந்தடவி (வாவாவா) என்று தியானஞ்செய்து மூடித்திறந்துகாட்ட எருமையாகத்தோன்றும்.

### முயலாகும் வித்தை.

முயலின்தோலுக்கு மாயாசத்திக்கருவைத்தடவி (ஜிம்) என்று செபித்துக்கூடையைப் போட்டுமூடி, சற்றுநேரங்கழித்துத் திறந்துகாட்ட முயலைப்போல் தெரியும்.

| | | | |
|---|---|---|---|
| 42 | 49 | 2 | 7 |
| 6 | 3 | 46 | 45 |
| 48 | 43 | 8 | 1 |
| 4 | 5 | 44 | 47 |

### தூமாதேவி மந்திரம்.

செப்புத்தகட்டில் பதினாறறை கீறி அறைகள்தோறும் சூலம்போட்டு அதில் நூறு என்னும் எண்ணைப்பிசகாமலடைத்து 'நமசிவய' என்று லட்சமுரு செபித்துக் கட்டிக்கொள்ள தூமாதேவியானவள் விலகுவாள்.

### புலியாகும் வித்தை.

புலித்தோலுக்கு ஐங்காயமும், மாயாசத்திக்கருவுந்தடவிசபையில்வைத்து சொர்னபைரவரைத் தியானித்துமூடி, சற்று பொருத்துத்திறந்துகாட்ட புலியாகத்தோன்றும் பார்ப்பவர்களெல்லாம் பயந்து விலகுவார்கள். இன்னம் இந்த மையைக்கொண்டு எவ்வளவோ வேலைகளைச் செய்யலாம். அதுகளையெல்லாங் குருமுகாந்தரமாய்த் தெரிந்துகொள்ளவும்.

### ஐங்கோலதைல வித்தை.

ஐந்தாமாதத்தில் கருவழிந்த ஆண் பிண்டத்தைக்கொண்டு வந்து உரலில்போட்டு இரும்புலக்கையால் சிதைத்துப் புதியபாண்டத்திலிட்டு ஆல், அரசு, அத்தி, முருக்கு, நாயுருவி, தர்ப்பை, எட்டி முதலிய சமுத்துகளால் எரித்துக்குழித்தைலம் வாங்கி, அதில் பூனீர், வீரம், பூரம், புனுகு, சவ்வாது, கொச்சிமஞ்சள்,



பச்சைக்கற்பூரம், ஆலாத்திப்பூரம் இதுகள் வகைக்கு முக்கழஞ்சி சேர்த்து மத்தித்துச் சத்திபூசைசெய்து ஆனைத்தந்தச்சிமிளில் பதனஞ்செய்து வைத்துக்கொண்டு இதில் சொல்லியிருக்கும் வேலைகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

### இதுவுமது.

முன்செய்த ஐங்கோலம் வடித்தக்கடுகை பீங்கானில் வழித்து வைத்துக்கொண்டு கொச்சிமஞ்சள், கோரோசனம் இவைகளை வகையொன்றுக்கு நாலு கழஞ்சு சேர்த்துப்பன்னீர்விட்டுக் கல்வத்திலாட்டி மைபோலானபின்பு, மயானத்தில் புதைத்து, மயானபூசை செய்து பிறகு வேண்டும்போது மேற்படி மையை அட்டமாசித்திகளுக்கும் உபயோகித்துக்கொள்ளவும்.

### பூசனிக்காயை வெட்ட ஆனைத்தலையாகும் வித்தை.

பூசனிக்காயை சபையில் கொண்டுவந்து மேற்படி மையைத் தடவி (ஓம்) என்ற மந்திரத்தை 8-விசை தியானித்து வெட்ட பார்ப்பவர் கண்களுக்கு ஆனைத்தலையைப்போலத் தோன்றும்.

### கல்யாணபூசனிக்காயைவெட்ட குதிரைத்தலையாகும் வித்தை.

கல்யாண பூசனிக்காயைக் கொண்டுவந்து மையைத்தடவி (ஆ) என்ற மந்திரத்தை 8-விசை சொல்லிவெட்ட பார்ப்பவர்களுக்கு குதிரைத்தலையைப்போ லிருக்கும்.

### சோரக்காயைவெட்ட ரிஷபத்தலையாகும் வித்தை.

மையை சொரக்காயிற்குத் தடவி (யா) என்ற மந்திரத்தை 8-விசை தியானித்துவெட்ட ரிஷபத்தலையைப்போன்று தோன்றும்.

### மண்ணை அள்ளிப்போட பட்டணந்தோன்றும் வித்தை.

மாயாசத்தி மையை விரலில்தொட்டுக்கொண்டு மண்ணையள்ளி ஜாலக்காளைத்தியானித்து குபேரதிக்கில்போட பட்டணங்கள் தோன்றும்.

### கருங்கல் நகரும் வித்தை.

மாயாசத்திமையை கருங்கல்லிறகுத்தடவி எக்ஷிணியைத்தியானித்து சீக்கிரம் வாவென்று சொன்னால் கருங்கல் தானாய் நகர்ந்து வரும்.

### கத்திகள் சண்டைசெய்யும் வித்தை.

மாயாசத்தி மையை, ஐங்கோலத்தில் கலந்து கத்தியின்மேல் தடவி ஆகாயமார்க்கமாய் விட்டெறிய, அனேக கத்திகள் சண்டை செய்கிறதைப்போன்று பார்ப்பவர்களுக்குத்தெரியும். எல்லோரும் எங்கு கத்திகள் நம்மேல் விழுந்து விடுகிறதோவென்று பயப்படுவார்கள்,

### பாணுத்தடி வித்தை.

மூன்கூட்டின மையை பாணுத்தடிக்குத்தடவி ஆகாயத்தில் விட்டெறிய அதுவும் முன்போல் சண்டைசெய்கிறதைக்கண்டு சனங்கள் வியப்படைவார்கள்.

### கள்ளிக் காக்கையாகும் வித்தை.

அடப்பமரத்தின் இலைக்குக் கருவைத்தடவிக் கீழேபோட்டு, ஜாலக்காலைத் தியானிக்க பார்ப்பவர் கண்களுக்கு கள்ளிக்காக்கையாகத்தோன்றும்.

### நூலேணி வித்தை.

நூல்கயற்றில் மாயாசக்தி மையைப்பூசி ஆகாயத்தில் விட்டெறிந்து, மறைப்புமையைத் திலர்தமிட்டுக்கொண்டு பூமியின்மேல் நடக்க பார்ப்பவர்களுக்கு ஏணியின்மேல் ஏறுவதைப்போலிருக்கும்.

### தீவட்டிசண்டை வித்தை.

கருச்சிலைத்தண்டை தீவட்டியாகச்சுற்றி, ஐங்கோலத்தில் நனைத்துக்கொளுத்தி சத்தியைத்தியானித்து ஆகாயத்தில் விட்டெறிய எத்தனையோ தீவட்டிகள் சண்டைசெய்கிறதாகத் தெரியும்.

### பஞ்சவேட்டாணுகும் வித்தை.

இச்சிலி யிலையைப்பரித்து மையைத்தடவி (வங்) என்று 8-விசைசெபித்துக் கீழேபோட பஞ்சவெட்டான் குருவியாகும்.

### தீக்கோழியாகும் வித்தை.

பாலையிலையைப்பறித்து மையைத்தடவி (சிங்) என்று 8-விசை செபித்துக்கீழேபோட தீக்கோழியாகும்.

### காணுங்கோழியாகும் வித்தை.

பேயத்தியிலைக்கு மையைத்தடவி (ஓம்) என்று 8-விசை செபித்துக்கீழேபோட காணுங்கோழியைப்போல பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.

### பருந்தாகும் வித்தை.

கலித்தக்கிலையைப்பறிக்க மையைத்தடவி (ரா) என்னும் மந்திரத்தைத்தியானித்துப்போட பார்ப்பவர்களுக்கு பருந்தைப்போல தோன்றும்.

### மைனுவாகும் வித்தை.

நுணுயிலையைப்பறித்து (றீம்) என்று 10-விசைசெபித்து மையைத்தடவிக் கீழேபோட மைனுவாகத்தோன்றும்.



### பாம்பாகும் வித்தை.

தென்னம் ஓலைக்கு மையைத்தடவி (ஏ) என்று தியானித்துக் கீழேபோட பாம்பாகத்தெரியும் எல்லோரும் பயப்படுவார்கள்.

### சாரைப்பாம்பாகும் வித்தை.

தாளிப்பனங்குருத்தில் மையைத்தடவி (யா) என்று 8-விசை செபித்துக்கீழேபோட சாரைப்பாம்பாகத்தோன்றும்.

### மண்ணுளிப்பாம்பாகும் வித்தை.

பனை ஓலையில் மையைத்தடவி (ஹ்ரீம்) என்று எட்டுவிசைதியானித்துக் கீழேபோட மண்ணுளிப்பாம்பாகும்.

### கருவண்டாகும் வித்தை.

புளியயனிலைக்கு மையைத்தடவிப் பூமியில்போட்டு (ம்) என்று செபித்தால் கருவண்டைப்போலத் தோன்றும்.

### குளவியாகும் வித்தை.

கெச்சக்காயிலையை அறுத்து மையைத்தடவி (ஏ) என்று செபித்துக்கொண்டே கீழேபோட்டால் பார்ப்பவர்களுக்கு குளவிகள் மேய்கிறதைப்போலத் தோன்றும்.

### கிளியாகும் வித்தை.

இலவன் இலையைப்பறித்து மையைத்தடவி (ரா) என்று செபித்துக் கீழேபோட்டால் கிளியைப்போலத் தோன்றும்.

### நட்டுவெக்காலியாகும் வித்தை.

மலைவேப்பிலைக்கு மையைத்தடவி (சிங்) என்று செபித்துக் கீழேபோட்டால் நட்டுவக்காலியைப்போல்தோன்றும்.

### காக்கைகளாகும் வித்தை.

பூவரசனிலைக்கு ஐங்கோலமும், மாயாசக்திக்கருவுந்தடவி காளியைத்தியானித்துக் கீழேபோட்டால் காக்கைகளாகத்தோன்றும்.

### கழுகாகும் வித்தை.

மந்தாரயிலைக்கு மையைத்தடவி மாயாசக்தியைத்தியானித்து (வா) என்னும் மந்திரத்தை ..ஒன்பதுவிசை செபித்துக்கீழேபோட கழுகுகளைப்போலத் தோன்றும்.

### தும்பியாகும் வித்தை.

ஆவாரந்தழைக்கு மையைத்தடவி (ஸ்ரீ) என்று செபித்துக் கீழேபோட தும்பிகள் பறப்பதைப்போலத் தோன்றும்.

### நாரையாகும் வித்தை.

கொக்குமந்தாரையிலைக்கு மையைத்தடவி (வா) என்று செபித்துக்கீழேபோட நாரையாகத்தெரியும்.

### தலையில்லா குருவியாகும் வித்தை.

மையை நொச்சியிலையில் தடவி (அ) என்னும் மந்திரத்தை 8-விசை செபித்துக்கீழேபோட தலையில்லாக் குருவியாகத்தோன்றும்.

### சிட்டுக்குருவியாகும் வித்தை.

மையைக் கல்லாலன் இலைக்குத்தடவி (ஓம்) என்னும் மந்திரத்தை செபித்துக்கீழேபோட பார்ப்பவர்கண்களுக்கு சிட்டுக்குருவியாகத்தோன்றும்.

### கருங்குருவியாகும் வித்தை.

மையைக் கருநொச்சியிலைக்குத்தடவி (யா) என்னும் மந்திரத்தை 8-விசை செபித்துக்கீழேபோட பார்ப்பவர்கண்களுக்கு கருங்குருவிகளாகத் தோன்றும்.

### கருடனாகும் வித்தை.

ஆலிலைக்கு மையைத்தடவி (ஏ) என்னும் மந்திரத்தை 8-விசை செபித்துக்கீழேபோட கருடனைப்போலத்தோன்றும்.

### ராமனாத்தி குருவியாகும் வித்தை.

மையை அரசிலைக்குத்தடவி (றீம்) என்று 8-விசைசெபித்துக்கீழேபோட பார்ப்பவர் கண்களுக்கு ராமனாத்தி குருவியாகத்தோன்றும்.

### மணிப்புறவாகும் வித்தை.

அத்தியிலையைப்பரித்து மையைத்தடவி (யா) என்ற மந்திரத்தை 8-விசை செபித்துக் கீழேபோட பார்ப்பவர்கண்களுக்கு மணிப்புறவாகத்தோன்றும்.

### பச்சைப்புறவாகும் வித்தை.

புன்னையிலையைப்பரித்து மையைத்தடவி மேற்படி மந்திரத்தைச் சொல்லிக்கீழேபோட பார்ப்பவர்களுக்கு பச்சைப்புறவாகத்தோன்றும்.

### மீன்குத்தி பக்ஷியாகும் வித்தை.

வெள்ளெருக்கன் இலையைப்பரித்து மையைத்தடவி (அரோ) என்ற மந்திரத்தை 8-விசை சொல்லிக்கீழேபோட பார்ப்பவர்கண்களுக்கு மீன்குத்தி பக்ஷியைப்போலத்தோன்றும்.



### குயிலாகும் வித்தை.

பூவரசன் இலையைப்பரித்து மையைத்தடவிக் கீழேபோட பார்ப்பவர் கண்களுக்குக் குயிலைப்போலத்தோன்றும்.

### தவிட்டுக்குருவிகளாகும் வித்தை.

புங்கன் இலையைப்பரித்து மையைத்தடவி (எ) என்று மனதிலேயே 8-விசை தியானித்துக்கீழேபோட தவிட்டுக்குருவிகளாகத் தெரியும்.

### கௌதாரியாகும் வித்தை.

அமுக்கனஞ்செடியிலைக்கு மையைத்தடவி (ஓ) என்று 8-விசை தியானித்துக் கீழேபோட கௌதாரியாகத்தோன்றும்.

### காடையாகும் வித்தை.

கோங்கிலவன் இலையில் மையைத்தடவி (அரோ) என்று 8-விசை தியானித்துக்கீழேபோட காடையாகத்தோன்றும்.

### மயிலாகும் வித்தை.

பலாயிலைக்கு மையைத்தடவி (சி) என்று 8-விசை தியானித்துக் கீழேபோட பார்ப்பவர்களுக்கு மயிலாகவேதோன்றும்.

### தீக்கோழியாகும் வித்தை.

மையை வெட்பாலைக்குத்தடவி (ம) என்று 8-விசை தியானித்துக் கீழேபோட தீக்கோழியைப் போலத்தோன்றும்.

### கானங்கோழியாகும் வித்தை.

அத்தியிலைக்கு மையைத்தடவி (அம்மாரோ) என்று 8-விசை தியானித்துக்கீழேபோட கானங்கோழியைப்போல பார்ப்பவர் கண்களுக்குத்தோன்றும்.

### காட்டுக்கோழியாகும் வித்தை.

அழிஞ்சியிலையில் மையைத்தடவி (ரா) என்ற மந்திரத்தை 8-விசை தியானித்துக் கீழேபோட பார்ப்பவர்களுக்குக் காட்டுக்கோழியாகத்தோன்றும்.

### நீர்க்கோழியாகும் வித்தை.

அல்லியிலைக்கு மையைத்தடவி (சிங்) என்று 8-விசை தியானித்துக்கீழேபோட நீர்க்கோழியாகத்தோன்றும்.

### வான்கோழியாகும் வித்தை.

அரசன் இலைக்கு மையைத்தடவி (வங்) என்று 8-விசை தியானித்துக் கீழேபோட வான்கோழியாகத்தோன்றும்.

19

## கருங்கோழியாகும் வித்தை.

சுண்டையிலையைப்பரித்து மையைத்தடவி (ரீம்) என்ற மந்திரத்தை 16-விசை தியானித்து கீழேபோட பார்ப்பவர் கண்களுக்கு கருங்கோழியாகத்தோன்றும்.

## நாமப்பக்ஷியாகும் வித்தை.

மையை மாவிலைக்குத்தடவி (நம) என்று 8-விசை தியானித்துக்கீழேபோட பார்ப்பவர்கண்களுக்கு நாமப்பக்ஷியாகத்தோன்றும்.

## விச்சுளியாகும் வித்தை.

முள்ளிலவன் இலைக்கு மையைத்தடவி (அம்மாரோ) என்று 8-விசை தியானித்துப்போட விச்சுளியாகத்தோன்றும்.

## நீரேற்ற வித்தை.

பித்தளை அல்லது வேரெவ்வித லோகங்களிலாகிலும் மேல் டம்ளரைப்போல்செய்து அதனடிமுனையை 1-பெரிய சொம்பின் வாயிற் பிகுவாய்த்துருத்து அதனடிமுனையை ஒரு தவலையின் வாயிற் பிகுவாய்த்துருத்து உள்ளும்புறமும் தண்ணீர் காற்று வெளிப்படா தடைத்து, வலதுபக்க முதற் குழைபெரிய சொம்பின் கழுத்தடியிற் சற்றுறுதங்கியிருந்து அடித்தவலை கழுத்தடியிற் சற்றுறுத்தி விடுத்து நடுக்குழை புனலின்மேல் ¼-அடி உயரம்நிறுத்தி, அடி பெரிய சொம்பின் அடிப்புரத்தில் சற்றுறுத்திவிடுத்து, இதற்கிடப்பக்க 3-ங்குழை புனலினடியிலிருந்து தவலைக்கடியிற் சற்றுறுத்திவிடுத்து தடைபடாமற் குழைகளை அமைத்துப் பிகியவும்.

இதில் நடிக்கையில் முதலில் மேற்குவளையைத்திறந்து பெரிய சொம்பில் ஜலம் நிறப்பிவிட்டு மேற்புனலை மூடிப்பிகிந்து, பெரிய சொம்பைத் தவலைவாயிற் சொருகிப்பிகிந்துவிட்டு, பலர் பார்க்க புனலிற்றண்ணீர்விட அத்தண்ணீர் இடப்பக்கம் 3-ங்குழையிலிறங்கி, அத்தவலையில் நிறம்ப, அதிற்காற்றுண்டாகி அது வலது முதல்குழையிலேறி பெரிய சொம்பிலிறங்க, அப்பெரிய சொம்புநீர் 2-ம் நடுக்குழையிலேறி மேற்படி புனலின்மேலிருக்கும் குழையிற்பூரி வெளியிற் பறந்துவிழும், அம்மேற்குழை வாய்ப்புறத்தில் பல சிறு துவாரங்கள் செய்துவைக்க சாமழி புருசபோல சலம்விழும்.

## கோப்பைச்சுழலும் வித்தை.

ஒருதொட்டி நிறையத் தண்ணீர்வார்த்து ஒவ்வொருதட்டைப் பிங்கான் கோப்பையைவைத்து அதின்மேல் ஒரு சின்ன சோமுடையில் அடியிற் கால்பங்கு மெழுகடைத்து, அதின்மேல் நேர் நேர் 2-குழைகள்வைத்து அக்குழை முனைகளைமடித்து மேற்கொன்றும், கீழ்க்கொன்றுமாய் வளைத்து விடுத்து கோடுதவலை ¾-பங்கு தண்



ணீர்விட அது இரண்டுபக்கத்திலும் குழை தாரைவழிகளிற் சல தாரையாய்ப்பொழியும். அவ்விசையில் இச்சோடுதவலையைச்சூழ்ந்திருக்கும் கோப்பையுஞ் சுழலும்.

## உருவச்சுழல் வித்தை.

தகரத்திற் குழைபோற்செய்து பின்பக்கத்தில் 1-உருவக்கண்ணாடியைப்பிடித்து முன்பக்கத்தில் 1-காகிதத்தையொட்டி அம்முனைப் புற ஓரங்களில் இலைக்கதவு ஜன்னலைப்போல்கொத்தி, இதையொரு கண்ணன்டை வைத்து பின்புறப் படத்தைச் சுழற்றிப் பார்த்துலா விநோதமாயிருக்கும்.

## கடிதக்கோத்து வித்தை.

இம்மாதிரி கடிதங்களில்வெட்டி மடிக்கும்படியாய்வைக்க ஒவ்வொரு பாத்திரங்களாகவும், பெட்டிக்கரண்டகமாகவு மிருக்கும்.

## முக்கோணசிக்க வித்தை.

இம்மாதிரி 12-மெல்லிய மூங்கிற்குச்சுகளை 1-அடி நீளங்களாகத் தரித்து நாலுகுச்சுகளை ஒவ்வொன்றுய்ச்சேர்த்து அடியிற்கட்டி, மேல்முனைநடுவில் இரண்டு குச்சுகளை ஒவ்வொன்றாய்ச்சேர்த்துக்கட்டி, இப்படி 3-துண்டுகளாக்கி, அதில் 1-வளையத்தை எவ்வாறு பூட்டிவாங்குவதெனில் 1-வது அடிமுனைநடுவில் 3-வது மேல்முனைநடு இரட்டைக்குச்சுகளை நடுவிலும், 2-பக்கத்தில் 2-தனித்தனிகுச்சுகளையும் மாட்டி, அதில் 2-வது அடிமுனைநடுவில் 1-வதுமேல் முனைநடு இரட்டைக்குச்சுகளை நடுவிலும், மற்ற இரண்டு பக்கத்தில் 2-தனித்தனி குச்சுகளையுமாட்டி, அதில் 3-வது அடிமுனையில் 1-வது வளையத்தைத்துருத்து, அம்முனையை 2-வது மேல்முனைநடுவில் நுழைத்து 3-வதை மேலாகமல்லாத்தி, ஒன்றுயழுத்திப்பிடித்து, அதின் மேல்முனை 2-தனித்தனி குச்சுகளை 3-வது அடிமுனை 1-லும், 3-வது மாட்டியதில், அவைகளை மறுபடியும் முக்கோணமாய்ச் சமப்படுத்திப்பார்க்க இவ்வாறிருக்கும். அதைப்பூட்டியவாறே மறுபடியுந் திறந்து இவ்வளையத்தை எடுப்பதும், பூட்டுவதுமாய் உபயோகப் படுத்தவும்.

## வலிச்சிக்க வித்தை.

இம்மாதிரி இரும்பு அல்லது செம்பு, பித்தளையில்செய்த கம்பிகளை வளைத்துத்தொடுத்து வெவ்வேறாய்க்கழட்டுவது எவ்விதமெனில், இடப்பக்க நடுமுனையை வலப்பக்கக் கீழ்வளைவிற்றுருத்து, துருத்த முனையில் நேரடிக்கீழ்வளைவு கம்பியைத்துருத்தவாங்கி நடுவிலிழுக்க 2-கம்பிகளும் வெவ்வேறாய் வந்துவிடும். இப்படியே மறுபடியும் பூட்டவும்.

### கலிச்சிக்க வித்தை.

இவ்வாறு முன்போற் கம்பிகளை வளைத்து 2-ம், 1-மாகபடித்து மோதிரத்தை முனைப்புறங்கொண்டுவந்து அடிக்கம்பிகள் ஒன்றின் மேலொன்றேற்றி, அம்மோதிரத்தைக்கீழிறக்கி, மறுபடியு முன்மாதிரி 2-கம்பிகளையும் ஒன்றின்மேலொன்றுநீக்கி, எடுக்க மோதிரம் வேறாய் வந்துவிடும். மறுபடியும் பூட்ட, 2-ம், 1-மாகபடித்து 1-பக்கக்கம்பியில் மோதிரத்தைவிடுத்து கம்பிகளை ஒன்றின்மேலொன்றேற்றி, மோதிரத்தைநீக்கி மேலுக்குக்கொண்டுபோக கூடி மோதிரம் நடுவில் வந்திருக்கும். ஆனால் கம்பிகள் நயமானதாயிருக்க இலேசாயிருக்கும்.

### நிலப்பகுப்பு வித்தை.

பிதாக்கள் இருவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காணிகளில் 4-ல் 1-பாகம் பகுத்துக்கொண்டபின், ஒவ்வொருவர் புத்திரர்கள் நால்வருக்கு மற்ற காணிகளை 4-பாகங்களாகப் பிரிக்கும் வகை எப்படியெனில் சரிபாகமாயிருத்தல்வேண்டும். அது இம்மாதிரியே A-க்கு, A-விதமாயும், (சி)க்கு A-விதமாயும் பங்கிடவேண்டும்.

### துண்டை சதுரமாக்கும் வித்தை.

1-காகிதத்தில் முக்கோணவடிவாய் 20-துண்டுவெட்டி 1-சதுரமாக்கும்வகை. இம்மாதிரியாக வெட்டினால்தான் சரிப்பட்டுவரும். இதை முக்கோணமாய் வெட்டுவதிலும் வாலநீண்டும், ஒரு முனைப் பரந்துமிருக்கவேண்டும்.

### கடிதஓட்டு வித்தை.

1 கடிதத்தில் ½-அடி அகலம், ½-அடி நீளமாய்த்துணித்து நடுவில்மடிக்க 2-பங்காயிருக்கும். மேற்பங்கில் இடதுமுனையை வலதுமத்தியிற்பிடித்து மடித்து, வலது முனையை இடதுமத்தியிற்பிடித்து மடித்து, பிறகு நடுவில் வலது இடதுபக்கக்கூரை ஒன்றாய்ப்பிடித்து நீளமத்தியிற்மடித்து, மறுபடியும் அதை நீளத்திற் ஒருமடிப்பு மடித்து, பின்பு கத்திரியினால் நீளத்திற்பேர்பாதியை வெட்டிப்பார்க்க இத்துண்டுகள் அதிலிருக்கும்.

### கடக்கால்ஜோடிப்பு வித்தை.

கடிதத்தில் துடப்பச்சுப்பல்வீதமாய் 1-அங்குல நீட்டிற்கு 17-துண்டுகள்வெட்டி, இம்மாதிரி 6-அறைகளாய்த்தடுத்து, மறுபடியும் 5-துண்டுகளை எடுத்துவிட 3-அறையாயிருக்கும்விதம், கீழ்ப்புறம் வலது மூலையில் 2-துண்டும், இடது மூலையில் 2-துண்டும், மேற்பக்கம் நடுவில் 1-துண்டுமாக 5-துண்டுகளையுமெடுத்துவிட்டால் 3-அறையாகும்.



### கடிதவிரிவு வித்தை.

இவ்வாறு நெடுக்கில் 3-கோடும், குறுக்கில் 29-கோடும் ஒன்றற்கொன்று வெளிக்கோடு நடுக்கோடு பொருந்தாமல் கோடுகிழித்து, அக்கோடுகள்மேல்வெட்டிவந்து ஒன்றைப்பார்க்க பெரியவிஸ்திரணமுள்ள கடிதமாகும். அதில் ஓர் ஆள் நுழைந்துவரலாம்.

### கார்ட்டுகள் மாற்றும் வித்தை.

அடியிற்கண்டமாதிரி 5-கார்ட்டில் யெழுதி வெவ்வேறாய்வைத்துக்கொண்டு இதுமாற்றுவது அடுக்கிக்காட்டும் வண்ணம்.

1-2-3-நம்பர் கார்ட்டுகளை A-மாதிரி வைத்துப்பிடித்து 4-ங் கார்ட்டை பக்கத்தில் வைத்துக்காட்ட 4-ங்கார்ட்டைபோல மற்ற முன்மூன்றையும் கருதுகிறார்கள்.

அதைமறுபடியும் ஒன்றாய்ச்சேர்த்து முன்மூன்றையுங் கவிழ்த்து 5-ங்கார்ட்டைப்பக்கத்தில் வைத்துக்காட்ட இதுவும் B-மாதிரி 4-கார்ட்டுபோல மற்ற மூன்றையும் எண்ணுகிறார்கள்.

இம்மாதிரி 1-ம், 5-ம் கவிழ்த்து, 2-ம், 4-ம் நிமிர்த்திச்சரியாய் வைத்துக்காட்ட (சி) மாதிரியிருக்கும்.

அதை மறுபடியும் 1-ம், ..-ம், நிமிர்த்தி, 2-ம், 5-ம், கவிழ்த்து வரிசையாய் வைத்துக்காட்ட D-மாதிரியிருக்கும். இவ்வாறின்னும் எத்தனைவிதப்புரட்டுச்செய்தாலும் இப்படித்தான் மாறல்வேண்டும்.

### கார்ட்டுகளை திருப்பும் வித்தை.

இம்மாதிரி 1-ல், 2-எழுதி 2-பக்கம் 2-வைத்து நடுவில் 2-ங் கார்ட்டை வைத்துப்பிடிக்க 4-ஆவதைப்போலிருக்கும்.

1-ல் 2-திருப்பி, 2-பக்கம் 2-வைத்து, நடுவில் 3 வது கார்ட்டை வைத்துப்பிடிக்க 5 ஆவதைப்போலிருக்கும். இப்படியே மற்றதையுஞ்செய்ய ஆச்சரியமாயிருக்கும்.

### மின்சார வித்தை.

இந்த மின்சாரமாவது எப்படி ஏற்றுகிறதெனில் :—டம்ளர் 5 அதில் 7 அறை தடிப்புள்ள செம்புத்தகடுகள் ஒவ்வொன்றும் 3 விரற் கடைநீளம், 2 விரற்கடையகலமுள்ளது 5, இம்மாதிரி துத்தநாகத்தில் கனம் உயரம் அகலமுள்ளது 5, இந்த தகடுகள் மேற்பக்கமத்தியில் ஒவ்வொரு துவாரங்கள்வைத்து அந்தந்த இனக்கம்பிகளை செம்பில் 5, துத்தநாகத்தில் 5, இதுகளை 2, துடப்பச்சுப்பல் கனங்களாய் ஜாண்நீளத்திற்றரித்து அந்தந்த இனப்பில்லைகளின் துளைகளில் நுழைத்து முறுக்கி, ஒவ்வொரு டம்ளர்களிலும் வலப்பக்கம் சாய்வாய் செப்புத்தகடும், இடப்பக்கம் சாய்வாய் துத்தநாகத்தகடும் நடுவில் ஒன்றற்கொன்று படாமல் சாய்வாய்வைத்து முதற்கிளாஸ் செம்

புக்கம்பியை வெளியில் இழுப்பாய்த் தொங்கவிட்டு, மறுபக்க துத்தி நாகக்கம்பியை 2 ங்கிளாஸ் செம்புக்கம்பி துளையிற் றுருத்து, முறுக்கி இம்மாதிரிப்பிணையலாய் 3, 4, 5, டம்ளர்களிலுஞ்செய்து 5-ம் கிளாஸ் கடைசி துத்திநாகத் தகடுகம்பியை வெளியிலிழுத்து தொங்கவிட்டு, கெந்தகத்திராவகத்தில் கொஞ்சந் தண்ணீர்கலந்து, ஒவ்வொருகிளாஸ்களிலும், நிறைக்கவிட்டுவைக்க அதுகளிலிருந்து மின்சாரமானது ஜனிக்கின்றது. இன்னும் அதிக வேகம் காந்திவேண்டுமாகில் இப்படி 20, 30 டம்ளர்களிலும் செய்து வைக்க மிக்க நன்மை. இல்லாவிடின் மெத்தப்பலமேறாது.

### பயமுறுத்து வித்தை.

ஒருவனை அக்கிளாசுகளில் வெளிப்புறமிழுத்துவிட்ட 2 கம்பிகளையும் 2 கைகளினால் பிடித்துக்கொள்ளச்சொன்னால் அவன் சற்றுநேரத்திற்கெல்லாம் இருகைகளும் நடுக்கமெடுத்து உதறிக்கொண்டு ஒருவித விகாரப்பிராந்தி யடைகின்றான். அவனைதவிட்டுவிட்டால்தான் தெளிவடைவான். இதில் எவ்வித பராக்கிரமசாலிகளும் தோல்வியடைவார்கள்.

### காசெடுக்காத வித்தை.

ஒரு பாத்திரத்தில் சலமிடுத்து அதில் உப்பைக்கரைத்துவிட்டு உள்ளே ஒருசெம்பு அல்லது வெள்ளிக்காசைப்போட்டு ஒருவனை யெடுக்கச்சொன்னால் அவன் அப்பாத்திரத்தில் கைவைத்த மாத்திரத்தில் திப்பிரமைகொண்டு நடுக்கலெடுத்து, உதறலோடு கைகால்கள் திமிர்பிடித்து, கொறுக்குவலிகொண்டு எடுக்காது குன்னிவிடுவான். எவனாலுமாகாது.

### சந்திரகாந்தி வித்தை.

இரண்டு துண்டு அடுப்புக்கரிகள் யெடுத்து பென்சல் முனைபோற்சீவித் தொங்கவிட்டிருக்கும் 2, மின்சாரக்கம்பிகளில் அக்கரிகள் கூர்முனைகளை விட்டுக்கட்டி அல்லது சற்றி 2 கைகளினால், 2 கம்பிகளிற் கட்டியிருக்கும் கரிகூர்முனைகளைப் பிடித்துக்கொண்டு ஒன்றற்கொன்றுபடாமல் நெருங்கப்பிடிக்க சற்றுநேரத்திற்கெல்லாம், அம்முனைகள்பற்றி நிலவுவெளிச்சம்போல பிரகாசிக்கும். அதை அப்படியே அசையாது வைத்துவிட அவ்வெளிச்சம் மூன்லைட்டைப் போல பிரகாசிக்கும்.

### துண்டு ஓடும் வித்தை.

2 சிறு கம்பங்கள்நட்டு தட்டோடுபோல ஒரு தகட்டைநீட்டாகவளைத்து நடுவில் ஒருசுற்றிசுற்றி, 2 கம்பத்தின்மேலும் படியவைத்து இப்புறம் அப்புறமிருக்க ஒவ்வொரு தகடுகளை தடுப்புதற்கு வைத்து ஒருகுண்டை வலதுபக்கத்திலிருந்து உருட்டிவிட அக்குண்டு நடுவில் ஒரு சுற்று சுற்றி இடது கம்பத்தின் தடுப்புத்தக



ட்டில் நின்று மீண்டும் இப்புரத்திருந்துருட்ட, அப்புரம்போய் நின்று புறளாது கீழ்விழாது. எந்நேரமும் சுழன்றுக்கொண்டேயிருக்கும்.

### பேருருவப்பெட்டி வித்தை.

இரசம்பூசிய இரண்டு கண்ணாடிகளை மடிக்கவும், நீட்டவுங்கீல்கள்வைத்து இரண்டையும் முக்கோண விற்றுய்மடித்து நிற்கவைத்து 2 கண்ணாடிகளுக்கும் நேர்நேர் 2 துளைகள்செய்து வலம் இடம் ஒன்றையொன்று பார்க்க எதிர்க்கெதிராய் 2 படங்கள்வைத்து மேலுக்கு எண்ணெய் கடுதாசியைப்பதிந்து 2 துளைகளிலும் இருகண்களை வைத்துப்பார்க்க, அப்படங்கள் இரண்டும் பிரம்மாண்ட உருவாய்த்தோன்றும். ஆனால் இதற்கு பூதக்கண்ணாடிகளாக வைக்கவும்.

### பின்னுருகாட்டும் வித்தை.

இப்பெட்டிமேற்பலகை பின்பலகையில்லாமல் மகரவடிவாய்ச் செய்து இம்மாதிரி இரசம்பூசிய 2 கண்ணாடிகளை மத்தியில்வைத்து வலம் இடம் 2 பாகமும், இரண்டு இரசம்பூசிய கண்ணாடிகளை இம்மாதிரியாகவைத்து மத்தியில் 2 துளைகள்செய்து 2 கண்ணாற்பார்க்க பின்னிருக்கும் காடு, மலை, செடி, கொடி, மரங்களெல்லாந் தெரியும்.

### தீபக்கூடு வித்தை.

இம்மாதிரி வெவ்வேறு சொருகு உறுப்புகளாய்ச்செய்து பின்புறச்சொருகிவிட்டுத் தகட்டைத்திறந்து தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய்விட்டு விளக்கேற்றிப் புகைக்கூட்டிற்கடியில் வைத்து 2 பூதக்கண்ணாடிகளையும்மாட்டி, பின்புறக்கிலிட்டுச்சுரையைமூடி முன்புரம் பூதக்கண்ணாடிக்கெதிரில் மல்துணி திரையொன்றுகட்டி, ஒவ்வொரு சட்டமில்லாக்கண்ணாடிப்படங்களிலும் 2,3, 4, 5 தட்டு வர்ணம்வைத்த பற்பல உருவங்களையுந் தள்ளிக்காட்டிக்கொண்டேவர அவ்வுருவங்கள் சந்திரனுக்குள்ளிருக்கும் மாசியைப் போல மேற்படி வர்ணப்பதுமைகளெல்லாம் விசித்திரப்பதுமைகளாய் விளங்கும். ஒரு கண்ணாடியில் பூதமுகத்தில் வெறுங்கண்ணையெழுதி, மற்றொரு கண்ணாடியில் நடுமையும் சரியாய் 2 கருப்பு விழிகளெழுதி 2ம் உள்ளேநுழைத்து புரட்டித்தள்ளிவர விழிகள் நாலுபக்கமும் சுழலும். இப்படியே வெவ்வேறு விதமான வேடிக்கைகளைச்செய்யலாம்.

இத்தீபக்கூடு தகரத்தில் அல்லது வேறெவ்விதலோகத்திலாவது 12 இஞ்சி நீளம், 6 இஞ்சி குழலுள்ள குழையாகச் செய்து அதற்குமுன்புறத்தில் தடுப்புத்தகடு பற்றவைத்து அதில் ½ இஞ்சி அகலம் 3 இஞ்சி நீளம் 4 மூலைச்சவுக்கம் நெடுக்கில் அவ்விற்றுக் கண்ணாடிச் சட்டமில்லாப் படம் இப்புரமிருந்து, அப்புரம்போகவர துவாரமாய்விட்டுஅதற்குமுன் 3 இஞ்சிஅகலம் 4

இஞ்சி நீளம் சொருகுக்குழைமாட்டி, முன்புறத்தில் அவ்வாய்க்குச் சரியாய் முன்பொருந்தச்செய்த கண்ணாடியிற்போர்பாதி கற்றளவிற் கும், மற்றொரு பூதக்கண்ணாடியைப் பொருந்தச்செய்து மாட்டிவைப் பதோடு பெருங்குழை நடுப்பாதியில் ஒருவிளக்கு 2 இஞ்சி அக லம், 3 இஞ்சி நீளம் எவ்வித எண்ணெயாவதுவிட்டு 1¼ இஞ்சி அக லத்தில் வத்திபோட்டு எரிகையில் தீப்புகை மேலெழும்பும்படி, புகைவண்டிக்குழையைப்போல ஒன்று பற்றவைத்து அதன்பின்புறத் தில் வெள்ளிக்கிலிட்டினுல்செய்த ஒரு சொருகு தடிப்புத்தகடுமாட்டி, வெளிப்புற நடுவில் விரல் பிறட்டுக்குழை அல்லது வளையமாட்டி பற்றவைத்து, ஷை பூதக்கண்ணாடிகள் தவிர மற்ற வெளிப்புரமெல் லாம் ஜப்பான் அல்லது வேறெவ்வித வர்ணமாவது பூசிவைத்திருக்க வேண்டியது.

இதில் நடிக்கையில் முன் எவ்வித எண்ணெயிலாவது விளக் கேற்றிப்புகைக்குழைக்கு நேர் பெருங்குழையடியில் வைத்து தீபம் நடுமையத்தில் எரியச்செய்து பின்புறங்கிலிட்டுத் தகட்டைமாட்டி முன்புறம் தனித்தனியாயிருக்கும் 2 பூதக்கண்ணாடிகுழைகளையுமா ட்டி 1 கண்ணாடி ¼ இஞ்சி அகலம் 3 இஞ்சி நீளமுள்ள துவாரத்தின் வாய்க்குச்சரியான சட்டமில்லாக்கண்ணாடிப் படங்கள் 1, ¾, ½ அடி கள் நீளத்திற் செய்திருப்பதை எடுப்பதற்குமுன், முன்புறம் பூதக் கண்ணாடிக்கு நேர் சலவை மல்துணியைத் திரைகட்டி, தீபவெளிச் சம் வேண்டிய விஸ்தீரணத்திற்கு, தீபக்கூடை ஒற்றிவைத்து கையி லெடுத்தக் கண்ணாடிப் படத்தை 4, 3 இன்சின் துவாரத்தில் விடுத்து ஒவ்வொரு வர்ணம்வைத்த சித்திரப்படங்களையும் நுழைத்துக்கொ ண்டேபோக அவ்விடத்திலுள்ள பதுமைகளின் விநோதங்கள் மேற் படி திரையில் விநோதமாகத்தெரியும் ஷை படங்களை எப்பக்கமாயி னும் ஆட்டி, ஓட்டி எடுத்து பின்மற்றொரு படத்தை முன்போலக் காட்டவும். இன்னும் உயிருள்ள எவ்வகை ஜீவன்களையும் பதுமைக் கண்ணாடிகளுக்குப்பதில் வெறுங்கண்ணாடியைமாட்டி, வேடிக்கைக் காட்டுவதுமுண்டு.

## முகமாற்று வித்தை.

இந்த ரஸமியின் நேரிலிருந்துப்பார்க்க தன்முகம் சிறிதாய்த்தோ ன்றும், சற்றெருத்தி முன் வந்துக்கொண்டே யிருக்க பெரிதாகிக் கொண்டே யிருக்கும், ரஸமியின்வண்டைப்பார்க்க ஒன்றுந்தெரி யாது. அதற்கு முன்னெத்தியேவர மிகப்பெரிதாக முகந்தோன் றும்.

## காந்திகடர் வித்தை.

முன்போல இரண்டுத்கிலிட்டுக் கிண்ணங்கள் நேர்நேர் வைத்து இப்புரம்ரஸமியின் வண்டை மெழுகுவற்றித்தீபமேற்றி அப்புரம் பார்த்தால் தீபமானது தலைகீழாகத்தெரியும். அங்கு யாதொரு வஸ்துவைக்காட்டினுலும் அதுதானப்பற்றியெரியும்.



## முகமாற்றப்பெட்டி வித்தை.

1-ஸ்டாண்டு அல்லது தாங்குக்கல்லின்மேல் சாதாரணப்பெரிய பெட்டி போற்செய்து நேர் நேர் மூலைக்கு மூலை ஒரு முழுக்கண் ணாடியில்லையை முடுக்கி மற்றொரு மூலைக்குமூலை முன்னிட்டுக்கண் ணாடிக்கிரண்டு துண்டுகளை நேர் நேர்மாட்டி முடுக்கி மேற்பலகையை மூடி பிகிந்துவிட்டு, ஸ்டாண்டின்மேல்வைக்க, கிழக்குப்பக்கத்துளை யிற் பார்ப்பவர்களுக்கு தெற்குப் பக்கத்துளையிற் பார்ப்பவர் முகந் தெரியும். மேற்குப்பக்கத்துளையில் பார்ப்பவர்க்கு வடக்குபக்கந்துளை யிற் பார்ப்பவர் முகந்தெரியும். ஆனல் நேர் நேர் பார்ப்பவர் முகந் தெரியாது.

## படமெழுதும் வித்தை.

இம்மாதிரி பெட்டி 1 அடி நிகளமாய்ச்செய்து முக்காலடியக லம் 1 அடி உயரமாக 4 மூலச்சவுக்கமாகச்செய்து முன்பாரிஸத் தில் 1 பூதக்கண்ணாடி சிறிதாய்வைத்து 4 மூலை சவுக்கமாய்ப்பார் க்க வாசற்படிவைத்து அதற்குநேர் பின்பாரிசத்தில் ரசம்பூசிய கண் ணாடி அல்லது செப்புத்தகட்டில் வெள்ளிகிலிட்டு படத்தை சாய் வாகவைத்து அதற்குமேல் அவ்வகல நிகளத்திற்கு 1 கதவுமூடவுந் திறக்கவுந் கீல்கள்வைத்து அதை திறந்து அக்கிலிட்டுத்தகட்டிற்கு மேல் 1 எண்ணெய்க்கடுதாசி சரியாய்ப்போட்டு, அக்கடிதத்தின் மேல் 1 வெள்ளைக்கடுதாசி அல்லது வேறெவ்விதக்கடுதாசியாவது போட்டு பார்வை பூதக்கண்ணாடிக்கு முன்புறத்தில் வேண்டிய பூச்சி கள், படங்கள், உருவங்கள், முத்திரைகள், கையெழுத்து சாசனங் கள் முதலியதைவைத்துக்காட்டி அவைதெளிவாய் எண்ணெய்க்கடு தாசியிலிருந்து மேற்கடுதாசியிற்றெரியும் அதின்மேல் எழுதிக்கொண் டேவர சரியாய் அதைப்போலவே யிருக்கும். மற்ற காலங்களில் மேற் கதவை மூடிவைக்கவும்.

## படமோடும் வித்தை.

இம்மாதிரி ஒரு காகிதத்திற்சுற்றளவாய்க்கிரி 4 கோடிழுக்க 8 வீடாயிருப்பது ஒவ்வொன்றிலும் நடுப்புறமுனையில் தலைப்புறம்; கடைப்புறமுனையில் காலுமாக 2 உருவம் நிற்க 2-1 கால்தூக்க 3 தாண்டிவைக்க 4 குதித்தோட, 5 சற்றியோட, 6 அதி துரிதமா யோட, 7 கால்கை யெடுப்பாயோட, 9 கவிந்துவிழுவதுபோலோட எழுதி வர்ணம் வைத்து அதின்மேல்புறத்தில் துவாரம் 4 மூலைச்சவுக் கமாய்ச்செய்து கடிதத்துவாரங்களில் கண்வைத்துப்பார்க்க, இப் படத்தைச் சுழட்டிக்கொண்டேவர அப்பொம்மைகள் 8 ம் ஓடு வதைப்போலிருக்கும். வேறெவ்விதமாக எழுதிக்காட்டினுலுங் காட்டலாம்.

## எந்திரச்சுழல் வித்தை.

தகரம் அல்லது பித்தளைச்செம்பொன்றில் உள்ளேபோதுள்ள

## துப்பாக்கி வெடி வித்தை.

பொட்டிலுப்பு பலம் 5, கரி பலம் 1, கெந்தகம் பலம் 1¼ சேர்த்தரைத்து துப்பாக்கிக் குழையில் நிறைகணக்காய் போட்டுக்கெட்டித்து சக்கியைத் தட்டவேட்டு கிளம்பும். இதில் வேட்டையாடலாம்.

## வெடித்தூள் செய்யும் முறை.

கெந்தகம் பலம் 3, நைட்ரேட் ஆப் பொடாஷ் 9, கார்பநேட் ஆப் பொடாஷ் 6, பாகக் கணக்காய் எடுத்து தனித் தனியாய்ப் பொடித்து யாவையும் ஒன்றாய்க் கலந்து இதிற் சுமார் இரண்டு சிட்டிக்கை யெடுத்து ஓர் அகலத் தகரத்தகட்டின் மேல் வைத்து, நெருப்பைக் காட்ட சிறிது நேரத்திற்குள் உறத்த சத்தத்தோடு வெடிக்கும். இதைச் செய்கையில் சாக்கிரதையாய்ச் செய்யவும்.

## பாண விவரங்கள்.

துண்ட பாணத்திற்கு—பொட்டிலுப்பு பலம் 5, கெந்தகம் பலம் ¾, துவரங் கரித்தூள் பலம் 2 சேர்த்து செய்யவும்.

ஓடு பாணத்திற்கு—பொட்டிலுப்பு பலம் 5, கெந்தகம் பலம் 1¼, துவரங் கரித்தூள் பலம் 2¼, சேர்த்துச் செய்யவும்.

கொறுக்கைப்பாணத்திற்கு—பொட்டிலுப்பு பலம் 5, கரித்தூள் பலம் 1, சிகப்பு பவுடர் பலம் ¼ சேர்த்துச் செய்யவும்.

நக்ஷத்திரபாணத்திற்கு—பொட்டிலுப்பு பலம் 10½, கரித் தூள் பலம் ½, சிகப்பு பவுடர் பலம் 3 சேர்த்துச் செய்யவும்.

ஆகாயபாணத்திற்கு—பொட்டிலுப்பு பலம் 8, கெந்தகம் பலம் 1, துவரங்கரித்தூள் பலம் 2; துரைபர்மா 1 5 1, அடி 6 5 100.

உருத்திராக்ஷ பாணத்திற்கு—பொட்டிலுப்பு பலம் 10, கெந்தகம் பலம் 3, துவரங் கரித்தூள் பலம் 1 சேர்த்துச் செய்யவும்.

வெடிமருந்துக்கு—பொட்டிலுப்பு பலம் 10¼, கெந்தகம் பலம் 1¾, துவரங் கரித்தூள் பலம் ¼ சேர்த்துச் செய்யவும்.

தம்பிபாணத்திற்கு—பொட்டிலுப்பு பலம் ¾, கெந்தகம் பலம் ¾, துவரங் கரித்தூள் பலம் ¼ சேர்த்துச் செய்யவும்.

வேறு வெடி மருந்துக்கு—பொட்டிலுப்பு பலம் 6, கெந்தகம் பலம் 1, துவரங் கரித்தூள் பலம் 2 சேர்த்துச் செய்யவும்.

பூவத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 6, கெந்தகம் பலம் 1, துவரங் கரித்தூள் பலம் 4, தண்டவாளப் பொடி பலம் 12 சேர்த்துச் செய்யவும்.

ரோசாப்பூவத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 20, கெந்தகம் பலம் 1½, துவரங் கரித்தூள் பலம் 1½, தண்டவாளப் பொடி பலம் 7½ சேர்த்துச் செய்யவும்.



கொடிவல்லி கை பூவத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 10, துவரங் கரித்தூள் பலம் ¾, கெந்தகம் பலம் ¾, தண்டவாளப் பொடி பலம் 7 சேர்த்துச் செய்யவும்.

கொடிசம்பங்கி வத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 8, கெந்தகம் பலம் 1, துவரங் கரித்தூள் பலம் ½, தண்டவாளப்பொடி பலம் 2¼ சேர்த்துச் செய்யவும்.

பாவப்பூவத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 6, கெந்தகம் பலம் 1½, துவரங் கரித்தூள் பலம் 1¾, தண்டவாளப் பொடி பலம் 1½ சேர்த்துச் செய்யவும்.

பூவத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 10, கெந்தகம் பலம் 1, தண்டவாளத் தூள் பலம் 1 சேர்த்துச் செய்யவும்.

சுரு சுரு வத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 4½, கருப்பு பவுடர் பலம் 2½, சிகப்புபவுடர் பலம் ½ சேர்த்துச் செய்யவும்.

ஷை வத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 3, கறுப்பு பவுடர் பலம் 1½, சிகப்பு பவுடர் பலம் ¼ சேர்த்துச் செய்யவும்.

ஷை இன்னொரு முறை—பொட்டிலுப்பு பலம் 2½, கறுப்பு பவுடர் பலம் 1, சிகப்பு பவுடர் பலம் ¼ சேர்த்துச் செய்யவும்.

புருசுக்கு—பொட்டிலுப்பு பலம் 8, கெந்தகம் பலம் 1, துவரங் கரித்தூள் பலம் 1, தண்டவாளப் பொடி பலம் 4 சேர்த்துச் செய்யவும்.

பெரிய புருசுக்கு—பொட்டிலுப்பு பலம் 5, கெந்தகம் பலம் 1 துவரங் கரித்தூள் பலம் 1, தண்டவாளப் பொடி பலம் 1½ சேர்த்துச் செய்யவும்.

மாட்டுக்கொம்பு புருசுக்கு—பொட்டிலுப்பு பலம் 40, கெந்தகம் பலம் 5, தண்டவாளப் பொடி பலம் 1¼, கருப்பு பவுடர் பலம் 4 சேர்த்துச் செய்யவும்.

துப்பாக்கி மருந்துக்கு—பொட்டிலுப்பு பலம் 5, கெந்தகம் பலம் 1, துவரங் கரித்தூள் பலம் 1, இதுகளுடன் சாராயம், பழம், பூண்டு சேர்த்து பச்சரிசிகஞ்சியிலிடித்துச் சேர்க்கவும்.

மத்தாப்புக்கு—பொட்டிலுப்பு பலம் 5, கெந்தகம் பலம் 2, சுண்ணாம்பு பலம் 1 சேர்த்துச் செய்யவும்.

வேறு முறை மத்தாப்பு—பொட்டிலுப்பு பலம் 10, கெந்தகம் பலம் 4, சிவப்பு பவுடர் பலம் 1, சுண்ணாம்பு பலம் 1 சேர்த்துச் செய்யவும்.

சிகப்பு மத்தாப்புக்கு—பொட்டிலுப்பு பலம் 2, சிகப்புபவுடர் பலம் ¼, சிகப்பு செந்தூரம் பலம் ¾, ஆனைக்கன் பருப்பு பலம் ¼ சேர்த்துச் செய்யவும்.

வெண்சாமரத்திற்கு—பொட்டிலுப்பு பலம் 6, கெந்தகம் பலம் 1¼, துவரங் கரித்தூள் பலம் 5, தண்டவாளப்பொடி நாலில் ஒன்று சேர்த்துச் செய்யவும்.

நிலவுக்கு—பொட்டிலுப்பு பலம் 10, சுண்ணும்பு பலம் 1, ஆமணக்கன் பருப்பு பலம் ¼ சேர்த்துச் செய்யவும்.

சரவத்திக்கு—பொட்டிலுப்பு பலம் 5, கெந்தகம் பலம் ¼, துவரங் கரித்தூள் பலம் ½ இவைகளைச் சாந்து போல் பழச்சாற்றிலரைத்து வெள்ளை நூலில் தாவைத்து ஊறவைத்து உலர்த்தி காகிதத்திற் சுருட்டிக் கொளுத்தவும்.

பட்டாணி டப்பாஸ் வித்தை.

சொக்க வெள்ளித் துண்டை நைட்ரிக் ஆசிட் என்னுந் திராவகத்திற் போட அது சில நேரத்திற்குள் கரைந்து விடும். அதிற்றெளிந்த சுண்ணும்பு நீரை விட அவ்வெள்ளி சாம்பல் நிறமாய் பொடியாய் நீரடியிலிறங்கும். பின் புட்டியிலுள்ள திராவகத்தைச் சாக்கிரதையாயிறுத்து, அத்தூளைச் சுரண்டி ஓர் அகல பீங்கான் மேல் வைத்து நிழலிலுலர்த்தி, அம்மோனியா திராவகத்தில் 12 மணிநேரம் ஊறவைத்தெடுக்க அத்தூள்கருத்திருப்பதில், கடுகளவு தூளும் ஓர் பட்டாணியும் முட்டைக் காகிதத்துண்டில் வைத்துச் சுருட்டி முறுக்கி விசையாய் கல் அல்லது தரையிலடிக்க அது உறத்தசத்தத்துடன் வெடிக்கும்.

நீல மத்தாப்பு வித்தை.

ரியல்கா 2, துவரைமரக்கரித்தூள் 3, பொட்டாசியம் குளோரெட் 5, கெந்தகம் 13, கால்ஸியம் நைட்ரேட் 77 இவைகளைத் தனி தனியரைத்து பாகாய்க்கலந்து மத்தாப்பு செய்துக் கொளுத்த நீல நிறமாகயெரியும்.

சிகப்பு மத்தாப்பு வித்தை.

பொட்டாசியம் குளோரேட் 17, கரித்தூள் 23, கெந்தகம் 90 ஸ்டிராண்டியம் நைட்ரேட் 270 இதை முன்போல் செய்துக் கொளுத்த சிகப்பு நிறமா யிருக்கும்.

பச்சை மத்தாப்பு வித்தை.

பொட்டாசியம் குளோரேட் 13, பேரியம் நைட்ரேட் 66, கெந்தகம் 21 இதை முன்போல் செய்துக்கொளுத்த எங்குபார்த்தாலும் பச்சை நிறமாக யிருக்கும்.

ஊதா மத்தாப்பு வித்தை.

கரித்தூள் 8, கெந்தகம் 10, செம்புத்தூள் 15, பொட்டாசியம் குளோரேட் 30 இதை முன்போல் செய்துக்கொளுத்த ஊதா நிறமாக யிருக்கும்.



வெள்ளை மத்தாப்பு வித்தை.

பொட்டாசியம் நைட்ரேட் 30, கெந்தகம் 10, கறுப்பு நிறமுள்ள ஆண்டிமொனி ஸல்பைட் 5, அதி நுட்பமாய்த் தூள் செய்து பாக்கி மருந்து இதுமீல்பவுடர் 3, பொடித்த கற்பூரம் 2 இதைமுற் கூறியபடி செய்துக் கொளுத்த வெண்மை நிறமாய்பற்றி யெரியும்.

மஞ்சள் மத்தாப்பு வித்தை.

பொட்டாசியம் நைட்ரேட் 2, கெந்தகம் 4, சோடியம் நைட்ரேட் 20, லாம்பிளாக் 1 இவைகளை முன்போல் செய்துக் கொளுத்த மஞ்சள் நிறமாய் பற்றி யெரியும்.

தானே பற்றியெரியும் வித்தை.

லாம்பிளாக் 3, சுட்டபடிகாரம் 4, பொட்டாசியம் கார்பனெட் 8 இவையாவும் பொடித்து ஓர் கரண்டியிற் சற்று வறுத்து நீளகழுத்துப் புட்டியில் நிரப்பி, அதை யோர் மண் தொட்டிக்குள் நிற்கவைத்து, அது நிறைய ஆற்றுமணலைக் கொட்டி, புட்டி வாய் தவிர மற்றதை மூடும்படியாக எருமுட்டைகளை யடுக்கி, தீயெரித்து மேற்படி புட்டி செந்நிறத்தை யடைந்தவுடன் 7-8 நிமிஷம் பொருத்து பார்க்க புட்டி வாய் மூலமாய் ஆவி வராது. உடனே புட்டியை யெடுத்து உள்காற்று நுழையாதபடி பிருவாய்க்கார்க்கிட்டு பத்திரப்படுத்தவும். பரீக்ஷிக்கும் விதம்—அதில் மிளகளவு தூளைக் காகிதத்தின் மேல் வைக்க அது விரைவிற்பற்றி யெரிந்து விடும்.

இதுவுமது.

பொட்டாசியம் 9, லாம்பிளாக் 5, இவைகளைக் கலந்து மேற் கூறியபடி செய்யவும். இதில் சுருட்டு பிடிக்கவும் பற்றும். இதைச் சாக்கிரதையாய்ச் செய்ய வேண்டியது.

இதுவுமது.

கல்படிகாரம் 3, சக்கரை 1 இதை நல்ல புது பாண்டத்தில் போட்டு நன்றாய் வருத்து ஒன்று பாதியாய்ப் பொடித்து நீரைப் புட்டியிலிட்டு முன்போல் செய்யவும். இதில் கெந்தகம், ஆண்டிமொனி பாஷாணம், பாதரசம் முதலியவைகள் சேர்ந்ததை வீட்டில் கொளுத்தலாகாது. யாவும் தனித்தனி அரைத்து சேர்க்கவும்.

நாக மத்தாப்பு வித்தை.

பொட்டாசியம் டைக்ரோமேட் 2, பொட்டாசியம் நைட்ரேட் 1, வெள்ளை சர்க்கரை 3 இதுகளைப்பாகப்படி தனித்தனி பொடி செய்து கலந்து அத்தூளில் சிறிய மத்தாப்புகள்செய்து உலர்த்தி ஓரறையில் 1 வைத்துக்கொளுத்த உடனே அம்மத்தாப்பினின்று நாகஞ்சீறி வெளிப்புறப்படல்போல புகையெழும்பும் கண்டவர்கள் அம்மத்தாப்பிலிருந்தே சர்ப்பம் உதித்ததென்று கருதுவார்கள். இம்

மருந்துகளின் தாசைமுகராதபடி வெகு சாக்கிரதையாய்ச்செய்ய வும்.

## மத்தாப்பு திராவுக வித்தை.

போரிக் ஆசிட் பச்சைநிறம், லீக்க ஆஸ்டேட் நீலவர்னம், ஸ்டி ராண்டியம் நைட்ரேட் சிகப்பு நிறம், பொட்டாசியம் கார்ப்பனேட் ஊதாநிறம், சோடியம் நைட்ரேட் மஞ்சள்நிறம், கற்பூரம்வெண்மை நிறத்தைலம் இவைகளைத்தனித்தனி அமைத்தபின், வெறும் ஆல்க ஹால் திராவகத்தில் 1 புட்டியில் எவ்வளவு கரையுமோ அவ்வளவு ஷெல்ப்பிக்கைப் பொடித்துப்போட்டு, அது கரைந்தபின் அதில் மேற்படி அரைத்த வஸ்துக்களைக்கலந்து கொளுத்தி எரியும்போது தீபமானது பலவிதநிறம் போலிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 35 | 42 | 2 | 7 |
| 6 | 3 | 39 | 38 |
| 41 | 36 | 8 | 1 |
| 4 | 5 | 37 | 40 |

## பூத மந்திரம்.

முன்போல் சக்கரங்கீறி எண்பத்தி யாறை அதிலடைத்து 'நமசிவய' என்று பதினாயிரம் உருசெபித்துக்கட்டிக் கொள்ள பூதமானது வீடுவிட்டுக்காடு செல்லுமென்று சொல்லுவர்.

## கிரஹணம் பார்க்கும் வித்தை.

சூரியக்கிரஹணத்தைக் கண்கூசாது பார்க்கவேண்டின் ஒரு கண்ணாடியின் ஒருபுறத்தில் விளக்குப்புகையை லேசாகப்பிடித்து, அப்புகைக்கண்ணாடியின் மூலமாய் சூரியனைப்பார்க்க கிரஹணம் சென்னிறமாகத்தோன்றும்.

## பஞ்சவர்னந் தோன்றும் வித்தை.

ஒருபக்ஷியின் மெல்லிய இறகின் மூலமாய் இரவில் தூரத்தி லிருக்கும் விளக்கையாவது அல்லது பகலில் அடர்த்தியாகிய மரங் களின் இலைகளின் மூலமாய்த்தெரியும் சூரியகிரணங்களையாவது உற்றுப்பார்க்க அதில் பஞ்சவர்னங்கள் நிறைந்த கோலவடிவங்கள் தோன்றும்.

## அயமுறுக்கும் வித்தை.

நயமாகிய இரும்பை உலையில் வெளுக்கக்காயவைத்து உடனே யெடுத்து ஒரு கெந்தகக்கட்டையில் தொடும்படிவைக்க, வெகு விரைவில் அவ்விரும்பு உருகி துளித்துளியாய் விழும். அதை அப் படியே எவ்விதமாய் வசுப்பட்டம் வார்த்தாலும் வார்க்கலாம்.



## கடிதங்கொளுத்திக்காட்டும் வித்தை.

ஒரு காகிதத்துண்டு அல்லது கைக்குட்டையை பிராந்தி சாரா யத்தில் நனைத்து உடனே விளக்கில்கொளுத்த அச்சாராயமுள்ள வரையில் திகுதிகுவென்று எரியும். பின்பு காகிதம் அல்லது கைக் குட்டைக்கு யாதொரு கெடுதலும் நேராது அணைந்துவிடும்.

## அலை அமரும் வித்தை.

ஏரி, குளம், ஆறு, மடுகு இவைகளிலடிக்கும் அலைகளை நிறுத்த வேண்டுமாகில் அக்காற்று வாட்டம்பார்த்து நின்றுகொண்டு, கொஞ் சம் எண்ணெயை ஜலத்தில்விட அது உடனே ஜலத்தின் மேற்புறத் தில் வெகு விசையாய்ப்பரவி அவ்வலைகளைச் சற்றுநேரம் அமர்த்தி வைக்கும்.

## அசையாதவிரல் அசையும் வித்தை.

வலது அல்லது இடது கைசுட்டுவிரல் தவிர மற்ற நால்விரல் களையுமடக்கி சுட்டுவிரலை நீட்டி அதன்முனையை அவன் நடுநெற்றி யில் பொருந்தவைத்து ஒவ்வொரு கண்ணையும் அவனைமாற்றி மாற் றிப்பார்க்க, அவ்விரலானது இருபுறமும் அசைகிறதாகத்தெரி யும்.

## கெண்டைக்கை சிறுத்துக்காட்டும் வித்தை.

முன்போல தன் சுட்டுவிரலை நெற்றியில்வைத்து தனது கெண் டைக்கை நடுவில் சற்றுநேரம் பார்த்திருக்க, அக்கையானது சிறு துரும்புபோலிருக்கும். அப்படிக்கில்லாது சுயரூபமாகத்தெரியின் அவன் சீக்கிரத்தில் உயிரிழப்பான்.

## அயத்தூளடுக்கு வித்தை.

ஒருபெரிய கண்ணாடி பில்லையின்மேல் இரும்புத்தூளைத் தூவி பில்லையினடியில் காந்தத்தை வைத்துக்காண்பிக்க மேலிருக்கும் இரும்புத்தூள்கள் ஓர்வித அலங்காரமாய் அடுக்கிவைத்ததைப்போ லிருக்கும்.

## புட்டியை வெட்டும் வித்தை.

ஒரு வெள்ளைப் பெரிய புட்டியில் லின்ஸீட் ஆயில் அல்லது மெ ருகெண்ணெயை வார்த்து, உலைக்கூடத்தில் வெண்ணிறமாய்க்காய வைத்த ஒரு சிறு இரும்புக்கம்பியை மெதுவாய் மேற்படி யெண்ணெ யிற்றோய்க்க, அப்புட்டியானது எண்ணெய் மட்டத்திற்கு வெடித்து விடும்.

## முட்டைமேல் அச்சிடும் வித்தை.

ஒருமுட்டையின் மேற்புறத்தில் வெள்ளை மெழுகையுருக்கி நன்றாய்ப்பூசி அதில் எழுதவேண்டிய எழுத்துகளை ஊசியின் முனை யால் பக்குவமாகவெழுதி, ஆசிடிக் என்னும் திராவகத்தில் சற்று காலத்தில் ஊறவைத்துப்பார்க்க எழுத்துகள் நன்றாய்ப்பதிந்திருக்கும்.

### எலிகளோடும் வித்தை.

எலிகள் அதிகமாயிருக்கும் வீடுகளில் தண்ணீரில் நனைத்த காஸ்டிக் பொட்டாஸ்ஸை வைக்க அதில் எலிகளின் கால்பட்டால் இரணமாகிவிடும். அதைப்பார்த்த எலிகளெல்லாம் பயந்து விலகிவிடும்.

### பென்ஸலெழுத்து மறையா வித்தை.

பென்ஸலாலெழுதியக் காகிதம் அல்லது சித்திரங்களை மேற்புறமிருக்க ஓர் அகல பீங்கானில் பரப்பிவைத்து, அதன்மேல் எருமைப்பாலையூற்றி, ஒரு இறகினால் முழுதுந்தடவி, காகிதத்தை எடுத்து நிழலிலுலர்த்திவைத்தபின் அதிலிருக்கும் எழுத்து அல்லது சித்திரப்படங்கள் கலையாது வெகுநாளைக்கிருக்கும்.

### திருத்திய எழுத்து தெரியும் வித்தை.

ஒரு கடிதத்திலிருக்கும் எழுத்தைத்திருத்தியதாகத் தெரியா வண்ணம் ரத்துசெய்து மாற்றியிருந்தால், அக்காகிதத்தைப்போட்டோகிராப்பிடிக்க, அதில் கண்ணுக்குத் தெரியாதிருந்த வேறுபாடுகள் நன்றாகத்தெரியும்.

### இதுவுமது.

ஐயோடைன் என்னும் திராவகத்தைத்திறந்து அதன் ஆவியை மேற்படி கடிதங்களுக்குப்பிடித்தால் அதில் திருத்திய மாறுபாடுகள் நன்றாகத்தெரியும்.

### கார்க்கு சுழலும் வித்தை.

ஒரு கார்க்கையெடுத்து சிறுசிறு பில்லையாகச்சீவி, அதுகளைக் கந்தக ரசத்திராவகத்தில்போட்டு புட்டியை நன்றாகக்கார்க்கினால் பின்பு 2-3 நாள் கழித்தெடுத்து மேற்படி கார்க்குத்துண்டுகளை ஜலத்திற்போட அவைகள் அநேகநேரஞ்சுழன்றுக்கொண்டேயிருக்கும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### பாறைகளை உடைக்கும் வித்தை.

பெரிய பெரிய பாறைகளைப்பிளக்கும் வித்தை யெப்படியென்றால் அதுகளை வரிசையாகத் துளைத்து, துவாரங்களானபின் ஒவ்வொன்றிலும் நீர்விட்டு நெருக்கமாகப்பொருந்த மர ஆப்புகள்வைத்துக்கடாவி, அவ்வாப்புகளின் முனையில் நனைந்த வஸ்திரத்தைச் சுற்றிவைக்க, அந்த ஆப்புகள் உப்பி பாறையானது பிளந்துவிடும்.

### கண்ணாடி உடையாத வித்தை.

துப்பாக்கியில் ரவைபோட்டுக்கெட்டித்து கண்ணாடிக்குச்சற்று தூரத்திலிருந்து கண்ணாடிபக்கமாய் சுட அக்கண்ணாடியை யுடைக்காது மேற்படி ரவையானது அக்கண்ணாடியிற்றுளை யூடுருவிச் செல்லும்.



### ஈயக்குண்டு ரவைசெய்யும் வித்தை.

ஈயத்தை யுருக்கி உயரத்திலிருந்து ஒருசிறு தமர்வழியாய்வார்க்க அது கீழேவிழுமுன் ஆறி உருட்சியானரவையாகும்.

### புட்டியிற் கார்க்கிறங்கும் வித்தை.

வெறும்புட்டிவாயிற் கார்க்கடைத்துப்பின்பு அது கழுத்திற் கயறுகட்டி, கிணற்றில் அல்லது குளத்திற் ஆழத்திற்போம்படிவிட்டு சற்றுநேரங்கழித்து எடுத்துப்பார்க்க, கார்க்கானது புட்டிக்குள் தள்ளப்பட்டு புட்டியிற்றண்ணீர் நிறைந்திருக்கும்.

### புகையெழுத்து வித்தை.

வெள்ளை வெங்காயத்தைச் சாறுபிழிந்து, அதை இங்கியைப்போல பேனாவில்தொட்டு கடிதத்தின்மேலெழுதி, கோழிமுட்டைத் தோலைக் கொளுத்தினபுகையை அக்கடிதத்திற்குக்காட்ட இங்கியில் எழுதினதைப்போலிருக்கும்.

### இதுவுமது.

முன்போல் உத்தாமணிப்பாலைக் கொண்டெழுதிக் காய்ந்தபின்பு, அதிற் கற்பூரப்புகைபிடிக்க எழுத்துகளெல்லாம் கறுப்பாக இங்கிக்குமேல் நன்றாகத்தெரியும்.

### எலிகள் ஓடும் வித்தை.

ஒரு எலியைப்பிடித்துக்கொன்று அதை எலிகள் அதிகமாக நடமாடுமிடத்தில் ஒரு நாளைக்கெல்லாம் போட்டுவைக்க அவ்வீட்டிலுள்ள எலிகள் அச்செத்த எலியைக்கண்டு பயந்து விலகிவிடும்.

### பச்சைக்குத்தும் வித்தை.

இலுப்பமரத்துப்பாலில் ஏதேனும் ஓர் உருவைக்கையிலெழுதி அதின்மேல் நாட்டுக்கரியைத் தூளாக்கிப்போட்டுக் காய்ந்தபிறகு துடைத்துவிட்டுப்பார்க்க பச்சை குத்தினதைப்போலிருக்கும்.

### தானாய் பிசாசு ஓடும் வித்தை.

பிசாசு பிடித்தவர்களுடைய நெற்றியில் சாக்கடை அழுக்கையெடுத்து மூன்றுநாளைக்குத் திலர்தமிட்டு வந்தால் எப்பேர்ப்பட்ட பிசாசும் சொல்லாமல் வந்தவழியே ஓடும்.

### இதுவுமது.

விடாதபேய்களாயிருந்தாலுஞ்சரி அல்லது எவ்வித முனிகளாயிருந்தாலுஞ்சரி அதுகளை ஓட்டுந்திரமாவது எப்படியென்றால், அமாவாசையும், அருக்கன் நாளுமாகப்பார்த்து எழ்ஊர்களிலிருக்கும் பன்றிப்புட்டைகளை யெடுத்துவந்து அதனொதிரில் புகைபோட்டாலும்

அல்லது அதைக் குழித்தைவமிரக்கிக் கையாண்டாலும் விடாத பிரம்மராக்ஷதக் கூட்டமெல்லாம் விட்டு ஓடிவிடும்.

### செடில் அல்லது வேல்குத்தும் வித்தை.

ஒரு மனிதனுக்குச் செடில் குத்தவேண்டுமானாலுஞ்சரி, அல்லது வேல்குத்த வேண்டுமானாலுஞ்சரி, தேகத்தில் காதுகுரும்பியைத் தடவி நன்றாய்த்தேய்த்தறக்கி அவ்விடத்திற்குத்த கொஞ்சமேனும் நோயெடுக்காது. ஊசியைக்கொண்டு தைத்து நூலை உருவி யெடுத்தாலும் பாதையிராது. பார்ப்பவர்கள் இது சுவாமியின் மருளென்று சொல்வார்கள்.

### படம்காட்டும் வித்தை.

இம்மாதிரி மரத்தில் 2 அடி நீளமும், 15 இஞ்சு அகலமும், 12 இஞ்சு உயரமுமுள்ள ஒருபெட்டிசெய்து அதில் (ஏ-சி) 18 இஞ்சு பின்பக்கத்தில், செப்புத்தகட்டைக் கொஞ்சம்வளைத்து, வெள்ளிக் கிலிட்டிட்டுப் பதியவைத்து (ஐ-ஜெ) நடுப்புறமானதை (ஐ-பி) மத்தியில் 1 கண்ணாடி பில்லையையும், அதின்மேல் எண்ணெய்க் கடிதமும், ஒட்டிவைப்பதோடு (ஏ-ஐ) மத்தியில் வெறும்பலகை மூடியும், (பீ-ஐ-எப்-டி) முன்பக்கமும், (ஜி) யாகிய முகம்பார்க்கும் பூதக் கண்ணாடிக்காய் (இ-பி) நேர்பக்கம் வைக்கவும், (ஜெ) யாகிய படம் இடுக்குச்சந்து, (டி-எப்) பக்கமத்தியில் வைக்கவும், மேற்படி படங்களை (ஜெ) சந்தில் விடுத்து பகலிற் சும்மாயும், இரவில் 1 இடத்தில் விளக்குவைத்தும் (ஜி) இடத்தில் பெட்டிவாயண்டை கண்ணை வைத்துப்பார்க்க எண்ணெக்கண்ணாடி வெளிச்சம்படத்திற் பட்டு, அதற்கு நேரிலிருக்கும் கிலிட்டுத்தகட்டிற்றாக்கி அவ்வுருவங்கள் அதில் ஊடுருவிப்பார்ப்பவர் கண்ணுக்குத் தோற்றுவது வெகு பளிங்காயிருக்கும்.

### தேசப்படங்காட்டும் வித்தை.

இம்மாதிரிமரத்திற் பெட்டிசெய்து மேலுக்கு வெறுங்கண்ணாடி மூடி முன்பக்கத்தில் 4 மூலைச்சதுரமாய் ஒரு பூதக்கண்ணாடியை வைத்து, மூடவுந்திறக்கவுமமைத்து வலதிடதுபக்கமையத்தில் ஒவ்வொரு படங்களுக்கடியில், மரச்சக்கைச்சரியா யிழைத்து, அப்படத்தடி அகலத்திற்கு நீளத்துணியாய்க்கிழித்து, மரம் 4 பக்கங்களுக்கும் 3 குறுக்குபோட்டு தைத்துவெட்டி, அதின் நடுவில் 1 உருள்தடியைத்துருத்து 2 பக்கமுங்காட்சி, அதற்கு வலப்புறத்தில் படம் திருப்புங்கையாடி யொன்று துருத்துமாட்டி, மேலுக்குப்பலவிதக் கண்ணாடித் துண்டுகளை வரிசையாகப்பதிந்து அதின்மூலைக்கு மூலை சமுண்டுகள், கொடிகள், யானைகள், சிங்கங்கள், யாளிகள் முதலிய பலவிதவேடிக்கை உருவங்களையமைத்து அப்பெட்டிக்கடியில் அல்லது 4 குத்துக்கால்கள் நாட்டி, முன்புறப் பூதக்கண்ணாடி வாயைத் திறந்துபார்க்க, வலப்புறக்கைப் பிடியைத்திருப்பி உட்படங்களை ஒவ்



வொன்றாய்க் காட்டிக்கொண்டு, பாட்டுகள் பாடிக்கொண்டேவர பார்ப்பவர்கள் பகலில் சூரியனிலும், இரவில் விளக்கை வைத்துக் காட்ட வெகு நன்றாயிருக்கும். இவ்வித்தை இப்போதும் சில விடங்களில் உற்சவகாலங்களில் காட்டுகிறார்கள்.

### சுழல் ராட்டின வித்தை.

இம்மாதிரி ஒரு தண்டின்மேல் 4 கம்பிகள்வளைத்து அதுகளின் முனையில் 4 அபிரேக்குத்தகடுகளை நாலுமூலைச்சவுக்கமாய் வெட்டி, அக்கம்பிகளிலொட்டி, இப்புரம் 2 கம்பி, அப்புரம் 2 கம்பி விட்டு அத்தண்டில் பலகையொன்றுவைத்து அப்பலகைக்கடியில் ஒரு குழையைவிடுத்து, அக்குழைமுனையில் 1 திருவு சக்கித்தாள் வைத்து, மேலே ஒரு குளோப்பைக் கவிழ்த்துமூடி காற்றுப்போகாது மெழுகாலடைத்து, மேல்படி குழையைத்திறந்து, உள்ளிருக்குங்காற்றைபுரிந்து வெளியில்விடுத்து, சக்கியை மூடிவைக்க, சற்றுநேரத்திற்கெல்லாம் உள்ளிருக்குங்காற்றுனது மேலெழும்பி அபிரேக்குத் தகட்டிற்குப்பாய அதுகள் நாலும் சுழலும்.

### கீராவிப்புட்டி வித்தை.

இப்புட்டி பேர்ப்பாதிக்குத் தண்ணீரூற்றி, நன்றாய்ச் சூடேழக் கொதிப்பித்து, ஆவியடங்காமுன் சீக்கிரம் கார்க்குப்பிகிந்து காற்றுப்போகாமல் சீல்செய்து யெடுத்துவிட ஆறிவிடும். அதின்மேல் தண்ணீரூற்றினாலுஞ்சரி, அதைத் தண்ணீரிற்போட்டு வைத்தாலுஞ்சரி அத்தண்ணீர் அதிகச் சூடாகக்கொதிக்கும்.

### படமுறுவமாற்றும் வித்தை.

இரண்டாக அறுத்த பூதக்கண்ணாடியை ஓரங்கள் ஒன்றாகவும் அறுப்புகள் பின்புறமாகவும் நடுச்சுற்று முனைகள் முன்பாகவும் அறுப்புக் கண்ணாடிகள் பின்புறமாகவும் சற்றுக்கோணலாய் வைத்து அதற்கு நேர் நேர் பன்னிரண்டு படங்கள்வைத்து வெளிப்புறத்தில் நேர் நேர் 2 துளைகள்செய்து துளைக் கொவ்வொருவர்பார்க்க வலதிற் பார்க்க இடதுபடமும் இடதிற்பார்க்க வலதுபடமுந் தெரியும்.

### சித்திரப்புரட்டு வித்தை.

இரசம்பூசிக் கீல்வைத்த இரண்டு கண்ணாடிக்கடியில் 2 சுழல் கைப்பிடி வைத்து அதில் சித்திரத்துணியை வர்ணம்பூசி, உருவங்களெழுதியிருப்பதை 2 கைப்பிடி கம்பிகளிலும் சுருட்டிக்கொண்டே பூதக்கண்ணாடி வைத்த துவாரத்திற் கண்களை வைத்துப்பார்க்க வெகு விசித்திரமாகத் தெரியும்.

### ஆள்மறைப்பு வித்தை.

பூமியில் 4 பக்கத்திற்கும், மேலிற்கும் ஓர் அறையைப்போல துணியால் மறைவாகட்டி, உட்புறம் சனங்கள் பார்க்க ஓர்படுதா மூடி

த்திறக்கவும் வைத்து வாசற்படிவிட்டு, ஓர் இரசம்பூசிய பெரிய கண்ணாடியை வலப்புற மேல்முனையி லிருந்து இடப்புறம் கத்தியால் சட்டக்கால்கள் நாட்டி, ஷை கண்ணாடியின் புறத்தில் நாற்காலியின்மேல் ஒருவ னுட்கார்ந்திருக்கத் தெரியாது. மறுபடியும் படுதாமூடி ஷை கண்ணாடியை ஒருபக்கமாய் விடுத்துத் திறந்துற்காண்பிக்க அவ்வாள் தெரியும். இன்னும் எவ்விதஞ் செய்தாலும் செய்யலாம்.

### கண்ட சாதன வித்தை.

இம்மாதிரி முன்போல் துணி படுதாகட்டி 1½ அடி அகலம் 2½ அடி உயரம் 2 இரசம் பூசிய கண்ணாடிகளுக்கும், மரச்சட்டங்கள் விரற்பருமனில் தொடுத்து முக்கோணமாய் இரக்கை விரித்து வைத்து, மேற்படி கண்ணாடிமேல் துணியைப்பரப்பி, அதன்பின் இரண்டொரு சிறுவர்களிருந்து கண்ணாடிக ளிருபுறத்திலும் கை, கால், தலை முதலிய அவயவங்களைக் காட்டி, படுதாவைத் திறந்துக் காண்பிக்க 1 கை கண்ணாடிகளில் இரண்டாகத்தெரியும். இவ்வாறு பலவித கோலங்களைக் காட்டலாம்.

### மேஜைமேல் தலைபேசும் வித்தை.

இம்மாதிரி முன்போல படுதாகட்டி 2 கண்ணாடிகள் நாட்டி அதின்மேல் பலகைவைத்து அப்பலகைமேல் ஒருவன் தலையிருப்பது ஆச்சரியமல்லவா? ஆனால் பலகையும் கண்ணாடிச் சட்டக்கால்களும் பார்வைக்கு மேஜைபோ லிருக்கவேண்டும். வரகு வைக்கோலைத் தரையிற் போட்டுவைக்க நன்மை. இதிற்பேச, நங்கு காட்ட, கண் சாடை பண்ண, பல்லைத் திறக்க, நகைக்க, நாவைக்காட்ட, தலையை யசைக்க, பாட்டுப்பாட, சேதிசொல்ல வெகு ஆச்சரியமாயிருக்கும்.

### அந்தரத்தில் தலை ஆடும் வித்தை.

இதுவும் முன்போல் படுதாகட்டி கண்ணாடியை வலமேல் முனையிலிருந்து, இடகீழ்முனையில் விடுத்து ஒருவனிற்க, அந்தரமாய்த் தலையிருப்பதுபோல் காட்டும். இதிலும் முன்போல் நடிக்கலாம். மேஜைக் கால்கள் வைத்தாலும் வைக்கலாம், ஜாக்கிரதையோடு நடித்தல்வேண்டும்.

### ஜெகஜ்ஜால மை வித்தை.

எரஞ்சிவிதையைக் கொண்டுவந்து பூந்தைல மிறக்கி, அதில் வெள்ளை மயிரில்லாத கரும்பூனையினுடைய பிச்சு, இரட்டைவால் அரணை, பச்சோந்தி, தேவாங்குக் கண், கருநாய் நாக்கு, அதின் பிச்சு இவைகளைப் போட்டு அரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு சத்தியையும், ஜாலக்காளியும் பூசித்து தேவையான ஜாலங்களை விளையாடலாம்.



### மான்தோல் மானாகும் வித்தை.

ஒரு மான்தோலை சபையில் கொண்டுவந்து அனைவர்க்குங் காட்டி அத்தோலுக்கு ஜெகஜ்ஜாலமையைத் தடவி துப்பட்டியால் மூடி குட்டிச்சாத்தான் மந்திரத்தையும் ஜாலக்காள் மந்திரத்தையும் செபித்து சற்றுநேரம் பொறுத்து திறந்துக்காண்பிக்க உயிருள்ள மான் உலாவுவதைப்போன்று தெரியும்.

### ஆட்டுத்தோல் ஆடாகும் வித்தை.

ஆட்டுத்தோலை சபையில் கொண்டுவந்து அனைவர்களுக்குங் காட்டி இத்தோல் ஆடாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி, ஜெகஜ்ஜால மையைத்தடவி மோகினி மந்திரத்தைச் செபித்து மூடித்திறந்துகாட்ட உயிருள்ள ஆடாகத்தோன்றும் மறுபடியும் மூடி ஜலத்தெளித்து திறந்துகாட்ட சாதாரண தோலாகவே யிருக்கும் அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

### கழுதைத்தோல் கழுதையாகும் வித்தை.

ஓர் கழுதையின்தோலைக் கொண்டுவந்து அனைவர்களுக்குங் காட்டி இதை உயிராகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி, மையைத் தடவி மூடி காளியைத் தியானித்துத் திறந்துகாட்ட பார்ப்பவர்கள் கண்களுக்கு உயிருள்ளதைப்போன்று தோன்றும்.

### கடம்பைத்தோல் கடம்பையாகும் வித்தை.

கடம்பையின் தோலுக்கு முன்மாதிரி மையைத்தடவி அனைவரையும் பார்க்கச்சொல்லி மூடி குட்டிச்சாத்தானைத் துதித்துத் திறந்துக்காட்ட உயிருள்ள கடம்பையாகவே தோன்றும்.

### பாம்புத்தோலை பாம்பாகக் காட்டும் வித்தை.

ஓர் நல்லபாம்புத்தோலை அனைவர்க்குங் காட்டி இதை உயிராகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி, மையைத்தடவி துணியைப்போட்டு மூடி காளிமந்திரத்தைச் செபித்து திறந்துகாட்ட உயிருள்ள சர்ப்பமானது சீறிக்கும். அதைப்பார்த்தவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

### கீரிப்பிள்ளைத்தோல் கீரிப்பிள்ளையாகும் வித்தை.

ஓர் கீரிப்பிள்ளைத்தோலை சபைக்குக் கொண்டுவந்து அனைவர்களுக்குங் காட்டி இதற்கு உயிர்கொடுக்கிறேன் பாருங்களென்று சொல்லி ஜெகஜ்ஜால மையைத் தடவி துப்பட்டியால் மூடி மோகினி மந்திரத்தைச் செபித்து, காளியைத் தியானித்து திறந்துகாண்பிக்க உயிருள்ள கீரிப்பிள்ளையாகவே தோன்றும்.

## காசுகள் மாயமாகும் வித்தை.

பலவித காசுகளை சபையிலுள்ளவர்களுக்குக் காண்பித்து இது மாயமாகும் விநோதத்தைப் பாருங்களென்றுசொல்லி, மையைக் காசுகளின்மேல் தடவிமூடி (ஜிம்) என்று செபித்து திறந்துக்காட்ட காசுகள் மாயமாயிருக்கும்.

## கேச்சக்காய் சண்டையிடும் வித்தை.

கொஞ்சம் கெச்சக்காய்களை சபையில் கொண்டுவந்து அனைவர்களுக்குங்காட்டி இக்காய்கள் சண்டைபோடும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி, கொஞ்சம் ஜெகஜ்ஜால மையைத் தடவிப்போட காய்கள் ஒன்றுடனொன்று மோதி சண்டை போடுவதைப்போ லிருக்கும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 92 | 99 | 2 | 7 |
| 6 | 3 | 96 | 95 |
| 98 | 93 | 8 | 1 |
| 4 | 5 | 94 | 97 |

## காட்டேரி மந்திரம்.

முன்போல் சக்கரங்கீறி இருநூற்றை முறைதவறுமலடைத்து 'நமசிவய' என்று லட்சமுருசெபித்துக் கட்டிக்கொள்ள இரத்தக்காட்டேரி முதல் கல்லெறிகாட்டேரி யீருக விடுவிட்டுக்காடு செல்லும்.

## பயர்பாக்ஸ்பெட்டி மாயமாகும் வித்தை.

மடியிலிருக்கும் பயர்பாக்ஸ் பெட்டியை எடுத்து அனைவர்களுக்குங் காட்டி இதை மாயமாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி, மறைப்பு மையைத்தடவி (யா) என்னும் அக்ஷரத்தைச் செபித்து மூடி சற்றுநேரங் கழித்துத் திறந்துகாட்ட பெட்டி மாயமாயிருக்கும், பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

## தீபத்தில் பட்டு ஜோலிக்கும் வித்தை.

தம்பலப் பூச்சியை வேண்டுமான வரையிற் பிடித்து சீலையில் வைத்துத் திரியாக்கி அதை விளக்கில்போட்டு தீபமேற்ற, அத்தீப நிழல் தோற்றும் விடமெல்லாம் பட்டைப்போல ஜொலிக்கும்.

## உருவங்கள் தோன்றும் வித்தை.

திமிர் கல்பாஷாணத்தைத் தண்ணீரிற் கலந்து அரைத்து அதைக்கொண்டு சுவற்றில் பலவித உருவங்களை இஷ்டம்போலெழுதிவைத்து விளக்கேற்றி விடவும். பிறகு நன்றாக யிருட்டினவுடன் பலபேர்களையும் அழைத்துக்கொண்டு அவ்வீட்டிற்குவந்து அவர்களைப்பார்த்து நான் கொஞ்சம் மந்திரத்தினால் பலவித உருவங்களை



இச்சுவற்றில் காட்டுகிறேன் பாருங்களென்றுச்சொல்லி, சிலநேரம் மந்திரஞ்செபித்துக் கற்பூரங்கொளுத்தி விளக்கை யணைத்துவிட சுவற்றிலுள்ள சித்திரங்களெல்லாம் சூரியப்பிரகாசம்போலத்தோன்றும்.

## பாம்பு விஷமேராத வித்தை.

யாதாமொருவரைப் பாம்பு கடித்தவுடனே அவர்களுடைய சிறுநீரைப்பிடித்துக் குடிக்கக்கொடுக்க அவ்விஷ மகலும்.

## எறும்புகள் சிதறும் வித்தை.

எறும்புப்புற்றின்மேல் ரசம்வைக்கும் திப்பியை மிளகாயுடன் போட்டுவைக்க அவ்வெறும்புகள் மாளும்.

## இதுவுமது.

முட்டைச்சாம்பலை எறும்புப்புற்றின்மேல் போட அதுகள்விலகும். இது விஷக்காலிகட்கும் ரொம்பவும் பிரயோசனமானது.

## விளக்கு அவியா வித்தை.

சலவைத்துணியில் சாதாரண உப்புத்தூளை வைத்து வத்தியாகத்திரித்து அகலில்போட்டு எவ்வித எண்ணெயாகிலும் ஊற்றி விளக்கேற்றிவைக்க அவ்விளக்கானது எந்தக் காற்றடித்தபோதிலும் அவியாது.

## குளிர்ச்சி தீப வித்தை.

குளத்திலிருக்குந் தவளைக்குஞ்சுகளை 5-6 பிடித்து அதை முன்போல் சல்லாத்துணியில்வைத்துத் திரித்து அகலில் நெய்விட்டு அதற்கு இவ்வத்தியைப் போட்டுக்கொளுத்த வீடெல்லாம் குளிர்ச்சியாயிருக்கும்.

## மோகமகலும் வித்தை.

தினமொன்றுக்கு 10 எலுமிச்சம்விரையை 20 நாள் காலையில் தின்றுவர அது திரேகத்திலுள்ள சத்தையொடுக்கி, பெண்களின் கியாபகத்தை யொழித்து புத்திர சந்தானத்தை யழித்து முத்திக்கு வழியைக் காட்டும்.

## மோக முண்டாகும் வித்தை.

ஒருமண்டலம் வரைக்கும் விடாது அதிகாலையில் வில்வயிலையை 5-6 பரித்துத் தின்றுவர திரேகத்திலுள்ள வியாதிகளொழிந்து, நரம்புகள் முறுக்கேறி அதிக வலுவையுண்டாக்கும். ஆனால் அந்நாற்பது நாள்வரையிலும் ஸ்திரீபோகங் கூடாது.

## ஜடைவளர்க்கும் வித்தை.

நீர் முள்ளிவிரையைத் தூளாக்கி நல்லெண்ணெயிற் கலந்து மயிற்றடவ மயிர்ச்சிக்குப்பட்டு ஜடையைப்போலாய்விடும். அதன்

பிறகு அத்தி, அல்லது ஆலம்பாலைக்கலந்து மயிர்களை ஒட்டிக்கொண்டேவர நீண்ட ஜடையாகி யோகியைப்போலத் தோன்றும்.

## தீப வித்தை.

ஓர்கரண்டியிற் பொட்டிலுப்பைப்போட்டு வறுத்து அது சூடாயிருக்கும்போதே கொஞ்சம் கெந்தகத் தூளை யதிற்போட குபீலென்றெரியும். மறுபடி அவிந்துபோனதும் கொஞ்சம் கெந்தகத் தூளைப்போட எரியும் இப்படியே எவ்வளவு நேரமாகிலுஞ் செய்யலாம்.

## சூனியமகலும் வித்தை.

எவ்வித சூன்யமாயிருந்தாலும் ஜின்முதலிய துஷ்டதேவதைகளாயிருந்தாலும் பன்றியின் இரத்தத்தைத் தெளிக்க விலகிவிடும்.

## வாயில் நெருப்பெடுக்கும் வித்தை.

அக்கிராகாரமும் நவாச்சாரமும் சமயெடையாக யெடுத்து வாயிற்போட்டு மென்று நன்றாக குதப்பித் துப்பிவிட்டு நெருப்பையேனும் அல்லது நெருப்பில் காய்ந்த இரும்பையேனும் வாயில் எடுக்க வாய்சுடாது.

## நாய்விஷந் தீரும் வித்தை.

வெள்ளைக்கம்பிளியை நைய நறுக்கி நல்ல வெல்லத்திலுள்வைத்து மசி நசி என்று 108 விசை செபித்து நாய்க்கடி யுண்டவன் வாயில்போட்டு கொஞ்சம் ஜலங்கொடுக்க விஷமானது உடனே அகன்றுவிடும்.

## மோகினி யகலும் வித்தை.

மோகினியால் சதா அவஸ்தைப் படுகிறவர்கள் ஒருமண்டலம் வரைக்கும் இடது உள்ளங்காலில் ஆமணக்கெண்ணெயை தடவிப் படுத்துக்கொள்ள மோகினியானது அவர்களைவிட்டு அகன்றுவிடும்.

## இதுவுமது.

வல்ஞன்விட்டு அழுக்கின்பேரில் அரைமண்டலம் வரைக்கும் படுத்திருக்க மோகினிவிலகும் ஆனால் அங்குபடுக்கும்போது தாம்பூலமும் பரிமள வர்க்கமுங் கூடாது.

## பழங்கள் நாள்பட யிருக்கும் வித்தை.

எவ்விதப் பழங்களாகிலுஞ் சரி அதை நன்றாக சுத்திபண்ணி அப்பட்டமாகிய தேனில்போட்டு காற்றுப்புகாமல் வைத்திருக்க அது எத்தனைநாளானபோதிலுங் கெடாது. தேவையானபோது எடுத்துத் துடைத்துக் கொடுக்கக் கண்டவர்கள் ஆச்சரியப் படுவார்கள்.



## பூனைத்தோல் பூனையாகும் வித்தை.

முன்மாதிரியே கீரிப்பிள்ளை தோலுக்குச்செய்து காளியைத் தியானித்து திறந்துக்காட்ட உயிருள்ள பூனையாகத்தோன்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

## கெச்சக்காய் மாயமாகும் வித்தை.

சபைக்கு கெச்சக்காய்களைக் கொண்டுவந்து மகா மாயக்கருவைப்பூசி துணியைப்போட்டு மூடித் திறந்துக்காட்ட காய் மாயமாகும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

## நெருப்பில்லாமல் வைக்கோலெறியும் வித்தை.

நீர்மேல் நெருப்பைக் கொஞ்சமெடுத்து மென்று தாடையிலடக்கிக்கொண்டு காற்றுவாட்டம் பார்த்து வைக்கோல் போரின்பேரில் துப்ப சிலநாழிகைக்கெல்லாம் குபீலென்றெரியும். பார்த்தவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்வார்கள்.

## அவித்தவிளக்கு எரியும் வித்தை.

முன்மூலிகையைக் காயவைத்து வஸ்திரகாயஞ் செய்துவைத்துக்கொண்டு எவ்வித எண்ணெயூற்றி யேற்றின விளக்காயினுஞ் சரி அணைத்தவுடனே அதின்பேரில் இத்தூளைக் கொஞ்சம்போட்டு வாயினால் ஊத அவித்தவிளக்கானது பழயபடி உடனே யெரியும்.

## நெருப்பில் விளையாடும் வித்தை.

தாளிச்செடியுடன் கொத்தானையுங் கொண்டுவந்து நெகிழ அரைத்துக் கைகளில் தடவிக்கொண்டு எரிகிற நெருப்பை யெடுக்கக் கைகள் சுடாது. கால்களில் தடவிக்கொண்டு நடக்கக் கால்கள் சுடாது. கொப்பளம், எரிச்சல் முதலியவைகளு மிராது.

## இதுவுமது.

மருக்காரைப்பூவும், மருக்காரையுப்புங் கலந்து அரைத்து முன்போல் செய்யலாம். பார்ப்பவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்வார்கள்.

## இதுவுமது.

கற்றாழைமணியும், வசம்புஞ் சேர்த்தரைத்து முன்போல பூசிக்கொண்டு நெருப்பில் விளையாடலாம்.

## இதுவுமது.

வெள்ளைக் குண்டுமணியிலையும் மிளகுஞ்சேர்த்தரைத்து முன்போல பூசிக்கொண்டு நெருப்பில் விளையாடலாம். ஆனால் இந்த நெருப்புவேலைகளையெல்லாந் தந்திரமாகச் செய்யவேண்டும்.

### நவதானியங்கள் வேகாத வித்தை.

எவ்வித தானியமாயிருந்தாலுஞ் சரி அல்லது அரிசியானாலும் சரி அதில் கொஞ்சம் கெஞ்சா விதையைப் போட எவ்வளவு நாளானாலும் வேகாது. மறுபடியும் அவ்விதையை எடுத்துவிட்டு வேறு உலைவார்த்துவைத்தால்தான் வேகும்.

### வெண்ணெய் உப்பரியாகும் வித்தை.

1-படிபாலுக்குக் கால்படி நெய்யைச்சேர்த்துக் காய்ச்சி அதை மறுநாள் கடைந்தெடுக்க அதிகமான வெண்ணெயுண்டாகும். திரேகத்திற்கும் கெடுதிசெய்யாது.

### சோதி எழுத்து வித்தை.

நீமுர்கல் பாஷாணத்தை இங்கிலிலிழைத்து அவ்விங்கியைக் கறுப்புக் காயிதத்தின்மேல் பேனாவைத் தொட்டெழுதி, அக்கடிதத்தை இருட்டுவீட்டில்வைக்க அது அதிக பிரகாசமாய்த் தெரியும்.

### முட்டை நீரைத்தேடும் வித்தை.

ஓர்முட்டையின் அம்பிலியைப்போக்கி அதனுள் குளத்திலிருக்கும் அட்டையைவிட்டு, வாயை வெள்ளைமெழுகால் மூடித் தரையில்விட அது மெதுவாக நகர்ந்து ஜலத்தைத் தேடிக்கொண்டு போகும்.

### எதிரியை வெல்லும் வித்தை.

வட்டக் கிலுகிலுப்பைச் செடிக்கு ஆதிவாரங் காலையில் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து சாபநிவர்த்திசெய்து பிடுங்கிவந்துக் குளிசமாடி அதைத் தன் தலைகுட்டையில் வைத்துக் கட்டிக்கொண்டு எவ்வித காரியங்களையும்பேச நம்மெதிர் நின்று எதிரிகள் பேசமாட்டார்கள்.

### மஞ்சளின் வசிய வித்தை.

உடையாத மஞ்சள் 6 எடுத்து நண்டுவளையிற் போட்டுவிட்டு வைத்துவிடவும். மறுநாள் காலையிற் சென்று பார்த்தால் அதில் வெளிவந்ததுபோக உள்ளிருப்பதைக் கொண்டுவந்துத் தூளாக்கிப் பரிமளவர்க்கத்திற் சேர்த்து திரேகத்திற் பூசிச்செல்ல அவ்வாடை பட்டவர்களெல்லாம் வசியமாவார்கள்.

### சுரமோடும் வித்தை.

சிங்-அங்-றிங்கென்ற மந்திரத்தை முக்கோணத்தி லடைத்து குளிசமாடி சிகப்பு, வெள்ளை, ஊதா நூல்களால் சுற்றி பூசித்து சுரம்வந்தவர்களுக்குக் கட்ட விடாசுரமாயிருந்தாலும் விலகிவிடும்.



### தோஷங்கள் தீரும் வித்தை.

இம்-வங்-சங் என்னும் மந்திரத்தை விபூதியிலெழுதி அம்மந்திரத்தையே வேண்டியானவரையிலும் செபித்து அவ்விபூதியைக்கொடுக்க எவ்வித தோஷங்களும் விலகும்.

### கனவு காணாதிருக்கும் வித்தை.

ஓர் படிகாரத்துண்டை குட்டையின் முனையில்கட்டி தலைமாட்டண்டைவைத்துப்படுத்துக்கொள்ள எவ்விதகனவுகளுந்தோனாது.

### பிரசவம் அறியும் வித்தை.

கெர்ப்பவேதனையால் அவஸ்தைப் படுகிறவர்கள் வயிற்றின்பேரில் வெண்ணெயைத்தடவ அது உருகும்பக்ஷத்தில் பிரசவம் உயிருடன் ஆகுமென்றும் உருகாதபக்ஷத்தில் மறித்தாகுமென்றும் கண்டுசொல்லவேண்டியது. அல்லது டங், டம் என்ற மந்திரத்தை 108-செபித்து வெண்ணெயைத் தடவ உடனே பிரசவமாகும்.

### கனவில் இந்திரியமகலா வித்தை.

சுத்தமாகிய காரீயத்தை உருக்கி மணியைப்போல வார்ப்படம் வார்த்து அதை அரைஞாண் கயிற் கட்டிவைக்க கனவில் விந்து நஷ்டமாகாது.

### நீரைப் பாலாக்கும் வித்தை.

பசும்பாலில் தேத்தான்கொட்டையை நெகிழ அரைத்து நிழலிலுலர்த்தி அதை நல்லஜலத்தில்கலக்கப் பாலைப்போலாகும். அதை ஒருமண்டலம் அந்திசந்தி சாப்பிட்டுவந்தால் விந்துகட்டும்.

### பாலைத் தண்ணீராக்கும் வித்தை.

முன் பாலாக்கினதை அப்படியே வெய்யலில் வைக்க அது எப்போதும்போல் தண்ணீராகிவிடும் அப்போது அதிற்கொஞ்சம் சுக்குத்தூளைப்போட முன்போலப்பாலாகும். இதையும் சாப்பிடலாம்.

### சாராயம் இறங்காத வித்தை.

சாராயம் காய்ச்சுகிற அடுப்பில் கொஞ்சம் சிறுகுறிஞ்சான்செடியை யுலர்த்திப்போட அவ்வடுப்பில் தீயேறாது. மறுபடியும் அதையெடுத்துவிட்டுக் கொளுத்தினால்தான் தீபிடித்து சாராயமிறங்கும்.

### தீபம் சிகப்பாகத்தெரியும் வித்தை.

சுத்தமாகிய எண்ணெயை ஓர் அகலில்விட்டு இந்திரகோபப் பூச்சியை யுலர்த்திப் பொடிசெய்து வெள்ளைவஸ்திரத்தில் சேர்த்துத் திரித்தவத்தியைப்போட்டு விளக்கேற்ற அவ்வீடெல்லாம் சிகப்புநிறமாகத் தெரியும்.

## வெடிகிளம்பும் வித்தை.

சால்ட் உப்பு 2 பங்கும், குழாகெந்தகம் 1 பங்குமாக எடுத்து இரண்டையும் வெவ்வேறா யரைத்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு வேண்டுமானபோது கொஞ்சமெடுத்துக் கல்லில்வைத்து சுத்தியால் தட்ட வெடிகிளம்பும். இதுவிஷயத்தில் உஷாரா யிருக்க வேண்டும்.

## ஜலம் நெய்யாகும் வித்தை.

சப்ஜாவிரை, துளசிவிரை அல்லது ஸ்கூல்விரை இம்மூன்றில் எதையாகிலுஞ் சரி தண்ணீரிற் போட்டுக் கையினால் கரைக்க அது நெய்யைப்போலாகும்.

## எண்ணெய் வெண்ணெயாகும் வித்தை.

ஓர்பாத்திரத்தில் கொஞ்சம் சுண்ணாம்பைக் கரைத்து அதில் வேணுமான எண்ணெயைவிட்டு தயிர் சிலுப்புகிறமாதிரிக் கடைய அதில் வெண்ணெய் திரளும் அதையெடுத்து தீப்பட்ட இரணங்களுக்குத்தடவ அவ்விரணம் உடனே ஆறும்.

## நெய் வெண்ணெயாகும் வித்தை.

முன்போல எண்ணெய்க்குப் பதில் நெய்யைவிட்டுக் கடைய வெண்ணெய் திரளும். அதைசாப்பிட்டாலும் தேகத்திற்குக் கெடுதியில்லை.

## மோர் தயிராகும் வித்தை.

விளாங்காயை யுலர்த்திப் பொடிசெய்ததூளைப் பதக்குமோருக்குக் கால்படி விதமாகப் போட்டுக் கலக்கத் தயிராகும். தேகத்திற்கு இதனால் கெடுதலில்லை.

## பால் உதிரமாகும் வித்தை.

தம்பலப்பூச்சியைப் புல்லில்வைத்து பசுவுக்குக் கொடுக்கத் தின்றவுடன் அது கறக்கும்பாலெல்லாம் உதிரமாகவே யிருக்கும். மாற்று—சுக்குத்தூளைக் கழுநீரிற் போட்டுக் கலக்கிக் குடிப்பாட்ட எப்போதும்போல பால் கறக்கும்.

## தவளைகள்மேயும் வித்தை.

தவளைக்கொழுப்பை வெள்ளைத்துணியில் தவட்டி நிழலிலுலர்த்தி நன்றாகக்காய்ந்தபிறகு திரியாகத்திரித்து அகலில்போட்டு விளக்கேற்றிவைக்க அவ்விடத்திலுள்ள மனிதர்கள்மேலெல்லாம் தவளைகள்மேயும். விளக்கை நிறுத்திவிட யாவும் மறையும்.

## தலையில்லா முண்டமாகும் வித்தை.

வெட்டுண்டு இரந்துபோனவனுடைய சிரசெலும்பைக் கொ



ண்டுவந்து தீவட்டியில்வைத்துச்சுருட்டி எண்ணெய் விட்டுக்கொளுத்த அவ்வெளிச்சத்திலுள்ள யாவர்களும் ஒருவர்க்கொருவர் தலைகளைத் தடவிப்பார்த்துக் கொள்வார்கள். வெகு வேடிக்கையா யிருக்கும்.

## நீரில் முட்டைவெடிக்கும் வித்தை.

ஒரு முட்டையிலிருக்கும் அம்பிலியைப்போக்கி அதின்நிறைய நாளிக்காத சுண்ணமும், கெந்தகமும் சமனாய்ச்சேர்த்து, வெவ்வேறாயரைத்து முட்டைக்குள் செலுத்தி, வெள்ளைமெழுகினால்வாயை மூடி அதை ஓர் தவலை அல்லது மண்தோண்டியில்போட்டு நிறைய தண்ணீர் விட்டுவைக்க சிறிது நாழிகைக்குள்ளாக வெடிசத்தங்கிளம்பும், ஆனால் இவ்வேலையை குளம், கிணறு முதலிய இடங்களில் செய்ய உத்தமம்.

## கல்லை உதைக்க நகரும் வித்தை.

கோபுரந்தாங்கி என்கிற மூலிகைக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி. பொங்கலிட்டுப் பலிகொடுத்து, உச்சிவேரறுத்து பிடுங்கிவந்தூர்க்குளிசமாடி வைத்துக்கொண்டு, பிறகு சபையில் அக்குளிசத்தைக்காலில் கட்டிக்கொண்டு ஓர் பெரிய கருங்கல்லை எட்டியுதைக்க அது நகர்ந்து அப்புறம்போய் விழும்.

## நீலகண்ட வித்தை.

ஓம் நீலகண்ட மித்ரா, மங், சிங், சர்வ மனோகண்டா, உம், படு சுவஹாவென்று லக்ஷத்தியெட்டுருசெபித்து, தர்ப்பணமுதலிய தானதருமங்கள்செய்து, பயபக்தியுடன் நூறுபிராமணர்களுக்குச் சாப்பாடுபோட்டு அவர்கள் மனதைத்திருப்தி செய்வித்தால் மேற்படி மந்திரஞ்சித்தியாகும். இதனால் தம்பனவேலைகளையெல்லாம் சுலபமாகச் செய்யலாம்.

## இதுவுமது.

மேற்சொன்ன நீலகண்ட மந்திரத்திற்கு உன்மனதிலேயே என்கோணமிட்டு அதில் 'அம்மாரோ' என்று நாட்டிச்செபித்தால் தங்கமாய் ஸ்தம்பித்து நிற்பார்.

## இதுவுமது.

சுவாமியை வெண்ணிறமாகவெண்ணி விபூதியை வட்டமாகக் கீறி 'அம்மாரோ' என்னும் மந்திரத்தை ஆயிரத்தியெட்டுருசெபித்து விபூதியையெடுத்து நீ யாருக்குக்கொடுக்கின்றாயோ அவர்களெல்லாம் உன்பின் வருவார்கள்.

## இதுவுமது.

சுவாமியை செந்நிறமாகத்தியானித்து, முக்கோணம்போட்டு, கிலியும், ரோம் என்று 1008 உருசெபித்து விபூதியை யணிந்துக்

கொள்ள சகல காரியங்களும் கைகூடும். இதை வேறு யாருக்குக் கொடுத்தாலும் அவர்களும் வசியமாகி வணங்குவார்கள்.

### இதுவுமது.

சுவாமியைப் பளிங்குநிறமாக மனதிலெண்ணிபிறைபோற் சக்கரங்கீறி அம்மாரோ வென்னும் மந்திரத்தை 1008-செபித்து அணிந்துக்கொண்டால் சகல காரியங்களும் கைகூடும்.

### இதுவுமது.

சுவாமியை மேகநிறமாக மனதிலெண்ணி நாற்கோணங்கீறி அதில் ஓம், ரம், ரோம் என்று தென்னை ஓலையில் எதிராளியின் பேரைப்போட்டு 1008- உருசெபித்து எதிரிவீட்டிரப்பில்வைக்க சதிபுருஷாளிருவரும் பிரிந்துபோவார்கள்.

### இதுவுமது.

சுவாமியைப் புகைநிறமாகவெண்ணி ஐங்கோணங்கீறி யம் ரோம் என்றெழுதி 1008-உருசெபித்து விபூதியைப்போட்டவுடன் சகல பிசாசுகளும் விலகிவிடும்.

### இதுவுமது.

சுவாமியைப்பிரளயகால ருத்திரனைத்தியானித்து முக்கோண சக்கரமெழுதி ரோம் என்றுநாட்டி விரோதியின் எழுத்தைமாறி தணல்காட்ட சகலமும் மாரணமாகும்.

### இதுவுமது.

சுவாமியைக்கருப்பு நிறமாகவெண்ணி முக்கோணம்போட்டு யம் என்று ஸ்தாபித்து 1008 உருகொடுத்து வெண்ணீற்றை நெற்றியிலிட சகலமும் பேதனமாகும்.

### துட்டுரேவிகாட்டும் வித்தை.

ஒரு காலணாவை இடதுள்ளங்கையில் ஒருவனை வைக்கச்சொல்லி, மற்றொரு காலணாவை நாம் வலது கையில் வைத்திருந்து அவன் துணி அல்லது வேறொரு கைக்குட்டையில் இடது கையை வைத்து துட்டைவைக்காமல்மூடி வலதுகையை அதின்மேல் வைத்து, அதிலிருக்குந்துட்டை ஒருவருக்குந்தெரியாமல் மேலேவைத்துச்சுருட்டிமூடி அதைக்கட்டி ஒருவன்கையிற்கொடுத்து துட்டிருக்கப்பார்க்கச்சொல்லி, நாமதை வலதுகையிற்பிடித்து இடதுள்ளங்கையிலுறக்கித்தேய்த்து அக்காலணாவையெடுத்து மறைத்துவிட்டு அவன் கையிற்கொடுத்து அவிழ்த்துப் பார்க்கச்சொன்னால் அதிலொன்று மிராது. துட்டானது கரைந்துபோய்விட்டதென்று சொல்லவும்.



### மேஜைக்கத்தி வித்தை.

ஒரு மேஜைக்கத்தியை வலதுள்ளங்கையின்மேல் விரற்சந்தியில் குறுக்கேவைத்து இடதுகை ஆள்காட்டிவிரலை மேற்படி கத்தியின்மேல் வைத்து அழுத்திப்பிடித்து மற்ற இடதுகை நாலுவிரல்களால் வலதுகை மணிக்கட்டைப்பிடித்துத்திருப்பி, பின்புறம் தாழ்த்திக்காண்பிக்க, கத்தி அந்தரமாக யிருக்குமென்பார்கள்.

### இதுவுமது.

முன்போல மேஜைக்கத்தியொன்றை வலதுள்ளங்கையில் முன்போலவைத்து அக்கத்திமேல் நெடுக்கில் மற்றொருகத்தி அல்லது அவ்விரல் நீட்டிற்கு கண்ணாடித் தண்டை வலது மணிக்கட்டிலிருந்து மேற்படி கத்தியை யழுத்தவிடுத்து, இடதுகை 5 விரலாலும் மணிக்கட்டைப் பிடித்திருக்க, மேற்படிக்கத்தி அந்தரமாயிருப்பது ஆச்சரியம். இவ்வாறே தடி முதலிய வேறெவ்வித உருப்புகளையும் பிடிக்கலாம்.

### இதுவுமது.

வலதுகையில் கத்தியைக்குறுக்கில் வைத்து நெடுக்கில் முன்போல கண்ணாடித்தண்டு அல்லது வேறெவ்விதகொம்பு முதலியதை வைத்து மணிக்கட்டிற்கட்டி, அக்கத்தியைத்தாழ்த்தி திருப்பிக்காட்ட மெத்தவும் ஆச்சரியமாயிருக்கும். அதன்கீழ் வேறொரு பேனாகத்தியை தொங்கவைத்தாலும் வைக்கலாம்.

### புட்டிமேல் பொம்மை வித்தை.

இம்மாதிரிகாகித அட்டையில்வெட்டி புட்டியின்மேற் கார்க்கிட்டு அக்கார்க்கின்மேல் 1 ஊசிநாட்டி அவ்வூசி முனையில் 1 குண்டுசி நாட்டி அக்குண்டு இரண்டு பக்கத்திலும் 2-கம்பி கீழ்க்குவளைத்து, அக்கம்பிகளுக்குக்கீழ் 2 குண்டுகள் மாட்டிவைப்பதோடு மேற்படி ஊசிநடுக்குண்டின்மேல் அப்பொம்மையை நிற்கவைத்து வளையக்குண்டுகளை சுழட்டிவிட அப்பொம்மை அப்படியே சுழன்றுக்கொண்டிருக்கும்.

### பீச்சாங்குழை வித்தை.

ஒருகனத்த கண்ணாடிப் பீச்சாங்குழை முனைக்காம்பு புறத்தில் கொஞ்சம் (சதர்) திராவகம்விட்டு வெரும்பஞ்சை நனைத்து பட்டதும் படாததுமாய் ஈரமிருக்க, அம்முனைக்காம்பிற்குள் நுருத்து, நடுக்கம்பியை உள்நுருத்து அழுத்தி மறுபடியும் பிடுங்க அப்பஞ்சு குபீரென்று பற்றிக்கொண்டெரியும்.

### பொம்மைப் பெட்டி வித்தை.

இம்மாதிரி தலைபெருத்த பதுமை ஒன்றுசெய்து, அதற்குச் சரி

யாய் மரப்பெட்டியொன்றமைத்து அப்பெட்டிக்குள்ளடியிலிருந்து ஒரு ஸ்பிரிங் அந்த உயரத்திற்கு வைத்து அதில் இப்பதுமையை தொடுத்துமாட்டி, உருவு உள்ளடங்கமேலெழும்ப சக்கிகள்மாட்டி, மூடியிருப்பதை யெடுத்துவந்துக் காண்பித்து திறக்க அதிலொரு பதுமை யெழுந்து நிற்கும். மறுபடியும் அதைமூட உள்ளேபோகும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

## நீராவியந்திர வித்தை.

கனத்த இரும்புத் தகட்டில் முட்டையைப்போல்செய்து மேலங்கிழும் ஒவ்வொரு குழாய்கள் வளைவாய் இரண்டு முனைப்புறங்களிலும்வைத்து, நாலுகுத்துக்காலின்மேல் அம்முட்டை வடிவுள்ள இருமுனைகளிலும் ஒவ்வொரு கம்பிகளைநாட்டி, அக்குத்துக் கால்களின்மேல் படியவைத்து அதற்கடியில் உலக்கடமூட்டி, நன்றாய்க் காய்ந்தபின் அதைத்தண்ணீரில்விட இரண்டு குழைகளிலும் தண்ணீரைக்குடிக்கும். அதை அப்படியே மேற்படி குத்துக்கால்களின்மேல் வைத்து உலக்கடமூட்டித் தீயெரிக்க அதுசுழன்றுக்கொண்டு இரண்டு குழைகளிலும் தண்ணீரைக்கக்கிக்கொண்டு ஒருவித சப்த வெடியுங்கிளம்பிக்கொண்டு சுழலும்.

| | | | |
|---|---|---|---|
| 13 | 20 | 2 | 7 |
| 6 | 3 | 17 | 16 |
| 19 | 14 | 8 | 1 |
| 4 | 5 | 15 | 18 |

## மலக்குட்டி மந்திரம்.

இதுபோல் சக்கரங்கீறி அதில் நாற்பத்திரண்டை முறை பிசகாமலடைத்து 'நமசிவய' என்று ஆயிரம் உருகொடுத்துக் கட்டிக்கொள்ள மலக்குட்டி வசியமாகி நாம் இட்டவேலைகளைச்செய்யும்.

## நீரகற்றும் பொம்மை வித்தை.

பெரிய ஒரு யேனத்தில் ஒரு பொம்மை வலதுகாலில் தண்ணீரேற்றவும் ஒரு குழைவிடுந்து அதை மார்புக்குநேரேற்றி அக்குழைமுனையை இடது காலிலிறக்கி, அந்த ஏனத்தடியிலிழியவிட்டு, அவ்விடத்துக்காலை ஏனத்தடியிற் பொருந்தச்செய்து, அதின் நிறைய தண்ணீர்விட்டுக் கொண்டேயிருக்க, அப்பொம்மை வலதுகால் குழையிலேறி, இடதுகால் குழையிலிறங்கி, மேற்படி ஏனத்தின்கீழ் வெளியில்விழும். தண்ணீர் ஊற்றுதிருக்க அதில் நீரிருக்காது. ஊற்றிக்கொண்டேயிருந்தால்தான் நீரிருக்கும். இப்பொம்மையை மரத்தில் செய்தால்தான் பக்குவம். இதுமாதிரி வேறெந்த ஜீவஜெந்துக்களை வைத்தாலும் வைக்கலாம்.



## நீரேற்ற பாய்ச்சல் வித்தை.

ஒருமரத்தில் ஒருதடியைப்போல நீளமாகச்செய்து, அதின்மேல் ஒரு சிறு குழையைச்சொருகி, திருகாணிமாதிரி சுற்றி, அதின் மேல்முனையில் ஒரு கைப்பிடிவைத்து அடிமுனையை ஒரு நீர்தொட்டிக்குள் தாக்கி, மேல் கைப்பிடியைச்சுழட்ட, அது குழையில் தண்ணீரை மொண்டு மேற்குழை முனையில் விடுக்கும். அந்நீரை பாத்திரங்களில் பிடித்துக்கொண்டாலுஞ்சரி அல்லது பயிர்களுக்குப்பாய்ச்சினாலுஞ்சரி நன்மையாம்.

## நீரேற்ற ராட்டின வித்தை.

முன்மாதிரிதடிமேல் சுற்றுக்குழைசுற்றி அதின்முனையில் கைப்பிடியில்லாமல் அடியில் எட்டு இலையுள்ளராட்டினம் ஒன்றுபதிந்து, தண்ணீர் ஓடுகிறகால்வாய் அல்லது ஆற்றில்வாட்டமறிந்து நட்டுவைக்க, தண்ணீர் ஓடுகிற வேகத்தினால் ராட்டனஞ்சுழல, ராட்டினத்தின் இலைகள் குழையைச்சுழட்ட, அதினால் கீழிருக்குந்தண்ணீர் குழையிலேறி மேல்முனைவாயின் வழியாக வெளியில்விழும். இந்த நீரையும் மனம்போல் உபயோகித்துக்கொள்ளலாம்.

## சுழல் பம்பர வித்தை.

இப்பம்பரங்கள்மேல் கிண்ணம்போலிருக்கச்செய்து ஆடி. பம்பரத்தைக்கயறுசுற்றி ஆடி, மற்றொரு பம்பரத்தைக்கயறுசுற்றியாடி அதின்மேலேற்றி, இன்னொரு பம்பரத்தைக் கயறுசுற்றியாடி. அதின் மேலேற்றிட மூன்றும்சுழன்றுக் கொண்டிருப்பது வெகு ஆச்சரியமாயிருக்கும். இன்னும் இரண்டொரு பம்பரம் ஆடியேற்றுவதுஞ் சகஜம். ஆனால் கஷ்டம்.

## கண்ணாடிக்குழை வித்தை.

இருபத்திரண்டங்குலமுள்ள ஒரு கண்ணாடிக்குழைக்கு இருபக்கமும் கார்க்குகள்பிகிந்து, அதில் ஒவ்வொரு ஊசிகளைத்துருத்தி அக்குழையை நெருப்பிற்காட்டி இரண்டு ஊசிகளையும்பிடித்திருக்க அக்குழையானது தானேச்சுழலும். இது மின்சாரத்திலொன்று.

## சாதம்வேகாத வித்தை.

நிலவேம்புவேரை சிறிய துண்டுகளாய்நறுக்கி உலையில்போட்டாலுஞ்சரி, அல்லது அரிசி அரிக்கும்போது அதில்போட்டாலுஞ்சரி அந்த அரிசியானது எவ்வளவு தீயைப்போட்டாலும் வேகாது.

## இதுவுமது.

நீரடிமுத்துவேரைச் சிறிய துண்டுகளாய் நறுக்கி கொதிக்கும் உலையில்போட்டாலுஞ்சரி, அல்லது அரிசி அரிக்கும்போது போட்டாலுஞ்சரி சாதம்வேகாது. மறுபடியும்வேறு உலைவார்த்து அதி

விருக்குந்துண்டை யெடுத்துவிட்டு, அரிசியை நன்றாய்க்களைந்து போட்டால்தான் வேகும்.

### கல் தாணாய் எகிரிவிழும் வித்தை.

செவ்வாய்க்கிழமையதினம் மலைதாங்கி மூலிகைக்குச் சாபநிவர்த்திசெய்து பொங்கலிட்டுக் காப்புகட்டி உச்சிவேராகப்பிடுங்கி அதை வளையமாகச்சுருட்டி பூமியின்மேல்வைத்து, அதின்மேல் ஓர் பெரிய கருங்கல்லைத் தூக்கிவைக்க அதுதாணாய் எகிரி அப்புறத்தில் விழுந்துவிடும்.

### கேழ்வரகு பயிராகும் வித்தை.

கோழிமுட்டையிட்டு அவயங்காக்கும்போது அவ்வவயத்தில் ஓர் முட்டையை எடுத்து எழுத்தாணியால்குத்தி உள்ளிருக்கும் அம்பிலியைப்போக்கிவிட்டு, அதின்நிறைய கேழ்வரகைக்கொட்டி, அத்வாரத்தை வெள்ளை மெழுகினால்மூடி, அவயத்திலிருக்கும் முட்டையுடன் வைத்துவிடவும். கோழிகுஞ்சு பொரித்துவிட்டபிறகு முன்வைத்த முட்டையை எடுத்து அதிலிருக்கும்கேழ்வரகை. எடுத்துப்பாத்திகட்டி அதில் விரைத்து ஜலம்வார்க்க கேழ்வரகுசெடியானது அந்த சமயமே உற்பத்தியாகும். பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

### சூளை வேகாத வித்தை.

ஆச்சாமரத்தை சிறுதுண்டுகளாக நறுக்கிக்கொளுத்த அதில் நாய்மூத்திரம், கழுதைமூத்திரம், எருமைமூத்திரம் இம்மூன்றையும் ஒன்றாகக்கலக்கி அவித்து அக்கரியை எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு, நத்தைச்சூரிசெடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி வேராகப்பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு சூளைபோடும்போது அச்சூளையில் முன் அவித்தக்கரியைப்போட்டு, நத்தைச்சூரிவேரைக் காற்றுவாட்டமாகவைக்க அச்சூளையானது எவ்வளவு கரியைப்போட்டாலும் வேகாது. மறுபடியும் நாம் வைத்த வேரையெடுத்துவிட்டு கோமயத்தால் சுத்தஞ்செய்து, சந்தனக்கட்டை, மஞ்சள் இதுகளைப்போட்டுத்தீவைக்க நன்றாகவேகும்.

### முட்டை உருளும் வித்தை.

மாடப்புறாவின் பிச்சில், பொன்னரிதாரமும், வெள்ளைக்குண்டுமணி வடக்கோடிய வேருஞ்சேர்த்து, பாவட்டையிலை ரசம்விட்டரைத்து கோழிமுட்டையின்மேல் பூசிக்கீழேவிட, அது ஓரிடத்திலுந்தங்காது புரண்டுக்கொண்டே யிருக்கும்.

### விளாங்காய் உருளும் வித்தை.

விளாம்பழத்தையுடைத்து அதனுள்ளிருக்கும் சதையைப்போக்கி, சுண்டெலியை அதனுள்விட்டுமூடி, வாய்புறந்தெரிய வொட்டாது தந்திரமாக மஞ்சள் குங்குமமிட்டு வைத்துக்கொண்டு சபையோர்களைப்பார்த்து இந்த விளாம்பழத்தைக் கீழேவிடுகிறேன் இது புரளும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லிக்கீழேவிட அது புரண்டுக்கொண்டே யிருக்கும். பார்ப்பவர்கள் உனக்குக்குட்டிச்சாத்தான் வசியமென்று சொல்வார்கள். ஆனால் பழத்தை ஒட்டவைப்பது மாத்திரம் தெரியா திருக்கவேண்டும்.



### பாணவகைகள் மருந்தரைக்குந் திட்டம்.

தனித்தனி ஒவ்வொரு மருந்துகளாய் அரைத்து சலந்தெளித்து மண் மணல்போக்கி ஈரப்பசுமை பரிகொடுத்து இடைகண்டு சேர்த்து அந்தந்தப் பாணங்களைக் கட்டிக்கொளுத்தவும்.

### உப்பு பாகம்.

பங்காளப் பொட்டிலுப்பாகில் சகல பாணங்களுக்கு முதவும். நாட்டுபொட்டிலுப்பாகில் சுத்திசெய்து சேர்க்கவும்.

### சுத்தி விவரம்.

பொட்டிலுப்பளவு ஜலம் விட்டுக் காய்ச்சி குழைந்த பதமாய் வருகையில் கோழிமுட்டை வெண்கருவுவிட்டு அழுக்கைப் போக்கி ஒருசுப்பலில் எடுத்து இலைமேல் விட் வெந்தபோம், உடனே யெடுத்து சட்டியில்வடிகட்டி ஆறவைத்து, மறுநாள் நல்ல ஜலம்விட்டலம்பி உலர்த்தி எடுத்துக்கொள்ளவும். வடிகட்டும்போது மிகுதியான திப்பியை அலம்பிய சலத்தில் விட்டுக் காய்ச்சினால் அடியில் உப்பு நிற்கும் அதையும் எடுத்து உபயோகித்துக் கொள்ளவும்.

### வத்தி செய்யுந் திட்டம்.

இம்மருந்திற் கொஞ்சந் தண்ணீர்விட்டு பஞ்சுநூல்களை யதிற்போட்டுப் பிறட்டி, வெய்யலில் உலர்த்தி வேண்டியவரையிற் றுண்டுதுண்டாகத் தரித்து அததற்குக் கட்டிவைத்துக் கொள்ளவும். இம்மருந்துகளை அறைக்கும்போதும் சேர்க்கும்போதும் வெகுபத்திரமாய் உபயோகிக்கவும்.

### வெள்ளை மத்தாப்பு.

பொட்டிலுப்பு வீசை 1-க்கு கெந்தகம் பலம் 12, சுண்ணாம்புநீர் பலம் 6, நெய் பலம் $\frac{1}{2}$, நீலம்பலம் $\frac{1}{4}$, கற்பூரம் துட்டிடை கால் இதுகளை முறைப்படி சேர்த்தரைத்து அகல் அல்லது பானையோட்டுபில்லைகளில் மருந்தைக் குவியவைத்து காகிதமொட்டிக் காயவைத்து அதின்மேல் நெருப்பிட எரியும்.

### இதுவுமது.

பொட்டிலுப்பு எடை 6, கெந்தி எடை 3, உதிரிச் சுண்ணாம்பு 1 இவைகளை முன்போல அரைத்துக் கொளுத்த அதிக வெளிச்சமாயிருக்கும்.

### சிகப்பு மத்தாப்பு வித்தை.

பொட்டிலுப்பு பலம் ½, கெந்தகம் பலம் ¼, செந்தூரம் பலம் ¼, ஆமணக்கன்வித்து பலம் ¼ சேர்த்து இரும்புக்கடாரத்தில் போட்டரைத்து முன்போல ஒட்டிவிட்டுக் கொளுத்தி மேலே தூக்கிவைக்க எங்குஞ் சிகப்புநிறமா யிருக்கும்.

### பச்சை மத்தாப்பு வித்தை.

பொட்டிலுப்பு பலம் 5, கெந்தகம் பலம் ½, மிளகாய்கரி பலம் ¼, கற்பூரவள்ளியிலை 2, கம்மாறு வெற்றிலை 2, ரசம் விராகனெடை 2 இவைகளைக் கல்வத்தில் போட்டாட்டிப் பொடித்து முன்போற்செய்துக்கொளுத்தி மேற்றூக்கிவைக்க எங்கும் பச்சை வர்னமாய்ப் பற்றியெரியும்.

### தலைவெட்டி மத்தாப்பு வித்தை.

ஆறுங்காச்சல் பொட்டிலுப்பு பலம் 10, துருசு தூள் பலம் 3, கற்பூரம் பலம் ¼, கரிகெந்தகம் நிதானமாய்ச் சேர்த்து ஒன்றாய்க்கூட்டி யரைத்து முன்போல ஒட்டிவிட்டுக் கொளுத்திவிட யாவரும் தலைகாணு முண்டமா யிருப்பார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 72 | 79 | 2 | 7 |
| 6 | 3 | 76 | 75 |
| 78 | 73 | 8 | 1 |
| 4 | 5 | 74 | 77 |

### பிடாரி மந்திரம்.

வெள்ளித் தகட்டில் பதினாறறையைக் கீறி அறைகள்தோறும் நூற்றியறுபதை குலமிட்டு அவ்வறைகளுக்கு பிசகாமல்மாறி பூசையில்வைத்து பால், பழம், அவல், கடலை தூபதீபத்துடன் 'ஓம் ற்றீம்' என்றுலட்சமுருகொடுக்கப் பிடாரியானவள் நம்மெதிரில் தோன்றி, நாம் கேட்டதை அனுக்கிரகிப்பாள்.

### தம்தமா பாண வித்தை.

பொட்டிலுப்பு விசை 1, கெந்தகம் பலம் 9, தண்டவாளப் பொடி பலம் 10, கரித்தூள் பலம் 8½ ஆகச் சேர்த்தரைத்து சிறு மூங்கிற்குழாயிற் கெட்டித்து அதற்கு நேர் மூங்கிற்கு வாழைநார் அல்லது தாழைநாரிட்டுக் கட்டி ஒவ்வொன்றாய் அல்லது மொத்தமாய்க்கட்டிக்கொளுத்த பற்றிக்கொண்டே உயரவெழும்பும். ஆனால் குழை உள்முனையை விரல்மேல்வைக்க விழாமற் சரிகனமாயிருத்தல் வேண்டும்.

### இதுவுமது.

இதில் வெள்ளை மத்தாப்பு 1 பங்குக்குமேல் இம்மருந்து 3 பங்கும் வர்ணபேதங்களாகிய மத்தாப்பு மருந்துகளை ஒன்றின்மேலொன்று மேற்மேல் நிறைவாரிவைத்து கெட்டித்துக் கொளுத்தவும், வித்தையாயிருக்கும்.



### வசிய வித்தை.

ஒரு சுத்தமான அகலில் காரெள்ளெண்ணெய்யூற்றி, தாமரை நூலால் திரிபோட்டு விளக்கேற்றி, தேவாங்கின் மண்டையோட்டில் அப்புகையைப்பிடித்து அதைக்காராவின் நெய்யிற்குழைத்துத்திலர்தமிடக் கண்டவர்கள் வசியமாவார்கள்.

### பில்லி, ஏவல் முதலியது அகலும் வித்தை.

வேப்பமரக்காக்கைகூடு, வேப்பம்பட்டை, எட்டிவிரை, நல்லபாம்புதோல், ஆமைமுதுகோடு, செக்காடுமிடத்தின்மண், குதிரைக்குளம்பு, மாட்டுக்குளம்பு, காக்கனஞ்செடி, தீட்டுச்சீலை, மஞ்சள், மூஞ்சூரின்தோல், கோழிமுட்டை, மாவிலிங்கப்பட்டை, குங்கிலியம், சிறுகீரைவேர் இவைகள்யாவும் சமயெடையாக இடித்து, நெருப்பில்போட்டுப்புகைக்க பேய், பிசாசு, பூதம், ஏவல், சூனியம் இவைகள் யாவும் காதவழிவிலகும்.

### தேள், வித்தை.

ஞாயிற்றுக்கிழமையதினம் பிறந்தகோலமாக அரைஞாண்கயறு முதலியதுகளில்லாமல் இருந்துக்கொண்டு ஒரு தேளைப்பிடித்து அதின் கொடுக்கைப் பின்னப்படுத்தாமல் மூன்றுமணிவரையிலும் சுத்தரித்துக்கொண்டு (ஜிம்) என்னும் மந்திரத்தை 1008 உருஜெபித்து பகைவர்களின் நீர்க்குழியிற்புதைக்க அவர்கள் நீர் வியாதியால் அவஸ்தைப்படுவார்கள்.

### வேறு வசிய வித்தை.

நிலவூமத்தன்செடிக்கு ஆதிவாரம் சூரியோதயத்தில் காப்புகட்டி, தூபதீபங்கொடுத்து, சாபநிவர்த்திசெய்து உச்சிவேரறுமல் பிடுங்கிவந்து நிழலிலுலர்த்தி, புதுப்பாண்டத்திலிட்டுக் கொஞ்சம் பச்சைக்கற்பூரஞ்சேர்த்து எரித்துபின்பு அதைக்கல்வத்திலிட்டு, காராவின் நெய்யினாலரைத்து, எதிரியின் பெயரைசெபித்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு அவர்கள் எதிரேசெல்ல வசியமாவார்கள்.

### அம்மி நடக்கும் வித்தை.

ஒரு அம்மியை சபைக்குக்கொண்டுவந்துவைத்து இந்த அம்மி நடக்கின்ற வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி மாயாசத்திமையைத்தெரியாது அம்மியின்மேல்தடவி சல் மலையாள பகவதி சீக்கிரம் நடந்தோடிவா என்று சொல்ல, பார்ப்பவர் கண்களுக்கு அம்மி நடக்கின்றதைப்போல் தோன்றும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

### கேச்சக்காய் சண்டை வித்தை.

வேண்டுமானபோதுகெச்சக்காய்களை சபைக்குக்கொண்டுவந்து

எல்லோரையும் பார்த்து இது சண்டைசெய்யும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி மாயாசத்தி மையை ஓர்காயின்மேல் தடவிக்கீழேபோட அது ஒன்றோடொன்றுமோதி சண்டைசெய்வதைப்பார்த்தவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

### குழந்தைகளுக்கு நோய்வரா வித்தை.

நாய்மண்டையோட்டை கலத்தில்நனைத்து மார்பிற்றடவி பிறந்த குழந்தைகளுக்குத் தாயானவள் பால்கொடுக்க அப்பிள்ளைக்கு எக்காலத்திலும் நோய்வராது.

### முள்ளின்மேல் நடக்கும் வித்தை.

ஞாயிற்றுக்கிழமையதினம் முத்தெருக்கன் செடிக்குக் காப்புகட்டி உச்சிவேரறுமல் பிடுங்கிவந்துக் குளிசமாடி அதைத்தலையில் முடிந்துக்கொண்டு முள்ளின்பேரில்நடக்க எவ்வித முள்ளும் காலில் தைக்காது.

### கண்ணில் மண்ணைக்கோட்டிக்கொள்ளும் வித்தை.

கூத்தன் குதம்பைவேரை ஞாயிற்றுக்கிழமைதினங்காலையிற் காப்புகட்டி வேரறுது பிடுங்கிவந்து வாயில்போட்டு மென்றுத்தாடையிலடக்கிக்கொண்டு இருகண்களிலும் மண்ணைவாரிக்கொட்டிக் கொள்ள கண் அருகாது. வேறொரு கெடுதியும் நேரிடாது.

### நோய் அதிகரிக்கும் வித்தை.

கொஞ்சம் நல்ல வெல்லத்தில் குன்டுமணிப்பிரமாணம் அபினியை வைத்துக்கொடுத்துவிட்டு, அதன்மேல் ஓமக்கியாழத்தில் பல்விளக்கும் தாசனுப்பொடியைக்கலந்து உள்ளுக்குக்கொடுத்தால் சாப்பிட்டவர்கள் பலவிதமாக வாய்பிதற்றி அலைவார்கள். முறிப்பு—பசு வெண்ணெயை உருக்கி உள்ளுக்குக்கொடுக்க நிவர்த்தியாம்.

### கண்ணோய் வராத வித்தை.

எள்ளுச்செடியின் இளம்பூவைப்பறித்து பல்லில்படாது விழுங்கிவிட்டால் கண்ணோய் வராது. மேலும் அதில் எத்தனை பூவை விழுங்குகின்றோமோ அத்தனைவருடம் கண்ணோயின் தொந்தரையில்லை. இதைச்சிலர் சாதாரணமாகவே செய்கிறதுண்டு.

### குடத்துநீரைக் குடித்தல்.

சிறுபூளைவேரும், குப்பைமேனிவேரும் சமயெடையாகயெடுத்து வாயிற்போட்டுமென்று அடக்கிக்கொண்டு, ஒருகுடத்துநீரைத் தாராளமாகக்குடித்து விடலாம்.

### குடத்தில் நீர் நிற்கும் வித்தை.

அரசன்வேர், நாறுகரந்தைவேர், கோரைக்கிழங்கு, மயிரோசினை இவைகளைச் சமயெடையாயெடுத்து அரைத்து குடத்திற் குள்பூசி, அதின்பின் அதுநிறைய ஜலத்தைவிட்டுக் கவிழ்க்க துளி ஜலமேனுங் கீழ்விழாது. பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.



### வைகுண்டத்தைக் காட்டும் வித்தை.

இருட்டுவீட்டில் திமுறுகல் பாஷாணத்தைக்கொண்டு ஸ்ரீ மகாவிஷ்ணுவுடன் லக்ஷ்மியையும், மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திலுதித்த தாமரையில் பிரமதேவரையும், ஐதீகப்பிரகாரம் எழுதி வைத்துவிட்டு இருட்டானவுடன் சனங்களை அழைத்துக் கதவின் வாயற்படியருகில் நின்றுக்கொண்டு ஓர் தட்டில் கற்பூறத்தைக்கொளுத்திக் கையில் பிடித்துக்கொண்டு கதவைத் திறந்து காண்பிக்க வீடு வெறும் வீடாகவே தோன்றும் அது சமயம் சனங்களைப்பார்த்து இன்னம் மஹா விஷ்ணுவானவர் வரவில்லை இங்கு ஏதோ தீட்டுப்பட்டிருக்கின்றதென்றுநடித்து பசுங்கோமயத்தைத் தெளித்து கதவைச்சாத்திவிட்டு வாயற்படியருகில் குந்திக்கொண்டு அஷ்டாட்சர மந்திரத்தைச்செபித்துக் கற்பூரங்கொளுத்திக்கொண்டே யிருந்து மந்திரமுடிந்ததும் கதவைத்திறந்துக் காண்பிக்க மஹா விஷ்ணுவானவர் பளபளவென்று தோன்றுவார். அதைக் கண்ட சனங்களெல்லாம் உன்னை ரொம்பவும் புகழ்வார்கள்.

### பிரமலோகம் காட்டும் வித்தை.

முன்போல ஓர் இருட்டறையில் திமுறுகல் பாஷாணத்தைக் கொண்டு பிரம்மா, சரஸ்வதி, அவருடைய மானஸ புத்திரர்கள், தபோதனர்கள், ரிஷிகள் முதலியவர்களை ஐதீகப்பிரகாரமெழுதி முன்னதாகத் தயார்செய்துவிட்டு கதவைச்சாத்திக் கொண்டுவந்துவிடவும். சாயங்காலம் அஸ்தமித்ததும் நேமநிட்டையுடன் ஸ்நான முதலியவைகளைச்செய்து சனங்களை அழைத்துக்கொண்டு தட்டில் கற்பூரங்கொளுத்திவைத்து மந்திரஞ் செபிப்பதுபோல் வாயசைத்துக்கொண்டே கதவைத்திறந்துக் காண்பிக்க அங்கு ஒன்றுமில்லாது வெறும் வீடாகவேயிருக்கும். அப்போது சனங்களைப் பார்த்து இன்னம் வரவில்லைபோலிருக்குதென்று நடித்து கதவைச் சாத்திக்கொண்டு வாயற்படியருகில் குந்திக்கொண்டு சற்றுநேரங் கழித்ததும் கதவைத்திறந்துக்காண்பிக்கச் சுவற்றில் பிரம்மாவானவர் பளபளவென்று சூரியனைப்போல மின்னுவார். அதைப் பார்த்தவர்களெல்லாம் பிரமித்து உன்னை யோக புருஷனென்றேசொல்லுவார்கள்.

### சந்திரனைக் காட்டும் வித்தை.

முன்போல ஓர் இருட்டு வீட்டில் திமுறுகல் பாஷாணத்தைக் கொண்டு சந்திரனைப்போல உருவம் வரைந்துவைத்துவிட்டு அஸ்தமித்ததும் சனங்களை அழைத்துக்கொண்டுவந்து வீட்டைத்திறந்து காண்பிக்க அங்கு ஒன்றுமில்லாமல் சூனிய வீடாகவே யிருக்கும்.

ஆனால் முதலில் விட்டைத்திறந்து காண்பிக்கும்போது மாத்திரம் ஓர் தட்டில் கற்பூரத்தைக்கொளுத்தி வைத்துக்கொண்டு காண்பிக்கவும், வெளிச்சமில்லாவிட்டால் நாம் தயார்செய்து வைத்திருப்பது அனைவர்களுக்குந்தெரியும் அதைப்பற்றியே தந்திரமாக செபஞ்செய்வதுபோல் கற்பூரத்தைக்கொளுத்தி வைத்துக்கொண்டு கதவைத் திறக்க அவ்வெளிச்சத்தினால் சுவற்றிலிருக்கும் உருவமானது தெரியாது. அதன்பிறகு சனங்களைப்பார்த்து இன்னம் சந்திரன் வராதது என்னகாரணமென்று ஒன்றுந்தெரியாதவனைப்போல்நடித்து ஆகிலும் பரவாயில்லை என்று கதவைச்சாத்தி வாயற்படியில் கொண்டு கற்பூரத்தைக்கொளுத்தித் தட்டில் வைத்துக்கொண்டு சற்றுநேரம் ஜெபஞ்செய்துக் கொண்டிருந்து பிறகு கற்பூரமணைந்து போனதும் கதவைத்திறந்துக்காண்பிக்க சந்திரனானவன் நன்றாகத் தெரிவான். அதைப்பார்த்த சனங்களெல்லாம் உன்னை ரொம்பவும் புகழ்வார்கள். ஆனால் இவ்வேலைகளைப்போல இன்னம் எவ்வளவு வேலைகள்வேண்டுமானாலும் செய்துக்காட்டி சனங்களை சந்தோஷப் படுத்தலாம். புத்தி சாதுரியமும், குருவருளும் வேண்டும். இதுவுமன்றி ஜாலவித்தைகளுக்கெல்லாம் சமயோசிதப்படி நடிக்கும் சாமார்த்தியமும் வேண்டும்.

## வசியம்.

சீதாதேவி செங்கழுநீர் செடிக்கு செவ்வாய்க்கிழமை காலையில் சாபநிவர்த்திசெய்து மஞ்சள்நூல் காப்புகட்டி வேரறுமல்பிடுங்கி வந்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள வசியமாகும்.

## வசியமை.

மேற்படி செடியை சமூலமும் பிடுங்கிவந்து நிழலிலுலர்த்திப் பொடித்து வெள்ளைத்துணியில் வைத்துச்சுருட்டிக் காராவின் நெய்யில் விளக்கேற்றிப்புகைபிடித்து அப்புகையை வழித்துக்கொண்டு அதில் கோரோசனை, கஸ்தூரி கூட்டித்திலர்தமிட வசியமாம்.

## இதுவுமது.

ஊமத்தஞ்செடிக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டு மறுநாள் சென்றெடுத்துவந்து சார்பிழிந்து அதில் கோரோசனை, கஸ்தூரி, குங்குமப்பூசேர்த்து மோகினி பூசைசெய்து அன்னதானமுடன்திலர்தமிட வசியமாம்.

## இதுவுமது.

வெள்ளெருக்கன் செடிக்குச் சாபநிவர்த்திசெய்து பொங்கல் பலிகொடுத்து விட்டு மறுநாள் சூரியோதயத்தில் முனகாப்பு கட்டி வேரறாமல் பிடுங்கிவந்துக் குளிசமாடிக்கட்டிக்கொள்ள வசியமாகும்.



## இதுவுமது.

சாபநிவர்த்தி செய்துக்கொண்டு வந்த வெள்ளெருக்கன் இலையைச்சாறுபிழிந்து புதுசட்டிக்குத்தடவிக் காயவைத்து, காராவின் நெய்யில் விளக்கேற்றி மைபிடித்து அதில் கோரோசனை, குங்குமப்பூ சேர்த்து புத்துத்தேனாலாட்டித் திலர்தமிட வசியமாம்.

## இதுவுமது.

சாபநிவர்த்திசெய்து கொண்டுவந்த வெள்ளெருக்கன் இலைபிடி 1, பொற்றலைக்கையான் பிடி 1, இவைகள் இரண்டின் சாற்றையும் எடுத்து அஞ்சனக்கல் விராகனெடை 1 சேர்த்து அரைத்துச்சட்டியில்பூசி கற்பூரங்கொளுத்திப்புகைபிடித்து வழித்துக்கொண்டு அதில் ஆவின் கோரோசனை, குங்குமம், கஸ்தூரி இதுகள் வகைக்கு விராகனெடை 1 சேர்த்து புத்துத்தேனாலாட்டித் திலர்தமிட திரிலோகமும் வசியமாகும்.

## பார்வை மை.

முன்சொன்ன முறைப்படிசெய்து அதில் ஆள்காட்டி முட்டையின் கருவைச்சேர்த்து அஞ்சனாதேவியையும், ஆஞ்சநேயரையும் பூசித்து வெற்றிலையில் தடவிப்பார்க்க ஏவல், பில்லி, சூன்ய முதலியவைகள் தெரியும்.

## சூரியனைக்காட்டும் வித்தை.

ஒரு சிறிய இருட்டறையில் தீமுறுகல் பாஷாணத்தைக்கொண்டு சூரியனைப்போல கிரஹணம் முதலானதை வரைந்து வைத்துவிட்டு முன்சாக்கிரதையாக கதவைமூடிக்கொண்டு இருட்டானதும் ஜனங்களை அழைத்துக்கொண்டு நான் இவ்வீட்டில் சூரியனை வரவழைக்கிறேன் பாருங்களென்று சொல்லி கற்பூரத்தைக்கொளுத்தி ஓர் தட்டில் வைத்துக்கொண்டு சூரிய மந்திரத்தைச் செபித்துக் கொண்டே கதவைத்திறந்துக்காட்ட வெறும்வீடாகவே தோன்றும் அதுசமயம் மேலுமேலும் கற்பூரத்தைக்கொளுத்திவைத்தும் மஹா பயபக்தி விநயத்துடன் அஷ்டாங்க, பஞ்சாங்க சாஸ்டாங்க நமஸ்காரங்களைச்செய்து சூரியனைப் பிரார்த்தித்துக்கொண்டேயிருக்க கற்பூரமானது அணைந்ததும் இருட்டில்முன் எழுதிவைத்த சூரிய பிம்பமானது மஹா பிரகாசமாய்த்தோன்றும். அதைப்பார்த்தவர்களெல்லாம் சந்தோஷித்து உன்னை ரொம்பவும் மெச்சுவார்கள்.

## கைலையங்கிரியைக்காட்டும் வித்தை.

தீமுறுகல் பாஷாணத்தை ஜலத்தில்கரைத்துக்கொண்டு முன்போல் இருட்டு வீட்டில் கைலையங்கிரியைப்போல மலையையும், அதில் பார்வதியும், பரமேஸ்வரனும் எழுதி மலையின் முன்முகப்பில் நந்திதேவரையும், மலையைச்சுற்றிலும் தபோதனர்கள் ரிஷிகள்,

பக்ஷிகள், மிருகங்கள் முதலியவைகளையும் சாஸ்திரோக்தமாய்எழுதி முன்னதாகவே தயார்செய்து வைத்துவிட்டு இருட்டானவுடன்முன் போல சனங்களை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச்சென்று கற்பூரத்தைக்கொளுத்திக்காட்ட அங்கு ஒன்றுமில்லாமல்வெறும்வீடாகவேயிருக்கும். பிறகு கதவை மூடிக்கொண்டு வெளிவாயற்படியருகில் உட்கார்ந்துக்கொண்டு பைரவ மந்திரத்தைச் செபித்துக்கொண்டே சிறிது காலதாமதஞ்செய்து அதன்பின்பு கதவைத்திறந்துக் காட்ட கைலையங்கிரியானது ஜெகஜ்ஜோதியாய் பளபளவென்றுமின்னற் பிரகாசம்போலத் தோன்றும். அதைப்பார்த்தவர்களெல்லாம் பிர்மித்து உன்னைத்தேவனோ அல்லது மானிடனோ வென்று சந்தேகித்து வணங்குவார்கள். நீயும் அவர்களுக்கெல்லாம் ஆசீர்வாதஞ் செய்து விபூதிகொடுத்து அனுப்பிவிடவும்.

### கோழிமுட்டை பாண வித்தை.

பொட்டிலுப்பு பலம் 5, கரி பலம் $1\frac{1}{4}$, கெந்தகம் பலம் 1 சேர்த்தரைத்து மூங்கிற்குழாயிற் கெட்டித்து விரல் மூங்கிற்குத் தொடுத்து 40-40 ஆகக் கட்டிக்கொளுத்திவிட வெடிகிளம்பும். முட்டையைப்போல ஆகாயமெழும்பும்.

### புல்லுருவி மை.

வேப்பமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை ஞாயிற்றுக் கிழமையதினங் கொண்டுவந்து சாறுபிழிந்து புதுசட்டியில் தடவி கற்பூரப்புகைபிடித்து வழித்து அதை தேனில் குழைத்துத் திலர்தமிட்டெடுத்தகாரியங்கள் பலிதமாகும்.

### வேறு.

வெள்ளிக்கிழமைய தினம் ஆலமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியைக்கொண்டுவந்து சாறுபிழிந்து சட்டியில் தடவிக் காயவைத்து காய்ந்தபிறகு சாம்பிராணிப் புகைபிடித்துத் தேனில்குழைத்து திலர்தமிட சகலமானபேர்களும் வணங்குவார்கள்.

### வேறு.

வியாழக்கிழமையதினம் மரமல்லி மரத்தின்மேலிருக்கும் புல்லுருவியைக் கொண்டுவந்து சாறுபிழிந்து புதுச்சட்டியில் தடவி காயவைத்து கற்பூரப்புகை பிடித்து நெய்யில் குழைத்துத் திலர்தமிட வசியமாம்.

### வேறு.

செவ்வாய்க்கிழமைய தினம் ஆலமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை இரும்பினாலாகிய ஆயுதங்கள் படாது கொண்டுவந்து சாறுபிழிந்து சட்டியில்தடவி காயவைத்துக் கற்பூரப்புகைபிடித்து வழி



த்து சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது பாலில் குழைத்துத் திலர்தமிட்டுச் செல்ல வழக்குகள் வெல்லும்.

### வேறு.

புதன்கிழமைய தினம் மருதமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியைக்கொண்டுவந்து சாறுபிழிந்து சட்டியில் தடவிக் காயவைத்துக் கற்பூரப்புகை பிடித்து வழித்து வெற்றிலையில் தடவி சாம்பிராணியைப் புகைத்து அதின்புகையை அதில் பிடித்து வழித்து வைத்துக்கொண்டு தேவையானபோது பாலில் குழைத்துத் திலர்தமிட்டுச் செல்ல வழக்குகள் வெல்லுவதோடு பகையாளிகளும் உறவாவார்கள்.

### வேறு.

சனிக்கிழமையதினம் அரசமரத்தி லிருக்கும் புல்லுருவியைக் கொண்டுவந்து சாறுபிழிந்து சட்டியில் தடவி அதின்பேரில் கரிசலாங்கண்ணி சாற்றைத் தடவி காயவைத்துக் கற்பூரப்புகை பிடித்து அதை நெய்யில்குழைத்து திலர்தமிட சர்வவசியமும் ஆகும்.

### அஞ்சனங்களுக்கு மூல மந்திரம்.

இதுவரையில் சொல்லிவந்த அஞ்சனங்களுக்கெல்லாம் மூலமந்திரமாவ தென்னவென்றால்—ஓம் அஞ்சனாதேவி, சர்வபேதனி, ரூபி, குணவாகினி, வாய்வுதேவி, பூதாளி, சர்வாஞ்சனி, அனுமந்தனைப் பெற்றவளே பாதாளமுந்தெரியச் சுவாஹா வென்று ஆயிரத்தெட்டுருகொடுக்கச் சித்தியாம்.

### வேறு பேதனம்.

மஞ்சளால் எதிரியைப்போல் ஓர் உருவஞ்செய்து அதன் முகம், கண், வாய் இவைகளுக்குக் கருவைத்தொட்டு முள்ளினாற் குத்தி எதிரியின் வீட்டைச்சுற்றி மயானத்திற் புதைக்க எதிரியானவன் பிரமைகொண்டலைவான்.

### இதுவுமது.

ஓர் தேரினசுக்கை யெடுத்து எதிரியைப்போல் உருவஞ்செய்து ஐங்காயம், நாக்கமுக்கு, கருவு இம்மூன்றையும் ஒன்றாகக் கூட்டி அதை நாகப்பாம்பின் முள்ளினால் தொட்டு உருவத்திற்கு அவயவங்களில் குத்திவைக்க அவன் பிரமைகொண்டலைவான்.

### இதுவுமது.

காயம், பெருஊமத்தன் சார், பேய்ப்பீர்க்கன் தைலம் இவைகளில் கருவைச்சேர்த்து மாவினால் எதிரியைப்போல் உருவஞ்செய்து பேதனமந்திரத்தை அதற்குச் செபித்து முன்சேகரித்த தைலத்தைத்தொட்டு கீல்களில் குத்த எதிரி பிரமைகொண்டலைவான்.

### சத்துரு பேதனம்.

எதிரியின் காலடிமண்ணை யெடுத்துக் கருவைச் சேர்த்து பேதனமந்திரத்தைச் செபிக்க எதிரியின் வீடெல்லாம் குரங்குகளாய்த் தோன்றி அவனை இம்சை செய்யும்.

### மாரணம்.

சுடலையோட்டைக் கொண்டுவந்து காளியைப்போல உருவஞ்செய்து எதிரியின்பேரை அதன்கீழ் எழுதி கருவைத்தடவி சாமுண்டிமந்திரத்தைச் செபித்து சாத்தான் கோயிலெதிரில் புதைக்க எதிரி மரணமாவான்.

### இதுவுமது.

கள்ளிக்கட்டையில் உருவஞ்செய்து அதன்முகத்தில் ஐங்காயம் பூசி, கருவைத் திரேகத்தில்தடவி மயான ருத்திரமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அவன் வாயற்படியிற்புதைக்க எதிரி மாரணமாவான்.

### பேய் பிசாசு ஓடும் வித்தை.

சின்னி, தொட்டால் சுருங்கி, நாயுருவி, நிலக்கடம்பு, கருங்காக்கணம், வன்னி, ஆவாரை முடக்கொத்தான், கொடிவேலி, நீர்மேல் நெருப்பு இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்துக் காராவின் பால் விட்டரைத்துப் பிரயோகிக்க பேய்பிசாசுகள் விலகும்.

### வேறு வசியம்.

நிலப்பனங்கிழங்கு, அரிதாரம், எலுமிச்சம் இலை இம்மூன்றையும் ஓர்நிறையா யெடுத்து ஊமத்தன்சாரும் சீதேவி செங்கழுநீர் சாறும் விட்டரைத்து செப்புச் சிமிளில்வைத்து ஓம் ஐயுங்கிலியும், சவ்வும், சவ்வுங்கிலியும், ஐயுமென்று ஆயிரத்தெட் டுருசெபித்துத் திலர்தமிட வசியமாம்.

### மோகன மை.

அரிதாரம், துடரிவேர், கொல்லைப்பல்லி, சீலை இவைகளை பழச்சார்விட்டரைத்து மோகனமந்திரத்தை ஆயிரத்தெட் டுருசெபித்துத்திலர்தமிட மோகனமாம்.

### பேய் ஆடாதிருக்கும் வித்தை.

ஆடையொட்டி, கருங்காக்கணம் இவைகள் இரண்டிற்கும் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங் கொடுத்து இரும்பாலாகிய ஆயுதங்கள் படாது வேரறுமல் கொண்டுவந்து குளிசமாடி பேயாடுகிற யிடத்தில் புதைத்துவைக்க பேய் ஆடாமல் தம்பிக்கும்.



### பேய் ஆடும் வித்தை.

ஊமத்தன் விரையைப் பொடித்து பேய் பிடித்திருக்கின்றவர்களின் தலையிற்போட்டுக் கொஞ்சம் சாம்பிராணியிற் கலந்து நெருப்பிலிட்டுப் புகைக்க ஆடாதபேய்களெல்லாமாடி முடிகொடுக்கும்.

### வெட்டுப்படாமலிருக்கும் வித்தை.

எதைச்சொன்னாலும் செய்யும் நத்தைச்சூரி செடிக்குச் சாப நிவர்த்திசெய்து காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்து வேரறுமல் பிடுங்கி குளிசமாடிக் கட்டிக்கொண்டு சண்டைக்குச் செல்லும்பக்ஷத்தில் எவ்வித ஆயுதங்களும் படாது. அப்படி மீறிப்பட்டாலும் மழுங்குமேயன்றி காயமாகாது.

### விஷம் நீங்கும் வித்தை.

சிறியாநங்கைச்செடிக்கு காப்புகட்டிப் பலிகொடுத்து பொங்கலிட்டுக் கொண்டுவந்து அதனுடன் ஆடுதின்டாப்பாளை மேல்தோலைச்சீவிப்போட்டு அரைத்துப் பயறளவாக மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சகலவிஷத்திற்கும் ஓர் மாத்திரைகொடுக்கத்தீரும்.

### வேறு.

தேள்கொடுக்கு யிலையை ரசம் பிழிந்து அதில் பச்சோந்தி பிச்சைசேர்த்து அரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு கண்களுக்குக் கலிக்கமிட சகலவிஷங்களும் நீங்கும்.

### பேடியாகும் வித்தை.

கொட்டக் கரந்தைச் செடியை சமூலமும் பிடுங்கிவந் துலர்த்திப் பொடிசெய்து அதை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்துக் குளிகைசெய்து சாப்பிட புருடத்தனம் நீங்கும்.

### சிரங்குகள் நசியும் வித்தை.

பிரமதண்டி விரையைக் குழித்தைல மிறக்கி அதில் கெந்தகஞ் சேர்த்துக் குழைத்து சிரங்குகளுக்குப்பூச சிரங்குகள் நசியும்.

### கிருமி வெளிப்படும் வித்தை.

காஞ்சொறியின் சுணையை பெருங்குண்டுமணிப் பிரமாணமெடுத்து நல்லவெல்லத்தில் வைத்துச் சாப்பிட வயிற்றிலுள்ள கிருமிகளெல்லாம் போகும்.

### கீழாநெல்லி மை.

கீழாநெல்லிவேரைக் கொண்டுவந்து புதுசட்டியிலிட்டுக்கருக்கி தூளாக்கி தேங்காயெண்ணெய் விட்டரைத்துச் சீலையில்தடவி காயவைத்து ஓர் அகலில் தேங்காயெண்ணெய்விட்டு அதில் மேற்படி

சிலையைத் திரித்துப்போட்டுக் சொளுத்தி ஆலாக்குருவியின் கருவை புதுசட்டிக்குத் தடவிக் காயவைத்து அதில் அப்புகையைப் பிடித்து மை வாங்கி சிமிளில்வைத்துக்கொண்டு ஆஞ்சனேயரையும் அஞ்சனு தேவியையும் பூசித்து வெற்றிலையில் தடவிப்பார்க்க சகலமும் நன்ருகத்தெரியும்.

## அதிகமாகச் சாப்பிடும் வித்தை.

சித்தர்மணக்கன்வேருக்குச் சாபநிவர்த்திசெய்துக் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங் கொடுத்து இரும்பாலாகிய ஆயுதங்கள் படாது கொண்டுவந்துக் குளிசமாடிக் கையில் போட்டுக்கொண்டு எவ்வளவேனும் புசிக்கலாம்.

## மிருக ஆக்ருஷ்ணம்.

பூனைவணங்கிச் செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து வேரை அறுமல் பிடுங்கிவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள மிருக ஆக்ருஷ்ணமாகும்.

## தலைசுற்றும் வித்தை.

சிறியாநங்கைச் செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலி கொடுத்து வடக்கேபோகிற வேரைக்கொண்டுவந்து குளிசமாடி வைத்துக்கொண்டு யாரையாகிலும் ஒருவரைப்பிடித்து தலையைச் சுழற்றி விட்டுவிட அவர்கள் தலையைச் சுற்றிக்கொண்டே யிருப்பார்கள்.

## போது வசியம்.

தொழுகண்ணிச்செடிக்குக் காப்புகட்டி பொங்கல் பலி முதலிய துகள்செய்து வேரைப் பிடுங்கிவந்துக் குளிசமாடி ஐங்காயஞ் சேர்த்துக் கட்டிக்கொள்ள சகல வசியங்களுமாகும்.

## இதுவுமது.

வெள்ளெருக்கன் செடிக்கு சாபநிவர்த்திசெய்து பொங்கல், பலி, பூசைகளுடன் வேரை ஆயுதம்படாது கொண்டுவந்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சகல வசியங்களுமாகும்.

## நெருப்பு மிதிக்கும் வித்தை.

வட்டத்தூத்திக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரைக்கொண்டுவந்து காடிவிட்டரைத்துக் காலில்பூசிக்கொண்டு நெருப்பின்மேல் நடக்க நெருப்பு சுடாது.

## பேய்விலகும் வித்தை.

மாவிலிங்கன் செடிக்கு காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங் கொடுத்துக் கொண்டுவந்து குளிசமாடி பேய் பிடித்தவர்களின் சிரசில்வைக்க பேயானது அலறி யோடிவிடும்.



## இதுவுமது.

பாதிரிச்செடிக்குக் காப்புகட்டி வடக்கேபோகிற வேரைக்கொண்டுவந்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள சகலபேய்களும் ஓடிவிடும்.

## தேவதைகள் பேதிக்கும் வித்தை.

கோழியவரைச் செடிக்குக் காப்புகட்டிப் பொங்க லிட்டுக்கொண்டுவந்து அதின்கூட முள்ளம்பன்றியின் இறகைச் சேர்த்துவைக்க அவ்விடத்திலுள்ள தேவதைகளெல்லாம் ஓடிவிடும்.

## வேறு.

கழுதை, நாய், பன்றி, குதிரை, மனிதன் இவ்வைந்து மலங்களையும் குழித்தைலமிறக்கி ஓர் புட்டியிலிட்டுப் புதைக்க அம்மனையிலுள்ள தெய்வங்களெல்லாம் விலகும்.

## வேறு.

கழுதைக்கண், கழுதைக்குளம்பு இவ்விரண்டையும் குழித்தைலமிறக்கி பேதனமந்திரத்தைச் செபித்து எந்தமனையில் புதைக்கின்ருேமோ அம்மனையெல்லாம் பாழாகும்.

## வேறு.

கழுதைச்சடை, உரிச்செதில், முச்சந்தியமண், ஆதிவார மிரவில் கழுதைபிரண்ட மண், முள்ளம்பன்றி யிறகு இவைகளை ஒன்றுசேர்த்து பேதன மந்திரத்தைச்சொல்லிப் புதைத்துவிட அவ்வீட்டிலுள்ள யாவர்களையும் பேதிக்கும்.

## வேறு.

முத்திதேரின ஆமைக்கன்கொட்டை ஒன்பதை சிலையில்வைத்து நூம் என்னும் மந்திரத்தை ஆயிரமோதிப் புதைக்க அம்மனை பாழாகும்.

## வேறு.

குடியோட்டிப்பூண்டின் கிழங்கைக் கொண்டுவந்து அதில் வேரைமாறி சிலையைச்சுற்றி அதின்மேல் சிந்தில்கொடியைச் சுற்றி பேதனமந்திரத்தைச் செபித்துப்புதைக்க சர்வமும் பேதனமாகும்.

## சீலைத்திரையும் வித்தை.

புடலம்விரையை செவ்வாய்க்கிழமைய தினம் நட்டுச் செடியானபிறகு மறு செவ்வாய்க்கிழமையதினங் கன்னிநூல் காப்புகட்டி அதற்கடுத்த செவ்வாய்க்கிழமைய தினம் பிடுங்கிவந்துக் குளிசமாடி டையத்திலடைத்துப் போட்டுக்கொண்டு நினைத்தபோது திருப்ப சீலையானது அவிழ்ந்துவிடும்.

### பிணிகள்தீரும் வித்தை.

நீர்மேல் நெருப்பு என்னும் செடிக்குக் காப்புகட்டி பொங்கல், பலி, தூபதீபங் கொடுத்துக்கொண்டு குளிசமாடிக்கட்ட சகலபிணிகளுந் தீரும்.

### இதுவுமது.

முன்போல் சாபநிவர்த்தி செய்துக்கொண்டுவந்த சித்திரமூலச் செடியின் கிழங்கைப் பாலிலிழைத்து மிதமாகச் சாப்பிட சகலபிணிகளுந் தீரும்.

### இதுவுமது.

முன்போல் கொண்டுவந்த வெள்ளைக் காக்கணஞ் செடியை நீரிலரைத்துச் சந்தனஞ்செய்து வெண்ணெயில் கலக்கிச் சாப்பிட சர்வ வாதரோகமும் காணுக்கடிகளுந் தீரும். குழந்தைகளுக்கு இதையே மிதமாகக் கொடுத்து பழகிக் கொண்டுவரும் பக்ஷத்தில் சாகுங்கால பரியந்தம் எந்த நோய்களு மணுகாது.

### இதுவுமது.

கருஞ்சூரைச் செடியைக் கொண்டுவந்து உலர்த்திச் சூரணஞ் செய்து வெண்ணெயில் குழைத்துச் சாப்பிட சகல நோய்களும் விலகும்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 11 | 2 | 7, |
| 6 | 3 | 8 | 7 |
| 10 | 5 | 8 | 1 |
| 4 | 5 | 6 | 9 |

### சக்கலாதேவி மந்திரம்.

முன்போல வெள்ளித் தகட்டில் சக்கரங்கீறி இருபத்திநாலை அதிலடைத்து 'ஓம்' என்ற பிரணவத்தைப் பூசையுடன் லட்சமுரு செபிக்க சக்கலாதேவி வசியமாகி, காம் நினைத்ததை அனுக்கிரகிப்பாள்.

### விஷங்கள்தீரும் வித்தை.

நச்சுப்புல்லைக் காப்புகட்டிக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு சர்வவிஷங்களுக்கும் பாலிலரைத்துக் கடிவாயில் பூச விஷ மிறங்கிவிடும்.

### இதுவுமது.

நீர்விஷத்தைப் பாம்புகடித்த பேர்களுக்குத் தலையிக்கிறித் தேய்க்க விஷமிறங்கும்.

### இதுவுமது.

கார்த்திகைக்கிழங்கைக் கண்ணில் கலிக்கமிட சர்வவிஷங்களும் காணுக்கடியுந் தீரும்.



### பிசாசுவிலகும் வித்தை.

மேற்படி கிழங்கைக்கொண்டுவந்து அதில் பேய் பிடித்தவர்களின்பேரை யெழுதி சிலைசுற்றி அவர்களின் தலையைச்சுற்றி பிடாரி கோயிலில்வைக்க பேயானது விலகிவிடும்.

### இதுவுமது.

மருதோன்றிச் செடிக்குக் காப்புகட்டிக்கொண்டுவந்து உலர்த்தி ஆமணக்கெண்ணெய் விட்டரைத்துப் பாண்டத்தில் போட்டு குழித்தைலமிறக்கி திலர்தமிட்டுக்கொண்டு பேய் பிடித்தவர்களின் எதிரே போக பேய்கள் அலறியோடும்.

### சர்வ தோஷங்களும் நிவர்த்தியாகும் வித்தை.

இலுப்பைவேருக்கு ஞாயிற்றுக்கிழமைய் தினம் சாப நிவர்த்தி செய்து காப்புகட்டிப் பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வடக்கே போகிற வேரைக் கொண்டுவந்து குளிசமாடி குழந்தைகளுக்கு அரையில் கட்டிவைக்க சகலதோஷங்களும் நிவர்த்தியாகும்.

### மோகினி விலகும் வித்தை.

வெள்ளடம்புச் செடிக்கு முன் செய்யவேண்டியதைச் செய்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள மோகினி, பேய், பூதமிவைகளெல்லாங் கதறியோடிவிடும்.

### இதுவுமது.

முடக்கொத்தான் செடிக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள பேய்பிசாசுகள் விலகுவதுமன்றி சர்வ வசியமுமாகும்.

### ஏவல் தீரும் வித்தை.

வட்டக் கிலுகிலுப்பைச்செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டுத் தூப தீபங்கொடுத்து இரும்பாலாகிய ஆயுதங்கள்படாது வேரைக் கொண்டுவந்து குளிசமாடிப் பூசையில்வைத்து வராகியைப் பூசித்துக் கட்டிக்கொள்ள காளி, துர்க்கை முதலிய தேவதைகள் அண்டாது பேய், பில்லி, சூன்யமுதலானதும் விலகும்.

### வசிய வித்தை.

அரசுக்குக் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரைக்கொண்டுவந்து குளிசமாடி வாலைத் தியானஞ்செய்துக் கட்டிக்கொள்ள தேகம் பெருக்கும்.

### இதுவுமது.

மேற்படி வேரைப் பஞ்சலோகக் குளிசத்திலடைத்துக் கட்டிக்கொள்ள பகையாளிகளெல்லாம் உறவாவார்கள்.

### சகலபிணிகளும் நீங்கும் வித்தை.

புங்கமரத்திற்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டு மூப்பலியுங் கொடுத்து வடக்கேபோகிற வேரை ஆயுதம் படாது கொண்டுவந்து குளிசமாடி திரிபுரை மந்திரத்தைச் செபித்துக் கட்டிக்கொள்ள சகலபிணிகளுந் தீரும்.

### பேய்கள் விலகும் வித்தை.

குறுந்தொட்டிச் செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலி கொடுத்து வேரைக்கொண்டுவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள பேய் பிசாசுகளெல்லாம் வணங்கி ஓடிவிடும்.

### தம்பன வித்தை.

கஞ்சாச்செடிக்குக் காப்புகட்டிப் பொங்கல் பலி தூபங்கொடுத்து வேரும்ஆலும் இரும்பாலாகிய ஆயுதங்கள்படாமல் கொண்டுவந்து குளிசமாடி மோகனமந்திரத்தை ஆயிரஞ்செபித்துக் கட்டிக்கொள்ள வித்து ஸ்தம்பனமாகும்.

### வேறு வெட்டுப்படா வித்தை.

நத்தைச்சூரி வேரை முன்மாதிரி காப்புகட்டிக்கொண்டு வந்து தம்பனமந்திரத்தை செபித்துக் குளிசமாடி அக்குளிசத்தை ஆடு, கோழி, பன்றி முதலிய ஜீவன்களைப்பலிகொடுக்கு மிடத்தில் புதைத்துவிட்டால் அவைகளை வெட்டுங்கருவியானது கூர்மழுங்கிவெட்டாது.

### மோகன வித்தை.

இளசாகிய பொன்னூமத்தைச் செடிக்குக் காப்புகட்டிப்பொங்கலிட்டு சாபநிவர்த்திசெய்து அவ்விலையைக்கொண்டுவந்து சிறுநீரிலரைத்து வெற்றிலையில் தடவிக்கொடுக்க ஸ்ரீ மோகனமாம்.

### இதுவுமது.

பூனைக்கொண்டுவந்து உமிழ்நீர் விட்டரைத்து அதனுடன் கஸ்தூரி, குங்குமஞ்சேர்த்துக் குழைத்துத் திலர்தமிட ஸ்திரீமோகனமாகும்.

### இதுவுமது.

கஞ்சாவிரையை ஊமத்தன் மிலைச்சார்விட்டு அரைத்து வெள்ளைத்துணியில் தடவி நிழலிலுலர்த்தி திரியாக்கி காராவின் நெய்யூற்றி விளக்கேற்றி வெட்டுப்பட்டவன் மண்டையோட்டில் புகைபிடித்து மைவாங்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு திலர்தமிடமோகனமாம்.



### இதுவுமது.

கோரைக்கிழங்கை மூலைப்பாலிலரைத்து சீலையில்தடவி நிழலிலுலர்த்தி அகலில்போட்டு காராவின் நெய்யூற்றி விளக்கேற்றி நரித்தலையோட்டில் மைபிடித்து மோகினி மந்திரத்தைச் செபித்து திலர்தமிட மோகனமாகும்.

### இதுவுமது.

மருளூமத்தன் விரையை நின்றுசிணுங்கியின் சாற்றாலரைத்துத்திரியாக்கி விளக்கில்போட்டு நல்லெண்ணெய்விட்டு விளக்கேற்றி மைவாங்கி குங்குமம், ஜவ்வாது, கோரோசனம் இவைகளைப்போட்டுக்குழைத்துத் திலர்தமிட மோகனமாம்.

### இதுவுமது.

நின்றுசிணுங்கியின் விரையை ஆலம்பால் விட்டரைத்து திரியாக்கிப் புதுவோட்டில்போட்டு காராவின் நெய்விட்டுக்கொளுத்தி நாய் மண்டையோட்டில் புகைபிடித்து மைவாங்கித்திலர்தமிட ராஜமோகனமாகும்.

### இதுவுமது.

நன்னாரி வேரைக்குளிசமாடிக்கட்டிக்கொள்ள மோகனமாகும் அதனுடன் நத்தைச்சூரிவேரையும் சேர்த்துக்குளிசமாடி பைரவ மந்திரத்தைச் செபித்துக்கட்டிக்கொள்ள வசியமும், மோகனமுமாகும்.

### இதுவுமது.

நன்னாரிவேரைக் குழித்தைலமிறக்கி அதனுடன் ஆலாத்திப்பூரத்தைச்சேர்த்துச் சீலையில் தடவிக்காயவைத்துப் புதுவோட்டிலிட்டுக் காராவின் நெய்யூற்றி விளக்கேற்றி மைபிடித்து அதில் புனுகும், சவ்வாதுஞ்சேர்த்துத் திலர்தமிட ஸ்திரீவசியமாகும்.

### இதுவுமது.

முன்சொன்னபடிசெய்து அதில் நாயுருவிக்குழித்தைலத்தை விட்டுத்திலர்தமிட புருடவசியமாகும்.

### இதுவுமது.

கிராம்பைப்பொடித்துத் திரியில்வைத்துத்திரித்து காராவின் நெய்விட்டுக் கொளுத்திக்கருக்கி, கஸ்தூரி, குங்குமம், செஞ்சந்தனம் இவைகளை வகைக்குவிராகனெடை ஒன்றாகப்போட்டு புத்துத்தேன் விட்டரைத்து அதை மறுபடியும் திரியாக்கி நல்லெண்ணெய் விட்டு விளக்கேற்றி அப்புகையைப் புதுச்சட்டியில் பிடித்துத்திலர்தமிட புருடமோகனமாகும்.

## தம்பன வித்தை.

சிறுகட்டுக்கொடி இருக்குமிடத்தைக் கோமயங்கொண்டு சுத்திசெய்து பிறகு சாபநிவர்த்திசெய்து காப்புகட்டிப் பொங்கலிட்டு பலிகொடுத்து ஐயுங்கிலியுஞ், சவ்வும், கிலியும், சவ்வும் ஐயுமென்று நூற்றெட்டுவிசை செபித்து ஆணிவேரறுமல் பிடுங்கிவந்துக் குளிசமாடிக்கட்டிக்கொள்ள தம்பனமாகும்.

### வேறு.

மேற்படி வேரை முன்மாதிரி கொண்டுவந்துவேப்பெண்ணெய் விட்டரைத்துப் பிரயோகிக்க ஜலஸ்தம்பன மாகும்.

### வேறு.

ஓர் நறுக்கில் இருபத்தியைந்து அறையைக்கீறி அதில் நமசிவய என்னு மந்திரத்தைமாறி அதில் கட்டுக்கொடியும், நத்தைச்சூரியிலையையும் வைத்துச்சுருட்டி தம்பன மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்துக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள சர்வதேவதைகளும் தம்பனமாம்.

### இதுவுமது.

பரட்டை, பால்குரண்டி இவ்விரண்டிற்கும் சாபநிவர்த்தி செய்து இரும்பினலாகிய ஆயுதங்கள் படாது வேரைக்கொண்டுவந்து குளிசமாடி தம்பனமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி கையில்கட்டிக்கொள்ள ஆயுதத் தம்பனமாகும்.

### இதுவுமது.

சத்திச்சாட்டரணைக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டி பொங்கல், பலி முதலியதுகளைச்செய்துக் கொண்டுவந்து தம்பன மந்திரத்தைச் செபித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஆயுதத் தம்பனமாகும்.

### இதுவுமது.

மேற்படி செடியை சமூலமுங்கொண்டுவந்து நிழலிலுலர்த்தி அதனுடன் கட்டுக்கொடியைச் சேர்த்துத் தூளாக்கி சமன் சர்க்கரை கலந்து வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு திரிகடிப்பிரமாணங்கொள்ள திரேகத்திலுள்ள பிணிகள்நீங்கி வஜ்ஜிரதேகமாகிவிடும்.

### இதுவுமது.

நிலப்பனங்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, தேர்நெருஞ்சிவேர் இம்மூன்றையும் சேர்த்துப்பாலில் காய்ச்சிக்குடிக்க விந்துஸ்தம்பனமாகும்.



### இதுவுமது.

பூமிச்சக்கரக் கிழங்கு, நிலப்பனங் கிழங்கு இவ்விரண்டையுமரைத்துப் பாலில் கலக்கிக்குடிக்க விந்துஸ்தம்பனமாகும்.

## உச்சாடன வித்தை.

கிலுகிலுப்பைச் செடிக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து உச்சாடன மந்திரத்தை நூத்தியெட்டோதிக்குளிசமாடிக் கட்டிக்கொண்டால் சகல பேய்களும் உச்சாடனமாகும்.

### இதுவுமது.

மேற்படி வேரில் தச்சன் உளிச்செதில், கழுதைச்சடை, காக்கைக்கூடு, சீலை, ஆபணைக்கன் கொட்டை இதுகளைச்சேர்த்து எதிரியின் வீட்டில்வைக்க எதிரி உச்சாடனமாவான்.

### இதுவுமது.

மான்செடிக்கள்ளிக்குக் காப்புகட்டி, சாபநிவர்த்தி செய்து பொங்கலிட்டுத்தூபதீபங்கொடுத்து பிடுங்கிவந்து எதிரியின் காலடிமண், முச்சந்தி கூடுமிடத்தின்மண், சுடலைச்சாம்பல் இவைகளைச் சேர்த்து எதிரியின் வீட்டிரப்பில்வைக்க உச்சாடனமாவான்.

### இதுவுமது.

கண்டங்கத்திரி செடிக்குக் காப்புகட்டி சாபநிவர்த்தி செய்து பிடுங்கிவந்து வெட்டுண்டிறந்தவன் பல்லுங்கூடச்சேர்த்து பசுந்தொழுவத்தில்வைக்க பசுக்கள் உச்சாடனமாகும்.

### இதுவுமது.

மருதோன்றிச் செடிக்கு காப்புகட்டி பொங்கல்பலி முதலானதுங்கொடுத்துப்பிடுங்கிவந்து அதை முத்துக்கொட்டையின் எண்ணெயாலரைத்துக் குழித்தைலமிறக்கி உச்சாடன மந்திரத்தை செபித்து திலர்தந்திட்ட பேய்களெல்லாம் உச்சாடனமாகும்.

### இதுவுமது.

பிரமதண்டி செடிக்குக் காப்புகட்டிப்பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரறுமல் பிடுங்கிவந்து குளிசமாடி உச்சாடன மந்திரத்தைச்சொல்லி பஞ்சலோகத்தகட்டில் உச்சாடன சக்கரத்தைக்கீறி அதில் வேரைவைத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சகல தோஷங்களும் நீங்கும்.

### இதுவுமது.

ஆலமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை ஆதிவாரத்தில் கொண்டுவந்து புதுசட்டியிலிட்டுக்கருக்கி, வேப்பெண்ணெய் விட்டரை

த்து, சீலையில் தடவித்திரியாக்கிப் புங்கன் எண்ணெயில்போட்டுக் கொளுத்தித்திலர்தமிட பேய்களெல்லாம் ஓடும்.

காகிதத்தில் பலகாரஞ்சுடும் வித்தை.

முறட்டுக்காகிதத்தை ஒன்றின்மேலொன்றாக நாலைந்துக் காகிதங்கள் ஒட்டிக் காயவைத்து அதை இரும்புக்கடாயைப்போல வளைத்துக்கொண்டு அதனடியில் பிரண்டையை அரைத்துத் தளும்பப் பூசிக் காயவைத்து வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ் சபையில் சிறுகற்களை அடுப்பாக வைத்து அதின்பேரில் முன் தயார்செய்த கடாயைவைத்து எண்ணெயூற்றி எவ்வித பலகாரமேனுஞ் செய்யலாம். பார்ப்பவர்கள் நீ அக்கினியைக் கட்டிவிட்டாயென்று சொல்வார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 100 | 107 | 2 | 7 |
| 6 | 3 | 104 | 103 |
| 106 | 101 | 8 | 1 |
| 4 | 5 | 102 | 105 |

சங்கிலிமாடன் சக்கரம்.

செம்புத் தகட்டில் பதினாறறையைக் கீறி அறைகள் தோறும் சூலம்போட்டு இருநூற்றிப் பதினாறு முறைபிசகாமல் அவ்வறைகளி லடைத்து 'ஓம் நமசிவய' என்ற பீஜாக்ஷரத்தைச் செபித்துப் பூசைபோட மாடனானவன் பிரசன்னமாகி நீ கேட்டவைகளையெல்லாந் தருவான்.

வசிய மையின் வித்தை.

சீதேவி செங்கழுநீர், அரக்காம்பல் இவை யிரண்டுக்கும் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்துக்கொண்டுவந்துக் குளிசமாடி மோகனமந்திரத்தைச் செபித்துக் கட்டிக்கொள்ள சகலவசியங்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பலிதமாகும்.

இதுவுமது.

வெள்ளெருக்கன்வேரைச் சுத்திசெய்துக் காப்புகட்டிப் பொங்கலிட்டுக்கொண்டுவந்து நிழலிலுலர்த்தித் தூளாக்கி அதனுடன் கோரோசனம், குங்குமப்பூ, கஸ்தூரி, பளிங்கு சாம்பிராணி இவைகளை வகையொன்றுக்கு கால்விராகனெடையாகச் சேர்த்துக் காராவின் நெய்விட்டு அரைத்துத் திலர்தமிட சகல வசியங்களுமாகும்.

இதுவுமது.

வெள்ளைக் காக்கணஞ்செடிக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டுத் தூபதீபங் கொடுத்துக்கொண்டுவந்துக் குளிசமாடி கட்டிக்கொள்ள வசியமாம்.



கயற்றின்மேல் நடக்கும் வித்தை.

நன்றாய் முறுக்கேற்றின வரிக்கயற்றை தயார்செய்துக்கொண்டு இரண்டிரண்டு மூங்கில்களை ஒன்றாய் சேர்த்துக்கட்டி இரண்டு தயார்செய்துக்கொண்டு அதை சுமார் இருபதடி தூரத்திற்கொன்றாக நிறுத்தி முன் தயாரித்த வரிக்கயற்றை அதின்பேரில் போட்டு பூமியில் இரண்டு கெட்டிப்பாரைகளை அடித்து அதில் அக்கயற்றைப் பிருவாகக் கட்டிவிட்டு முன்நட்ட மூங்கில் வாரைகளின் மத்தியில் அக்கயற்றைவிட்டு பிருவுபடுத்தி அதின்பிறகு ஓர் மூங்கில்கோலையேனும் அல்லது குடையையேனும் கையில் பிடித்துக்கொண்டு கயிற்றின்பேரில் ஏறிநடக்கவும். ஊஞ்சலைப்போலவும் ஆடலாம். ஆனால் அனுபோகமும் தைரியமும் வேண்டும்.

ஈயத்தை உருக்கி கையிலெடுக்கும் வித்தை.

ஜாலமாடுஞ் சபையில் அடுப்பைவைத்து அதின்பேரில் ஓர் சட்டியைவைத்து அச்சட்டியில் காரீயக்கட்டிகளைப் போடுவதுபோல் பாவனைசெய்து மேல்மூடும் சட்டியில் ஈயக்கட்டி அளவிற்குப் பாதரசத்தைத் தயார் செய்துவைத்திருந்து அதை அடுப்பின்பேரிலிருக்கும் சட்டியின்மேல்மூடி ரசத்தை அடிச்சட்டியில்கொட்டி சூக்ஷமாகத் தீயெரித்துச் சற்றுநேரமானதும் சபையிலுள்ளவர்களை அழைத்து ஈயம் உருகிவிட்டது நான் இதைக் கையிலெடுக்கிறேன் பாருங்களென்று சொல்லி மூடியைத்திறந்து அடிச்சட்டியிலுள்ள ஈயத்தைக் கையிலெடுத்துக் காண்பிக்கச் சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

வீட்டைவிட்டு வெளிவரும் வித்தை.

கால் பெருவிரல்களையும் கை பெருவிரல்களையும் கட்டி மல்லாந்துபடுத்துக்கொண்டு தன்மனதைப் பூரணத்தில் நிறுத்தி ஒரே நாட்டமாயிருக்க மனஞ்சொக்கி மவுனத்திலூன்றிச் சுழுத்தியி லடங்கிவிடும். பின்பு தெளிந்தவுடன் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு போய்விடலாம். இப்படி பன்னிரண்டுவருடகாலஞ் செய்துவந்தால் சித்தியாகும். அதன்பிறகு அவர்களை எவ்விடத்தில்போட்டு அடைத்துவைத்தாலும் வெளியேவர சுவரானது இடங்கொடுக்கும். இவ்வேலைகளை யோகிகள், சித்தர்கள் முதலியவர்கள் செய்யும் பரகாயப் பிரவேசமென்று தெரிந்தவர்கள் சொல்வார்கள்.

வயிற்றில் கத்தி குத்தும் வித்தை.

ஒரு பெரிய பட்டாக்கத்தியை நடுப்பாகத்தில் துண்டுசெய்து ஸ்பிரிங் தகட்டை மூன்றாம்பிறைபோல் வளைத்து ஒருபக்கம் அடிமுனையையும், மற்றொரு பக்கம் முனைக்கத்தியையும் வைத்து பந்தவைத்து வைத்திருந்து ஜாலமாடும் சபையில் வேறொரு பட்டாவைக் கையிலெடுத்துவந்து உனக்குள்ள கையாளின் வயற்றில் கத்தியைக் குத்துவதாகச்சொல்லி திரையிட்டு, அப்பட்டாவை மறைத்து

விட்டு ஸ்பிரிங் பட்டாவை அவன் வலதுபாகத்தில் முதுகிலிருந்து வயற்றுவரையி லிழுத்துவிட்டு கத்திமுனையில் ஒரு எலுமிச்சம்பழத்தைச் சொருகி, சிகப்புசாயத்தை ஓர்வஸ்திரத்தில் நனைத்து அக்கத்தியில் பூசி, ஆளை பூமியில் படுக்கவைத்து அனைவர்களுக்குங் காட்டவும். காட்டும்போது படுத்திருக்குமாள் நாக்கை வெளியில் நீட்டிக் கண்களைமூடி அசையாமலிருக்கத் திட்டஞ்செய்துவிட்டு திரையைத்தூக்கிக்காண்பித்துவிட்டு மறுபடியுந்திரையை விட்டுவிடவும்.

### வசியம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ய | ந | ம | சி | வ |
| வ | ய | ந | ம | சி |
| சி | வ | ய | ந | ம |
| ம | சி | வ | ய | ந |
| ந | ம | சி | வ | ய |

இந்தச்சக்கரத்தைக் காரீயத்தகட்டிலெழுதி வசிய வேலைகளுக்குப் பிரயோகிக்க சீக்கிரம் சித்தியாகும்.

### மோகனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம | சி | வ | ய | ந |
| ந | ம | சி | வ | ய |
| ய | ந | ம | சி | வ |
| வ | ய | ந | ம | சி |
| சி | வ | ய | ந | ம |

இந்தச் சக்கரத்தை தங்கத் தகட்டிலெழுதி மோகன வேலைகளுக்குப் பிரயோகிக்கச் சித்தியாகும்.

### தம்பனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந | ம | சி | வ | ய |
| ய | ந | ம | சி | வ |
| வ | ய | ந | ம | சி |
| சி | வ | ய | ந | ம |
| ம | சி | வ | ய | ந |

இந்தச் சக்கரத்தைச்செம்புத் தகட்டிலெழுதிப் பிரயோகிக்க தம்பன வேலைகளெல்லாங் கைகூடும்.

### பேதனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ய | வ | சி | ந | ம |
| ம | ய | வ | சி | ந |
| ந | ம | ய | வ | சி |
| சி | ந | ம | ய | வ |
| வ | சி | ந | ம | ய |

இந்தச் சக்கரத்தை இரும்புத் தகட்டிலெழுதிப் பிரயோகிக்க பேதன வேலைகளெல்லாங் கைகூடும்.



### ஆக்ருஷ்ணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வ | சி | ம | ய | ந |
| ந | வ | சி | ம | ய |
| ய | ந | வ | சி | ம |
| ம | ய | ந | வ | சி |
| சி | ம | ய | ந | வ |

இதைப் பொன் தகட்டிலெழுதிப் பிரயோகிக்க ஆக்ருஷ்ண வேலைகளெல்லாம் சீக்கிரமாகக் கைகூடும்.

### வித்வேஷணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந | ய | வ | சி | ம |
| ம | ந | ய | வ | சி |
| சி | ம | ந | ய | வ |
| வ | சி | ம | ந | ய |
| ய | வ | சி | ம | ந |

இதைக் குறுத்தோலையில் எழுதிப் பிரயோகிக்க வித்வேஷண வேலைகளெல்லாங் கைகூடும்.

### மாரணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம |
| ம | சி | வ | ய | ந |
| ந | ம | சி | வ | ய |
| ய | ந | ம | சி | வ |
| வ | ய | ந | ம | சி |

இந்தச்சக்கரத்தை வெள்ளித் தகட்டிலெழுதிப் பிரயோகிக்க மாரண வேலைகளெல்லாங் கைகூடும்.

### உச்சாடனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வ | ய | ந | ம | சி |
| சி | வ | ய | ந | ம |
| ம | சி | வ | ய | ந |
| ந | ம | சி | வ | ய |
| ய | ந | ம | சி | வ |

இந்தச்சக்கரத்தைவெள்ளீயத் தகட்டிலெழுதிப் பிரயோகிக்க உச்சாடன வேலைகளெல்லாம் எளிதில்கைகூடும்.

## முட்டை கூத்தாடும் வித்தை.

முட்டையிலுள்ள அம்புலியை யெல்லாம் சுத்தமாகப் போக்கிவிட்டு அதின்நிறைய கெந்தகத் திராவகத்தை யூற்றி சமமாகிய விடத்தில்வைக்க அம்முட்டையானது எழும்பிஎழும்பி குதித்துக் கொண்டேயிருக்கும்.

## விஷமேருத வித்தை.

வீழிவேரைக் காப்புகட்டி தம்பனமந்திரத்தைப் பிரயோகித்து பொங்கலிட்டு பலிகொடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள எவ்வித விஷங்களுமேறாது.

## வித்வேஷண வித்தை.

கருங்காக்கட்டான் செடிக்கு காப்புகட்டி வடக்கே போகிற வேரைக்கொண்டுவந்து அதின்கூட ஓர் நறுக்கில் பேரைமாறிவைத்து வித்வேஷண மந்திரத்தைச் செபித்துக் காளிகோயிலின் முன் புதைத்துவைக்க இராஜ வித்வேஷணை மாகும்.

## இதுவுமது.

முன்மாதிரி வெள்ளைக் காக்கட்டான் செடியின் வேருக்குச் செய்துவைக்க தேவ வித்வேஷணமாகும்.

## இதுவுமது.

திருகுகள்ளிச் செடிக்குக் காப்புகட்டிப் பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வடக்குவேரைக்கொண்டுவந்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள பூதவித்வேஷணமாகும்.

## பூத அஞ்சனம்.

ஆடுதீண்டாப்பாளைக்குக் காப்புகட்டி சமூலமும் பிடுங்கிவந்து நிழலிலுலர்த்திச்சட்டியிலிட்டுக் கருக்கிக்கொண்டு அதனுடன் மண்டையோட்டைப் பொடித்துத்தூளாக்கி, அதையுங்கருக்கிக்கொண்டு புத்துத்தேன்விட்டரைத்து வைத்துக்கொண்டு வெற்றிலையில் தடவிப்பார்க்க சர்வபூதப்பிசாசுகளுடன் ஏவல், பில்லி முதலியதுந்தெரியும்.

## பிசாசுகள் நீங்கும் வித்தை.

வடக்கேபோகிற ஆமணக்கன் வேருக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து சாபநிவர்த்திசெய்து கொண்டுவந்துக் குளிசமாடி வித்வேஷண மந்திரத்தைச்செபித்து கட்டிக்கொள்ள பிரமராக்ஷஸமுனியா யிருந்தாலும் விலகிவிடும்.

## ஆக்ருஷ்ண வித்தை.

வேளைச்செடிக்குக் காப்புகட்டி பொங்கல், பலி முதலியதுகளுடன் கொண்டுவந்துக் குளிசமாடிக்கட்டிக்கொண்டு மிருகங்களையழைக்க அவைகள் ஆக்ருஷ்ணமாகும்.

## இதுவுமது.

உள்ளொட்டிச்செடிக்குக் காப்புகட்டி பலிகொடுத்துக் கொ



ண்டுவந்து தூளாக்கித்துணியில் வைத்துத்திரித்து அகலில்போட்டு வேப்பெண்ணெய்விட்டு விளக்கேற்றி பேரைமாற்றி ஆக்ருஷ்ண மந்திரத்தைச்செபிக்க நினைத்தவள் ஆக்ருஷ்ணமாவாள்.

## தேவதா வசியம்.

எதாகினும் ஓர் தேவதையைச் சீக்கிரமாக வசியஞ்செய்ய வேண்டில் பிரவொட்டிச் செடிக்குக் காப்புகட்டி வேரைப்பிடுங்கிவந்து நிழலில் உலர்த்தி தூளாக்கித் துணியில் வைத்துத்திரித்து அகலில் காராவின் நெய்யூற்றி திரியைப்போட்டுக் கொளுத்திச்செபிக்க எத்தேவதையானாலும் சித்தியாகும்.

## ஆக்ருஷ்ணம்.

சிறுமுன்னைச் செடியைச் சாபநிவர்த்திசெய்து பிடுங்கிவந்து வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள ராஜ ஆக்ருஷ்ணமாகும்.

## தேங்காய்மீது ஆள்சுழலும் வித்தை.

ஓர் உரித்த தேங்காயைக் கொண்டுவந்து மஞ்சள் குங்குமமிட்டு தூபதீபங்கொடுத்து சமமாகயிருக்கும் பாறையின்மீது அத்தேங்காயைவைத்து அதின்பேரில் ஆளைக் குந்தவைத்துக் கைகளை நிலத்தில் ஊன்றுமலிருக்கச்செய்ய ஆள் கிறு கிறுவென்று சுழலுவான். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

## நூலை தம்படியில் கட்டிக்கொளுத்தும் வித்தை.

ஒருமுழம் பால்திரட்டு நூலையெடுத்து, சாதம்வடித்தகஞ்சியில் உப்பிட்டுக்கரைத்து அதில் ஊறவைத்து உலர்த்தி அதன்முனையில் தம்படியைக்கட்டி காற்றில்லாவிடத்தில் வைத்துக்கொளுத்த எரியும். தம்படி கீழ்விழாது.

## கெண்டபேரண்ட மந்திர வித்தை.

ஓம், இரீம், கிலியும், ஐயும் சுவாஹாவென்று பதினாயிரம் உரு செபித்து ஓம் என்ற தனிமந்திரத்தை ஆயிரம் உருகொடுத்து நூறு பிராமணர்களுக்கு பஞ்சகச்சாயத்துடன் அன்னமளித்துப் பத்து தினம் வரைக்கும் பூசித்தால் மந்திரஞ்சித்தியாகி நினைத்தகாரியங்களெல்லாங் கைகூடும்.

## சர்பக் குழையின் வித்தை.

ஒருபக்கம் கணுவுள்ளதும், நான்கு அல்லது ஐந்தங்குல நீளமுள்ளதுமான ஓர் மூங்கில் குழலையெடுத்து அதன் நடுவில் ஓர் துளைசெய்து அத்துளையில் நன்றாக முறுக்கேற்றிய நூலை மேல்வழியாகக்கோர்த்து வாங்கி, அந்நூலில் ஓர் சடையை முடிந்து உள்ளுக்கிழுத்து அதை அடியிற் படும்படிச்செய்து, அவ்வளவில் ஓர் தடைக்கட்டி வைத்துக்கொண்டு, நாலரை அடி நீளத்தில் ஓர் நாகத்

தைப்போல உருவஞ்செய்துஅதனுள்போட்டு தயாரித்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபைக்கு வந்து மேற்படி குழலையைக் கையில் பிடித்துக்கொண்டு சபையிலுள்ளவர்களில் ஒருவரை அழைத்துக் குழலை யை ஊதும்படிச்செய்தால் அவர்கள் ஊதுகிறதற்காக வருவார்கள். அச்சமயம் நீ ஜாக்கிரதையாக நடுத்துவாரத்தின் தடையை விரலிடுக்கில் பிடித்துக்கொண்டு மெதுவாகப் பின்தலையானது வெளிப்புரம் வரும்படி சுயற்றை அசைத்தால் பாம்பின்தலை வெளிப்படும். ஊத வந்தவன் அலறி ஓடுவான்.

## நீரின்மேல் மிதக்கும் வித்தை.

குளம், குட்டை அல்லது ஜலமுள்ள எவ்விடத்திலாகிலும் நீரில் இறங்கி மல்லாந்து வானத்தைப்பார்த்துக்கொண்டு இருகைகளையும் பின்புரமாகக்கட்டி திரேகத்தைச் சுவாச பந்தனப்படுத்திக் கண்களை மூடிக்கொண்டு, மனதை மோனத்தில் நிறுத்தி ஒருமண்டலம் வரைக்கும் தினைவனோடு பழகிவர தீரேகம் மிதக்கும். இதற்கு அனுபோகமும், பெரியோர்களின் ஆசீர்வாதமும், பிராணாயாமமும் வேண்டும்.

## அஞ்சன முறைகள்.

ஊமத்தன் விரையைக் குழித்தைலம்வாங்கி, கொம்மட்டியின் வடக்கேபோகும் வேரைக்கருக்கி அதில்போட்டு ஏரண்டத்தைலம் விட்டுக்குழைத்து மையாக்கி அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயரையும் பூசித்துப்பார்க்க மை நன்றாக ஓடும்.

### வேறு.

நீர்மேல் நெருப்பைக்கருக்கி ஏரண்டத்தெண்ணெயில் குழைத்து மைவாங்கி மேற்படி பூசையைச்செய்துப்பார்க்க மை நன்றாக ஓடும்.

### வேறு.

சாரணைவேர், வெள்ளெருக்கன்வேர், கௌதும்பைவேர் இம்மூன்றையுஞ் சாபநிவர்த்திசெய்துக் கொண்டுவந்து புதுச்சட்டியிலிட்டுக்கரியாக்கி காரெள்ளுத் தைலத்தாலரைத்து அஞ்சனாதேவியைப் போற்றிப்பார்க்க மை நன்றாகவோடும்.

### வேறு.

நரிமிரட்டிச்செடிக்கு சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பலி கொடுத்துக்கொண்டுவந்து புதுபாண்டத்திலிட்டுக்கருக்கி ஆமணக்கெண்ணெயில் குழைத்து அஞ்சனாதேவியைப்போற்றிப் பார்க்க மையானது நன்றாக ஓடும்.

### வேறு.

அமுக்கனாங்கிழங்குச் செடிக்குக் காப்புகட்டி முப்பலியுங்கொ



டுத்து வேரையெடுத்துவந்து புதப்பாண்டத்திலிட்டுக்கருக்கி ஏரண்டத்தெண்ணெய்விட்டுக் குழைத்துச்சிமிளில் வைத்துக்கொண்டு அனுமாரையும், அஞ்சனாதேவியையும் பூசித்துப்பார்க்க மையானது நன்றாக ஓடும்.

### வேறு.

ஓர் புதுச்சட்டியில் தட்டைப்புங்கன் பாலைத்தடவிக் காய்ந்த பிறகு அதன்மேல் கன்னிக்கோழி முட்டைக்கருவைத்தடவிக் காயவைத்து; கற்பூரப்புகைபிடித்து வழித்துச்சிமிளில்வைத்துக்கொண்டு ஆஞ்சநேயரையும், அஞ்சனாதேவியையும் பூசித்துப்பார்க்க மை நன்றாக ஓடும்.

### வேறு.

அஞ்சனக்கல்லை தட்டைப்புங்கன் சார்விட்டு மைபோலரைத்துச்சட்டியிற் றடவிக்காயவைத்து அதின்பேரில் கோழிமுட்டைக் கருவைத்தடவி, காராவின்நெய்யில் தாமரைநூல் திரியைப்போட்டு விளக்கேற்றி மைபிடித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு அஞ்சனாதேவியைத் துதித்துப்பார்க்க மை நன்றாக ஓடும்.

### வேறு.

ஆலாக்குருவியின் முட்டையைப் புதுசட்டிக்குத் தளும்பப் பூசிக் கற்பூரப்புகைபிடித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு ஆஞ்சநேயரைத் துதித்துப்பார்க்க மை நன்றாக ஓடும்.

### வேறு.

ஆடுதீண்டாப் பாளையின் வேருக்குச் சாபநிவர்த்தி செய்துக் கொண்டுவந்து தூளாக்கி அத்துடன் சுழல்வண்டு, யாளிக்கண், ஆனைக்கண், நிலம்புரண்டி இதுகளைச்சேர்த்துக் கருக்கி ஏரண்டத் தைலம்விட்டரைத்து மைவாங்கி சிமிளில் வைத்துக்கொண்டு அஞ்சனாதேவியைப் போற்றிப்பார்க்க மை நன்றாக ஓடும்.

### வேறு.

வெள்ளெருக்கன் செடிக்குக்காப்புகட்டிப் பொங்கலிட்டு பலி கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து உலர்த்தி அதனுடன் வெள்ளெலியின் கருவைச்சேர்த்து, வௌவாலின் நெய்யாலரைத்து மைவாங்கி ஆஞ்சநேயரையும், அஞ்சனாதேவியையும் பூசித்துப்பார்க்க மை நன்றாக ஓடும்.

### வேறு.

தாமரை, நரிமிரட்டி இவைகளின் வித்தைச் சரியெடையாக எடுத்துக்கொண்டு ஓர் கலசத்திலிட்டு குழித்தைலம்வாங்கி அதை ஓர் புதிய சட்டிக்குத்தடவி, கற்பூரத்தைக்கொளுத்தி மைபிடித்து அம்மையை ஏரண்டத்தைலம் விட்டுக்குழைத்துப்பார்க்க அஞ்ச

ணம் ஓடும். இதற்கும் அஞ்சனுதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு கொடுக்கவும்.

### வேறு.

வேங்கைவிரை, அழிஞ்சில்விரை, நீர்முள்ளிவிரை இவைகள் வகை ஒன்றுக்குப் பலம் ஒன்று எடுத்துக் குழித்தைலம் வாங்கி அதில் காராட்டுக்கண், காடைக்கண், கருநாயின்கண் இவைகள் மூன்றையும் வெய்யலில் உலர்த்திக்கல்வத்தில்போட்டு, முன்னிரக்கின தைலம் விட்டரைத்துச் சட்டிக்குத்தடவி, ஆலாத்திக்கற்பூரத்தைக்கொளுத்தி மைபிடித்து வழித்துவைத்துக்கொண்டு அஞ்சனுதேவி மந்திரத்தைச்செபித்துப்பார்க்க சகலமும் நன்றுகத்தெரியும்.

### வேறு.

முடக்கொத்தான், கீழாநெல்லி இவைகள் இரண்டிற்கும் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டிப்பொங்கலிட்டு வேரறுமல் கொண்டுவந்து கறுக்கி, ஏரண்டத்தைலம்விட்டு மையாக்கி ஆஞ்சநேயரையும், அஞ்சனுதேவியையும் பூசித்து மையைத்தடவிப்பார்க்க மை நன்றுக ஓடும்.

### வேறு.

கொடிவேலி, குப்பைமேனி, சாரணை இம்மூன்று செடிகளுக்கும் சாபநிவர்த்திசெய்துப் பொங்கலிட்டுக் காப்புகட்டி தூபதீபங்கொடுத்துப் பிடுங்கிவந்து, உலர்த்திப்பொடித்துக்கருக்கிப் பச்சைக்கற்பூரஞ்சேர்த்து ஏரண்டத்தெண்ணெயில் மையாக்கி அஞ்சனுதேவியையும், ஆஞ்சநேயரையும் பூசித்துப்பார்க்க மையானது நன்றுக ஓடும்.

### அம்மி யெழும்பும் வித்தை.

சிறுபுள்ளடி, வெள்ளைச்சார்வேளை இதுகள் இரண்டையும் சமயெடையாக யெடுத்து அரைத்து அம்மிமேல் அப்பி அதின்பேரில் ஒருசெம்பை அரக்கிவைத்து சிலநேரம் பொருத்துச் செம்பின் உதட்டைப்பிடித்து தூக்க செம்புடன் அம்மியும் எழும்புவது ஆச்சரியமாயிருக்கும்.

### தம்பன வித்தை.

கல்லுருவிச்சமூலம், மயிர், கழுதைமயிர் இம்மூன்றையுஞ் சயற்றுல்கட்டி தெருவாசற்படியின்பேரில் கட்டிவைக்க அவ்வீட்டிலுள்ளபேய், பிசாசு, தெய்வமுதலியதுகளெல்லாம் விலகி ஓடிப்போய்விடும்.

### தேவதம்பன வித்தை.

பன்றி இறைச்சியை சுட்டுக் கரியாக்கி அதை அதன் மூத்திரத்திலேயே அரைத்து உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்



கொண்டு தேவையானபோது கொஞ்சம் ஜலத்தி லிழைத்து தெளித்துவிட எப்பேர்ப்பட்ட தேவதைகளாயிருந்தாலும் விலகிவிடும்.

### குறித்தம்பன வித்தை.

குறிசொல்லும் மேடைகளிலாகிலும், விளக்குவைத்துக் கேட்கும் குறியிடத்திலாகிலும் முன்தயாரித்த மாத்திரையைச் சிறிது இழைத்து தெளிக்க அவ்விடத்தில் ஒருகுறிகளும் நடவாது. இதை தெய்வமாடுபவர்கள் பேரில் தெளித்தாலும் தெய்வமானது அவர்களை விட்டு விலகிவிடும்.

### இதுவுமது.

சுடுகாட்டில் பிணத்தைச் சுற்றிவந்துடைக்கும் பானையோட்டை ஓர்கால்ரூபா அகலம் நறுக்கி அதைப் பதிசிங்காரிக்கும் பீடத்தின்கீழ் வைத்துவிட எவ்வித குறிகளும் நடவாது.

### ரோஜாப்பூ மஞ்சளாகும் வித்தை.

சிவந்த ரோஜாபுஷ்பத்திற்கு கெந்தகக்குச்சியைக் கொளுத்திப் புகையைக்காட்ட அப்புஷ்பம் மஞ்சள்நிறமாக மாறிவிடும்.

### சர்ப்பம் ஓடாத வித்தை.

நல்லபாம்பி னெதிரில் கொஞ்சம் வெள்ளுள்ளியை நசுக்கிப் போட அது அப்புறமும் இப்புறமும் அசையாது தடை கட்டினதைப்போல் நின்றுவிடும் அப்போது சுலபமாக பிடித்துக்கொள்ளலாம்.

### பாம்பு கடிக்காத வித்தை.

ஓர்குடத்தில் ஒரு நல்லசர்ப்பத்தை விட்டுவிட்டு, பெருங்காயம், வசம்பு, பூண்டு இம்மூன்றையும் கள்ளிப்பால் விட்டரைத்து கைகளில் பூசிக் காய்ந்தபிறகு பாம்பிருக்கும் குடத்திற்குள் கையைவிட்டுத் துழாவ அப்பாம்பானது கடிக்காமல் சும்மாயிருக்கும். பார்ப்பவர்கள் நீ பாம்பை கட்டிவிட்டாயென்று சொல்வார்கள்.

### சாப்பிடாமலிருக்கும் வித்தை.

பசும்பாலில் நீர்முள்ளிவிரையை அரைத்துக் குடித்துவிட்டால் ஒருவாரம் வரையில் பசியில்லாம லிருக்கலாம்.

### பேய் பிசாசுகள் விலகும் வித்தை.

பேய், பிசாசு முதலியவைகளால் அவஸ்தைப் படுபவர்கள் கொம்புக்கள்ளியின்மேலிருக்கும் ஒணானை இரண்டுதுண்டாக வெட்டி அவைகளைத் தனித்தனியே அடையாளமாகச் சாணியில் பொதிந்து காயவைத்து புடம்போட்டெடுத்து வைத்துக்கொண்டு தலையைக் கொளுத்திய சாம்பலையெடுத்து பேய் பிடித்தவர்களின் தலைமேற்

போட அவர்கள் தலைசுற்றி ஆடி வாய்மொழி சொல்வார்கள். அப்போது முடியறுத்து வால்புறச் சாம்பலைப் போட அதுகள் விலகிவிடும்.

### பஞ்சவர்ணந் தோன்றும் வித்தை.

சூரியனுக்கு நேராக நின்றுக்கொண்டு வாயில் ஜலத்தையூற்றி பரவலாகத்துப்ப பஞ்சவர்ணங்கள் தோன்றுவது ஆச்சரியமாயிருக்கும்.

### தீயணையும் வித்தை.

நவாச்சாரத்தையேனும், வெங்காரத்தையேனும் ஜலத்தில் கலக்கிக்கொண்டு எரிகின்ற தீயின்பேரில் தெளிக்க அதுகள் தணிந்துவிடும்.

| | | | |
|---|---|---|---|
| 142 | 149 | 2 | 7 |
| 6 | 3 | 146 | 145 |
| 148 | 143 | 8 | 1 |
| 4 | 5 | 144 | 147 |

### திருமாளியம்மன் வசியம்.

முன்போல சக்கரங்கீறி முன்னூரை அதிலடைத்து 'நமசிவய' என்று ஆயிரமுரு கொடுத்துப் பூசிக்கத் திருமாளியம்மன் வசியமாகி நாம் கேட்டதைத் தடையின்றி கொடுப்பாள்.

### பால் சர்க்கரையாகும் வித்தை.

துத்திவேரைக் கத்தையாகக் கட்டிக்கொண்டு ஓர்பாண்டத்தில் பாலையூற்றிக் கொதிக்கவைத்து இக்கத்தையினால் துழாவ அது சர்க்கரையைப்போல் கட்டிவிடும்.

### பகைவர் வசியமாகும் வித்தை.

வெள்ளைச்சார்வேளை வேரை அவுரிச்சாற்றி லரைத்து புருவத்தின்மத்தியில் திலர்தமிட்டுக்கொண்டு செல்ல பகைவர்களெல்லாம் வணங்கி சமாதானமாக வார்த்தையாடுவார்கள்.

### அணைந்த விளக்கு எரியும் வித்தை.

அந்தரத்தாமரையை உலர்த்திப் பொடிசெய்து வைத்துக்கொண்டு விளக்கணைந்தவுடன் அதின்மேல் மேற்படி தூளில் கொஞ்சந்தூவ அது குபீரென்று பற்றியெரியும்.

### வெள்ளைநிற புஷ்பம் பொன்னிற மாகும் வித்தை.

வெள்ளைநிறமுள்ள புஷ்பத்தின்மேல் குங்குமப்பூவை ஜலத்திலிழைத்துப் பூசினால் அது பொன்னிறமாகிவிடும்.



### உடம்பெரியும் வித்தை.

நண்டுக்குழி மண், காலடி மண், சுடலை மண், பெருங்காயம், மிளகு 21 இதுகளையெல்லாம் ஒன்றாய் சேர்த்து ஓர் பானையோட்டில் போட்டு அடுப்பின்பேரில் வைத்து தீமூட்டி எரிக்க பகைவரின் உடம்பெல்லாம் எரியும். அதுதீர வேண்டில் புளியம்பட்டையைக் கியாழம்வைத்துக்குடிக்கத் தீர்ந்துவிடும்.

### சூது வெல்லும் வித்தை.

சுடலையிலிருக்கும் கையாந்தகரைச் சமூலத்தைக் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி எருக்கம்பால் விட்டரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது முலைப்பாலில் இழைத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு சூதுவிளையாட கெலிப்பு நம்மதாகவேயிருக்கும்.

### நித்திரையில்லாதிருக்கும் வித்தை.

நித்திரையின் தொந்தரவு இல்லாமலிருக்க வேண்டுமானால் கொஞ்சம் புதிய தேனைக்குடிக்க நித்திரை வரமாட்டாது.

### செல்லுகள் நாசமாகும் வித்தை.

செல்லுகள் உள்ள வளைகளில் நவாச்சாரங்களைப் பொடித்துப் போட்டுவைக்க செல்லுகளெல்லாம் நாசமாகிவிடும்.

### எறும்புகள் நசியும் வித்தை.

எறும்புகள் மிகுதியாகவுள்ள விடங்களில் வீட்டில் வைக்கும் இரசத் திப்பிகளைப் போட்டுவைக்க அவ்வெறும்புக ளெல்லாம் நசிந்துவிடும். பிறகு அத்தொந்தரை யிருக்காது.

### மரங்கள் உலர்ந்துபோகும் வித்தை.

எவ்வித மரங்களாயிருந்தாலுஞ்சரி அதின் ஆணிவேரைத்துளைத்து அதில் கொஞ்சம் பாதரசத்தை விட்டுவைக்க அம்மரங்கள் சீக்கிரம் உலர்ந்துபோகும்.

### அம்மை வார்க்கா வித்தை.

குழந்தைகளுக்கு தாழைவிருதைக் கியாழம்வைத்துக் கொடுத்துவிட்டால் அக்குழந்தைகளுக்கு எப்போதும் அம்மை வார்க்கமாட்டாது.

### பாம்பு சாகும் வித்தை.

பாம்பை எவ்விதமாகக் கொன்றுபோட்டாலும் அது சாகாது. அதன் படத்திலிருக்கும் சூலத்தின் நடுவில் ஓர் கப்பலைக்கொண்டு குத்த அது உடனே உயிர் விட்டுவிடும்.

சர்வ வசிய வித்தை.

கொண்டலாத்திக் குருவியின் கூண்டிலுள்ள சஞ்சீவியையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள எறும்புமுதல் எண்பத்துநான்கு லட்சஞ் சீவராசிகளும் வசியமாகும்.

இதுவுமது.

பதர்கு பசுங்கோமயத்தைப் பாண்டத்திலிட்டு வாயைமூடி அடுப்பிலேற்றி ஓர்விரகால் யெரிக்க அக்கோமயமெல்லாஞ் சுண்டி உப்பாகத்தேறும் அதையெடுத்து வைத்துக்கொண்டு தேவையானபோது நாதத்திலிழைத்துக்கொடுக்க வசியமாம்.

இதுவுமது.

முன்னெடுத்த உப்பில் நாதத்தைச் சேர்த்துக்குழைத்து அதில் களிப்பாக்கை ஊறவைத்துக் கொடுக்க வசியமாம்.

இதுவுமது.

கள்ளிக்கட்டையைத் துணித்து அதில் களிப்பாக்கை மூன்று நாளூரவைத்து எடுத்து மறுபடியும் அதை நாதத்தில் ஊறவைத்துப் பாக்குடன் கலந்துகொடுக்க வசியமாம்.

இதுவுமது.

கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், புனுகு, தேன் இவைகள் யாவையும் சமயெடையாக யெடுத்து நெய்யில் குழைத்து திலர்தமிட்டுச் செல்ல இராஜவசியமாகும்.

பேய் பிசாசகலும் வித்தை.

பேய்மிரட்டி, கிலுகிலுப்பை, யானை, ஒட்டை, குதிரை, நாய், மனிதன், பன்றி, பூனை இதுகளின் மலமும், மிளகா இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து நெருப்பிலிட்டுப் புகைக்க எப்பேர்ப்பட்ட பிசாசுகளாயிருந்தாலும் விலகிவிடும்.

வசிய முறிவு வித்தை.

சிறுசெருப்படை, நாவல், சீந்தில் இம்மூன்றுவேர்களையும் கழுதைமூத்திரத்திலரைத்து குளிகைசெய்து பல பதார்த்தங்களில் கொடுக்க எப்பேர்ப்பட்ட மருந்தாயிருக்கினும் முறியும்.

வேறு.

செத்த ஆட்டின் உளியும், விடத்தேர்ப் பட்டையும் அரைத்துக் குளிகைசெய்து நிழலி லுலர்த்திவைத்துக்கொண்டு தேவையானபோது பல பதார்த்தங்களில் கொடுக்க மருந்து முறியும்.



அஞ்சன வித்தை.

கொன்றைப் பிசின், ஒதியம் பிசின் இவை யிரண்டையும் காராவின் நெய்யில் குழைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது கண்ணாடியில் தடவிப்பார்க்க பாதாளத்தி லுள்ளவைகளெல்லாந் தெரியும்.

தேள் விஷமேறும் வித்தை.

வெள்ளெருக்கன், துளசி இவ்விரண்டையும் சமயெடையாயெடுத்துக்கொண்டு அரிதாரஞ் சேர்த்தரைத்து அலறிக் கொம்பிற்குத் தடவி நிழலி லுலர்த்திவைத்துக்கொண்டு தேள்கொட்டி வந்தவர்களுக்கு மந்தரித்து அக்கொம்பை இன்னொருவர் பேரில் தடவ விஷமானது இவர்களைவிட்டு அவர்களுக்கேறும்.

தாம்பூல வித்தை.

குறுவரகைப் பச்சையாக வாயில்போட்டு மெல்ல அது வெற்றிலைப்பாக்கு போட்டதைப்போல சிவக்கும்.

வேறு.

கருவேலங்கொழுந்தை வாயில்போட்டு மென்று துப்பிவிட்டு சாதாவெற்றிலையில் சுண்ணாம்பைத்தடவி மெல்ல வெற்றிலைப்பாக்கு போட்டதைப்போல சிவப்பேறும்.

புதினா உண்டாகும் வித்தை.

வைக்கோலின் கூளத்தைப் பனைவெல்லத்தண்ணீரில் ஊறவைத்து பின்பு மண்ணைப்பரித்து பாத்திகட்டி அதில் மேற்படி வைக்கோலைப் பரப்பி மேற்படி வெல்லத்தண்ணியையே தெளித்துவர சிலநாளில் புதினா செடிகள் உற்பத்தியாகும்.

| | | | |
|---|---|---|---|
| 242 | 249 | 2 | 7 |
| 6 | 3 | 246 | 245 |
| 248 | 243 | 8 | 1 |
| 4 | 5 | 244 | 247 |

பிடாரி மந்திரம்.

பஞ்சலோகத் தகட்டில் பதினாறறையைக்கீறி அறைகள்தோறும் சூலமிட்டு அதில் ஐந்நூறு செம்பரை முறைபிசகாமல் பதினாறறைகளிலும்மாறி பூசையில் வைத்து 'தாம்தாம்தாம்' என்று லட்சமுரு செபிக்கப் பிடாரியானவள் வசியமாகி நம் எண்ணத்தையெல்லாம் நிறைவேற்றுவாள்.

வசிய வித்தை.

ஆவின் புல்லுருவிய வெள்ளி ஞாயிறு-தேனிலும், திங்கள் வியாழம்-நெய்யிலும், செவ்வாய் புதன்-பாலிலும், சனி-தயிரிலும்

குழைத்து திலர்தமிட்டுச் செல்ல உலகில் சகல காரியங்களும் கை கூடும்.

### புட்டிக்குள் முட்டைகாட்டும் வித்தை.

கோழிமுட்டையைக் காடியில் ஊறப்போட்டு எடுக்க அது ஜவ்வைப்போல நிகளமாகவரும் அதை ஓர் சிறியவாயுள்ள புட்டியில் விட்டு நல்லஜலம் ஊற்ற எப்போதும்போல் கெட்டிப்பட்டுவிடும் அதை யெடுத்து சனங்களுக்குக் காண்பிக்க வெகு ஆச்சரியப்படுவார்கள்.

### முள்ளின்மேல் படுத்துக்கொள்ளும் வித்தை.

ஆதிவாரமும், அமிர்தயோகமும் தன்பெயர் பக்ஷி அரசாயிருக்கும்போது ரத்தன் புரூஸ் செடிக்கும், செகப்பு நெருஞ்சி செடிக்கும் காப்புகட்டி வேரறுமல் பிடுங்கிவந்து தலைமாற்றிக் குளிசத்திலடைத்து நமசிவய என்று ஆயிரத்தெட்டு உருசெபித்து வாயிலடக்கிக்கொண்டு முள்ளின்பேரில் படுத்துக்கொள்ள முள் தைக்காது.

### வாட்டிலோடு மேல்லும் வித்தை.

நாயுருவியிலையை நன்றாகமென்று வாயெல்லாம் படும்படி குதப்பிக்கொண்டு பிறகு கண்ணாடித் துண்டுகளை வாயிலிட்டு மெல்ல வாய் கூசாது. முருக்கைப்போல் மென்று துப்பிவிடலாம்.

### மணலை மேல்லும் வித்தை.

குன்டுமணி யிலையை நன்றாக மென்று தாடையில் அடக்கிக்கொண்டு எவ்வளவு மணலையேனும் தாராளமாக சர்க்கரையைப் போல் மென்று துப்பிவிடலாம்.

### சர்ப்ப வித்தை.

கண்கட்டு மையை வெண்மையாகிய வைக்கோலில்தடவி சபை முன்போட நல்ல பாம்பாகும். அனைவரும் பயப்படுவார்கள்.

### கருஞ்சாரை யாகும் வித்தை.

கருப்புவைக்கோலின் பேரில் கண்கட்டு மையைத்தடவிக் கீழே போட பார்ப்பவர்களின் கண்களுக்கு கருஞ்சாரையாகத்தோன்றும்.

### நாணயங்கள் உண்டாகும் வித்தை.

பானையோட்டையாகிலும் பீங்கான்ஓட்டையாகிலும் காசுகள் போல வட்டவடிவமாக நறுக்கி அதின்பேரில் கண்கட்டு மையைத் தடவி ஜாலக்காரனை நினைத்துச் சபையில்போட பார்ப்பவர்களின் கண்களுக்கு செம்பு நாணயங்களும், வெள்ளிநாணயங்களும், பொன் நாணயங்களுமாகத் தெரியும். எல்லோரும் அதிக சந்தோஷப்படுவார்கள்.



### கீரிப்பிள்ளையும் பாம்பும் சண்டைபோடும் வித்தை.

கீரிப்பிள்ளையின் தோலுக்கும், பாம்புத்தோலுக்கும் கண்கட்டு மையைத் தடவி கூடையைப்போட்டு மூடி ஜாலக்காரனைத் துதித்துத் திறந்துகாண்பிக்க இரண்டும் சண்டைபோடுகிறமாதிரியேதோன்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

### சுண்ணாம்பு வேகாத வித்தை.

அழிஞ்சில் கட்டையைக் கொளுத்தி அந்நெருப்பை எருமை மூத்திரத்தாலவித்து அக்கரியைக்கொண்டுபோய் சுண்ணாம்புக்காளவாயில்போட்டுவைக்க காளவாயானது கொஞ்சமேனும் வேகாது.

### வேறு.

ஆவாரைப் பஞ்சாங்கத்தை யுலர்த்தி எருமைமூத்திரம் விட்டவித்து அந்தக்கரியைச் சுண்ணாம்புக் காளவாயில் போட்டுவைக்க காளவாய் வேகாது. சோத்தடுப்பில் போட்டுவைத்தாலும் சாதம் வேகாது.

### வேறு.

எட்டிக்கட்டையைக் கொளுத்தி அதை எருமை மூத்திரம் விட்டவித்து அக்கரியைக் கொண்டுபோய் போட்டுவைத்தாலும் அவ்வடுப்பில் எதுவும் வேகாது.

### பால் இரத்தமாகும் வித்தை.

சித்திரமூல வேரை யரைத்து பசுவின் ஒரு கொம்பிற்குப் பூசி பால்கரக்கப் பூசினபக்கம் இரத்தமாகவும் பூசாதபக்கம் சாதாரணமாகவும் கறக்கும். இதைப்பார்த்தவர்கள் பிரமிப்பார்கள்.

### வெண்ணெய் உருகும் வித்தை.

முன்னதாகக் கொஞ்சம் சுட்டக்கிளிஞ்சலைப் பூமியில் புதைத்து வைத்துவிட்டு வெண்ணெயை ஓர்கிண்ணத்தில் போட்டுவைத்து அதின்பேரில் வைத்து சனங்களைப்பார்த்து என்னுடைய மந்திரத்தினால் இந்தவெண்ணெய் உருகப்போகிறதைப் பாருங்களென்று சொல்லி கிண்ணத்தைச் சுற்றிலும் கொஞ்சம் ஜலந்தெளிக்க வெண்ணெயானது தானாய் உருகிவிடும்.

### இரகசிய கடித வித்தை.

எலுமிச்சம்பழ ரசத்தில் படிகாரத்தைப் போட்டு நன்றாகக் குழைத்து அதைப் பேனாவில்தொட்டு கடிதத்தின்பேரில் வேண்டிய சமாசாரங்களை யெல்லாம் எழுதி வெய்யலில் காயவைக்க எழுதின எழுத்துகள் தெரியாது. ஜலத்தில் தோய்த்துப் பார்க்க நன்றாகத் தெரியும்.

### நெருப்பில்லாமல் சாதம் வேகும் வித்தை.

ஓர் குடுவையில் அரிசியைப்போட்டு சபையிலுள்ளவர்களுக்குக்காண்பித்து அதில் ஜலம்விடுகிற பாவனையாகக் கொஞ்சம் கள்ளிப்பாலைவிட்டு மூடி வைத்து சற்றுநேரம் பொருத்துப் பார்க்க சாதமாயிருக்கும்.

### ஜலத்தில் முட்டைவெடிக்கும் வித்தை.

தாளிக்காத கற்சுண்ணாம்பையும், கெந்தகத்தையும் சரியெடையாக வெடுத்து தனித்தனியாக அரைத்து அதை முட்டைக்குள் போட்டு வாயை வெள்ளைமெழுகினால் மூடி குளத்திலேனும், குட்டையிலேனும் போட்டுவைக்க சற்றுநேரத்திற்கெல்லாம் வெடிசத்தங்கிளம்பும்.

### முட்டை உருளும் வித்தை.

மாடப்புரா பிச்சு, பொன்னரிதாரம், வெண்குன்றி வடக்குவேர், பாவட்டையிலை இவைகளைச் சமவெடையாக வெடுத்து அரைத்து முட்டையின்பேரில்தடவி விட்டுவிட அது புரண்டுக்கொண்டேயிருக்கும்.

### வேறு சாதம் வேகாத வித்தை.

நிலவேம்பு வேரைச் சிறிய துண்டுகளாக நறுக்கி அரிசி அரிக்கும்போதாவது அதைப் பானையில் போடும்போதாவது போட்டுவிட்டால் சாதமானது கொஞ்சமேனும் வேகாது.

### இதுவுமது.

நீரடிமுத்து வேரைச் சிறிய துண்டுகளாக நறுக்கி முன்போல் உலைப்பானையில் போட்டுவைக்கச் சாதமானது வேகாது. பார்ப்பவர்களும் இது யேதோ விபரீதமென்று சொல்லிக்கொள்வார்கள்.

### வாயில் நெருப்பு கக்கும் வித்தை.

பொட்டிலுப்பைக் கரைத்து அந்நீரில் இலவம் பஞ்சைப்போட்டுத் துவட்டித் துவட்டி நீரெல்லாவற்றையும் அதிற்கூட்டி காயவைத்து எடுத்து அதை வாயில் போட்டுக்கொண்டு ஊத எரியும். பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

### பாம்பு சாகும் வித்தை.

பாம்புகளின் வாயைத்திறந்து கொஞ்சம் படிகாரத்தூளைப் போட அது உடனே இறந்துவிடும். இல்லையாகில் மற்றெவ்விதத்திலுஞ் சாகாது.

### எலிகள் விலகும் வித்தை.

வீட்டில் சஞ்சரிக்கும் எலியைப் பொன்வைத்துப் பிடித்து அதின் பேரில் மின்மினிப்பூச்சியைப் பிடித்தரைத்து பூசிவிட்டுவிட அதைக் கண்ட மற்ற எலிகளெல்லாம் ஓடிப்போகும்.



### எலி பூனையை வெல்லும் வித்தை.

ஓர் எலியின்பேரில் குப்பைமேனி இலையை அரைத்துப்பூசி பூனைமுன்விட பூனையானது அதை முகர்ந்துக்கொண் டிருக்குமேயொழிய கடிக்காது. வெறிபிடித்ததைப்போல சுற்றிசுற்றி வரும்.

### மாலைக்கண் விலகும் வித்தை.

மாலைக்கண் ணுள்ளவர்களுக்கு தினம் ஓர் மின்னும்பூச்சியைப் பிடித்து அதைச் சாதத்தின் நடுவில் வைத்து மூன்றுதினம் விழுங்க மாலைக்கண் மாறும்.

### மீன் அகப்படா வித்தை.

பெருங்காயத்தைச் செருப்படைச்சாற்றில் அரைத்து செம்படவன்வலையிற் றெளித்துவைக்க அவ்வலையில் மீன் அகப்படாமல் செம்படவன் துக்கப்படுவான்.

### இருளி மூலிகையின் வித்தை.

மலைகளில் முளைத்திருக்கும் இருளிமூலைகைக்குச் சாபநிவர்த்தி செய்து மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுக் கருங்கோழி பலி கொடுத்து வேரறுமலும், இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலுங் கொண்டுவந்து குளிசமாடி வசியமந்திரத்தை ஆயிரத்தெட் டுருகொடுத்து எடுத்து தீட்டுப்படாதயிடத்தில் வைத்துக்கொண்டால் சகல காரியங்களும் கைகூடும்.

### புலியாகும் வித்தை.

சுவாதி நக்ஷத்திரமும் ஆதிவாரமுங் கூடியதினத்தில் மேற்படி மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு புலியாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டால் பார்க்கிறவர் கண்களுக்கு புலியாகவே தோன்றுவாய்.

### கரடியாகும் வித்தை.

அஸ்தநக்ஷத்திரமும் அமாவாசையுங்கூடிய தினத்தில் மேற்படி மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு கரடியாகவேணுமென்று நினைக்கும் பக்ஷத்தில் கரடியாகவே தோணுவாய்.

### சிங்கமாகும் வித்தை.

கேட்டையும் செவ்வாய்க்கிழமையுங் கூடிய தினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு சிங்கமாகவேணுமென்று நினைக்கும் பக்ஷத்தில் சிங்கமாகவே காணப்படுவாய்.

### குரங்காகும் வித்தை.

அனுட்டமும் ஆதிவாரமுங் கூடிய தினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு குரங்காகவேணுமென்று நினைத்தால் குரங்கைப்போலவே தோன்றுவாய்.

### கழுதையாகும் வித்தை.

பூராடமும் ஆதிவாரமுங்கூடிய தினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு கழுதையாகவேணுமென்று நினைத்தால் கழுதையைப்போலவே காணப்படுவாய்.

### கோவேறு கழுதையாகும் வித்தை.

ஆயில்யமும் வெள்ளிக்கிழமையுங் கூடிய தினத்தில் மூலிகையையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டால் கோவேறுகழுதையைப்போலவே காணப்படுவாய்.

### ஆனையாகும் வித்தை.

மூலநக்ஷத்திரமும் பௌர்ணமியுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு ஆனையாகவேணுமென்று மனதில் நினைக்கும் பக்ஷத்தில் ஆனையைப்போலவே காணப்படுவாய்.

### குதிரையாகும் வித்தை.

சுவாதியும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக்காதில் வைத்துக்கொண்டு குதிரையாகவேணுமென்று மனதில் நினைக்கும் பக்ஷத்தில் குதிரையைப்போலவே காணப்படுவாய்.

### சிறுத்தையாகும் வித்தை.

ரேவதியும் வெள்ளிக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு சிறுத்தையாகவேணுமென்று மனதில் நினைக்கும் பக்ஷத்தில் சிறுத்தையாகவே காணப்படுவாய்.

### கடம்பையாகும் வித்தை.

பூசநக்ஷத்திரமும் குருவாரமுங் கூடியதினத்தில் மூலிகைக்குக் காப்புகட்டி காதில்வைத்துக்கொண்டு கடம்பை யாகவேணுமென்று நினைக்கும் பக்ஷத்தில் கடம்பையாகவே காணப்படுவாய்.

### பன்றியாகும் வித்தை.

மகமும் ஆதிவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு பன்றியாகவேணுமென்று நினைக்கும் பக்ஷத்தில் பன்றியாகவே காணப்படுவாய்.



### குறிபோடும் வித்தை.

காட்டாமணக்கன் பாலில் துரிசைக்கலந்து புட்டியில்வைத்துக் கொண்டு துணிகளுக்கு குறிபோட அக்குறியானது எக்காலமும் அழியாது.

### மீன்கள் மிதக்கும் வித்தை.

பேன்கொட்டை, நாகப்பூச்சி, சாதம் இவைகளையெல்லாம் ஒன்றாக அரைத்து குளம், குட்டைகளில் தூவிவிட அதிலுள்ள மீன்களெல்லாம் மிதந்துவிடும்.

### முள்ளம்பன்றியாகும் வித்தை.

புனர்பூசமும் செவ்வாய்க் கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு முள்ளம்பன்றி யாகவேணுமென்று நினைக்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு முள்ளம்பன்றியாகவே காணப்படுவாய்.

### காட்டுப்பன்றியாகும் வித்தை.

பரணியும் துவாதசியும் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு காட்டுப்பன்றி யாகவேணுமென்று நினைக்கும் பக்ஷத்தில் காட்டுப்பன்றியாகவே காணப்படுவாய்.

### எருமையாகும் வித்தை.

சுவாதியும் சோமவாரமும் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு எருமையாகவேணுமென்று நினைக்கும் பக்ஷத்தில் எருமையாகவே காணப்படுவாய்.

### எருதாகும் வித்தை.

ரேவதியும் சனிவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு எருதாகவேணுமென்று நினைக்கும் பட்சத்தில் எருதாகவே காணப்படுவாய்.

### பசுவாகும் வித்தை.

அஸ்தமும் ஆதிவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு பசுவாகவேணுமென்று நினைக்கும் பட்சத்தில் பசுவாகவே காணப்படுவாய்.

### நாயாகும் வித்தை.

பூராடமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு நாயாகவேணுமென்று நினைத்தால் நாயாகவே காணப்படுவாய்.

### பூனையாகும் வித்தை.

கேட்டையும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டால் பூனையாகவே பார்ப்பவர்களுக்குத்தோற்றப்படுவாய்.

### கோழியாகும் வித்தை.

உத்திரமும் வெள்ளிக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக்காதில் வைத்துக்கொண்டு கோழியாகவேணுமென்று மனதில் நினைக்க கோழியைப்போலவே காணப்படுவாய்.

### சாவலாகும் வித்தை.

புனர்பூசமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு சாவலாகவேணுமென்று நினைக்கும் பட்சத்தில் சாவலாகவே காணப்படுவாய்.

### மானாகும் வித்தை.

உத்திராடமும் ஆதிவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு மானாகவேணுமென்று மனதில்நினைத்தால் மானைப்போலவே காணப்படுவாய்.

### ஆடாகும் வித்தை.

கார்த்திகையும் வெள்ளிக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு ஆடாகவேணுமென்று மனதில்நினைத்துக்கொண்டால் ஆட்டைப்போலவே காணப்படுவாய்.

### மரமாகும் வித்தை.

மிருகசீரிடமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு மரத்தைப்போல் தோன்றவேணுமென்றுமனதில்நினைத்துக்கொண்டால் மரமாகவே காணப்படுவாய்.

### முயலாகும் வித்தை.

ஆயில்யமும் சோமவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு முயலாக வேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டால் முயலைப்போலவே காணப்படுவாய்.

### எலியாகும் வித்தை.

திருவாதிரையும் வியாழக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு எலியாகவேணுமென்று மனதில்நினைத்துக்கொண்டால் எலியாகவே காணப்படுவாய்.



### பெருச்சாளியாகும் வித்தை.

விசாகமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு பெருச்சாளி யாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டால் பெருச்சாளியாகவே காணப்படுவாய்.

### மலையாகும் வித்தை.

மூலநக்ஷத்திரமும் ஆதிவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில், வைத்துக்கொண்டு மலையாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டால் மலையாகவே காணப்படுவாய்.

### மனிதனாகும் வித்தை.

ரேவதியும் ஆதிவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதிம்வைத்துக்கொண்டு மனிதனாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கெல்லாம் அவரவர்களின் மனிதனாகவே காணப்படுவாய்.

### பெண்ணாகும் வித்தை.

சுவாதியும் சுக்கிரவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டால் பார்க்கிரவர்களுக்கெல்லாம் அவரவர்களின்வீட்டுப் பெண்பிள்ளையைப்போலவே காணப்படுவாய். எல்லோரும் மகா ஆச்சரியப்படுவார்கள்.

### இராஜனாகும் வித்தை.

பூராடமும் செவ்வாய்க்கிழமையும் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு இராஜனாகவேணுமென்று நினைத்தால் இராஜனைப்போலவே காணப்படுவாய்.

### குருவாகும் வித்தை.

உத்திரமும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையையெடுத்துக் காதில்வைத்துக்கொண்டு குருவாகவேணுமென்று மனதில் நினைக்கும் பட்சத்தில எல்லோருடைய கண்களுக்கும் அவரவர்களின் குலகுருவைப்போலவே காணப்படுவாய்.

### சித்தர்களாகும் வித்தை.

ரோகணி நட்சத்திரமும் வியாழக்கிழமையுங் கூடிய தினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு சித்தர்க ளாகவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொள்ளும் பட்சத்தில் பார்ப்பவர்களுக்கு சித்தர்களைப்போலவே காணப்படுவாய்.

### குளமாகும் வித்தை.

சித்திரை நட்சத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்

தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு குளமாக வேணுமென்று மனதில் நினைக்கும்பட்சத்தில் குளமாகவே காணப்படுவாய்.

### கிணராகும் வித்தை.

அஸ்த நட்சத்திரமும் ஆதிவாரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு கிணராகவேணுமென்று நினைத்துக்கொள்ளும் பட்சத்தில் கிணராகவே காணப்படுவாய்.

### பாம்புகளாகும் வித்தை.

சுவாதியும் வெள்ளிக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக்காதில் வைத்துக்கொண்டு பாம்பாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொள்ளும் பட்சத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குப் பெரிய மலைப்பாம்பாகவே காணப்படுவாய் பார்ப்பவர்கள் பயப்படுவார்கள்.

### தானியமாகும் வித்தை.

மிருகசீரிடமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு தானியப்போராகத் தெரியவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொள்ளும் பட்சத்தில் பெரியதானியப்போராகவே காணப்படுவாய்.

### கருடனாகும் வித்தை.

அனுஷமும் வெள்ளிக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையையெடுத்துக்காதில் வைத்துக்கொண்டு மனதில் கருடனாகவேணுமென்று நினைத்தால் கருடனாகக் காணப்படுவாய்.

### காக்கையாகும் வித்தை.

பூசமும் வெள்ளிக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு காக்கையாகவேணுமென்று மனதில் நினைத்தால் காக்கையாகவே காணப்படுவாய்.

### கள்ளிக்காக்கையாகும் வித்தை.

மிருகசிரிட நட்சத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடிய தினத்தில் மூலிகையைக் காதில்வைத்துக்கொண்டு கள்ளிக்காக்கை யாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொள்ள கள்ளிக்காக்கையாகவே காணப்படுவாய்.

### பக்ஷியாகும் வித்தை.

ரேவதி அல்லது சித்திரைநட்சத்திரம் இதுகள்வரும் மங்கள வாரதினத்தில் எந்தப் பட்சியாகவேணுமென்று நினைத்து மூலிகையைக் காதில் வைத்துக்கொள்ளுகிறாயோ அந்தப்பட்சியாகவே எல்லோருடைய கண்களுக்குந் தோன்றுவாய். இன்னும் இம்மூலிகையினால் அறுபத்திநான்கு சித்துகளையும் விளையாடலாம். அதுகளையெல்லாம் குருமுகாந்தரமாய்க் கேட்டுத் தெரிந்துக்கொள்ளவும் தவிர இம்மூலிகையானது கர்மிகளுக்கு ஒருபோதுங் கிட்டாது.



### ஜலத்தில் துடப்பம்நிற்கும் வித்தை.

நான்கங்குல நீளத்தில் ஓர்துடப்பத்தை ஒடித்து அதினடியில் குண்டூசியைக்குத்தி ஜலத்தில்போட துடப்பமானது நிமிர்ந்துநிற்கும்.

### தேங்காயை உடைத்து முட்டைகாட்டும் வித்தை.

ஓர் கோழிமுட்டையைக் கொண்டுவந்துக் காடியில் இரண்டுநாள் ஊரப்போட்டு பிறகெடுத்து அதைத் தேங்காயைக்கண்திறந்து அதனுள் விட்டுவிட்டு மேல்மூடி வைத்துக்கொண்டிருந்து அதை ஜாலமாடும்போது சபையிலெடுத்து உடைத்துக்காட்ட உள்ளிருக்கும் கோழிமுட்டையானது கீழேஉருளும் பார்ப்பவர்களெல்லாம் சந்தோஷப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

### தீபங்காட்டும் வித்தை.

குங்கிலியம், கற்பூரம் இவை இரண்டையும் சரியெடையாகயெடுத்துக்கொண்டு பொடித்து ஒருவெள்ளைக்கந்தையில்வைத்துப் பரப்பி திரிதிரித்து ஏரண்டத்தெண்ணெயில் தோய்த்து தடையுள்ள கலசத்தில்போட்டு தடைக்குக் கொஞ்சங் குறைவாகவே ஜலம்விட்டுக்கொளுத்த சுமார் இரண்டுநாழிகைவரையிலும் எரியும் பார்ப்பவர்களெல்லாம் உனக்குக் காளிவசியமென்று சொல்லுவார்கள்.

### கடிதத்தில் உருவுகள்தெரியும் வித்தை.

உத்தாமணிப் பாலைத்தொட்டு வேண்டுமான சமாச்சாரங்களையோ அல்லது உருவங்களையோ ஓர் கடிதத்திலெழுதிக் காட்ட அது சாதாரண காகிதமாகவே யிருக்கும். அப்போது அக்கடிதத்தின்பேரில் கற்பூரப்புகையைப் பிடித்து துடைத்துவிட்டுக் காட்ட எழுதின எழுத்துகளெல்லாம் நன்றாகத்தெரியும்.

### பேன் மாரண வித்தை.

பேன்கொட்டையை அரைத்து தலையில்தடவி நன்றாய்ஊறின பின் தலைமுழுகப் பேன்களெல்லாம் உதிர்ந்துவிடும். இவ்வாறு இரண்டு மூன்றுவிசை செய்யவும்.

### தீரேகத்தைத் தைக்கும் வித்தை.

காதுகுரும்பியை தீரேகத்தில் தடவி அரக்கித் தேய்த்துவிட்டு ஊசியில் நூலைக்கோர்த்து தைக்க நோயெடுக்காது.

### சண்டாளக் கரு வித்தை.

ஆதிவாரம் அதிகாலையில் சென்று எழெல்லைகளிலிருக்கும் பன்றிப்புட்டைகளை ஒரே அளவாக வெடுத்துவந்து ஓர் பானையில்போட்டுக் குழித்தைலமிறக்கி புட்டியில் வைத்துக்கொண்டு பேய் பிசாசுகளுக்கு ஒருபொட்டுயிட அவைகளெல்லாம் அலறி யோடிவிடும்.

### பூனை வித்தை.

குப்பைமேனி யிலையில் வெள்ளைப்பூண்டை வைத்தரைத்துப் பூனைமுன்போட அப்பூனையானது அப்புறமும் இப்புறமும் அசையாது மயக்கமெய்தி அதை முகர்ந்துக்கொண்டே யிருக்கும். அச்சமயம் எலியை அதன்முன்விட்டாலும் அதைக்கடிக்க சக்தியிராது.

### சாணியுருண்டை மிதக்கும் வித்தை.

சடையை பந்தைப்போல் செய்துஅதன்பேரில் சாணியைப்பூசி ஜலத்தில்போட மிதக்கும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 42 | 49 | 2 | 7 |
| 6 | 3 | 46 | 45 |
| 48 | 43 | 8 | 1 |
| 4 | 5 | 44 | 47 |

### சுப்பிரமணியர் மந்திரம். —

செப்புத் தகட்டில் பதினாறறை வறைந்து அதில் நூறு என்னும் இலக்கத்தை யடைத்துப் பூசையில்வைத்து 'ஓம், ஸ்ரீரீம் ஸ்ரீரீங் சவ்வும், அவ்வும் என்று லட்சமுரு செபித்துப் பூசித்துதகட்டைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஸ்ரீ சுப்பிரமணியர் வசியமாகுவர்.

### காட்டாமணக்கு செடியில் உதிரங்காட்டும் வித்தை.

ஓர் எழுத்தாணிக்குச் சப்பாத்திப்பூச் சாற்றைத் தடவிக் காயவைத்துக் காய்ந்தபிறகு அதைக்கொண்டு காட்டாமணக்கன் செடியைக்குத்த இரத்தம்போல இரசம்வரும் பார்ப்பவர் பயப்படுவார்கள்.

### கம்புமுளைக்கும் வித்தை.

கம்பை கோழிமுட்டைக்குள் போட்டு முன்போல் அவயம் வைத்து எடுத்து வைத்துக்கொண்டு பாத்திகட்டி விரைத்து மூடி அரை மணிசாவகாசஞ் சென்றுதிறந்து பார்க்கச் செடியாயிருக்கும்.

### இரும்பு உருகும் வித்தை.

இரும்பை கன்னான் உலையில் நன்றாகக்காயவைத்து சிவப்பேற காய்ந்ததும் அதையெடுத்து கெந்தகத்தின்பேரில் வைக்க அவ்விரும்பானது உருகிவிடும்.



### பால் கட்டும் வித்தை.

கறந்தபாலில் பிராயம் பாலைவிட்டு சற்றுநேரம் வைத்திருக்க அது கட்டிப்போகும். அதன் இலையையும் போடலாம்.

### பால் சுரக்கும் வித்தை.

பாலில்லாத பெண்களுக்கு தலைப்பேனைப்பிடித்து வெற்றிலையில்வைத்து மடித்து இரண்டு மூன்றுவேளை தெரியாது கொடுத்துவிட பாலானது அதிகமாகச் சுரக்கும்.

### நத்தைச்சூரி மை.

எத்தைச்சொன்னாலும் செய்யும் நத்தைச்சூரி செடிக்கு அமிர்தயோகமும் வெள்ளிக்கிழமையுஞ்சேர்ந்த தினத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து கொண்டுவந்து குழித்தைலமிறக்கினது பலம் 1, சிவன் மூலிக்கு சித்தயோகமும் செவ்வாய்க்கிழமையுஞ்சேர்ந்த தினத்தில் காப்புகட்டி பிடுங்கிவந்து குழித்தைலமிறக்கினது பலம் 1, இதுகள் இரண்டில் மாக்கொடி, சீலை, ஊமையன் வாய்ச்சோறு இதுகள் வகைக்கு விராகனெடை 1, சிறுத்தைவிரை விராகனெடை 2 இதுகளைச்சேர்த்து அரைத்துப் புதுச்சட்டியில் தடவி ஆலாத்திப்பூரத்தைக்கொளுத்தி புகைபிடித்து மையை வாங்கிச் சிமிளில்வைத்துக்கொண்டு வராகிமந்திரத்தை தினமொன்றுக்குப் பதினாயிரம் செபித்து வைத்துக்கொண்டால் அஷ்ட கர்மங்களுக்கும் கையாடலாகும்.

### கழுதையாகும் வித்தை.

மையை நெற்றியில் தடவிக்கொண்டு வாலைமந்திரத்தைச்செபித்து கழுதையாகவேணுமென்று நினைத்தால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கழுதையைப்போலவே தோற்றப்படுவாய்.

### குதிரையாகும் வித்தை.

மையை நெற்றியில் தடவிக்கொண்டு அசுவ மந்திரத்தைச்செபித்துக் குதிரையாக வேணுமென்று மனதில் நினைத்துக்காளியைத் தியானிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு குதிரையைப்போலவே தோற்றப்படுவாய்.

| | | | |
|---|---|---|---|
| 24 | 31 | ௨ | ௭ |
| 6 | 3 | 28 | 27 |
| 30 | 25 | 8 | 1 |
| 4 | 5 | 26 | 2 |

### குறளி மந்திரம்.

இந்தச் சக்கரத்தைப் செப்புத்தகட்டிலெழுதி பூசையில்வைத்து காட்டேரிகுறளி வாவா, சாத்தானே வாவா, ரத்தக்காட்டேரி வாவா, லாடா வாவா என்று ஆயிரத்தெட்டுரு செபித்து பூசிக்க வசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| 40 | 47 | 2 | 7 |
| 6 | 3 | 44 | 43 |
| 46 | 41 | 8 | 1 |
| 4 | 5 | 42 | 45 |

### நையாண்டி மந்திரம்.

சண்டி சண்டி, மொண்டி மொண்டி, தட்டு தட்டு, நோக்கு நோக்கு, மொண்டி மொண்டி, கெண்டி கெண்டி, மேக்கு மேக்கு, மோகன மோகன, வசி வசி, கண்டி கண்டி, விண்டி விண்டி, ஒண்டி ஒண்டி, காற்சிலங்கை, கைவிலங்கு, பூமி பூமி, பண்டி பண்டி, உண்டி உண்டி, பகவதி சுவஹாவென்று ஆயிரத்தெட்டுரு செபிக்க வசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| 35 | 42 | 2 | 7 |
| 6 | 3 | 39 | 38 |
| 41 | 36 | 8 | 1 |
| 4 | 5 | 37 | 40 |

### பூத மந்திரம்.

சிங், அங், வங், மங் என்று ஆயிரத்தெட்டுரு செபிக்கப் பூதமானது வசியமாகும். அதன்பிறகு அதனைக்கொண்டு நினைத்த காரியங்களை முடித்துக்கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| 242 | 249 | 2 | 7 |
| 6 | 3 | 246 | 245 |
| 248 | 243 | 8 | 1 |
| 4 | 5 | 244 | 247 |

### மாடன் வசிய மந்திரம்.

இந்த சக்கரத்தை செப்புத்தகட்டி லெழுதி பூசையில் வைத்து பா-பா-பா-பா சூ-சூ-தா-தா-து-தா-பூ-பூ-சுவஹா வென்று லட்சத்தி யெட்டுரு செபித்துக்குளிசமாடிக்கட்டிக்கொள்ள மாடன் வசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| 26 | 36 | 2 | 7 |
| 6 | 3 | 33 | 32 |
| 35 | 29 | 8 | 1 |
| 4 | 5 | 31 | 34 |

### சகல மிருகவசிய மந்திரம்

இதை கறுக்கிலெழுதி ஸ்ரீ ஓம் ஓம் ஓம் ரீம் ரீம், கம், சிம், கம், சிம் டிம்-டிம்-டிம், பூ-பூ-பூ-சுவஹாவென்று ஆயிரத்தியெட்டுரு செபித்து குளிசமாடி கட்டிக்கொள்ள சகல மிருகமும் வசியமாகும்.



| | | | |
|---|---|---|---|
| 72 | 79 | 2 | 7 |
| 6 | 3 | 76 | 75 |
| 78 | 73 | 8 | 1 |
| 4 | 5 | 74 | 77 |

### சக்கலாதேவி மந்திரம்.

இதைச் செப்புத்தகட்டி லெழுதி ஓம் கிரீம் சவ்வும், ரீம் கிரீம், சுவஹா, யென்று ஆயிரத்தெட்டோத சக்கலாதேவி வசியமாகுவள்.

| | | | |
|---|---|---|---|
| 45 | 52 | 2 | 7 |
| 6 | 3 | 49 | 48 |
| 51 | 46 | 8 | 1 |
| 4 | 5 | 47 | 50 |

### சாமளாதேவி மந்திரம்.

இதைச் செப்புத்தகட்டி லெழுதி நடுவனையைப் பிடித்துச்செபிக்க சாமளாதேவி வசியமாகுவள்.

| | | | |
|---|---|---|---|
| 192 | 199 | 2 | 7 |
| 6 | 3 | 196 | 195 |
| 198 | 193 | 8 | 1 |
| 4 | 5 | 194 | 197 |

### மோகன மந்திரம்.

இதைச் செப்புத்தகட்டிலெழுதி பூசையில் வைத்து மோகன அட்சரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சித்தியாகும்.

| | | | |
|---|---|---|---|
| 292 | 299 | 2 | 7 |
| 6 | 3 | 296 | 295 |
| 298 | 293 | 8 | 1 |
| 4 | 5 | 294 | 294 |

### பூத வசியம்.

இதை காரீயத்தகட்டி லெழுதி பூசையில் வைத்து ஸ்ரீம்-ரீம்-ஓம்-ரீம் சுவஹாவென்று ஆயிரத்தெட்டுரு செபிக்க சகல பூதங்களும் வசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| 42 | 49 | 2 | 7 |
| 6 | 3 | 46 | 45 |
| 48 | 43 | 8 | 1 |
| 4 | 5 | 44 | 47 |

சுப்பிரமணியர் மந்திரம்.

இதைச் செப்புத்தகட்டி லெழுதி இதில் சொல்லியிருக்கும் வசிய மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபிக்கச் சுப்பிரமணியர் வசமாகுவர்.

பன்றியாகும் வித்தை.

அமாவாசையதினம் நெற்றியில் மையைத்தடவி மாயமோகினியைத்தியானித்து பன்றியாக வேணுமென்று நினைக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்குப் பன்றியாகவே தோன்றப்படுவாய்.

ஆனையாகும் வித்தை.

மையை நெற்றியில் தடவிக்கொண்டு ஜாலக்காளைத் துதித்து வாலையைப்பூசித்து ஆனையாகவேணுமென்று மனதில்தியானித்தால் பார்க்கின்றவர்களுக்கு ஆனையைப்போலவே தென்படுவாய்.

மாடாகும் வித்தை.

மையை யெடுத்து நெற்றியில் பொட்டிட்டுக்கொண்டு பைரவியைத் தியானித்து மாடாகவேணுமென்று மனதில் தியானிக்கபார்ப்பவர்களுக்கு நீ மாடைப்போலவே தோன்றுவாய்.

பூனையாகும் வித்தை.

மையை யெடுத்துத் திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளைத் தியானித்துப் பூனையாகவேணுமென்று மனதில் நினைத்து நீலகண்டியை வணங்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குப் பூனையைப்போலவே தோன்றுவாய்.

மானாகும் வித்தை.

உத்திராட நக்ஷத்திரத்தில் பூனைவணங்கி செடியைப்பிடுங்கி அதற்கு மையைத்தடவிக் காதில் வைத்துக்கொண்டு மானாகும்படி தியானிக்கில் மானைப்போலவே தோன்றுவாய்.

ஆடாகும் வித்தை.

பரணி நக்ஷத்திரத்தில் மையை யெடுத்துத்திலர்த மிட்டுக் கொண்டு ஆடாகவேணுமென்று மனதில் நினைக்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு ஆடாகவே தோன்றுவாய்.



அன்னப்பக்ஷியாகும் வித்தை.

அன்னப்பக்ஷியினுடைய இறகிற்கு மையைத்தடவி நீலகண்டியைத்துதித்துக் கீழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு அன்னப்பக்ஷியாகத்தோன்றும்.

நாரையாகும் வித்தை.

நாரையெலும்பிற்கு மையைத்தடவி மோகினி மந்திரத்தைச் செபித்துக் கீழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு நாரையாகவே தோன்றும்.

கோண்டலாத்திக் குருவியாகும் வித்தை.

மையைக் கொண்டலாத்திக்குருவியின் இறகிற்குத்தடவி மலையாள பகவதி மந்திரத்தைச்செபித்துக் கீழேபோட பார்ப்பவர்களுக்குக் கொண்டலாத்திக் குருவியாகத்தெரியும்.

மீன்குத்திப் பக்ஷியாகும் வித்தை.

மீன்குத்திப் பக்ஷியினுடைய இறகிற்கு மையைத்தடவிக் காளியைத்தியானித்துக் கீழேபோட மீன்குத்திப் பக்ஷியாகும்.

நாராயண பக்ஷியாகும் வித்தை.

நாராயண பக்ஷியினுடைய இறகிற்கு கண்கட்டு மையைத்தடவி மலையாள பகவதி மந்திரத்தைச்செபித்துக் கீழேபோட நாராயண பக்ஷியாகும்.

காட்டுக்கோழியாகும் வித்தை.

காட்டுக் கோழியினுடைய இறகிற்கு மையைத்தடவி ஜாலக்காளைத்தியானித்துக் கீழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு காட்டுக்கோழியாகத் தோன்றும். இன்னும் இந்த மையினால் அநேக வேலைகள் நடக்கும். அதற்கெல்லாம் குருவருளும், புத்திசாதுரியமும் வேண்டும்.

எருமைத்தோல் எருமையாகும் வித்தை.

எருமையின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி நான் இந்தத்தோலை உயிருள்ள எருமையாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத்தடவி மோகினியை நினைத்து துப்பட்டியால்மூடி ஜாலக்காளைத்துதித்து திறந்துக்காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள எருமையாகவே தோன்றும்.

சிறுத்தைத்தோல் சிறுத்தையாகும் வித்தை.

சிறுத்தையின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக்

காண்பித்து நான் இதை உயிருள்ள சிறுத்தையாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப் போட்டுமூடி நீலகண்டியைத் தியானித்துத்திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள சிறுத்தையாகவே தோன்றும்.

## புனுகுபூனைத்தோல் புனுகுபூனையாகும் வித்தை.

ஓர் புனுகுபூனையின்தோலை சபைக்குக்கொண்டுவந்து அனைவர்களுக்குங்காட்டி நான் இந்தத்தோலை உயிருள்ள புனுகு பூனையாகச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி மோகினியைத்தியானஞ்செய்து கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப்போட்டுமூடி ஜாலக்காளைத்தியானித்துத் திறந்துக்காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள புனுகுபூனையாகவே தோன்றும். இன்னும் இம்மையின் விநோதமானது சொல்லத்தரமல்ல அதைக்குருவின் முகாந்தரமாய்ச்சரிவர தெரிந்துக்கொண்டால் அட்டமாசித்திகளையும் விளையாடிக் காட்டலாம்.

## கண்கட்டு மையின் வித்தை.

பாதரசத்தையும், சங்கு பாஷாணத்தையும் ஊர்குருவின் வாயில்விட்டு தைத்து அபானவாயையுந்தைத்து ஓர் குடுவையில் போட்டு கள்ளுவார்த்து அடுப்பின்பேரில் வைத்து எரிக்க நீரெல்லாம் சுண்டிவிடும். அதன்பிறகு அதையெடுத்து ரோம முதலிய வைகளைப்போக்கி மைபோலரைத்து அதை வெள்ளைத்துணியிலூட்டி நிழலில் உலர்த்தி திரிசெய்து பிராமணப்பிள்ளை பிரமசாரியாக இரந்துபோனவனுடைய மண்டையோட்டில் ஐங்கோலத்தைலம்விட்டு முன்திரியைப்போட்டு கொளுத்தி மைவாங்கி ஜாலக்காள் மந்திரத்தை லட்சமோதி மைத்துக்கொள்ளவும். இதனால் அனேக விநோதங்களையெல்லாம் உலகத்தாருக்குச் செய்துக்காட்டி அவர்கள் மனதை சந்தோஷிக்கச்செய்யலாம்.

## பாம்பாகும் வித்தை.

கண்கட்டு மையை வைக்கோலுக்குத்தடவி ஜாலக்காளைத்துதித்து சபையில்போடப் பார்ப்பவர் கண்களுக்குப் பாம்பாகத்தோன்றும்.

## குளவியாகும் வித்தை.

கண்கட்டு மையை புளியன் இலைக்குத் தடவிப்போட்டு ஜாலக்காளைத்துதிக்க பார்ப்பவர்களின் கண்களுக்குக்குளவிகளாகத்தோன்றும்.

## தேளாகும் வித்தை.

கண்கட்டு மையை வேப்பிலைக்குத்தடவி நீலகண்டியைத்துதித்துப்போட பார்ப்பவர் கண்களுக்குத் தேளாகத்தோன்றும்.



## குரங்காகும் வித்தை.

அஷ்டமித்திதியும் செவ்வாய்க்கிழமையுஞ் சேர்ந்த தினத்தில் மையை யெடுத்துத்திலர்த மிட்டுக்கொண்டு குரங்கைப்போல் தோன்றவேணுமென்று மனதில் நினைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குக் குரங்கைப்போலவே தோன்றுவாய்.

## மரமாகும் வித்தை.

கேட்டை நக்ஷத்திரத்தில் மையை யெடுத்துத்திலர்த மிட்டுக்கொண்டு சாமளாதேவி மந்திரத்தை மனதில் தியானித்து மரமாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு மரத்தைப்போலவே தென்படுவாய்.

## குளமாகும் வித்தை.

கிருத்திகை நக்ஷத்திரத்தில் காளியைத்துதித்து மையை யெடுத்துத் திலர்தமிட்டுக்கொண்டு குளமாகத்தெரிய வேணுமென்று மனதில் நினைத்து வராகியைப் பணிவாயானால் பார்ப்பவர்களுக்குக்குளமாகவே தோன்றுவாய்.

## கிணராகும் வித்தை.

மேற்படி நக்ஷத்திரத்தில் மலையாள பகவதி மந்திரத்தை நூற்றியெட்டுரு செபித்து மையைத்திலர்த மிட்டுக்கொண்டு கிணராகவேண்டுமென்று தியானிக்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குக் கிணராகவே தோன்றுவாய்.

## மலையாகும் வித்தை.

பூரநக்ஷத்திரத்தில் மையைத்திலர்த மிட்டுக்கொண்டு ஜாலக்காளைத்தியானித்து மலையாகவேணுமென்று மனதில் நினைக்கும்பக்ஷத்தில் பார்க்கின்றவர்களின் கண்களுக்கு மலையாகவேதோன்றுவாய்.

## கோழியாகும் வித்தை.

பரணி நக்ஷத்திரத்தில் வராகியையும், ஜாலக்காளையும் பூசித்து மையைத்திலர்த மிட்டுக்கொண்டு கோழியாக வேணுமென்று தியானிக்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குக் கோழியைப் போலவே தோற்றப்படுவாய்.

## புலியாகும் வித்தை.

அஸ்வனி நட்சத்திரத்தில் மையை யெடுத்துத்திலர்த மிட்டுக்கொண்டு ஜாலக்காளைத்தியானித்துப் புலியாக வேணுமென்றுநினைக்கும்பட்சத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குப் புலியாகவே தோன்றுவாய்.

## சிறுத்தையாகும் வித்தை.

கார்த்திகை நட்சத்திரத்தில் ஜாலக்காளியும், மாயமோகினியையும் தியானித்து மையை யிட்டுக்கொண்டு சிறுத்தையாகவேணுமென்று நினைக்கும்பட்சத்தில் பார்க்கிறவர்கள் கண்களுக்கு சிறுத்தையாகவே தோன்றுவாய்.

## கரடியாகும் வித்தை.

பூரட்டாதியில் வெள்ளைக்குண்டுமணி வேருக்குக் காப்புகட்டிக் கொண்டுவந்து மையைத்தடவி காதில்வைத்து ஜாலக்காளைத்துதித்து மையைத்திலர்த மிட்டுக்கொண்டு கரடியாகவேணுமென்று மனதில் நினைத்தால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கரடியாகவே தோன்றுவாய்.

## வீடாகும் வித்தை.

மையைத்திலர்த மிட்டுக்கொண்டு மாயாசத்தி மந்திரத்தை ஆயிரஞ்செபித்துப் பார்ப்பவர்களின் கண்களுக்கு வீட்டைப்போலவே தோன்ற வேணுமென்று தியானஞ்செய்யும் பட்சத்தில் அனைவர்களுக்கும் வீட்டைப்போலவே தோன்றுவாய்.

## மனிதனாகும் வித்தை.

மகா நட்சத்திரமும், திரயோதசியுஞ்சேர்ந்த தினத்தில் காளியைப் பதினாயிரந்தரந் துதித்து மையை யெடுத்து திலர்தமிட்டுக் கொண்டு மனிதனாகவேணுமென்று தியானித்தால் பார்ப்பவர்களின் கண்களுக்கு மனிதனாகவே தென்படுவாய். இன்னும் இதிலொரு விநோத மென்னவென்றால் அச்சபையில் எத்தனைபேர்கள் இருக்கின்றார்களோ அத்தனைபேர்களுக்கும் அவரவர்கள் மனிதனாகவே தோன்றுவாய்.

## காடாகும் வித்தை.

இம்மையில் நல்லபாம்பின் கருவைச்சேர்த்து அரைத்துக்காளி கோயிலின்முன் வைத்துப்பதினாயிரம் உருசெபித்து வைத்துக்கொண்டு அதில் கொஞ்சமெடுத்து ஓர்குச்சியில் தடவிப்போட்டுக்காடாகும் விநோதத்தைப் பாருங்களென்று சொன்னால் அனைவருக்கும் ஓர் காடு எதிரில் இருக்கின்றதைப்போலவே தோன்றும்.

## சமுத்திரமாகும் வித்தை.

ஓர் கூழாங்கல்லுக்கு மையைத்தடவி இதோ சமுத்திரம் தெரியும் வேடிக்கையைப்பாருங்களென்று சொல்லி மாயமோகினியை மனதில் தியானித்துக்கொண்டே யிருக்கும்பட்சத்தில் அனைவர்கண்களுக்கும் உண்மையான சமுத்திரமே யென்னும்படி அலைகளுடன் சமுத்திரமானது தெரியும்.



## தேவர்களாகும் வித்தை.

குறளி மந்திரத்தைச்செபித்து மையை யெடுத்துத்திலர்தமிட்டுக்கொண்டு தேவர்களாகவேணுமென்று தியானிக்கும்பட்சத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு அவரவரான்கோரும் தேவதையாகவே தோன்றும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

## மைனாவாகும் வித்தை.

ஓர் மைனாவினுடைய இறகிற்கு மையைத்தடவி மோகினி மந்திரத்தைச்செபித்து மைனாவாகவேணுமென்று தியானிக்கும்பட்சத்தில் அது அனைவர் கண்களுக்கும் மைனாவாகவே தோன்றும்.

## புறாவாகும் வித்தை.

புறாயிறகிற்கு மையைத்தடவி மாயமோகினியைத் துதித்துப் போட அது அனைவர்கண்களுக்கும் புறாவாகவே தோன்றும். இன்னும் இந்தமையினால் அஷ்டகர்மங்களும் விளையாடலாம். அதையெல்லாம் குருவின் முகாந்தரத்தினால் கண்டுக்கொண்டுசெய்யவும். ஒவ்வொரு வேலைகளுக்கும் நாம் நினைப்பதுதான் எதிரிக்குத்தெரியும்.

| | | | |
|---|---|---|---|
| 92 | 99 | 2 | 7 |
| 6 | 3 | 96 | 95 |
| 98 | 93 | 8 | 1 |
| 4 | 5 | 94 | 97 |

## ஆஞ்சநேயர் மந்திரம்.

பஞ்சலோகத் தகட்டில் பதினாறறையைக்கீறி சூலம்போட்டு அதில் இருநூறையடைத்துப் பால், பழம், புஷ்பம் முதலிய பஞ்சகச்சாயங்களைவைத்து 'ஓம் சிங்மங்' என்று லட்சத்தியெட்டுரு செபிக்க ஆஞ்சநேயர் வசியமாகுவர்.

## புல்புல் குருவியாகும் வித்தை.

கண்கட்டு மையை புல்புல் குருவியினுடைய இறகிற்குத்தடவிக் காளியைத்தியானித்துப்போட புல்புல் குருவியாகும்.

## பருந்தாகும் வித்தை.

கண்கட்டு மையை பருந்தினுடைய இறகிற்குத்தடவி மாயமோகினியைத்தியானித்துக் கீழேபோட பருந்தாகும்.

## கிளிப்பிள்ளையாகும் வித்தை.

கிளிப்பிள்ளையினுடைய இறகிற்கு மையைத்தடவி மயானருத்திரியைத்தியானித்துக் கீழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு கிளிப்பிள்ளையாகத் தோன்றும்.

### கருங்குருமாளுகும் வித்தை.

கருங்குருமாவுடைய இறகிற்கு மையைத் தடவிக் கிழேபோட்டுக் காளியைத்தியானிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு கருங்குருமாளுகத்தோன்றும்.

### தவிட்டுக் குருவியாகும் வித்தை.

கண்கட்டு மையைத் தவிட்டுக்குருவியின் இறகிற்குத் தடவிக் கிழேபோட்டு மலையாள பகவதியைத்தியானிக்க தவிட்டுக்குருவியாகும்.

### கட்டுக்காடையாகும் வித்தை.

கட்டுக்காடையின் இறகிற்கு மையைத்தடவிக் கிழேபோட்டு ஜாலக்காளைத்தியானிக்கக் கட்டுக்காடையாகும்.

### ஆந்தையாகும் வித்தை.

ஆந்தையினுடைய இறகிற்கு மையைத்தடவிக் கிழேபோட்டு மலையாள பகவதியைத்தியானிக்க ஆந்தையாகும்.

### கோட்டாளுகும் வித்தை.

கோட்டான் இறகிற்கு மையைத்தடவிக் கோட்டாளுகவேணுமென்று மனதில் தியானித்துக் கிழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு கோட்டாளுகத்தோன்றும்.

### மயிலாகும் வித்தை.

மயிலிறகிற்கு மையைத்தடவிக் கிழேபோட்டு மயானருத்திரியைத்தியானிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு மயிலாகத்தோன்றும்.

### சாவலாகும் வித்தை.

கண்கட்டு மையை சாவலிறகிற்குத்தடவிக் காளியைத்தியானித்துக்கிழேபோட்டு சாவலாக வேணுமென்று மனதில் நினைத்தால் சாவலாகத்தோன்றும்.

### கோழியாகும் வித்தை.

கண்கட்டு மையை கோழியிறகிற்குத்தடவி ஜாலக்காளை நினைத்துக்கிழேபோட்டுக் கோழியாகவேணுமென்று நினைத்தால் கோழியாகும்.

### ஈயாகும் வித்தை.

வட்டத்தாரி யிலைக்கு மையைத்தடவிக் கிழேபோட்டு ஈயாகவேணுமென்று நினைத்தால் பார்ப்பவர்களின் கண்களுக்கு ஈயைப் போலவே தோன்றும்.



### நண்டுதோரக்காவாகும் வித்தை.

மலைவேப்பிலைக்கு மையைத்தடவி ஜாலக்காளைநினைத்து நண்டுதொரக்காவாக வேணுமென்று நினைத்தால் நண்டுதொரக்காவாகும்.

### வாத்தாகும் வித்தை.

வாத்தின் இறகிற்கு மையைத்தடவி மாயமோகினி மந்திரத்தைச்செபித்துக் கிழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு வாத்தைப் போலவே தோன்றும்.

### மைளுவாகும் வித்தை.

மைளுவின் இறகிற்கு கண்கட்டு மையைத்தடவிக் காளியைத்தியானித்துப்போட மைளுவாகும்.

### சிட்டுக்குருவியாகும் வித்தை.

சிட்டுக்குருவியின் இறகில் கண்கட்டு மையைத்தடவி குறளியைத்தியானித்துப்போட சிட்டுக்குருவியாகும்.

### கருடளுகும் வித்தை.

கருடப்பக்ஷியினுடைய இறகிற்கு மையைத்தடவி நீலகண்டியைத்தியானித்துப்போட கருடப்பக்ஷியாகும்.

### கோட்டாளுகும் வித்தை.

கோட்டான் இறகிற்கு மையைத்தடவி மாயமோகினியைத் தியானித்துப்போட கோட்டாளுகும்.

### காடையாகும் வித்தை.

காடையிறகிற்கு மையைத்தடவி ஜாலக்காளைத்தியானித்துப் போட காடையாகும்.

### கௌதாரியாகும் வித்தை.

கௌதாரியிறகிற்கு மையைத்தடவி மலையாள பகவதியைத் தியானித்துக் கிழேபோட கௌதாரியாகும்.

### முயல்தோல் முயலாகும் வித்தை.

முயலின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி நான் இந்தத்தோலை உயிருள்ள முயலாகச் செய்கிறேன் பாருங்களென்றுச்சொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியால்மூடி ஜாலக்காளைத்தியானித்து மோகினிமந்திரத்தைச்சொல்லி திறந்துக் காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள முயலைப்போலவே தோன்றும்.

### நாய்த்தோல் நாயாகும் வித்தை.

நாயின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி இந்தத்தோலை உயிருள்ள நாயாகச்செய்யும் விநோதத்தைப்பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப்போட்டு மூடி நீலகண்டியைத்தியானித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள நாயைப்போலவே தோன்றும்.

### பூனைத்தோல் பூனையாகும் வித்தை.

பூனைத்தோலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி, நான் இந்தத்தோலை உயிருள்ள பூனையாகச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி காளியைத்தியானித்து துப்பட்டியால்மூடி மலையாள பகவதி மந்திரத்தைப் பதினாறுவிசை மனதில் தியானித்துத் திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள பூனையாகவே தோன்றும்.

### கீரிப்பிள்ளையின்தோல் கீரிப்பிள்ளையாகும் வித்தை.

கீரிப்பிள்ளைத் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி நான் இந்தக்கீரிப்பிள்ளையின்தோலை உயிருள்ள கீரிப்பிள்ளையாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத் தடவி துப்பட்டியைப்போட்டுமூடி மாயமோகினியைத்தியானித்து திறந்து காண்பிக்க அனைவர்கண்களுக்கும் உயிருள்ள கீரிப்பிள்ளையாகவே தோன்றும்.

### குரங்குத்தோல் குரங்காகும் வித்தை.

குரங்குத்தோலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி இந்தத்தோலை உயிருள்ள குரங்காகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப்போட்டு மூடித் திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள குரங்கைப்போலவே தோன்றும்.

### பாம்புத்தோல் பாம்பாகும் வித்தை.

பாம்புத்தோலை சபைக்குக்கொண்டுவந்து அனைவர்களுக்குங் காட்டி நான் இதற்கு உயிர்கொடுத்து எழுப்புகிறேன் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியால்மூடி ஜாலக்காளை தியானித்துக் காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள பாம்பைப்போலவே தோன்றும்.

### எருதுத்தோல் எருதாகும் வித்தை.

எருதின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி நான் இந்த எருதின்தோலை உயிருள்ள எருதாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி நீலகண்டியைத் தியானித்து கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப்போட்டுமூடி ஜாலக்காளைத் தியானித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள எருதைப்போலவே தோன்றும்.



### பசுத்தோல் பசுவாகும் வித்தை.

பசுவின்தோலை சபையோர்களுக்குக்காட்டி இத்தோலை உயிருள்ள பசுவாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப்போட்டுமூடி ஜாலக்காளைத்துதித்துக்காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள பசுவாகவே தோன்றும்.

### ஆட்டுத்தோல் ஆடாகும் வித்தை.

ஆட்டுத்தோலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி இந்தத்தோலை உயிருள்ள ஆடாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டுமையைத்தடவி துப்பட்டியைப்போட்டுமூடி மலையாளபகவதி மந்திரத்தைச் செபித்துத் திறந்துக்காண்பிக்க அனைவர் கண்களுக்கும் உயிருள்ள ஆடாகவேதோன்றும். எல்லோரும் உனக்குக் காளிகாதேவி வசியமென்று சொல்வார்கள்.

### ஆனைத்தோல் ஆனையாகும் வித்தை.

ஓர் ஆனையின்தோலை கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி நான் இதை ஆனையாகச் செய்யும் விநோதத்தைப் பாருங்களென்று சொல்லி துணியைப்போட்டு மூடி கண்கட்டுமையைத்தடவி மாய மோகினியைத்தியானித்து மந்திரஞ் செபித்து திறந்துகாண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள ஆனையைப் போலவே தோன்றும், அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

### குதிரைத்தோல் குதிரையாகும் வித்தை.

குதிரையின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி இதை உயிருள்ள குதிரையாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி துணியைப்போட்டு மூடி கண்கட்டு மையைத்தடவி காளியின் மந்திரத்தை செபித்து ஜாலக்காளைத் துதித்து திறந்துக்காண்பிக்க அனைவர்கண்களுக்கும் உயிருள்ள குதிரையாகவே தோன்றும்.

### ஒட்டைத்தோல் ஒட்டையாகும் வித்தை.

ஒட்டையின் தோலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி நான் இந்தத்தோலை ஒட்டையாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி ஜாலக்காளைத் துதித்து துணியைப்போட்டு மூடி கண்கட்டு மையைத்தடவி மாயமோகினியைத் தியானிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள ஒட்டையாகவே தோன்றும், அனைவர்களும் உன்னை மகாவேலைக்காரனென்று மெச்சுவார்கள்.

## கண்ணைப்பிடுங்கிக் காட்டும் வித்தை.

ஆட்டின் ஈரமான ஜவ்வில் கொஞ்சம் பஞ்சை வைத்து புன்னைக்கொட்டை யளவுக்குத் தைத்து நடுவில் கருப்பு விழிபோல மை யெழுதி அதை எழுத்தாணியிற் குத்தி மடியில் வைத்துக்கொண்டு முகத்திற் றுணியைப்போட்டு மூடி அவ்வெழுத்தாணியோடு கண்ணிரப்பைக்குள் மையத்தில் வைத்து விழிப்பிதுங்கி வெளிக்கு வந்தாற்போற் காட்டிவைத்து உதிரத்திற்குப் பதிலாய் எவ்வித வர்ணம் அல்லது உதிரம் அங்கு ஒழுகவைப்பதற்குச் சரி சில மனிதர் உதிரமாகவே காட்ட நாக்கை மடித்துக்கடித்து முள்ளினாலாவது நகத்தினாலாவது கீறி அதில்வரும் உதிரத்தை ஒரு கையாற் பிடித்து மேற்படி கண்ணிலிருந்து வருவதுபோல் ஒழுகவிட்டு முகத்தில் மூடிய துணியைத்திறந்து முகத்தைக்காட்ட விழிகளையும் அதிற்குத்திய எழுத்தாணியுடன் பிதுங்கப்பட்டாற்போல் காட்ட வெகுஆச்சரியப்படுவர் பின்பு முகத்தைமூடி அக்கண்ணை மறைத்து எழுத்தாணியைப் பிடுங்கியதாய்க் காட்டவும்.

## பொம்மைத்தலை பேசும் வித்தை.

தீபத்தின் பின்புறமட்டுங் கிலிட்டுத் தகடுபோல் 2 அடி சுற்றளவில் 2 செய்து ஒன்றை இருபக்கமாட்டி மற்றொன்றை அதற்குநேர் பிசகாது 20 அடி தூரத்திற்குள் வேண்டிய விடத்தில்மாட்டி அங்கொருவன் பேசினால் முன்தகட்டைச் சற்றொத்தி 2, 3 அடி தூரத்திற் கேட்குமிடத்தில் ஒரு கொம்பை நட்டு அம்முனையில் ஒரு மனுஷ பொம்மைத்தலை வாய்திறக்கவும் கண்சிமிட்டவும் சூத்திரக்கயிறு மாட்டி அதைத்தரையிற் குழாயில்விடுத்துப் பின்தகட்டண்டைப் பிடித்து 2 தகட்டிற்கு மத்தியில் ஒரு துணி படுதாகட்டி பின் தகட்டண்டை யிருப்பவன் அச்சூத்திரக் கயிற்றை யிழுக்க அந்தத்தலை வாயைத்திறந்தும், மூடியும், அது கண்களைச்சிமிட்டியும் சுழற்றியுமிருப்பதில் அங்கொருவர் பேசினாலும் கேள்விகேட்டாலும் அச்சூத்திரக்கயிறு பிடித்தவன் அந்தத் தகட்டண்டைகேட்க அந்தச் சொல் இவனுக்குக்கேட்கும். அதற்கு மறுமொழி அவன் அந்தத்தகட்டண்டைச் சொல்ல இப்பொம்மையண்டை யிருப்பவனுக்கும் கேட்கும். மெதுவாய்ப்பேசினாலும் எப்பக்கமும் எந்நேரத்திலும் கேட்கும்.

## காதில் கல்லேற்றும் வித்தை.

தனது கையில் 3 கல்லையெடுத்து 1 கல்லைக் கையிலிடுக்கி மற்றொருகல்லை வாயினிற்போட்டு அக்கையினால் மூக்கைப்பிடித்து இடுக்கியகல்லை மூக்கிலிருந்துவந்ததைப்போல் வெளியில்விழக்காட்டி. மற்றொருகல்லை கையிலிடுக்கி இடதுகாதிற் போட்டதைப்போற் காட்டி வாயிலிருக்குங்கல்லை வெளியில் விழக்காட்டி, கையிலிடுக்கிய கல்லைத் தன் வலதுகாதிற் போட்டதைப்போற் காட்டி, இடுக்கி



யிருப்பதை இடதுகாதின்வெளியில் விழக்காட்டுவது நன்மை கல்லையிடுக்குவது வலதுகையிற் சுண்டுவிரல் நடுவிரல் அல்லது பவுத்திரவிரல் நடுவிற்று விருக்கவேண்டியது.

## காய்க்க பூர்க்க பூவும் பிஞ்சு முதிரும் வித்தை.

காய்க்க பூர்க்க பூவும் பிஞ்சும் உதிரும்படி செய்யும் வித்தை எவ்விதமெனில் கிலியும் ஓம் என்று சொல்ல மரமானது விசேஷமாகக் காய்க்கும் ஐ எ எ என்றுசொல்ல மரத்தில் பூவானது பூர்க்கானு கசி என்று சொல்ல மரத்திலுள்ள தளிரும் பூவும் உதிரும்.

## பச்சைமரம் பற்றியெரியும் வித்தை.

எந்தஜாதி மரமாயினும் பச்சென்று தழைத்திருப்பதைப் பார்த்து இந்த மரத்தை காலாக்கினிபோல் பத்தி எரியும்படிச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜ்ஜாலமையை முன்போலே கூட்டி விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை ஜெபித்து பச்சைமரம் பற்றியெரிய வேண்டுமென்று மனதில் ஸ்மரித்து மையை அம்மரத்தின்மேல் தெளிக்க உடனே காலாக்கினிபோல் பற்றியெரியும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு உன்னுடைய அருகில்வந்து ஐயாவென்று வணங்கி இப்போது எரிகின்றதீயை அடக்கி மரத்தை முன்போல் பச்சென்று தழைத்திருக்கும்படி செய்வாயா வென்பாராகில் அப்போது நீ அப்படியே செய்கிறேனென்று ஐங்கோலமையை யாருக்கும் தெரியாமல் விரலில்தொட்டு வாலையந்திரத்தை ஜெபித்து தந்திரமாக மரத்தின்மேல் தெளிக்க உடனே தீயானது அடங்கி முன்போல் பச்சென்றிருப்பதுபோல் தழைத்து தோற்றும் அனைவரும் ஆச்சரியப்பட்டு அடிபணிவார்கள்.

## நானாவித புஷ்பங்கள் கக்கும் வித்தை.

ஜாலமாடும் ஜாகையில் உள்ள சபையோர்களைப்பார்த்து இப்போது நாலுவித புஷ்பங்களை கக்கின விநோதங்களைப்பார்த்தீர்கள், இதோ பாருங்கள் பலவிதமான புஷ்பங்களும், கக்குகிறேன் பாருங்களென்று சக்கலாதேவி அக்ஷரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அஷ்டமாசித்தியையும் ஐங்கோல மையையும் மகா மாயமையையும் ஒன்றாய் மத்தித்து கையிற் பூசிக்கொண்டு கண்கட்டு மையை நிலர்தமிட்டுக்கொண்டு அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயரையும் மனதில் தியானித்து இரண்டுகையையும் இரண்டு தாடையின்மேல் வைத்து முன்போல் பலவித புஷ்பங்கள் கக்குவதுபோல் பார்ப்போர்கள் கண்களுக்குத் தோற்றவேணுமென்று மனதிலெண்ணி வாயை ஆவென்று திறந்துப்பார்க்க பலவித புஷ்பங்கள் கக்குவதுபோல் தோற்றும். அனைவரும் இது மகா புதுமையென்று பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் நீ முன்போல் மறைத்துவிடவேண்டும்.

நெல் பொரியும் வித்தை.

நெல்லை முன்மாதிரி சுண்ணாம்புக்காளவாயினடியில் புதைத்து வைத்துக் காளவாய் கொளுத்திய பின்னெடுத்துவந்து முறத்தில் போட்டுப் பிறட்ட பளபளவென்று பொறியும். இதைப்போல இன்னம் எந்தவஸ்துக்களை யேனும் செய்துக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| 192 | 199 | 2 | 7 |
| 6 | 3 | 196 | 195 |
| 198 | 193 | 8 | 1 |
| 4 | 5 | 194 | 197 |

சடாக்ஷர மந்திரம்.

செப்புத்தகட்டில் பதினாறறைச்சக்கரங்கீறி முனைகள்தோறும் சூலம்போட்டு, நானறை அதில்மாறி 'நமசிவய' என்று ஆயிரம்விசை செபிக்க வசியமாம்.

வேறு முட்டைக்குதிக்கும் வித்தை.

கோழிமுட்டையை எழுத்தாணியால் குத்தி உள்ளேயிருக்கும் அம்புலியையெல்லாம் நன்றாக வூற்றிவிட்டு அதின் நிறைய சிமைக் காடியைவிட்டு வாயை மெழுகினால்மூடி வெய்யலில் வைத்துவிட அதற்கு சூடேறினவுடன் எழும்பி எழும்பி குதிக்கும்.

குடம் பேசும் வித்தை.

எவ்வித லோகங்களிலாகிலும் டகர வளைவாய்க் குழை 8 அடி உயரம் 2 அடி கீழ் மட்ட முள்ளதாய் 5 அங்குலம் பருமனாய்ச் செய்து அடி மட்டத்தைப் பூமிக்குள் குழையாழத்திற் புதைத்து குழைக்குமேல் சில்லிகுத்திய ஒரு குடத்தை வைத்துச் சந்தடைத்து அடிமட்டத்து முனையிற் காதற்றுக்கேட்க குடத்தினருகிற் சொல்லுஞ் சொற்கள் அவனுக்குக்கேட்கும் அப்படிக் கேட்டுக்கொண்டவன் மறுபடியும் அக்குவாயை வைத்துச் சங்கதிகளைச் சொல்ல அக்குடத்தினிடமாய் கேட்கிறவர்களுக்கு அச்செய்தி தெரியும் பூமியிற் குழையண்டைப் பாத்திக்கட்டி வெகு பசந்தாய் வைத்திருக்க வேண்டியது.

ஜெகஜ்ஜால மை வித்தை.

கரும்பூனைப்பிச்சு, கருநாய்நாக்கு, தேவாங்குகண், பச்சோந்திக்கால், இரட்டாணைவால் இவ்வைந்தையும் எறழிஞ்சிகுழித்தைலத்தாலரைத்து தங்கச்சிமிளில்வைத்து சிவப்பு பட்டுத்துணிசுற்றிப் பத்திரமாய் வைத்துக்கொண்டிருந்து ஜாலமாடும்போது அதிற் கொஞ்சம் விரலிற்றொட்டுத் தடவி யாதொன்றையுஞ்செய்ய மகா விநோதமாயிருக்கும்.



மான்தோல் மானாகும் வித்தை.

மான்தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி நான் இந்தத்தோலை என்னுடைய மந்திர சக்தியினால் உயிருள்ள மானாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி துணியைப்போட்டுமூடி மகா மாயமையைத் தடவி காளியை மனதில் துதித்து ஜாலக்காலை நீனிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள மானாகவே தோன்றும்.

கடம்பைத்தோல் கடம்பையாகும் வித்தை.

ஓர் கடம்பையின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி நான் இந்தத்தோலை உயிருள்ள கடம்பையாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி ஓர் துப்பட்டியைமூடி கண்கட்டு மையைத்தடவி மாயமோகினியைத்துதித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள கடம்பையைப் போலவேதோன்றும். எல்லோரும் மகா ஆச்சரியப்படுவார்கள்.

சிவிங்கியின்தோல் சிவிங்கியாகும் வித்தை.

சிவிங்கியின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக்காட்டி இத்தோலுக்கு உயிர்கொடுத்து எழுப்புகிறேன்பாருங்களென்று சொல்லி மகா மாய மையைத்தடவி துப்பட்டியைப்போட்டு மூடித் திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள சிவிங்கியாகவே தோன்றும்.

கரடித்தோல் கரடியாகும் வித்தை.

கரடியின் தோலைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி நான் இந்தத்தோலை உயிருள்ள கரடியாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி ஜாலக்காலைத் துதித்துக் கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப்போட்டுமூடி காளியின் மந்திரத்தைச் செபித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள கரடியாகவே தோன்றும்.

புலித்தோல் புலியாகும் வித்தை.

புலியின் தோலைக்கொண்டுவந்து அனைவர்களுக்குக் காண்பித்து இத்தோலை உயிருள்ள புலியாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப்போட்டுமூடி மாயமோகினியைத்தியானித்துத் திறந்துக்காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள புலியைப்போலவே தோன்றும் அனைவர்களும் பிரமிப்பார்கள்.

நரித்தோல் நரியாகும் வித்தை.

நரித்தோலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி

நான் இந்தத்தோலை உயிருள்ள நரியாகச்செய்கிறேன் பாருங்களே ன்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி துப்பட்டியைப் போட்டு மூடி நீலகண்டியைத்தியானித்து திறந்துகாண்பிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள நரியைப்போல உலாவும் அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

### தீவட்டி குதிக்கும் வித்தை.

ஓர் பறக்குறவையை தீவட்டியில் வைத்துச்சுருட்டி எண்ணெயில் தோய்த்து வால்புறத்தில் தீகொளுத்தி வைத்துவிட அது குதித்துக்கொண்டேயிருக்கும்.

### பிசாசுகள் விலகும் வித்தை.

பேய் பிசாசு பிடித்தவர்களுக்கு கக்கூஸ்களில் மலத்தை வாரும் துடப்பத்தில் ஒருகுச்சை ஒடித்து குளிசமாடிக்கட்ட பிசாசுகள் விலகி விடும்.

### கரைத்த மஞ்சளை எடுக்கும் வித்தை.

மஞ்சளை அரைத்து ஜலத்தில் கலக்கிவிட்டு நீர்முள்ளி விரையைத் தூளாக்கித்தூவி கையைவிட்டுக்கலக்கியெடுக்க மஞ்சள் மொத்தையாகத்திரண்டு வரும்.

### வைக்கோலெரியும் வித்தை.

வைக்கோல்கள் கும்பலாகயிருக்குமிடத்தில் கொஞ்சம் திமுருகல் பாஷாணத்தை ஈரக்கந்தையில் சுற்றி அதின் பேரில் போட்டுவிட்டு வந்து விட சற்றுநேரத்திற்குள் காற்றின் வேகத்தினால் அவ்வைக்கோலானது பற்றி யெறியும்.

### ஓலைத்தேள் ஓடும் வித்தை.

ஓலையினாலாகிலும், மெல்லிய அட்டையினாலாகிலும் தேளைப்போல உருவங்கத்தரித்து அதை நாயுண்ணியின் முதுகில் ஒட்டவைத்து கீழே விட்டுவிட அதுநகர்ந்து போகிறது தமாஷாக யிருக்கும்.

### கண்ணாடி மெல்லும் வித்தை.

வேளை வேரை வாயில்விட்டு மென்று நன்றாகக்குதப்பி துப்பிவிட்டு கண்ணாடித்துண்டுகளை மெல்ல அவைகள் முறுக்கைப்போல் மாவாகப்போய்விடும். பல்கூசாது வாயறுபடாது.

### கம்பு பொரியும் வித்தை.

கம்பை முன்மாதிரி சுண்ணாம்புக்காளவாயினடியில் புதைத்து வைத்துக் காளவாய் கொளுத்திய பிறகு எடுத்து வந்து முன் மாதிரி முறத்தில் போட்டுப் பிறட்ட பளபளவென்று பொறியும்.

## சுப்பிரமண்ணியர் மந்திரம்.

ஓம் கிரீயும் ரீயும் ஐயும் சவ்வும் சவ்வும் யிம் அரியும் அரியும் சிவபத்திர சிவசுப்பிரமண்யா ஓடிவா சக்கிராயுதா ஓம் வேலாயுதா ஓம் சூலாயுதா காலகாலாந்தகா லலலல லிலிலிலி லுலுலுலு குமாரகார்த்திகேயா குக்கிடதுவஜாய சீக்கிரம் சீக்கிரம் வாவா பாலசுப்பிரமண்யா ஓடிவா மாதுங்கமாயா வா ஓம் சத்திபில வா வா ஓம் ஐயும்ஐயும் ஓம் டையும்டையும் கொண்டோடிவா சீக்கிரம் வாவா விக்கிரக சமஸ்தபூத பிசாசுகளையும் கட்டுகட்டு காட்டேரி மூட்டேரி கனாடசூன்னியம் வந்த சூன்னியம் தொத்து சூன்னியம் ஏவல் சூன்னியம் சூலாடு குத்தி சுடலையில் பொணத்தமையும் பாலோடு குத்தி பாலமூர்தம் செய்தமையும் கல்லோதி எறைத்த வரும் உப்போதி எறைத்தவரும் கிழலோதி எறைத்தவரும் ஐயும் மவ்வும் சவ்வும் பிடிபிடி படிபடி குத்து குத்து கயறெடு கட்டு கட்டு முட்டுமுட்டு மோது மோது யிடியிடி கட்டிக்கொண்டோடிவா ஓம் சிவசுப்பிரமண்யா படுபடு கெடுகெடு கொட்டு பறிபறந்தோடிப்போக சுவஹா:

### மூலமந்திரம்.

ஓங் சுரீங் ஹ்றிங் கிலீங் ஐங் சவ்வும் ஓம் சரஹணபவா

உருவு 108 நாள் 40 ஜெபம் செய்யவும்.

### மணிமந்திர சாபநிவர்த்தி.

சிங் நயவசிரிங் விரீம் ஸ்ரீங் கிலீங் ஓம் ஆம்பட்டு சுவஹா:

உருவு 103

### வயித்திய சாபநிவர்த்தி.

ஆங்கார ஹீங்கார ஊங்கார ஹ்றகார ஹ்றறங் சிவயநம

உருவு 108

### சுப்பிரமணியர் சக்கரம்.

முதல் வசிகரம். இரண்டாவது அக்ஷரம் மாரல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ண | ப | வ | ச | ர | ஹ |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| வ | ச | ர | ஹ | ண | ப |

அந்தந்த சக்கரமறிந்து அந்தந்த காரியத்தை மாறிச்செய்யவும். செப்பு பலகையில் வரிந்து அபிஷேகஞ் செய்து கர்ப்பூரம் சாம்பிராணி தேங்காய் பழம் பொங்கல் வைத்து பூசைசெய்து இந்த யந்திரத்திலிருக்கும் பீஜாக்ஷரத்தை ஜெபிக்கவும். ஞாயிற்றுக்கிழமையில் செய்யவும்.

இரண்டாவது அக்ஷரம் முதல் நாலாவது அக்ஷரம் மாறல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ப | வ | ச | ர | ஹ | ண |

இது ஆக்ருஷ்ணமாகும். அத்திப்பலகையில்வரிந்து செய்யவும்.

மூன்றாவது அக்ஷரம் முதல் ஐந்தாவது அக்ஷரம் மாறல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ப | வ | ச | ர | ஹ | ண |

இது மோகனமாகும். மாம்பலகையில் வரிந்து செய்யவும்.

நாலாவது அக்ஷரம் முதல் ஆறாவது அக்ஷரம் மாறல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ண | ப | வ | ச | ர | ஹ |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ச | ர | ஹ | ண | ப | வ |
| வ | ச | ர | ஹ | ண | ப |
| ப | வ | ச | ர | ஹ | ண |

இது பேதனமாகும். எட்டிப்பலகையில் வரிந்து செய்யவும்.



ஐந்தாவது அக்ஷரம் முதல் இரண்டாவது அக்ஷரம் மாறல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப | வ | ச | ர | ஹ | ண |
| வ | ச | ர | ஹ | ண | ப |
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ண | ப | வ | ச | ர | ஹ |

இது ஸ்தம்பனமாகும். ஈயத்தகட்டில் வரிந்து செய்யவும்.

ஆறாவது அக்ஷரம் முதல் மூன்றாவது அக்ஷரம் மாறல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ | ச | ர | ஹ | ண | ப |
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ஹ | ண | ப | வ | ச | ர |

இது உச்சாடனமாகும். செப்புத்தகட்டில் வரிந்து செய்யவும்.

ஸ்தம்பனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந | ம | சி | வ | ய |
| ம | சி | வ | ய | ந |
| சி | வ | ய | ந | ம |
| வ | ய | ந | ம | சி |
| ய | ந | ம | சி | வ |

பெலாப்பலகையில் வரிந்து செய்யவும்.
கிழக்குமுகம். கிஷ்டாஞ்சனம். உருத்திராக்ஷம்.

### மோகனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ய | ந | ம | சி | வ |
| வ | சி | ய | ந | ம |
| ம | ந | ய | வ | சி |
| சி | வ | ய | ந | ம |
| ம | ந | ய | வ | சி |

எருக்கன் பலகையில் வறிந்து செய்யவும்.
வடக்குமுகம் தர்ப்பாசனம். துளசிமாலை.

### உச்சாடனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வ | ய | ந | ம | சி |
| ந | ம | சி | வ | ய |
| சி | வ | ௐ | ந | ம |
| ய | ந | ம | சி | வ |
| ம | சி | வ | ய | ந |

எட்டிப் பலகையில் வறிந்து செய்யவும்.
மேற்குமுகம். புலிபாசனம. தாம்பிரமணிமாலை.



### பேதனம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம | சி | வ | ய | ந |
| ய | வ | ந | ம | சி |
| ம | சி | ௐ | ய | ந |
| ய | வ | ந | ம | சி |
| ம | சி | வ | ய | ந |

மாம்பலகையில் வறிந்து செய்யவும்.
தெற்குமுகம். பட்டாசனம். மெழுகு மாலை.

### வித்வேஷணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம |
| ந | ய | வ | சி | ம |
| சி | வ | ௐ | ந | ம |
| ந | ய | வ | சி | ம |
| சி | வ | ய | ந | ம |

அத்திப்பலகையில் வறிந்து செய்யவும். புலி ஆசனம் அல்லது
தர்ப்பாசனம். சனிமூலை. படிகமாலை.

## ஆக்கிருஷ்ணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வ | சி | ம | ந | ய |
| சி | ம | ந | ய | வ |
| ம | ந | ௐ | வ | சி |
| ந | ய | வ | சி | ம |
| ய | வ | சி | ம | ந |

அரசன் பலகையில் வரைந்து செய்யவும்.
வடமேற்குமுகம். மாலை உருத்திராக்ஷம்.

## மாரணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம | சி | வ | ய | ந |
| சி | வ | ய | ந | ம |
| வ | ய | ௐ | ம | சி |
| ய | ந | ம | சி | வ |
| ந | ம | சி | வ | ய |

எருமை பலகையில் வரைந்து செய்யவும். ஆசனம் பிதாம்பரம்.
தெற்குமுகம். மாலை நீலமணி.



## வசியம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வ | சி | ய | ந | ம |
| சி | ய | ந | ம | வ |
| ய | ந | ௐ | வ | சி |
| ந | ம | வ | சி | ய |
| ம | வ | சி | ய | ந |


தாம்பிரத்தகட்டில் வரைந்து செய்யவும்.
மஞ்சள் துணி ஆசனம். ரீதென்கிழக்கு முகம். தாம்பிரமணி.

## இந்தச் சக்கரம் ஐம்பத்தோரக்ஷரம் மாரல்.

| | | | | |
|---|---|---|---|---|
| ந கே | ம கூ | சி சா | வ ெஅ | ய ஏ |
| ம கூ | சி சா | வ ெஅ | ய ஏ | ந கே |
| சி சா | வ ெஅ | ய ஏ | ந கே | ம கூ |
| வ ெஅ | ய ஏ | ந கே | ம கூ | சி சா |
| ய ஏ | ந கே | ம கூ | சி சா | வ ஜே |

நகாரத்தில் மகாரம் சுத்து
மகாரத்தில் வகாரம் சுத்து
வகாரத்தில் யகாரம் சுத்து
யகாரத்தில் சிகாரம் சுத்து
சிகாரத்தில் யகாரம் சுத்து


## தாரகநாம யந்திரம்.



இந்த யந்திரத்தில் வறிந்து இருப்பதே மூலமந்திரமாகும்.



நீலகண்ட எந்திரம் சகலத்துக்கும் வாசல் பொழக்கடை இதுகளுக்கு பீயத்தகட்டில் போட்டு அடிக்கவும்.




## மந்திரம்.

ஓம் நமசிவாயவென்று 108 ஜெபித்து அடிக்கவும்.

ஷே எந்திரத்திற்கு அபிஷேகம் செய்யவும். புஷ்பம் கற்பூரம் சாம்பிராணிவத்தி அவல் கடலே தேங்காய் வாழைப்பழம் பச்சரிசி வடை தோசை பரமான்னம் வைத்து ஜெபஞ்செய்து வாசல்படிக்கி அடிக்கவும் வெள்ளிக்கிழமை மட்டும் தூபதீபம் கொடுத்து வரவும்.

இந்த எந்திரம் சர்வகிரகம் ஏவல் பிள்ளையில்லாதவர்களுக்கு வெள்ளித் தகடு அல்லது பொன் தகட்டில் கட்டவும் 11 நாள் முழுகி இரண்டுவேளை கோவில் சுத்தவும்.





இந்த எந்திரத்திற்கு அபிஷேகஞ்செய்து சந்தனப் பொட்டு குங்குமப்பொட்டு வைத்து தேங்காய் கற்பூரம் சாம்பிராணி வெல்லம் தாம்பூலம் வாழைப்பழம் வடை தோசை பச்சரிசி வடபருப்பு பான கம் சாராயம் கஞ்சா கருட்டு கோழி பலிகொடுத்து மூன்று தினா நாளில் சுத்திக்கட்டவும் சகலமும் ஓடிப்போம் இதற்கு சுப்பிரமணிய மந்திரம் ஜெபிக்கவும்.




கிரகங்களை ஓட்ட கலசம்பதி நிருத்தும் விபரம்.

நாயிற்றுக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை இந்த நாளில் வீட்டைமெழுகி பதி சிங்காரித்து கிழக்கு முகமாக பதி வைக்கவும். பதியின்கீழ் பச்சரிசியாவது அல்லது நெல்லாவதுபோட்டு அந்த நெல்லின்பேரில் எந்திரம் யெழுதவும்.





இந்த எந்திரம் நெல்லின்பேரில் யெழுதி அதின்பேரில் பதியை வைக்கவும். விளக்கேற்றும்போது அந்த ஊர் கிராமதேவதை அந்தவீட்டு பூவாடைக்காரிகளை மனதில் எண்ணி பதிவிளக்கேற்றவும் புஷ்பம் கற்பூரம் சாம்பிராணி தேங்காய் அவல் கடலை வெல்லம் வடைபருப்பு ஊதுவத்தி வாழைப்பழம் குங்குமம் தக்ஷிணை தாம்பூலம் வைத்து நைவேத்தியம் செய்யவும்.


கிரகம் பிடித்தவர்களை ஸ்நானஞ்செய்து வரச்சொல்லி யிந்த எந்திரமீது உட்கார வைக்கவும்.



கிரகத்துக்கு சூடேர முரத்தில் போடும் எந்திரம். தேய்க்கவும்.




ஆதாரமாய் நமக்கெதிரில் தட்டில் விபூதி போட்டு இந்த எந்திரம் யெழுதி வைக்கவும்.




இந்த எந்திரம் தட்டிலும் போடவும் வெற்றிலையில் போட்டு கிரகம் பிடித்தவர் கையில் கொடுத்து பதிவிளக்கை பார்க்கும்படி சொல்லவும். முதல் விக்நேஸ்வரர் துதி, இரண்டாவது ஊர் கிராம தேவதை துதி, மூன்ருவது அனுமார் துதி, நாலாவது சுப்பிரமணியர் துதி இப்படி துதிசெய்து அப்பால் கிரக உச்சாடணம் செய்யவும்.




ஆடும் திரிபுர காளி எந்திரம்.



சண்டிகிரகம் முனி இதுகள் கொஞ்சத்தில் ஆடாமல் யிருந்தால் திரிபுரகாளி எந்திரம் போடவும்.


குன்னியக் கிரகம் சகலகிரகமும் ஒட்டும் பூதமாரணம் மந்திரம் எந்திரம் அறியவும்.



ஓம் வீராயா ஓம் விரபத்திருயா அகோருயா அகோற பைபிற வாயா உக்கிருயா வுக்கிறசுவரூபாயா யெரி யெரி சகலபூத பிரேதவிநாசனுய சுவாஹ: உருவு 108 நாலு மூலையில் சாணிவுறண்டை வைத்து நாலு விளக்கேற்றி வைக்கவும் மூன்று தினுசு எண்ணை அறியவும்.

இதுவும் பூதமாரண சக்கரம் இதன்பேரில் சூன்னியம் கிரகத்தை உட்காரவைக்கவும்.

தேங்காய் 2, கற்பூரம் சாம்பிராணி ஊதுவத்தி அவல் கடலை சொட்டி சுருட்டு சாராயம் வெல்லம் தாம்பூலம் வைக்கவும் தக்ஷிணை.




முன் பூதமாரண எந்திரத்தின்பேரில் யெறிப்பு செய்யும் சமுத்து விபரம்—

| | |
|---|---|
| ஆலன் விரகு | கடைதினுசுகள். |
| அரசன் விரகு | சோமநாத பெருங்காயம் |
| அத்தி விரகு | பெருங்காயம் வெள்ளமெழுகு |
| மாங்கா விரகு | கெந்தகம் மருவூமத்தன் |
| எட்டி விரகு | மைசாக்ஷி எட்டிக்கொட்டை |
| எருக்கன் விரகு | குங்கிலியம் வேப்பமுத்து |
| அவிஞ்சி விரகு | பூதபத்திரி வால்மிளகு |
| நாயுருவி விரகு | நவதானியம் |
| வன்னிவிரகு | |

இந்த தினுசுகளை மேற்படி எந்திரத்தில் எறிக்கும்போது கடைதினுசுகளை யிடித்து கொஞ்சம் கொஞ்சமாக போட்டுவரவும். பெட்டைக் கோழி காவுகொடுத்து கண்டம் கண்டமா யரிந்து ஓமத்தில் போடவும் சகலமும் ஓடும் சூன்னியக் கிரகமும் ஆடும்.




## அனுமந்த மந்திரம்.

அரிஓம் அனிக்கனேக அனுமந்தா பாலகுமாரா லங்காபுரி மன்னா உத்தண்டா உன்றகா பிரதிஷ்டமன்னா காதில்யிட்ட கவச குண்டலமும் குஞ்சிச்சடையும் குரங்கு முகமும் பச்சை நாமமும் மகரபிடாரமும் மந்திரபக்தியும் துளசிமாலையும் சங்கு சக்கரமும் பூவும் புறமும் பச்சைநூலும் மூலையும் கலையும் ஆதினமும் தண்டாயுதமும் யேகவேஷ்டியும் கொண்டுவந்து சங்கரா சங்கரி நீரா என்னோடெதிர்த்த சத்துருதிகளை உச்சியைப் பிளந்துவிடு வுண்ணாக்கை கடித்துவிடு நெஞ்சைப்பிளந்துவிடு நீருபோலாக்கிவிடு கழுத்தை முறுக்கிவிடு கதவை பொலியாக்கிவிடு எல்சாண் வுடம்பு மிளகாயா பாஞ்சுவிடு ஓம் பறுபறு பட்டுபட்டு மெறட்டு மெறட்டு ஆதிகாராயஞ் கோட்ட காராபனு என்னிடத்தில் தப்பாமல் வந்து நில்லும் அறே அனுமாறே அறேதேறுயா கிருஷ்ணான் தலையைதிருகியெடுத்தவனே வாவா இலங்கையைச் சுட்டவனே வாவா பலமுள்ள சித்திரனே வாவா யெரிந்த முகத்துடனே வாவா யெறிச்சடையோனே வாவா நில்லு நில்லு நீதியுடனே நில்லு என்னோடே போலே ஆடவந்த சத்திராதிகளை பஞ்சமுகம் ஒருமுகமாய் தாக்கு தாக்கு பேய்பிசாசுகளையும் பிரம்மராக்ஷதிகளையும் தாக்கு தாக்கு காட்டேறி முனிகள்யேவல் பட்பு சூன்னியங்களையும் தாக்கு தாக்கு யெரி யெரி திரி திரி பேசு பேசு வீசு வீசு ஓம் ஓம் ஆம் ஆம் றீம் றீம் றாம் றாம் சிக்கிரம் சிக்கிரம் வேக்கிரம் வேக்கிரம் ஆக்கிரம் ஆக்கிரம் ஓங்காரம் ஓங்காரம் ஓம் அனுமந்தா அஞ்சனாதேவி அனுமந்தா வரபுத்திரா ஸ்ரீரும பாதசேவகா ஆவேஷம் ஆவேஷம் கொட்டு கொட்டு முட்டு முட்டு தாக்கு தாக்கு சீக்கிரங்கொண்டுவா அஞ்சனாதேவி பாதத்தாணை கொண்டுவா ஓம் ஓம் பட்டு பட்டு முட்டு முட்டு கொட்டு கொட்டு ஓம் ஓம் சுவாஹா :

## அனுமந்த மூலமந்திரம்.

ஓம் அங் டங் அஞ்சனாதேவி பாலகுமார அனுமந்தா வாவா சுவாஹா :

## அனுமார் யந்திரம்.




ஊமைக்காத்தாட காளி மந்திரம்.


ஓம் திரிபுர சங்காரி திரிகண்ட மூர்த்தி அகோரி ஆங்காரி சிவசத்தி வாவா மயிட சங்காரி மனோன்மணி நீலகண்டி யெழுந்திரு எழுந்திரு யெல்லையில் பூசை என்னுட எல்லை அல்லும் பகலும் அருந்தவர் அடியேன் மூலையில் பூசை முர்ப்பூசைகொள்ளும் அந்தியில் பூசை ஆர்சிபுடன் காவல் முர்ப்பூசை கொண்ட பூலோக சந்தி வா வா எட்டுதிக்கும் கட்டி உன்னிருப்புமகட்டி அக்கினிவிட்டு அகோரம் யெறித்து மூட்டினேன் யெழுந்திரு யெழுந்திரு யென்னை அடியேன் யெழுதும் சக்கரம் காலைப்பொழுதில் கட்டி யெறிப்பேன் கொப்பிட்டக்காது கூப்பிட்டசத்தம் ஆப்பிட்டு வந்தவராகி சீக்கிரம் சீக்கிரம் தாக்கு தாக்கு முறி முறி உதிரங்குடி இடது பிடுங்கி வயிறுத்தோடணிந்த மகாசத்தி சீக்கிரம் சீக்கிரம் படிபோநீலி துஷ்டனையடிக்க கட்டி யெழுப்பமுட்டத்தடர்ந்து யெங்காரமாத்தி வைப்பய் பிரம்மா விஷ்ணு ருத்திரன் மும்மூர்த்திகள் பேறிலாணை பாரு பாரு யெரி யெரி அரி அரி பிடி பிடி தாக்கு உன்னிட குருமூல ஞானியான் பேரிலாணை சீக்கிரம் சீக்கிரம் முறி முறி உதிரங்குடி உன் பலிபீடத்தின் பேரிலாணை வா வா ஓம் போ போ ஓம் நமசிவாயம் ஓம் ஓம் ஆம் ஆம் யீம் யீம் ஊம் ஊம் ரம் ரம் செம் அவ்வும் மவ்வும் உவ்வும் ஓம் ஓம் பட்டு சுவஹா:

### மூலமந்திரம்.

சகல அம்பாதுர்க்கி ஆவேச ஆவேச மார் மார் சிநாமார் செப்சிறு நசீன ஓம் ஓம் பட்டு சுவஹா:



## காளி எந்திரம்.




### வீரபத்திர மந்திரம்.


ஓம் வீரபத்திரா அகோர வீரபத்திரா ராக்ஷசமுக வீரபத்திரா விரித்தசடையும் வேங்கை புலித்தோலும் எறிந்த கண்ணும் ஏருநெத்தியில் இளம்பிறை சந்திரன் அரையில் கிங்கிணி அர அரா வென்ன தேவர் நடனம் கால்சிலம்பு கலகலவென்ன சப்தரிஷிகளும் தளதளவென்ன அண்டபிண்டமதிர கண்டதுண்டமா துர்க்கியை அடித்துவா வீரபத்திரா ஆயிரஞ் சிரசும் உகதாய நாலாயிரந் திருகண்ணும் கோடி பிரகாசமும் ஒருகையில் வில்லும் ஒருகையிலம்பும் ஒருகையில் சங்கும் ஒருகையில் சக்கிரமும் ஒருகையில் கண்ட கோடாலியும் ஒருகையில் மானும் அரியும் சிவனும் நடுங்கும் மழுவும் ஒருகையில் தடியும் ஒருகையில் நாகாயுதமும் ஒருகையில் அய்ராவதமும் பலவிதமாக சிங்கப் பல்லும் சிரியமுகமும் தங்க மேருவடியில் தாண்டவமாடும் ஒருகை திரிசூலத்தை வாங்கி ஆகாயத்தில் எரி எரி போரி போரி பேசு பேசு எதிரேயொருபாசக்கயர் கொண்டு கட்டுவேலைக்கொண்டு விசிறி மிடி மிடி கட்டு கட்டு ஒதை ஒதை மெரி மெரி உரி உரி திரி திரி ஜாடு ஜாடு மாரு மாரு லாவு லாவு ஆம் ஆம் வீரபத்திரா அதட்டிவா உக்ரங் கொண்டுவா உத்தண்ட வீரபத்திரா கோலாகல சொருபா டாங்கு டாங்கு டாங்கு லகலல லிலிலிலி லுலுலுலு டம் டம் உக்ரங்கொண்டுவா உத்தண்ட வீரபத்திரா அஞ்சாதே ஆண்டவன் பரமேஸ்வரன் ஆணைவோடிவா உன் தாயார் மஹா சத்தி ஆணை வா வா நான் நினைத்த வேலையில் ஓடிவா என்னெதிராளிமேல் யேரு யேரு பில்லி பிசாசுகள் அந்தி சந்திப் பேய் உச்சிப்பேய் கொள்ளிப் பேய் ரத்தக்காட்டேரி ருவ் யிரிசி பகலிரிசி வீட்டுப்பேய் சூன்னியப்பேய் மகாளிப்பேய் முக்கற் பேய் எப்பேர்க்கொற்றதையும் சூலங்கொண்டு குத்தி பாசத்

தாலே குத்தி பாரனிலங்கிடு பத்ரம் சிக்கிரம் சிவன் பாதத்தாலே உரிட்டி அதட்டி அதி சிக்கிரம் சிவசிவபான லைலை உத்தண்ட வீரபத்திரா சகல தேவதைகளையும் கட்டிக்கொண்டுவா சுவாஹா:

மூலம்.

அவி தநீ கோர அகோர வீரபத்திராவா மாறணி மார் மா ஓம் பட்டு சுவாஹா:

வீரபத்திர எந்திரம்.




ரக்ஷாபந்தனம் செய்யும் மந்திரம்.

ஓம் அகார உகார மகார நமசியவாயா அனவரதபூரணி ஆனந்தி ஆவியும் வுடலும் கருவி காரணாதி தொண்ணூற்றாரு கருப்பு பிணிகாலன் வராமல் கட்டிகார்க்க விநாயகர் கார்க்க வீரபத்திரன் அனுமான் வயிரவன் காளிகந்தையன் கட்டிக்கார்த்து காவலாயிருக்க சுவஹா:

சந்தான விர்த்திக்கு மந்திரம்.

எந்தன் குருவாழி சிவன்வாழி ஓம் சிவரக்ஷணி நாதபிந்துகளாவாசினீ கர்மம் தர்மம் தர்மம்நீ பிர்ம்மநீ சந்தானகாரணிநீ சமஸ்த்தநீ சராசரநீ ஸ்தாபரநீ சங்கமநீ சாம்பவி விஷ்ணுருத்திர மயேஸ்வர சதாசிவ மனோன்மணிநீ நித்திய கல்யாண சவுந்தரி ஓம் நமசிவாயா ஆம் ஊம் மாம சுவாஹா:

உடல்கட்டு மந்திரம்.

உடல் உக்கிறக்காளிகாவல் தலை தக்ஷகன் காவல் நெத்திபுருவம் சித்திராதேவி கால்கன்னம் சந்திகாட்டேரி காவல் காது மூக்கு வாய் பல்லு அகோர வீரபத்திரன் காவல் யீஸ்வரிபந்து அய்யனார் பந்து ஜந்து வுயிருக்கும் ஆயிரத்தெட்டு நரம்புக்கும் அகஸ்திய மஹாமுனி காவலாயிருக்க சுவஹா:



சகல எந்திரம் சகல காரியம் சகல பதிகள் பிதாகளுக்கு அர்ச்சனை பிராண பிரதிஷ்ட்டை செய்யும் மந்திரம்.

ஓம் கணபதியே நமா
ஓம் கஜமுகாய நமா
ஓம் ஆறுமாகனனே நமா
ஓம் ஆதாரப்பொருளே நமா
ஓம் வல்லவபாதா நமா
ஓம் வரந்தரும் குருவே நமா
ஓம் சாரதாம்பா நமா
ஓம் சத்தியே நமா
ஓம் சற்குணியே நமா
ஓம் சகலகாரணியே நமா
ஓம் சாம்பவியே நமா
ஓம் சாரசரப்பொருளே நமா
ஓம் அனுமார்தாய நமா
ஓம் வாய்வு புத்திராய நமா
ஓம் சஞ்சிவிராயா நமா
ஓம் ராமதூதாய நமா
ஓம் ராக்ஷசகாலாய நமா
ஓம் விஸ்வரூபாய நமா
ஓம் சரவணபவாய நமா
ஓம் சயலொளிபவாய நமா
ஓம் திரிபுறபவாய நமா
ஓம் சிவவொளி பவாய நமா
ஓம் பரிபூரபவாய நமா
ஓம் பவரொளிபவாய நமா
ஓம் வேலாயுதாய நமா
ஓம் சூலாயுதா நமா
ஓம் சூரசங்கார நமா
ஓம் குகாய நமா
ஓம் குக்குட துவஜாய நமா
ஓம் குங்குமவர்ணாய நமா
ஓம் குமரகுருவே நமா
ஓம் கந்தாய நமா
ஓம் கார்த்திகேயா நமா
ஓம் வள்ளலே நமா
ஓம் வள்ளிசமேதா நமா
ஓம் மயில்வாகனனே நமா
ஓம் மாதங்கமாய நமா
ஓம் சாம்பவிபுத்திராய நமா
ஓம் சதாசிவாய நமா
ஓம் சங்கரபிரபுவே நமா
ஓம் நீலகண்டாய நமா
ஓம் நிர்த்தண்டமூர்த்தியே நமா
ஓம் ஆராதரனே நமா
ஓம் ஆதிமூர்த்தியே நமா
ஓம் அரஅரசிவயா நமா
ஓம் அகலங்கமூர்த்தியே நமா
ஓம் நமசிவாய நமா
ஓம் ஜடாதராய நமா
ஓம் வீரபத்திராய நமா
ஓம் வீரபத்திரியே நமா
ஓம் பசாசருத்திரியே நமா
ஓம் விஷ்ணுவே நமா
ஓம் விஜயகோபாலா நமா
ஓம் பத்மநாபாய நமா
ஓம் தாமோதராய நமா
ஓம் யாதவாய நமா
ஓம் மதுசூதனாய நமா
ஓம் சங்கரக்ஷணா நமா
ஓம் அப்பரமேயா நமா
ஓம் வரதா நமா
ஓம் அரியே நமா
ஓம் முகுந்தாய நமா
ஓம் சக்ரபாணியே நமா
ஓம் முசிகுந்தா நமா
ஓம் வாசுதேவா நமா
ஓம் ஹரிஓம் நமோநாராயணா நமா
ஓம் ஸ்ரீமதே ராமானுஜாய நமா
ஓம் வாலையே நமா
ஓம் வாலைபரமேஸ்வரியே நமா
ஓம் பஞ்சேந்திரியே நமா
ஓம் பஞ்சபூதாய நமா
ஓம் பிராணாயா நமா
ஓம் பிராணபிறதிஷ்டாய நமா
ஓம் நடசிவாய நமா
ஓம் நாதபிந்துவே நமா
ஓம் அன்பத்தோராக்ஷராய நமா
ஓம் த்ரியாக்ஷராய நமா
ஓம் சடாக்ஷராய நமா
ஓம் அகாரியே நமா
ஓம் வுகாரியே நமா
ஓம் நகாரியே நமா
ஓம் மகாரியே நமா
ஓம் சிகாரியே நமா
ஓம் வகாரியே நமா
ஓம் யகாரியே நமா
ஓம் பிராணாய நமா
ஓம் பிராணபிரதிஷ்டாய சுவஹா
தேவிசகாயம் உண்டாகதாகவும்

## பாலகிரகத்திற்கு மை.

ஞாயிற்றுக்கிழமை காலையில் கருங்கழுதை இடத்திற்குப் போய் வயத்தின் கீழிருக்கும் ஜடை இரண்டு கத்தரித்துக்கொண்டு அத னுடைய நாலுகால் குளம்புகொஞ்சம் வெட்டிக்கொண்டு சின்னகுடு வையில் போட்டு பெருங்காயம் கால்பலம் கூடச்சேர்த்து கவசம் செய்து 7 அல்லது 8 வெரட்டியில் வைத்து யெடுத்துக்கொண்டு வேப்பெண்ணையாவது பண்ணி நெய்யாவதுவிட்டு யிழைத்து டப்பி யில் வைத்துக் கொள்ளவும் குழந்தைகளுக்கு நெற்றியிலிடவும். அரியவும்.

## அஞ்சன மை.

ஞாயிற்றுக்கிழமை காலையில் நரிமெறட்டிக்கி சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி தேங்காய் பச்சரிசி வெல்லம் கற்பூரம் சாம்பிராணி நைவேத்தியம் செய்து செவ்வாய்க்கிழமை காலையில்போய் மஞ்சள் தண்ணீரையெறைத்து வேறுமல் பிடிங்கிவந்து வேர்பட்டை கஸ் தூரி மஞ்சள் தேத்தான்கொட்டை ஒன்றுசேர்த்து மஞ்சள் தண்ணீர் விட்டு அரைத்து பில்லைதட்டி அகலில் வைத்து நல்லெண்ணை விளக் கேற்றி மை பிடித்து சிமிளில் வைத்துக்கொண்டு நல்லெண்ணையில் குழைத்து வெற்றிலையில்போட்டுப் பார்க்க ஓடும். சர்க்கரை பச்சரிசி பால்விட்டு பொங்கல்செய்து வைக்கவும் தேங்காய் கற்பூரம் சாம்பி ராணி ஊதுவத்தி பழம் வைத்து பூசைசெய்யவும்.

மந்திரம்.

அங் டங் அஞ்சனாதேவி பாலகுமார அனுமந்தா வாவா.


அக்ஷதை விக்னேஸ்வரர்மீது எரைக்கவும் மை வுருகும். உருவு கொடுக்கவும் அப்படிக்கி மிறன் உருகும்போது விழுந்தால் வீரபத்திரன் வுச்சாடனம் அல்லது அனுமந்த வுச்சாடனம் உச்சரி க்கவும்.

## சகல பாலகிரகத்திற்கும் மந்திரம்.

ஓம் நமோபகவதே ஓம் நமசிவாயா ஓம் சர்வமோகினி ஓம் சர்வ வஜீகரி ஓம் சர்வ வாக்கிருஷ்ணி ஓம் சர்வஸ்தம்பினி சர்வவுச் சாடனி சர்வகுலவேடனி சர்வபேகிரி சர்வமேதினி சர்வ சத்துரு னிவாரணி மார்மார் சர்வசத்துரு மாரணி மார்மார் ஓம்பட்டு பகவதி சுவஹா:



பாலகிரக





எந்திரம்.

10 வருஷத்திற்கு மேல்கண்ட பாலகிரகதோஷத்திற்கு சுப்பிர மணிய எந்திரம் கட்டவும். பாலகிரக மந்திரம் ஜெபிக்கவும்.


சகல எந்திரம் சகல தேவாலயத்திர்க்கும்
பிரதிஷ்டை செய்யும் மந்திரம்.

ஓம் உகார அகாரவிந்து நாதநித பகவதா சசில ஓம் நமோ பகவதே ஓம் நமோ குருவே ஓம் சம் ஆம் ஓம்சிவாய நமா ஓம் கம் பிராண பிரதிஷ்டாய நம: மந்திர பிராணயா யிகப்பிராணயா மந் திர சிவாயே கிரஹிதா மந்திர சர்வமந்திராணி வாக்குக்கும் மன சுக்கும் சுரோத்திர சிங்குவா ஆக்கிராணமிவா அசஸ்திய அகஸ்த் திய தாஷ்டம் திஷ்டம் சுவா எந்திரபிராணயா யிகபிராணயா யெந் திரசிவாயி கஸ்திதா யெந்திர சர்வயெந்திராணி வாக்குக்கும் மன சுக்கும் சுரோதிரசிங்குவு ஆக்கிராணமிகவா அகஸ்திய அகஸ்த்திய சுகம் சிரமதாஷ்டம் திஷ்டயமகவசா சகவைசம் ஆயி ஆனந்தவல்லி அபூர்தகாரலி ஆதிசத்திபராயிமாயி மாயாசுவரூபி வில்பட்டிமணி மாயிசடங்கி யக்கியாளி யிக்கியானத்தருபி நளினமரி மளி நாத ஊங் கார மந்திரி போகிபோக சத்தி புவனவசிகரி அய்யும் நமஸ்தே நமஸ்த்து.


நடை வாசல் அல்லது புழக்கடைவாசலில் அடிக்கவும்நெறடிபலகை



எட்டிப்பலகை தெருவாசல் அஷ்டபந்த எந்திரம்.



புழைக்கடை வாசற்படிக்கி போடவும் அத்திப்பலகை.






## கிரக நிவர்த்தி.

நாயிற்றுக்கிழமை காலையில் நிலவிலாஞ்செடிக்கி காப்புகட்டி தூபதீப நைவேத்தியஞ்செய்து தேங்காயுடைத்து வடக்கேபோகிற வேரைக்கொண்டுவந்து கிரகம் பிடித்தவர்களை நாயிற்றுக்கிழமை காலையில் ஸ்நானஞ்செய்து வரச்சொல்லி மேற்படி வேர்பட்டையை கொஞ்சம் சீவி யெடுத்துக்கொண்டு அத்துடன் கொட்டைபாக்கு ஒன்றுசேர்த்து வெத்திலையில் வைத்து கிழக்குமுகம் திரும்பச்சொல்லி இதை கொடுத்து மென்று தின்னச்செய்யவும். பிறகு சூரியநமஸ்காரம் செய்து கொள்ளும்படி சொல்லவும். இப்படிக்கி இரண்டுவாரம் கொடுத்தால் சகலகிரகமும் ஓடிவிடும். சுத்தியாயிருக்கச்சொல்லவும் மேற்படி வேர்பட்டைபோன உள்வேரை ரக்ஷாபந்தனம் செய்யும்போது அந்தவேரை உள்ளேவைத்து சுத்திகொடுக்கவும் நிவர்த்தியாகும்.

வேறு.

நாயிற்றுக்கிழமை கௌதும்பைச் செடிக்கு சாபம்நீக்கி பொங்கவிட்டு காப்புகட்டி செவ்வாய்க்கிழமை பிடிங்கிவந்து வைத்துக்கொள்ளவும். கிரகம் யில்லாதவர்கள் கொழுத்து ஆடுபவர்களுக்கு மேற்படி யிலையை தூள்செய்து அத்துடன் மருளூமத்தன் விரை அபினி சாதிலிங்கம் சேர்த்து வத்திசெய்து பதிவிளக்கில் யேத்திவிட்டு அதை உத்துப்பார்க்கும்படி சொல்லவும். ஆடுவார்கள் அப்படிக்கி ஆடாவிட்டால் மருளூமத்தன் காயை உடைத்து உள்பருப்பை யெடுத்து விபூதியில் கலந்து தெரியாமல் கொடுக்கவும் ஆடுவார்கள் அப்பொழுதே நல்லெண்ணை கண்ணில்விட மயக்கம் தீரும்.

மை உள்ளுக்கு கொடுக்கும எந்திரம்.




மந்திரம் அரி ஓம் நசி அரி பதநசி எமநசி எமபதநசி என்று ஜெபஞ்செய்து மையினுல் இந்த எந்திரத்தை வெத்திலையில் போட்டு கிரகம் பிடித்தவர்களுக்கு கொடுக்கவும். சகலமும் ஓடிவிடும்.

கிரகத்தை ஓட்டும்போது மூடிபோடும் பந்து மந்திரம்.


ஓம் ஜடேபந்து உன்னுதா ஜடேபந்து ஆதி நாதா ஜடேபந்து சளாட்டேறி சகடமார்ரோகச்ச ரோகச்ச கவுரி ஆயாகன பாவா குருகுரு சுவஹா:

கிரகம்பிடித்து ஆட்டி மேழ தள்ளின பிறகு சுத்திகட்டும் விதம்.



கணபதி வசியம்.

ஓம் ஐய்யும் கணபதி ஓம் கிலியும் கணபதி ஓம் சவ்வும் கணபதி வாவா கணபதி சகலலோகமும் சகலஜன ஸ்திரீபுருஷரும் உன் கைவசமாறைப்போல் சகலலோக சகல ஜனங்களும் நான் நினைத்தபேரும் நீயும் என் கைவசமாக சுவாஹா:




மூலமந்திரம்.

ஓம், ஆர், சம், ஷம், வசிய, வசிய, கங்கணதிபதியே நமா:

முற்றிற்று.



அல்லது

காதற்கன்னி.

சிறப்புவாய்ந்த அற்புதநாவல். இதன் இரண்டாம்பதிப்பு முற்றும் செலவழிந்து விட்டமையால்; இம்மூன்றும் பதிப்பில் பல நாவல்களை இயற்றியும், பல நாவல்களைப் பரிசோதித்து மிருக்கிற காஞ்சிபுரம் ம-ா-ா-ஸ்ரீ, தி. அரங்கசாமி நாயுடு அவர்களால் நவீன நாகரீகத்திற்குத் தக்க பல அரிய விஷயங்களைப் புகட்டி பல சிறந்த மேற்கோள்களால் விசித்திர வைபவங்களையும், அலங்கார வர்ணனைகளையும் சேர்த்து வாசிப்போரின் மனம் ஆச்சரியத்தினலும், ஆனந்தத்தினலும், பரவசமடையும் வண்ணம் விசேஷ சமத்கார சம்பவங்களைப்புனைந்து பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. கற்பின் ஒழுக்கமும் பெண்கள் நடந்துகொள்ளவேண்டிய தன்மையும், உலகவியல்பின் அற்புதங்களும், காதலின் ஆற்றலும் இதில் விளக்கியிருப்பதைக் காணலாம். பலநாவல்களைப் படித்திருப்பினும் இதிலடங்கியிருக்கும் பல அரியவிஷயங்களும், கதையின் தொடர்பும் கண்டோர்மனதைக் களிக்கச்செய்யும் ஆற்றலுடையது.

சோதிடம் பொய்யாதாமென்பதை கீர்த்திசீலன் என்பவனுடைய ஆச்சரிய வரலாற்றால் நன்கு விளக்குவதுடன் இதில் காணப்படும் துப்பறிபவனுடைய சாமர்த்தியங்கள் மிகவும் மெச்சத்தகுந்தது. சித்துக்கள்ளன், மாயக்கள்ள னென்பவர்களுடைய துர்கிர்த்தியங்களும் முதல் மந்திரியாகிய ஆழமதி செய்த இராஜத் துரோகத்தினல் பெற்ற அபகீர்த்தியும், இவனுக்கு அனுகூலமாய் உதவி புரிந்த குணதீரனுடைய நயவஞ்சகமும், காதலனைக்காத்த கண்ணுமணியின் தீரமும் படிப்போரனைவரையும் பரவசப்படுத்தி ஆனந்திக்கச் செய்யு மென்பதற்குச் சந்தேகமில்லை. இதன் விலை அணா 8.

# இரணரங்க சூரன்

இது ஓர் இனிய தமிழ் நாவல். இக்காலத்திலுள்ள நாவல்களுக்குட் சிறந்ததாயும், நாவல்களின் சிரோ பூஷணமாயும், கற்பனைசக்தி நிறைந்து லோக அநுபவங்கள் பொலிந்தும் ஒரகத்திகளின் சம்பாஷணை, கோமளவல்லியும் குமாரவர்மனும், விதிவலிது, நினைப்பதொன்று நடப்பதொன்று, நூதன நகரப்பிரவேசம், அரசிளங்குமரியின் உபாயம், உத்தியோக முயற்சி அமைச்சனின் சூழ்ச்சி இதுபோன்று பதினெட்டு அத்தியாயங்கள் ஒவ்வொன்றுக்கும் சிறந்த மேற்கோள்களுடன் எழுதப்பட்டிருப்பதால், இதன் பெருமையைவாசிப்பவர்களே அறிதல் கூடும். அன்றியும் இதில் வரும் கதாநாயக நாயகிகளின் சவிஸ்தாரங்களும், திடுக்கிடும் சம்பவங்களும் வாசிப்போர்க்கு பரம ஆனந்தத்தை யுண்டுபண்ணும். இதன் விலை அணா 10.

# தேனுபிஷேக பக்திரசக் கீர்த்தனை.

தென்பழனி ஸ்தலத்தின்கண் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிரா நின்ற ஸ்ரீமத் தண்டாயுதபாணி சுவாமி மீது, மனதுருகப்பாடிய தேனுபிஷேக பக்திரசமுற்றும் பெரிதும் செறிந்தபாடல்களை நூதன இசைப்பாவில் பலவர்ணமெட்டுகளமைத்து மதுரம்பழுத்துத் தேன்றுளிக்கும் சந்தச்சுவையுடன் சிந்தைக்கினிய செந்தமிழ் சந்தப்பாக்கள் படிப்பாருள்ளம் பரவசமாகும் வண்ணம் சொகுசுபெற இயற்றியது. இதன் விலை அணா 4.

## சிங்காரவல்லி

அல்லது

## தாருகநேர்ந்த தற்கொலை.

சிங்காரவல்லியென்னும் இவ்வற்புத நாவல் இதன் பெயருக்கேற்ப சிங்கார வர்ணனைகளாலும், சிங்கார சம்பாஷணைகளாலும், சிங்கார பொருட்சுவைகளாலும், சிங்கார சம்பவங்களாலும் வாசிப்போரின்மனதைக் கவரத்தக்க விதமாய்ப் புனைந்தெழுதப்பட்டிருப்பது மிகவும் வியக்கத்தக்கதே யாயினும், இதில் செறிந்து கிடக்கும் அபார சாமார்த்திய நிகழ்ச்சிகளும் மனதை யுற்சாகப்படுத்தும் மாட்சிமைகளும், காதலைக் குறிக்கும் கருத்துகளும், மனந்திடுக்கிடும் காட்சிகளும், கடினசித்தத்தினரின் உள்ளத்தினையும் கற்கண்டாய்க் கரையச் செய்யுமென்பதை நாமிங்கு தெரிவிப்ப தவசியம். இதனால் அடையும் நல்விஷயங்களனேகமிருக்கினும் முக்கியமாய் இளஞ்செல்விகளை முதியோருக்கு மணஞ்செய்யக் கருதுவதால் வரும் தீங்கினைச்செவ்வனே இதில் விளக்கியுள்ளது. இது நவீனமுறையில் எழுதப்பட்ட நன்மை பயக்கும் நாவல். இன்றியமையாத பல அரிய சம்பவங்கள் இதிலடங்கி யிருப்பதால் ஒவ்வொருவரும் இதைவாங்கி வாசித்தல் அவசியம். முதலிலிருந்து கடைசிவரையில் இதில் விவரித்திருக்கும் கதைத்தொடர்பு படிப்போரைப் பரவசப் படுத்தக்கூடியது. இதைவாசிப்போர்களே இதன் பெருமையை அறிந்துகொள்ளுமாறு இதைப்பற்றி அதிகம் புகழாதுவிட்டனம்.

சிங்காரவல்லி யென்னும் இக்கதாநாயகி தன் தந்தையின் பேராசையை நிராசையாக்கி தன்னை மாலையிடவந்த மிட்டாதாரனை வஞ்சித்து, மணவகத்தினின்றும் வெளிப்பட்டு, கள்ளர்களிடம் சிக்கி, அநேக ஆபத்துகளிலிருந்தும் விலகி, தான் நேசித்திருந்த நீலமேகன் என்னும் வாலிபனுடைய உயிரைக் காப்பாற்றி, அவனையே மாலையிடுவது மிகவும் ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் விளைவிப்பதுடன், இதில் விவரித்திருக்கும் கோர்ட்டு விசாரணையும் மிக விந்தையாயிருக்கும். இதன் விலை அணா 8.

## தனபாக்கியம்

அல்லது

## அகட விகட பொக்கிஷம்.

அகடவிகட சாமர்த்தியங்களடங்கியகதைகள் அநேகமாய் நம் தமிழ் நாட்டில் உலாவிவரினும், கற்றோர் முதல் மற்றோரும் மதித்து ஆனந்த பரவசமடையக்கூடிய நாவல் இது ஒன்றேயென்பதை இதை வாசிப்போரே யுணர்வாராதலால், இதில் செறிந்துகிடக்கும் அதியற்புத வேடிக்கை சம்பாஷணைகளையும், விடாநகைப்பைத் தரும் அரிய விஷயங்களையும் நாம் இங்கு விவரிப்பதனவசியமாகும். இதில் அடங்கியிருக்கும் அகடவிகட நியாய விசாரணைகளும், படிப்போர் பலமுறைசிறித்து பேராநந்தங்கொள்ளத்தக்க தீர்ப்புகளும், யாவரையும் பரவசமடையச்செய்யும் பண்பையுடையது. அகடவிகட பொக்கிஷதாரருக்கும் டபேதாருக்கும் நடக்கும் சம்பாஷணைகள் ஒவ்வொருவரையும் களிக்கும்படிச் செய்யுமென்பதற்குச் சந்தேகமில்லை. விபசாரத்தின் விநோதங்களும், தகல்பாஜித் தம்பிரான்களுடைய தகாசெய்கைகளும் அதிக விநோதமாய் அன்வயப்படுத்தியிருக்கின்றது.

இதில் ஆங்காங்கு புகட்டியிருக்கும் விகடக் கவிகளாலும், பலவித வேடிக்கையான நீதிப்பழமொழிகளாலும் இக்கிரந்தகர்த்தாவின் சமத்காரம் மிகவும் வியக்கத்தக்கதென யாவரும் நன்குணரக்கூடும். ஒவ்வொரு குடும்பத்தில் நேரிடும் களியாட்ட சம்பவங்களில் யாவரையும் சந்தோஷிக்கச்செய்ய இப்புத்தகம் மிகவும் இன்றியமையாதது. விலை அணா 8.

## மதனசேகரன்

அல்லது

## மணக்கோல மாப்பிள்ளை பிணக்கோலமான கேஸ்.

இது ஓர் வேடிக்கையான விநோத கதாபூஷணம். எண்ணிறந்த நாவல்கள் இத்தமிழ் நாட்டில் உலாவிவரினும் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிறப்பினையும், கதைத்தொடர்பையும் உடைத்தாயிருக்கிறதென்பதுயாவரும் அறிந்த விஷயமாயிருக்கினும் இச்குறைந்த விலையுள்ள இப்புத்தகத்தில் விவரித்திருக்கும் அதிக ஆச்சரியமான சம்பவங்களை வாசித்தவர்கள் இதைப்பற்றி ஆனந்தமடையாமலிருக்கமாட்டார்கள் என்பது திணிபாகும். உலகவிசித்திரகாலபேத நடவடிக்கைகளை அனுசரித்தே இது எழுதப்பட்டிருக்கிறது. விடாநகைப்பையும், வேடிக்கையையும் தரக்கூடிய விஷயங்களைச்சேர்த்து சொன்னயம் பொருணயம் முதலிய அலங்கார வர்ணனைகளைப் புகட்டி, மனதைக்கவரத்தக்க விதமாய் சேர்க்கப்பட்ட கதாசாரத்தைப் பொருந்திய சிறப்பினையுடையது. இதில் விளங்கும் மாதவராயனின்

செய்கையும், சாமர்த்தியமும் வாசிக்கவாசிக்க மிகவும் விநோதமாயிருக்குமென்பதை நாம் இங்குச் சொல்வது அனாவசியம். இதில் ஆங்காங்கு சேர்க்கப்பட்டிருக்கும் சமத்கார சம்பவங்கள் யாவரையும் களிக்கச்செய்யும் ஆற்றலையுடையது. இதில் மணக்கோலமாப் பிள்ளை பிணக்கோலமான பரிதாபமும் கார்த்திருந்தமாதை பார்த்திருந்து கொண்டுபோன சாமர்த்தியமும், சூழ்ச்சியும், சமயபேதமும், ஆலோசனையும், தைரியமும் மிகவும் புகழத்தக்கதாகும்.

இதன் விலை அணா 8.

# அஞ்சனாவதி

அல்லது

## அன்னவாசல் அதிசயக்கொலை.

தமிழ் உலகமே பிரமித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நாவல்.

இந்நாவலை கையிலெடுத்து வாசிக்க ஆரம்பித்து விட்டால் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளை மறந்து இந்த நாவலிற்செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு வாசித்து முடிவெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படி செய்யுமென்பது நிச்சயம். அதிகமாய்ப்புகழாமல் ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், இது இன்னமுது கனி, பாகு, கற்கண்டு, சீனி, தேன் முதலியவைகளைவிட அதிகமாக ருசிப்பது இந்நாவல் ஒன்றே.

புஸ்தகம் அச்சிட்டு வெளிவந்த முப்பது நாட்களுக்குள் சுமார் 1000 பிரதிகள் செலவாய் விட்டனவென்பது தமிழ் நாட்டில் இது வரையிலும் கேட்டறியாத ஆச்சரியமல்லவா?

பதினெட்டு அழகிய அத்தியாயங்களைக் கொண்ட இவ்வற்புத நாவலின் ஒவ்வொரு அத்தியாயமும் மெஸ்மெரிசம் போல் மனதைக் கவருமென்பது நிச்சயம்.

தமிழ்நாட்டில் இதைப்போன்ற அபூர்வமான நாவல் வெளிவந்ததில்லை யென ஆயிரக் கணக்கான ஜனங்கள் சொல்லுகின்றனர்.

ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் அஞ்சனாவதியைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. இப்படிப்பட்ட புகழ்வதற்குறிய மகோன்னத நாவல். சுத்தமான கடிதம், நேர்த்தியான அச்சு, 376 பக்கங்களுள்ளது. இப்பொழுது கைவசம் இருப்பவை கொஞ்சம் பிரதிகளே! ஆகையால் இன்றே ஒன்று வரவழைத்துப் பாருங்கள்!

விலை ரூபா 1 4 0

# மோகனாம்பாள்

அல்லது

## காதலரின் வெற்றி.

இப்பெயர் வாய்ந்த துப்பறியும் நவீன நாவல் படிப்போரைப் பரவசப்படுத்தி கல்மனதையும் கரையச்செய்யும் ஆற்றலுடையதென்பதை இதில் புகட்டியிருக்கும் ஆச்சர்ய விஷயங்களாலும், சமத்கார சம்பவங்களாலும் இதை வாசிப்போரேயறிதல் கூடும். இன்பத்தையும், மனக்கிளர்ச்சியையும் தரக்கூடிய தற்காலத்திலுலாவும் துப்பறியும் நாவல்களில் இது சிறந்ததென்பதையும் சொல்லாமலே விளங்கும். அநேக துப்பறியும் நாவல்களைப்படித்துப் பரமானந்தமடைந்த அறிஞர்களும் இதைப் பார்த்துப் புகழத்தக்க சிறப்பினை வாய்ந்தது. இது சிறியதோர் நாவலாயிருக்கினும், இதன் கதைத் தொடர்பு மிக்க ஆச்சரியமானது. கதாசாரமோ மிகவும் மனோரம்மிய முடையது. சொற்சுவை, பொருட்சுவைகளில் மேம்பட்டு சுகமான செந்தமிழ் நடையுள்ளது. இதைப்பற்றி இங்கு அதிகம் புகழ்வது அனாவசியமாகும். துப்புத்துலக்கும் நட்சனமூர்த்தி என்பவருடைய மகாசாமர்த்தியங்களும், மோகனாம்பாள் என்னும் சிறுமியின் வியக்கத்தக்க முயற்சிகளும், சம்பவித்த சீர்கேடான பல ஆபத்துகளும் மனந் திடுக்கிடக்கூடிய விதமாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதில் சதாசிவ முதலியார் என்பவர் கொலை செய்யப்பட்டதாக எண்ணி விவகாரங்கள் நடத்தி வந்த போலீஸ் அதிகாரிகளும், மற்றவர்களும் வெட்கமடையும்படி அவரே உயிருடன் காணப்பட்ட விருத்தாந்தம் யாவரையும் பிரமிக்கச்செய்யும். இதன் இறுதியில் நியாய விசாரணையின் பாகம் மிகவும் வேடிக்கையாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 8.

# அமராவதி

அல்லது

## அரிவையின் அற்புதம்.

இவ்வரிய நவீன தமிழ் நாவலின் பெருமை மிகவும் வியக்கத்தக்கதாகும். கம்பீரமான கருத்துகளும், ஆழ்ந்த இரகசியங்களும் மிகவும் அற்புதமானதுடன் யாவரும் படித்த மாத்திரத்தில் நற்பயனையும் மார்க்கத்தைப் பொருந்தியுள்ளது.

இது சொற்சுவை, பொருட்சுவை முதலிய நவரசலங்காரங்களினாலும் ஆச்சர்ய சம்பவங்களாலும், சிறந்த வர்ணனைகளாலும், மனந் திடுக்கிடும் விஷயங்களாலும் மிக அற்புதமாய்ப்புனைந் தெழுதப்பட்

டது. சிறியோர் முதல் பெரியோரும், கற்றவர் முதல் மற்றவரும் வியந்து புகழத்தகுந்த தெளிவான செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதுடன் புத்தகத்தை வாசித்து முடிக்குந்தனிலும் ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் அபரிமிதமாய் விளைவிக்கு மென்பதற்கோர் ஐயமில்லை.

இதில் அமராவதி என்னும் அரசிளங்குமரி தன் அதிவிவேக சாமர்த்தியத்தினால் தன் கற்பையழிக்க முயன்றவர்களுள் அரங்கநாதன் என்பவனைக்கொலை செய்வதும், காட்டில் வாழரக்கனையும், வீரசிங்கனென்னும் அரசனையும் துப்பாக்கியாற்சுட்டு வீழ்த்தியதும், கள்ளர்க்காவலிலிருந்து தப்பியதும் வாசிப்போரின் மனனதப்பாகாபுருக்குமென்பதை நாம் இங்குவிவரிப்பதசாத்தியம். இந்நாவலின் இடையிடையே எடுத்துக்காட்டியுள்ள மனந்திடுக்கிடும் சம்பவங்கள் பல உள்ளன. மேலும் இதில் அன்பின்பெருக்கும், நட்பின் மாட்சியும், கற்பின் மேன்மையும், தீச்செயலின் கேடுகளும் நன்கு விளக்கியிருக்கின்றது.

இதன் விலை அணா 12

# மகாமோசக் களஞ்சியம்.

(அழகான சித்திரப்படங்கள் நிறைந்தது)

பம்பாய், கல்கத்தா, சென்னை, லண்டன், ஜெர்மன், பிரான்ஸ், அமெரிக்கா, ஸ்வீடன் முதலிய தேசங்களில் நடக்கும் அபார மோசங்களையும் உள்நாட்டு மோசங்களையும் வெகு ஆராச்சியுடன் தெள்ளத் தெளிவாக விகடநடையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் வேடிக்கையான படம் உள்ளது. மேனாட்டின் வெள்ளைப் பெண்கள் மோசம், கம்பெனிகள் மோசம், இன்ஷ்யூரன்ஸ் மோசம், மருந்துகள் மோசம் முதலிய பலமோசங்களை இதில் காணலாம். ஒவ்வொரு மோசங்களையும் படித்தால் இவ்வளவு மோசங்களும் உலகத்தில் உண்டா என்று மனதை மலைக்கச்செய்யும்.

## மோசங்களின் சில குறிப்பாவது.

விளம்பர மோசம், அன்னதான மோசம், நற்சாக்ஷிபத்திர மோசம், இனும்! இனும்!! என்பதின் மோசம், உத்தியோகம் தேடிக்கொடுப்பவர்கள் மோசம், ஒரு அணா ஸ்டாம்பு கேட்கும் மோசம், பத்திரிகை மோசம், அச்சாபீஸ் மோசம், பவுன் விற்கும் குறத்தியின் மோசம், தங்கக்கட்டிகள் மோசம், ஆஸ்பத்திரி மோசம், காபிஹோட்டல் மோசம், சாப்பாடு இட்டல் மோசம், பலவிதபிச்சைக்காரர்கள் மோசம், [illegible] மோசம், பாகவதர் மோசம், மோட்டார் பஸ் மோசம், [illegible] மோசம், சோடாக்கடை மோசம், வெற்றிலைபாக்குக்கடை மோசம், மளிகைக்கடை மோசம், இன்னும் எண்ணிறந்த மோசங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபா 1 0 0

ஸ்ரீ பானுமதி புத்தகசாலை,
ஜார்ஜ், டவுன், மதராஸ்.

67817